வட்டுக்கோட்டையூர்

பண்டிதர் கதிரேசர் மயில்வாகனனார்

# நூற்றாண்டு விழா மலர்



பண்டிதரும் பாரியாரும்

"அறிவற்றம் போகார் நடுநிலை நீங்கார்,
அறிவியல் வாணிபம் விரும்பார்,
அன்புநெறி வழுவார் அறத்திறன் பிறழார்
இத்தகையது இவர் வண்ணம் எழுத்து
வண்மும் இயையே."

பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா

வெளியீடு : எல் – 4 நிறுவனம் ( EL – 4. com)
நூலுருவாக்கம் : பண்டிதர் அறக்கட்டளை
பாரீஸ், பிரான்ஸ்
2019. 01. 27

நூற்பதிப்பு : 2019.01.27

வெளியீடு : எல் - 4 நிறுவனம்

அட்டைப்படம் : எல் - 4 நிறுவனம்

நூல்வடிவமைப்பு: ஓவியவாருதி இ.குணதாசன் (நோர்வே)

மலர்க்குழு:

எழுத்தாளர்: முருகபூபதி (அவுஸ்ரேலியா), பண்டிதர் ந. கடம்பேசுவரன் (விரிவுரையாளர், இயக்குநர்- கீழைத்தேயக் கலைக்கல்லூரி யாழ்ப்பாணம்)

தி. மோகனபாலன் (அதிபர் யாழ் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை) , வ. யோகானந்தசிவம் (ஓய்வுநிலை அதிபர் யாழ்ப்பாணம்)

நூற்தொகுப்பு: தி. உமைபாலன் (ஊடகவியலாளர் நோர்வே)

## மலரின் உள்ளே


1. வெளியீட்டுரை

2. சந்நிதி முருகன் செஞ்சொல்மாலை

3. பண்டிதரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்

4. நூற்றாண்டு விழா முதன்மை விருந்தினர் பாராட்டுரை

   ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியமும் பண்டிதர் மயில்வாகனனாரும்

   (பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (மேனாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள் வாழ்த்துரைகள்....**

5. நினைவில் நிறைந்திருக்கும் பண்டிதர் அய்யா

   (சிறப்பு விருந்தினர் எழுத்தாளர் முருகபூபதி (அவுஸ்ரேலியா)

6. வட்டுக்கோட்டையின் மூத்த பட்டப்படிப்பாளன்

   (சிறப்பு விருந்தினர் பண்டிதர் விவேகானந்தன் (நோர்வே)

7. பண்டிதர் மயில்வாகனனது சிறப்பு எமது ஊரின் சிறப்பு!

   (சிறப்பு விருந்தினர் புலவர் சிவநாதன் (இலண்டன்)

**பண்டிதரின் படைப்புகள் ஆய்வு, நயவுரைகள்....**

8. புராணங்களும் உரைநூல்களையும் தந்த உரவோன்

   (சித்தாந்தப்புலவர். பண்டிதர். ம.ந. கடம்பேசுவரன்

   B.Sc.(Media. Comm. in English) M.A.(Tamil - Hons.)

   விரிவுரையாளர்- இயக்குநர் கீழைத்தேயக் கல்விக் கல்லூரி)

9. புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனாரின் தலபுராணங்கள்

   (ஓர் ஆய்வு - லயந்தினி பகீரதன் (B.A.Hons, PGD, M.A, M.Ed.)

   ஆசிரியர், யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.)

**பொது அமைப்புக்களின் வாழ்த்துரைகள்....**

10. புலவர்மணி, கலாபூஷணம், கலைவாரிதி, நாற்கவிராசன்

    (பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் என்னும் மங்கா ஒளிவிளக்கு.

    திரு.க.புஸ்பரங்கன். அதிபர், யா/வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்)

11. முத்தமிழ் வித்தகர் புகழ்வாழி

    (வட்டுக்கோட்டை முத்தமிழ்மன்றம்)

12. வாழ்த்துரை

(ACADEMY OF OKINAWAN MARTIAL ARTS)

13 -தமிழ்மலையின் புகழ் வாழ்க
(வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திகுழு -பிரான்ஸ்கிளை )

14. பண்டிதர் ஐயா புகழுக்கு வானமே எல்லை
(ஒருங்கிணைப்பாளர்கள் - வட்டுக்கோட்டை ஒன்றியம் -பிரான்ஸ்)

15. அவன் அருளால் அவன் தாள் வணங்கி,

(சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்)

16. வாழ்த்து மடல்

(நேருஜீ கிராம அபிருத்திச் சங்கம் கலைநகர், சித்தன்கேணி)

17. நாற்கவிராசரின் புகழ் நாற்றிசையும் பரப்பிடுவோம்

(வட்டூர்த் தமிழர் ஒன்றியம் பிரித்தானியா)

18. மாமனிதர் பண்டிதமணி அமரர் க. மயில்வாகனனார் அவர்களின் நூற்றாண்டு விழா வாழ்த்துமடல்

(காந்திஜி கலாமன்றம்)

19. வன்னியன் தோட்டம் சின்னக் கதிர்காமம் தொண்டர் சபையினரின் வாழ்த்து
(மார்கண்டுபிள்ளை ஞானேஸ்வரன்)

20. வாழ்த்துச் செய்தி

(மூன்று தமிழும் ஒரு சேரப்பெற்ற முத்தமிழ் வித்தகர்

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் - பிரான்ஸ் கிளை)

21. நூற்றாண்டுவிழாப் பாமாலை

(கலைநகர் விளையாட்டுக்கழகம் - பிரான்ஸ்)

22. வாழ்த்துப் பாடி வணங்குகின்றோம்

(பாரீஸ் முத்தமிழ் இசைக்குழுவினர்)

23. மண்ணின் சான்றோன்

(வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் - பிரித்தானியக் கிளை)

24. சைவத் தமிழ் வளர்த்த புலவர்மணியின் புகழ் ஓங்குக!

(ஶ்ரீல ஶ்ரீ மகேந்திரசுவாமி அவர்களின் வாழ்த்துரை

பாரீஸ் ஶ்ரீ பத்திரகாளி அம்மா தேவஸ்தானக் குருக்கள்.)

**சான்றோர்கள், மாணவர்கள் வாழ்த்துரை....**

25. தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பண்டிதர்

(பண்டிதை திருமதி. பொன். பாக்கியம், சுழிபுரம்.)

26. நாற்கவிராச நம்பி

(பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் பொன்னாலை, யாழ்.)

27. செந்தமிழ் காத்த மயில்வாகனப் பேராசான்

செந்தழல் வாய் காக்குமோ செப்பு

(ஈழத்தில் இருந்து புலவர் பெருமாள் மகேசன்)

28. நூற்றாண்டுவிழா வாழ்த்துப் பாமாலை

(ஓய்வுநிலை அதிபர் கலாபூஷணம் வ.யோகானந்தசிவம் (யாழ்ப்பாணம்)

29. புலவர்மணி மயில்வாகனனார் நூற்றாண்டு விழா

(பல் மருத்துவ கலாநிதி இளமுருகனார் சோ. பாரதி. சிட்னி - அவுஸ்திரேலியா.)

30. என் குருநாதர் புலவர்மணி, பண்டிதர் க.மயில்வாகனனார்

(நா.புவனசுந்தரம் (நன்றி மறவாச்சீடன்)

31. விஞ்ஞானபூர்வமான பேருண்மையை எமது இளம் வயதில் எம்மனதில் விதைத்த பெரியார்

(முருகானந்தன் - கோயம்புத்தூர் தமிழ்நாடு)

32. இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காத பண்டிதர் க.மயில்வாகனனார்

(சிவநெறிச்சாகரம் வீரசுப்பிரமணியம் - பிரான்ஸ்(முன்னை நாள் அரசஅலுவலர், சமூக ஆர்வலர்)

33. தனித்தமிழ்ப் புலவர் ஏறு

(நாகரத்தினம் கணேசலிங்கநாதன், பி.ஏ. எம்.எஸ்.

சித்தமருத்துவர்,வைத்தியகலாநிதி. சமாதான நீதவான்

கலாபூஷணம் கலைவாரிதி - வட்டுக்கோட்டை)

34. நீர்கொழும்பில் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிரூட்டிய எங்கள் மதிப்பிற்குரிய ஆசான்

(பண்டிதர் செல்வி சண்முகவடிவம்பாள் சண்முகம்)

35. நூற்றாண்டு காணும் மறைந்த எம்புலவர் திரு.க.மயில்வாகனனாருக்கு வாழ்த்துமடல்

(வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து (பிரான்ஸ்)அண்ணாவியார்

திரு .தில்லையம்பலம் யோகேஸ்வரன்)

36. உலகத்தமிழராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்ட பாரிஸ் மாநகரில் பண்டிதர் நூற்றாண்டுவிழா - வாழ்த்துரை

(Dr. K.S. திரவியராசா, Dip. M.S. M.A.C. F.D.M.S.B.M.S. R.M.P. R.A.M.P. இங்கிலாந்து)

37. நினைவுக்குள்ளே தங்கிவிட்ட பண்டிதர் பற்றிச் சில குறிப்புகள்

(தேவா ஹெரால்ட் - ஜெர்மனி)

38. தமிழையும் சைவத்தையும் தனது உயிரினும் மேலாக மதித்த பெருந்தகை அவர்கள்

(அமரர் தாமோதரம்பிள்ளை தம்பதியினரின் பிள்ளைகள்)

39. பசுமை நினைவு நிழலாடுகின்றது

(சைவப்புலவர் பண்டிதர் மா. கணநாதன் (வட்டுமேற்கு- வட்டுக்கோட்டை)

40. மங்காப் புகழ்மணி பண்டிதர் ஐயா

(முன்னாள் மாணவன் ராஜா தங்கவேல்.)

41. தமிழுக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும், பெரும்பணியாற்றிய எங்கள் அதிபர்
(முன்னாள் மாணவன் ச. சிவானந்தம் -இலண்டன்)

42. நான் கண்ட பண்டிதர் ஐயா

(சிவபிள்ளை சிவகுணாளன் (சிவா சிவபிள்ளை) ஒலிபரப்பாளர் இலண்டன்)

43. பன்முகத் தேர்ச்சிப் பெற்ற வாழ்வியல் வழிகாட்டி

(தியாகராசா மோகனபாலன். முதுகலைமாணி M.Ed

அதிபர் யாழ் ஃ பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை)

44. பண்டிதர் மயில்வாகனனார்

(சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், பண்டிதர், மறையாசிரியர்- வெற்றிவேலு வரதிதாசன்

BA, MA (Hons), DPHY, DAC, Physiotherapist SLMC 166)

45. சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாற்றிய தமிழ்ப் பெருந்தகை

(அமரர் திருமதி. சாரதாம்பாள் தங்கராசா- அமரர் திரு க . தங்கராசா ( ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர் ) அவர் தம் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்)

46. எங்கள் நினைவை விட்டு நீங்காத பண்டிதர் ஐயா

(மானசீக முன்னாள் மாணவன் ச.ஆனந்தகுமார்)

**நூற்றாண்டு விழா- சிறப்புத் தமிழ், கலை ஆய்வுகள்....**

47. தமிழ் ஒரு செம்மொழி

(பேராசிரியர் அ. சண்முகதாஸ், Ph. D. (Edinburgh) D.Litt. (Hon. UJ)

தகைசார் வாழ்நாட் பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகம்)

48. திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா ஒரு பண்பாட்டியல் பார்வை

(சிறப்புவிருந்தினர் பாலசுகுமார் - இங்கிலாந்து)

**பவளவிழா மலரிலிருந்து.....**

49. வட்டுக்கோட்டை அருள்மிகு விசாலாட்சி சமேத விசுவநாதர் தேவஸ்தான முதல்வரின் ஆசியுரை

(வைத்திய கலாநிதி அ.க. காசிப்பிள்ளை, சரபராசன் மருத்துவமனை, வட்டுக்கோட்டை.)

50. மயில்வாகனார் மகிழ்ந்து வாழ்க- வாழ்த்தியற் பாமாலை

(அருட்புலவர்.பண்டிதர் அ. ஆறுமுகனார், தலைவர், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம். பண்ணாகம், சுழிபுரம்.)

51. மயில்வாகனனார் பற்றி......

(புலவர் மணி, பண்டிதர் சோ. இளமுருகனார்.)

52. இனிய மயில்வாகனன்

(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும் ஒருசாலை மாணவருமாகிய பண்டிதர் க. சச்சிதானந்தன்அவர்கள் சொல்லியவை)

53. நீர்கொழும்பிற் செந்தமிழ்ச் செல்வரின் சேவைகள்

(இரா. சுப்பையா, 199, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.)

54. தமிழ்ப்பணியும் கலைப்பணியும் புரியும் தலைவர் - வாழ்த்துரை

(யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை முன்னைநாள் அதிபர்

வட்டுக்கோட்டை, நாட்டுக்கூத்துக் குழு ஆயுட்காலத் தலைவர்)

55. விசுவேசர் புராணத்திற் கண்ட பாராட்டுரைகளிற் சில துளிகள்

**மயில்வாகனனாரின் பிரிவாற்றாது விடுத்த செய்திகள் சில...**

56. நான் கண்ட பண்டிதர் மயில்வாகனனார்

(கலாநிதி க. வைத்தீசுவரக் குருக்கள்,ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.)

57. பக்தியும் கனிவும் புலமையும்......

(கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபர்)

(ஆங்கில விரிவுரையாளர்)

58. பண்டிதர் வழங்கிய செவ்வி

59. பண்டிதரின் படைப்புகள் சில

# வெளியீட்டுரை

**எல்-4 நிறுவனம்**

உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாய்த் தோன்றிய மொழியே எங்கள் தமிழ்மொழி. உலக மாந்தருக்கெல்லாம் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே மானுடநேயத்தையும், அறத்தையும் போதித்த இனமே தமிழினம்.

இத்தகைய பெருமைக் கொண்ட தமிழர்கள் இன்று உலகின் பல்வேறு நாடுகளுக்கெல்லாம் புலம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது மொழியையும், இன அடையாளங்களையும் பேணிக்காப்பதற்குப் பெருமுயற்சிகள் செய்து வருகின்றனர். உலக நாடுகள் தோறும் தமிழ்ப் பள்ளிகள், கலைக்கூடங்கள், ஊடகங்கள் என்பவற்றை உருவாக்கி அடுத்த சந்ததியினருக்கு தமிழ்மொழியையும், தமிழர் கலை, பண்பாட்டையும் ஊட்டி வருகின்றனர்.

இன்றைய உலகம் யுக மாற்றத்தைக் கண்டுள்ளது. கணினித் தொழில்நுட்பமே உலகின் இயங்குதளமாகி விட்டது. இத்தகையச் சூழலில், எமது இளையவர்கள் வழமையான தமிழ் வகுப்பறைக் கல்வி மூலம் தமிழ்மொழியைக் கற்பதில் முன்னர்போல் பெருமளவில் விருப்பத்தைக் காட்டுவதில்லை. இதனை உணர்ந்த கல்வியியலாளர்கள் பலரும் வகுப்பறையையும், கற்பித்தல் முறையையும் கணினித் தொழில்நுட்பத்துடன் தொடர்புப்படுத்தி வருகின்றனர். இத்தகைய சூழலில் கணினித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தமிழ்மொழியை விளையாட்டுக்களின் மூலம் இளையவர்களுக்கு ஊட்ட வேண்டும் என்ற எண்ணக்கருவில் உருவானது தான் எமது எல்-4 நிறுவனம்.

இந்த வகையில் தமிழுலகின் முதலாவது முப்பரிமாண கணினி விளையாட்டான அகரம் என்ற குறுந்தகட்டினை 2013 ஆம் ஆண்டில் நாம் வெளியிட்டோம். அது இளையவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. ஆயினும் அதிவேகமாக வளர்ந்த தொழில்நுட்பம் கணினிக் குறுந்தகட்டின் பாவனையைக் கடந்து சென்றது.

இதனை உணர்ந்து கொண்ட நாம், தமிழ் ,விளையாட்டு குறள் விளையாட்டு 1,2, பொங்குதமிழ் போன்ற செயலிகளை (Apps) உருவாக்கி இலவசமாக இணையத்தில் பரவ விட்டோம். தமிழ்ப் பாடசாலைகள் பலவும் இவற்றைப் பாவித்து வருகின்றன. இந்நிலையில் தான் வகுப்பறைகளிலும், இளையவர்களிடமும் மயக்க ஒலிகள் எனப்படும் ‘ழகரம், ரகறம், ணகர வேறுபாடுகள் பெரும் சவாலாக அமைந்திருப்பதை உணர்ந்து ‘ழகரம்’ என்ற செயலியை (App) உருவாக்க முடிவு செய்தோம். அப்போதுதான் ‘ழ’கரத்தை எமக்குத் தெளிவாக ஊட்டி இரத்தத்தில் கலக்கச் செய்துவிட்ட புலவர்மணி பண்டிதர் மயில்வாகனனார் அவர்களை நினைவு கூர்ந்தோம்.

‘ழகரம்’ செயலியை அவர் பெயரில் வெளியிடுவதென முடிவு செய்து அதற்கான முயற்சியில் இறங்கினோம். அச்சமயம் மயில்வாகனனார் அவர்களது 98 ஆவது அகவை நிறைவடையும் காலமாயிருந்தது. எனவே அவருக்கு நூற்றாண்டு விழா எடுத்து ‘ழகரம்’ செயலியை அவரது திருத்தாளில் சாற்றுவது என முடிவு செய்தோம். இந்த முயற்சியை அவரது குடும்பத்தினர்க்கும், எமது நண்பர்கள், எம் ஊர்நலன்விரும்பிகள், பண்டிதரின் மாணாக்கர்கள் எனப் பலருக்கும் தெரிவித்தோம். நாம் எதிர்பார்த்ததிற்கும் மேலாக அனைவரும் பேராதரவு நல்கினர். தாங்களின் பங்களிப்புடனே பண்டிதரின் நூற்றாண்டு விழா எடுக்கப்பட வேண்டுமென உரிமை பாராட்டினார்கள். நாமும் நூற்றாண்டு விழாவின் செயற்திட்டங்களை விரிவுப்படுத்தினோம்.

பண்டிதர் அவர்களின் படைப்புக்கள் அவர் தமிழுக்கு ஆற்றிய பணிகள் இந்தத் தலைமுறையுடன் கடந்து விடாதிருக்க, அடுத்த சந்ததிக்கும் பயன்படக்கூடிய வகையில், நவீன தொழில்நுட்பங்களின் உதவியுடன் பல்வேறு செயல்பாடுகளையும் முன்னெடுத்தோம்.

அவரது படைப்புக்களை (துரதிர்ஷ்வசமாக ஒரு பகுதி படைப்புக்களை எம்மால் இதுவரையிலும் பெற முடியவில்லை) இலத்திரனியல் கோப்புக்களாக்கி பண்டிதர்.com என்ற இணையத்தில் பதிவேற்றம்

செய்துள்ளோம். (இவை பல்கலைக்கழகத் தமிழ் இலக்கிய ஆய்வு மாணவர்களுக்குப் பேருதவி புரியக்கூடியவையாக இருக்கும்)

பண்டிதர் அவர்கள் குழந்தைகளுக்காகப் பாடிவைத்த குழந்தைக்களுக்கான இன்பத்தமிழ்ப் பாடல்களை இறுவட்டாகவும், நூலாகவும் மாற்றியதோடு இணையம், யுடியூப் (youtube) ஆகியவற்றிலும் பதிவேற்றி எமது மழலைகளை மகிழ்வடையச் செய்துள்ளோம்.

இப்பாடல்களில் இருந்து முப்பரிமாண ஒளிப்பேழைக் காணொளிப் படம் (Animation Film) ஒன்றினையும் உருவாக்கியுள்ளோம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக மலர்க்குழுவினரின் உழைப்பில் பண்டிதரின் தமிழ், சமய, சமூகப்பணிகள் குறித்து பல்வேறுதளங்களிலும் பல்வேறுபட்ட ஆக்கங்களைக் கொண்ட நூற்றாண்டு மலரினையும் உருவாக்கியுள்ளோம். இம்மலரில் பண்டிதர் பால் அன்பும், மரியாதையும் கொண்ட அறிஞர்கள் பலரும் தமிழ், தமிழ்க்கலைகள் குறித்து ஆய்வுக் கட்டுரைகளை எழுதிச் சிறப்புச் சேர்த்துள்ளார்கள்.

எல் - 4 நிறுவனத்தினரால் மட்டும் இப்பெரும்பணியை செய்திருக்க முடியாது. இத்தமிழ் பணியில் எம்மோடு கைக்கோர்த்து விழாக்குழுவினில் இணைந்து பணியாற்றிய அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

எமது அழைப்பினை ஏற்று முழுமனதோடு விருப்புத் தெரிவித்து விழாவிற்கு சிறப்புச் சேர்த்த பேரறிஞர்கள், கலைஞர்கள் அனைவருக்கும் பண்டிதமணியின் அழியா நினைவுகளோடு அன்பைப் பகிர்ந்துக் கொள்கின்றேன்.

நிறைவாக நூற்றாண்டு மலர் சிறப்பாக வெளிவரவும், விழா சிறப்படையவும், இனிவரும் காலங்களில் பண்டிதமணியின் பெயரால் தமிழ்ப்பணி தொடரவும் பேராதரவு நல்கி, உளவிருப்போடு தங்கள் பங்களிப்பினை உவந்தளித்து பண்டிதர் அறக்கட்டளையை உருவாக்கிய அனைவருமே இத்தமிழ்ப்பணியின் செயற்பாட்டாளர்கள் என்பதை மன மகிழ்வோடும், நிறைவோடும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தமிழால் இணைவோம்!**

**வாழ்க தமிழ்! ஓங்குக புலவர்மணியின் புகழ்!!**

**எல்-4 நிறுவனம்.**

# சந்நிதி முருகன் செஞ்சொன் மாலை

1. சந்நிதி அரசே தனிவேலவனே
பன்னிரு புயனே பழமறை விளைவே
என்னிருள் இரிய இதயத் தளியுள்
மன்னிய முதலே வருவாய் அருள்வாய்

2. அருளே பொழியுந் தனிநா யகனே
பொருளே மொழியுங் குருமா மணியே
அருவே உருவே அறிவே திருவே
மருவும் பிடியைத் தடிவாய் மயிலோய்

3. மயிலோய் முருகா மருவும் அடியார்
பயிலும் பொருணீ பழநிக் குமரா
அயில்வே லரசே அரனார் சுதனே
இயலும் வகையிங் கேத்தற் கருள்வாய்

4. வாயே நினதாள் வனசம் வாழ்த்தச்
சேயே முருகா திருமால் மருகா
சாயா அருளைத் தருவாய் தருவாய்
தாயாய் எனையாள் தற்பர குருவே

5. குருவே சரணங் குழகா சரணம்
உருகும் அடியார் உளமாளிகையில்
பெருகும் ஒளி பீழைத் துயர்கள்
ஒருவும் வகைநீ உடையாய் அருள்வாய்

## பண்டிதரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்

**தந்தையார்:** வட்டுக்கோட்டை மேற்கு நாகமுத்து கதிரேசர்

**தாயார்:** வட்டுக்கோட்டைக்கிழக்கு முருகர் வள்ளியம்மையார்

**பிறப்பு:** காலயுத்தி தை 12 விசாகத்திருநாள் (1919 ஜனவரி 25)

**பெயர்:** மயில்வாகனன் (அருள்மிகு செல்வச்சந்நிதிக் கோயிலில் நேர்த்திக் கடன் நிறைவேற்ற இவரை 40ஆம் நாளன்று கொண்டு சென்று வைத்திருந்த போது, திருத்தவ மூதாட்டியொருவர் முருகன் திருவருளால் எதிர்பாராத வகையில் வருகை தந்து விசாக நாளிற் பிறந்தமையால் இப்பெயரைச் சூட்டி ஆசீர்வதித்து முத்தமிட்டருளிச் சென்றனரென்பர்.)

**உடன்பிறந்தோர்:** க. குழந்தைவேலர்(கட்டட ஒப்பந்தக்காரர் ) ,க. மாணிக்கவாசகர் (ஆசிரியர் ), திருமதி. வல்லிபுரம் கனகம்மையார், க.முருகுப்பிள்ளை (அரசஎழுதுவினைஞர்), திருமதி. நவரத்தினம் பாக்கியம்

**இளமையும் கல்வியும்:** வட்டு பிளவத்தை அ. மி. பாடசாலை

வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, யாழ்ப்பாணக்கல்லூரி

வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை

**ஆசிரியர்ப் பயிற்சி:** யாழ் திருநெல்வேலி பரமேசுவர ஆசிரியர் கலாசாலை (1939 - 1942)

**கல்வி பயிற்றிய கணக்காயர்:** பண்டிதர் கா.பொ. இரத்தினம்,

நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

பண்டிதர் புலவர்மணி சோ. இளமுருகனார்

வித்துவான் பண்டிதமணி ந. சுப்பையபிள்ளை

கலாநிதி கு. சிவப்பிரகாசம் M.Sc. Ph.D. Dip. in Ed (Lond.)

மாவை. பண்டிதமணி சு. நவநீதகிருஷ்ண - பாரதியார்

கரணவாய் வித்துவான் க. கார்த்திகேயனார் B.A.

அளவை ச. சிதம்பரப்பிள்ளை B.A. B.Sc.

**பண்டிதர் வரிசை:** மதுரைத் தமிழ்ச்சங்கம், யா. ஆ. தி. பா. சங்கம் - 1941

**திருமணம்:** 1946.09.10 மகாராணியார் எலிசபெர்த்தின் முடிசூட்டு விழாவின்போது நல்லாசிரியர் விருது பெற்ற தாய்மாமன் மு. வடிவேலு அவர்களின் ஏக புதல்வி பத்துமாசனி அம்மையாரை வதுவையயற்றினார்.

**புதல்வர்ப்பேறு:** திருமதி. இந்திரா யோகானந்தசிவம்
திருமதி. சாரதாதேவி தங்கவடிவேல்
திரு. ம. தயானந்தன், திரு. ம. சிவானந்தன்
திருமதி. திருக்கேதீசுவரி (உமா) கணேசுவரன்
திரு ம. முருகானந்தன், திரு ம. மகேசானந்தன்

**பாடசாலை அதிபராய்ப் பணிபுரிந்த இடங்கள்:** மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு, யாழகம்.

**தலைவர், துணைத்தலைவர், செயலர், ஆட்சிமன்ற உறுப்பினராக**

**பதவி வகித்த நிறுவனங்கள்:** மாத்தளைத் தமிழ்க் கழகம், மேல் மாகாணத்தமிழாசிரியர் சங்கம், நீர்கொழும்பு தமிழ்ச்சங்கம்,வட்டு-சிவன் இந்துசமய அபிவிருத்திச்சங்கம், வட்டு - காந்திஜீ கிராம முன்னேற்றச் சனசமூக நிலையம், சிறிலங்கா காந்தீய சேவா சங்கம், அகில இலங்கை அரசினர் ஆசிரியர் சங்கம், வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்,

வட்டுக்கோட்டைத் தமிழ் இலக்கியமன்றம், யா. ஆ.தி. பா. சங்கம், காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக்கழகம்

**மேற்கொண்ட கலைத்தொண்டுகள்:** அனைத்திலங்கையிலும் சமய, இலக்கியச் சொற்பொழிவுகள், வானொலிப் பேச்சுக்கள், ஒலிச்சித்திரங்கள், நாடகங்கள், செய்தித்தாள்களுக்குச் சிறப்புக் கட்டுரைகள், ஆண்டு மலர்களுக்குக் கவிதை, கட்டுரைகள், கவியரங்கு, பட்டிமன்றம், கருத்தரங்கு முதலியவற்றில் பங்கு.

யாழ்ப்பாணம் கு.வி. அச்சகப் பாடநூல் வெளியீட்டுத் தலைவராக 1972 தொடக்கம் 1995 வரை

**நூலாக்கப்பணிகள்:**

சிறுபிரபந்தங்கள் - ஊஞ்சல்

1.வட்டூர்ப் பிராட்டி வளவு ஞானவைரவர் திருவூஞ்சல்

2.நீர்கொழும்பு ஸ்ரீ சிங்கமாகாளி திருவூஞ்சல்

3.காரைநகர்த் தோப்புக்காடு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருவூஞ்சல்

4.வட்டு மேற்குச் சின்னக்கதிர்காமம் திருவூஞ்சல்

5.வட்டுக்கோட்டை, முருகஞான வைரவர் திருவூஞ்சல்

**பதிகம்**

1.நீர்கொழும்பு மாரியம்மன் திருப்பதிகம்

2.நீர்கொழும்பு ஸ்ரீ சிங்கமாகாளி திருப்பதிகம்

3.புங்கைநகர் வீரகத்தி விநாயகர் திருப்பதிகம்

4.காரைநகர் திக்கை முருகன் திருப்பதிகம்

5.வட்டுட்கோட்டைக் களவியோடை மாரியம்மன் திருப்பதிகம்

6. வட்டுட்கோட்டை வடக்கு கணவன்தோட்டம் காளியம்மன் அருள்மிகு மாகாளியம்மை திருப்பதிகம்

7.வட்டுட்கோட்டைக் மேற்குகளவியோடை அருள்மிகு பிங்கள மோதக மாமர விநாயகர் திருவூஞ்சல்

8.வட்டுமேற்கு நாவலடி வைரவர் பதிகம்

**மாலை**

1.நீர்கொழும்பு சித்திவிநாயகர் இரட்டை மணிமாலை

2.வட்டுக்கோட்டை விசுவேசர் மும்மணிமாலை

3.சந்நிதிமுருகன் செஞ்சொல்மாலை.

4.வட்டூர் வெப்பட்டியொல்லை செந்தில் முருகையன் நான்மணிமாலை

**திருச்சதகம்** 1.வட்டுமேற்கு சின்னக்கதிர்காமம் செவ்வேள் திருச்சதகம்

**பிள்ளைத்தமிழ்** வட்டுட்கோட்டைக் வீயோடை முத்துமாரியம்மன் பிள்ளைத்தமிழ்

**திருப்பள்ளியெழுச்சி** 1. சத்திய சாயிபாபா திருப்பள்ளியெழுச்சி அந்தாதி

2. பிராட்டி வளவு ஞான வைரவர் அந்தாதி

3. நீர்கொழும்பு சித்திவிநாயகர் அந்தாதி

**அம்மானை** 1. நாவலர் அம்மானை

2. வட்டு வடக்கு காளிஒல்லை அருள்மிகு மாகாளி போற்றி அகவல்

**போற்றிப்பாஃறொடை** 1) முறிகண்டி விநாயகர் போற்றிப் பா.்.றொடை

**சிறுவர் இலக்கியம்** 1) குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள்

**தலபுராணம்** 1) வட்டுக்கோட்டை விசுவேசர் புராணம்

2) ஆண்டிகேணி ஐயனார் புராணம்

**கட்டுரை நூல்கள்** 1) மாணவர் செந்தமிழ்க் கட்டுரைகள்

2) குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்க் கட்டுரைகள்

3) சங்கநூல்களில் வரும் செஞ்சொல்லோவியங்கள்

4) காயத்திரி மந்திரம்

5) தமிழமுதம் பகுதி -1

**உரைகண்ட நூல்கள்** 1) திக்கைத் திரிபந்தாதி

2 )தன்னையமக அந்தாதி

**மாணவர்களுக்கான நூல்கள்** 1) சுதந்திர இலங்கைவாசகம் வரிசை 1-8 வரை

2) சைவபோதினி 8ஆம் வகுப்பு

3) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும்

4) சுற்றாடற்கல்வி 1-6 வரை

5 )சைவசமய பாடம் 2-6 வரை

6) புதிய தமிழ் மொழிப் பயிற்சி

7) விஞ்ஞானம் 4-5 வகுப்பு

8) பயிற்சி வழித் தமிழ் 1-8 வரை

9) க .பொ.த (சாதரண) தமிழ் மொழிப் பயிற்சிகள்

**நூற்பதிப்பு வரிசையில் உதவியமை** 1) சிவராத்திரி புராணம் (ஸ்ரீகாந்தா)

2) கந்தபுராணம் உற்பத்தி காண்டம் (ஸ்ரீகாந்தா)

3) பன்னிரு திருமுறை -திருவாசகம் -விவேகசூடாமணி வேதாகமம் முதலியன

# ஈழத்துப் பண்டிதப் பாரம்பரியமும் பண்டிதர் மயில்வாகனனாரும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா (மேனாள் தலைவர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- நூற்றாண்டு விழா முதன்மைவிருந்தினர்

நீண்ட நெடுங்காலமாகவே ஈழத்தில் தமிழ்ப் புலமைப் பாரம்பரியமொன்று நிலவிவந்துள்ளது. குறிப்பாக ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலே தமிழ்க்கல்வி, இலக்கியம், கலைகள் செழிப்புற்றிருந்தமைக்கான சான்றுகள் உள. பண்டிதர் மயில்வாகனனாரை நினைவுகூரும் பொழுது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்வி, புலமைப் பாரம்பரியம் பற்றிச் சிறப்பாக நோக்குவது தவிர்க்க முடியாதது.

மேலைப்புலத்தார் வருவதற்குமுன் ஈழத்திலே மரபுவழிக் கல்வியே நிலைபெற்றிருந்தது. மரபுவழிப் புலமைப் பாரம்பரியத்தினூடு மேற்கிளம்பிய புலமையாளர்கள், தமிழ்மொழியை, தமிழ் இலக்கியத்தைச், சைவசித்தாந்தத்தைச் சிறப்பாகக் கற்றும் கற்பித்தும் வந்தனர். சிலர் வடமொழியிலும் சிறப்புப் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருந்தனர்.

மிஷனரிமாரின் வருகையுடன் நிறுவனமயப்பட்ட கல்விமரபு நிலைபெறத் தொடங்குகின்றது. ஏககாலத்தில் மரபுவழிக் கல்வியும் நிறுவனவழிவரும் கல்வியும் இங்கு நடைபெற்றது. சமூக, பொருளாதார, அரசியற் காரணிகளால் நிறுவனவழிவரும் கல்விமரபு மதிப்பார்ந்த கல்விமரபாக அங்கீகரிக்கப்படுகின்றது.

மரபுவழித் தமிழ்க்கல்வியின் சுவடுகளை யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திலிருந்தே அடையாளம் காணமுடிகின்றது. இதன் தொடர்ச்சி ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை நீண்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

19 ஆம் நூற்றாண்டின் மரபுவழித் தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தின் பலத்தையும் செழிப்பையும் இக்காலத்திலே தோன்றிய புலமையாளர்களினூடு கண்டுகொள்ளலாம். (நீண்டதொரு பட்டியல் தரலாம். விரிவஞ்சி விடுத்தோம்).

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பெற்ற பலர் நிறுவனவழிவரும் கல்விமரபு அறிமுகப்படுத்தப்பட்டதும் அதனுடன் இணைகின்றனர். இதனால் இவர்களின் கல்வி முறையிலும் சிந்தனையிலும் கருத்துநிலையிலும் மாற்றங்கள் நிகழுகின்றன. மரபுவழித் தமிழ்க்கல்வியும் நிறுவனவழிவரும் மேலைப்புலக் கல்விமரபும் இணைந்த தமிழறிஞர் பரம்பரையொன்று உருவாகியது. மரபுவழித் தமிழ்க்கல்வி மரபில் கற்றவர்கள் நிறுவனவழிவரும் கல்விக் கூடங்களிலே மாணவர்களாக மட்டுமன்றித் தமிழாசிரியர்களாகவும் இணைகின்றனர். இந்த இணைவு தமிழ்மொழியின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தது எனலாம்.

மரபுவழித் தமிழ்க்கல்விப் புலமையாளர்களையும் நிறுவனவழிவரும் கல்விக் கூடங்களிலே கற்பித்த தமிழ் ஆசிரியர்களையும் பண்டிதர், புலவர், வித்துவான் என அழைக்கும் வழக்காறு நிலவியமையும் குறிப்பிடத்தக்கது.

பண்டிதன் என்ற சொல் சுக்கிரன், புதன், புலவன், வைத்தியன், வித்துவான் ஆகியவற்றைக் குறிக்கும் என அகராதிகள் கூறுகின்றன. பாண்டித்தியம் என்ற சொல்லில் இருந்து பண்டிதன் என்ற சொல் வந்திருக்கும் என ஊகிக்கலாம். பாண்டித்தியம் என்றால் படித்தல் என்று யாழ்ப்பாண அகராதி குறிப்பிடுகின்றது. பண்டிதன் - பண்டிதர் என அழைக்கும் வழக்காறு தமிழிலே நீண்டகாலமாகவே நிலவிவருகின்றது. முருகனுக்குரிய பரியாய நாமங்களிலே ஞானபண்டிதன் என்பதும் ஒன்று என்பதை இவ்விடத்திலே நினைவுகூரலாம். பண்டிதன் மரியாதை ஒருமை ‘அர்’ விகுதி பெற்றுப் பண்டிதர் என வழங்கியிருக்கும்.

தமிழ்ப்புலமை மரபிலே குணவீரபண்டிதர், வரதபண்டிதர், சங்கரபண்டிதர், முருகேசபண்டிதர், நாகநாதபண்டிதர், கணேசபண்டிதர் முதலான அறிஞர்கள் பலர் பண்டிதர் என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் பண்டித பரீட்சைக்குத் தோற்றிப் பட்டச்சான்றிதழ் பெறாத பண்டிதர்களாவர்.

குருகவி மகாலிங்கசிவத்தைப் பரீட்சை எடாத பண்டிதர் எனப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிடுவர். டானியல் பூவர், டாக்டர் கிறீன் முதலானவர்களையும் பண்டிதர் (புவர்பண்டிதர், கிறீன்பண்டிதர்) என்று யாழ்ப்பாணத்தவர் அழைத்தமை சுட்டிக்காட்டத்தக்கது. இத்தகையதொரு

பின்னணியிலேதான் யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியத்தினை நோக்க வேண்டும்.

மரபுவழித் தமிழ்க்கல்வியைப் பேணிப்பாதுகாக்கவும் பயிற்றவும் முனைந்த அறிஞர்கள் கூடி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் என்றொரு சங்கத்தினை 1900 ஆம் ஆண்டு நிறுவினர். அக்காலத்து அறிஞர்களும் பிரபுக்களும் ஒன்றிணைந்து நிலவிய யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் தமிழ்க்கல்வி அபிவிருத்திக்கான பல திட்டங்களை வகுத்தது என அறிய முடிகின்றது. இச்சங்கம் பாலபண்டித, பண்டித பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்திப் பரீட்சை நடத்தும் நோக்கத்தினையும் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆனால், இச்சங்கம் பரீட்சை நடத்திப் பட்டம் வழங்கியமை பற்றி அறியமுடியவில்லை.

1901ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கம் ஆரம்பிக்கும் பொழுது யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பு விதிகளையும் பாடவிதானங்களையும் கேட்டுப்பெற்றே தமது அமைப்பு விதிகளையும் பாடவிதானங்களையும் வடிவமைத்தனர். மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவ அங்கத்தவர்களாகக் குமாரசுவாமிப்புலவர் உள்ளிட்ட அறிஞர்கள் சிலர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் பாலபண்டித, பண்டித பரீட்சைகளை நடத்திப் பட்டம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.இலங்கையில் இருந்து மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையில் முதன்முதலாகச் சித்தியெய்தியவர் சுவாமி விபுலானந்தர் (அப்பொழுது மயில்வாகனர்) அவர்களே என்று கூறப்படுகின்றது. இவருக்குப் பின் வவுனியாவைச் சேர்ந்த இராசையனார் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலே தேறினார் என்று அறியமுடிகின்றது. இவர் தோற்றிய - சித்தியெய்திய ஆண்டினைச் சரியாக அறியமுடியவில்லை.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டித பரீட்சையில் வடமராட்சி புலோலியைச் சேர்ந்த பார்ப்பதி அம்மாள், பத்மாசனி அம்மாள் ஆகிய இரு பெண்மணிகள் சித்தியெய்தியமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. “புலோலியிலே இரு பெண்மணிகள் பண்டித பரீட்சையிலே தேறினார்கள் என்பதைக் கேள்விப்பட்டதும் எனக்கு வாயூறியது” என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். எமது மாணவர் பா.மகாலிங்கசிவம் இவ்விடயம் பற்றி ஆய்வுசெய்து கட்டுரை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பெண்கள் (மதுரை, யாழ்ப்பாணம்) பண்டித பரீட்சையிலே சித்தியெய்திப் பண்டிதைகளாக விளங்கியுள்ளனர். பத்மாசனி அம்மாளைத் தொடர்ந்து, பரமேஸ்வரி, சத்தியதேவி, அமிர்தாம்பிகை, மகேஸ்வரி, தங்கம்மா அப்பாக்குட்டி, பொன் பாக்கியம் முதலானோர் பண்டித பரீட்சையிலே தேறிப் பண்டிதைகளாக விளங்கினர். (இப்பட்டியல் முழுமையானது அல்ல)

யாழ்ப்பாணம் காவிய பாடசாலையிலே சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவரிடம் வரன்முறையாகப் பாடங்கேட்ட இருவர் ஈழநாட்டின் தலைசிறந்த தமிழ்ப்பண்டிதர்களாகத் திகழ்ந்தனர். ஒருவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, மற்றவர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை. ஈழத்துத் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்திலே இவர்களுக்குச் (இவர்களோடு தென்கோவை சி.கந்தையாவையும் இணைத்துக் கொள்ளல் வேண்டும்) சிறப்பானதோர் முக்கியத்துவம் உண்டு. இவர்கள் மூவரும் ஆசிரிய கலாசாலைகளிலே விரிவுரையாளர்களாக இருந்தவர்கள். இவர்களின் ஆளுமை விருத்தியினூடு உருவான ஆசிரியர்கள் பலர் இலங்கைத் தீவெங்கும் பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மூவரும் ஈழநாட்டின் தமிழ்க்கல்விப் பரம்பலுக்கும் இரசனைப் பயிற்சிக்கும் இன்றைய தமிழ்க்கல்வியின் வளர்ச்சிக்கும் வழிசமைத்தவர்கள் எனலாம்.

யாழ்ப்பாணத்திலே 1921ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் நாள் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ‘வித்தியாகர்த்தர்’ திரு. எவான்ஸ் அவர்கள் இச்சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். இதன் செயலாளராக அக்காலத்திலே வித்தியாதரிசியாகப் பணியாற்றிய முகாந்திரம் தி.சதாசிவஐயர் பணியாற்றினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலும் நிரம்பிய புலமையுடைய சதாசிவஐயர் மிகவும் அர்ப்பணிப்போடு இச்சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது. இச்சங்கம் தமிழிலும் வடமொழியிலும் பிரவேசபண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகளை நடத்திப் பட்டம் வழங்கியது.

பண்டித பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கிலே கல்வி நிறுவனங்கள் பல நிறுவப்பட்டன. ஏற்கனவே நாவலர் பாடசாலையுடன் இணைந்து செயற்பட்ட காவிய பாடசாலை, பிராசீன பாடசாலை, பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் நடைபெற்ற பண்டித வகுப்புக்கள் முதலானவை விதந்து குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தொடர்ந்து திருநெல்வேலி, மல்லாகம், தெல்லிப்பளை, கரவெட்டி, புலோலி முதலான இடங்களிலேயும் பண்டித பரீட்சைக்கான வகுப்புக்கள் நடைபெற்றுள்ளன.

ஆரியதிராவிடபாஷா விருத்திச்சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் என்பவை நடத்திய பண்டிதர்

பரீட்சைகளிலே தேறி ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்களுக்குச் சம்பளத்தோடு மேலதிகமாகப் பத்துருபா வழங்கப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனாலே பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் பலரும் பண்டித பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தத் தனிப்பட்ட முறையிலும், வகுப்புக்களிலும் படித்தனர் என அறிய முடிகின்றது. குறிப்பாக வித்துவசிரோமணி கணேசையர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் ச.பொன்னுத்துரை, கந்தமுருகேசனார், வித்துவான் சுப்பையாபிள்ளை, இலக்கண வித்தகர் நமசிவாயதேசிகர், பண்டிதர் மயில்வாகனார், பண்டிதர் க.வீரகத்தி முதலானோர்களிடம் சென்று ஒவ்வொரு நூலாகப் பாடங்கேட்டுப் பண்டித பரீட்சையிலே தேறியவர்களும் யாழ்ப்பாணத்திலே இருந்தார்கள்.

யாழ்ப்பாணத்துப் பண்டிதப் பாரம்பரியத்திலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகத் திகழ்ந்தது பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையாகும். ஏககாலத்திலே பண்டிதர் பட்டம் பெறுவதற்கான படிப்பித்தலும் ஆசிரிய பயிற்சியும் பரமேஸ்வராவிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே படித்து வெளியேறிய பண்டிதர்களுக்கும் மற்றைய நிறுவனங்களினூடு பட்டம் பெற்ற பண்டிதர்களுக்குமிடையே சிற்சில அமிசங்களில் வேறுபாடுகள் காணப்பட்டன எனக் கருதலாம். பரமேஸ்வராக் கல்லூரிப் பண்டித ஆசிரியப் பயிற்சி பெற்ற மாணவர்களிற் சிலர் ஆரியதிராவிடபாஷா விருத்திச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடையவில்லை. ஆனால் இதேமாணவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத் தோற்றிச் சிறப்பாகச் சித்தியெய்தினர் எனக் கூறப்படுகின்றது. (தகவல். பண்டிதர் சி.சச்சிதானந்தன், பண்டிதர் க.நாகலிங்கம்)

பரமேஸ்வராப் பண்டிதர்களிடம் மரபுவழிச் சிந்தனைகளோடு நவீன முற்போக்குச் சிந்தனைகளும் காணப்பட்டன. பரமேஸ்வராவிற் படித்து மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர்களான பண்டிதர் க.சச்சிதானந்தன், பண்டிதர் க.நாகலிங்கம், பண்டிதர் க.வீரகத்தி (இவர் நமது ஆசிரியர்), பண்டிதர் மயில்வாகனன் முதலியோர் விதந்து குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இலக்கிய இலக்கண, தருக்கப் புலமையோடு கவிதை எழுதும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் விளங்கினர்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கப் பரீட்சையிலும் ஏககாலத்திலே தோற்றிச் சித்தியடைந்த பெருமை மயில்வாகனாரையே சாரும். இவரை இரட்டைப் பண்டிதர் என இவரது நண்பர்கள் அழைப்பார்களாம். இவருக்கு வாய்த்த ஆசிரியர்கள் அக்காலத்துப் புகழ்பூத்த தமிழறிஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களிலே பண்டிதமணி ந.சுப்பையாபிள்ளை, சோ.இளமுருகனார், வித்துவான் கார்த்திகேயன், க.பொ.இரத்தினம், நவாலியூர் சோமசுந்தரப்புலவர் முதலானோர் ஒருவகையினர். கலாநிதி. கு.சிவப்பிரகாசம் (இலங்கையிலே முதன்முதலில் உளவியலிலே கலாநிதிப் பட்டம் பெற்றவர்), மாவைக்கவுணியன் என அழைக்கப்பட்ட நவநீதகிருஷ்ணபாரதியார் இன்னொரு வகையினர். இந்த இருவகைப் பேராறுகளின் சங்கமமாக மயில்வாகனனார் திகழ்ந்தார்.

இவரது பன்முகப் பணிகள் தனித்த ஆய்வுக்குரியவை. ஆசிரியராக, அதிபராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, பாடநூல் ஆக்க அறிஞராக, பொதுப் பணியாளராகத் திகழ்ந்தவர். இவை பற்றித் தனித்தனியே விரிவாக எழுதவேண்டும். விரிவஞ்சி விடுத்தோம். எனினும், இவரது கவிப்புலமை பற்றி ஏலவே பலராலும் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரது புலமைச் செல்நெறி இலங்கை முழுவதும் பரந்து விரிந்து சென்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அப்பால் மலையகம், நீர்கொழும்பு முதலான இடங்களிலே இவரின் கற்பித்தற் பணி பரவியது. நல்லாசிரியனாகத் தமிழைச் சுவையாக, இரசனையாகக் கற்பிக்கும் திறன் இவரிடம் இருந்தது. இதனாலே அந்தப் பகுதிகளின் கல்விச் சமூகத்தாலே நேசிக்கப்பட்டார்.

இவரது புலமைத்திறன் இலங்கை முழுவதும் பரவ ஏதுவாக அமைந்த காரணிகளில் ஒன்று இவரது பாடநூல் ஆக்கப் பணியாகும். இவரது பாடநூல்கள் இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளிலே பாடநூல்களாகப் பரிந்துரைக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டன. இவரது மொழிப்புலமை, இலக்கிய இரசனை, இலக்கண அறிவு, நுண்ணறிவு முதலானவை இலங்கை முழுவதும் வியாபிக்க இவரது பாடநூல்கள் உதவின.

கவிதைத் துறையிலே இவர் அதிகம் ஈடுபாடு காட்டினார் எனலாம். எல்லாவகை யாப்புக்களிலும் இலகுவாகச் செய்யுள் செய்யக்கூடிய வல்லமை இவரிடம் இருந்தது. பல்வேறு இலக்கியவகை, பல்வேறு யாப்பு வடிவங்கள் என்பவற்றை அதிகமாகக் கையாண்டவர் என்ற பெருமை மயில்வாகனனாரைச் சாரும். 'நிறைகுடம் தளம்பாது' என்ற கருத்துநிலைக்குச் சான்றாக வாழ்ந்தவர்.

வட்டுக்கோட்டை விசுவேசர் புராணம், ஆண்டிக்கேணி ஐயனார் புராணம் ஆகிய இரண்டுக்கும் ஈழத்துத் தமிழ்ப்புராண வரலாற்றிலே மிகவும் முக்கியத்துவம் உண்டு. இது இவரது பாரிய முயற்சி. காலம்

கடந்தும் நிற்கும் வல்லமை இப்புராணங்களுக்கு உண்டு. மயில்வாகனனாரும் தமிழ்க் கவிதையும் என்று தனியானதோர் கட்டுரை எழுதப்பட வேண்டும்.

மனிதநேயம் மிக்கவராகத் திகழ்ந்த இவர் தம் காலத்துத் தமிழ்ப்புலமையாளர்களுடன் மிக நெருக்கமான உறவினை வைத்திருந்தவர். மதுரைத் தமிழ்ச்சங்கம், ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கம் ஆகிய இரு நதியிலும் நீராடி மகிழ்ந்தவர். இலங்கையின் தேசிய கீதத்தினைத் தேனொழுகு செந்தமிழிலே, மூலக்கருத்து ஓசை முதலானவை சிறிதளவும் சிந்தாமற் சிதறாமல் மொழிமாற்றம் செய்த முத்தமிழ்ப்புலவர் நல்லதம்பியின் மருகர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது பணியிலே இன்று பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் அவர்கள் பயணித்துக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. வட்டுக்கோட்டைக்குச் சிறப்பாகச் சிந்துபுரத்திற்குத் தமிழ்ப்புலமை, தமிழ்க்கலைகள், தமிழர் சமயம், தமிழ்ப்பண்பாடு முதலியவற்றைப் பேணிப்பாதுகாத்த பெருமை உண்டு.

பல்பரிமாண ஆளுமை மிக்க பண்டிதர் க.சச்சிதானந்தன் கவிதை, கட்டுரை, இலக்கணம், சிறுகதை, நாவல், ஆய்வு, வானியல் முதலிய துறைகளிலே முத்திரை பதித்தவர். இவரது

> "சாவிற் தமிழ்படித்துச் சாகவேண்டும் – எந்தன்
>
> சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்"

என்ற கவிதை மிகவும் பிரசித்தி பெற்றது.

பண்டிதர் க.நாகலிங்கம் அவர்கள் இலக்கணத் துறையிலே மிகுந்த பயிற்சியும் தேர்ச்சியும் உடையவராகத் திகழ்ந்தார். இவர் எழுதிய செந்தமிழ் இலக்கணம் (மூன்று பாகங்கள்) இவரது இலக்கணச் சிந்தனையைத் தெளிவாகப் புலப்படுத்தப் போதுமானது. சமூக உறவுகளைப் பலமாகப் பேணியவராகவும் இவர் விளங்கினார்.

பண்டிதர் க.வீரகத்தி எமது தமிழாசிரியர். கவிதை, கட்டுரை, ஆய்வு, சிறுகதை ஆகிய துறைகளிலே ஆழமான சுவட்டினைப் பதித்தவர். சிறந்த கவித்துவ ஆற்றல் பெற்ற பண்டிதர் க.வீரகத்தி (க.வீ) இலக்கண ஆய்வுத் துறையிலே ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்ந்தவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே சிறப்பாய்வாளராகப் பணியாற்றிய பெருமை இவருக்கே உரியது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்டிதர் ஒருவரைச் சிறப்பாய்வாளராக நியமித்து இலங்கைப் பண்டிதப் பாரம்பரியத்தைக் கௌரவித்தது. பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரை இவரைத் தமிழ் இலக்கணத்திற்கு ஓர் 'நியூட்டன்' எனக் குறிப்பிட்டமை எமக்கெல்லாம் பெருமை தருவதாகும். இவரது ஆக்கங்கள் காலத்தால் அழியாதவை.

பரமேஸ்வரா பண்டித ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலே மாவைக்கவுணியன் நவநீதகிருஷ்ணபாரதியார், கலாநிதி கு.சிவப்பிரகாசம் (முதன்முதலில் உளவியலிற் கலாநிதிப் பட்டம் பெற்ற இலங்கைத் தமிழ் அறிஞர்), சுந்தரராஜ ஐயங்கார் முதலியோர் விரிவுரையாளர்களாக விளங்கினர். நவநீதகிருஷ்ண பாரதியார் சிறந்த கவிஞராகவும் உரையாசிரியராகவும் விளங்கியவர். இவர்களின் கற்பித்தற் திறமை பற்றி பண்டிதர்கள் வாயூற ஊறக் குறிப்பிடுவார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்கும் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கப் பண்டிதர் பரீட்சைக்கும் உரிய பாடத்திட்டங்கள் பெருமளவுக்கு ஒன்றாகவே இருந்தன. ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலப் பாடத்திட்டம் பின்வருமாறு:

**இலக்கணம்:** தொல்காப்பியம் முழுவதும்

**யாப்பிலக்கணம்:** யாப்பருங்கலக்காரிகை, செய்யுளியற்றல் முக்கியமானதாகக் கட்டாய வினாவாக இருந்தது.

**அணி இலக்கணம் :** தண்டி அலங்காரம்

சங்க இலக்கியங்கள்

**சிற்றிலக்கியங்கள் :** சிறப்பாகத் தஞ்சை வாணன் கோவை, கரவை வேலன்

**நீதிநூல்கள் :** சங்கமருவிய நூல்கள், குறிப்பாகத் திருக்குறள், நாலடியார்

**காவியங்கள் :** சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், இரகுவமிசம்.

**பிற்காலப் பக்திப்பாடல்கள் :** குமரகுருபரர் பாடல்கள். வில்லிபுத்தூராழ்வார் பாரதம் முதலானவை.

இலக்கணமும் செய்யுளியற்றலும் இலக்கிய நயமும் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவற்றோடு சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அடிப்படை அறிவு. பிற்காலத்திலே ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கப் பாடத்திட்டத்திலே சிங்களமும் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குமாரசுவாமிப்புலவர், வித்துவசிரோமணி கணேசையர் முதலானோர் எழுதிய நூல்கள் பண்டித மாணவர்களுக்கு மிகுந்த உதவியாக இருந்தன என்று பண்டிதர்கள் பலரும் கூறியுள்ளனர்.தமிழ் இலக்கிய இலக்கணங்களில் ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட பண்டிதர்கள் தலைசிறந்த தமிழாசிரியர்களாகத் திகழ்ந்தனர். காவியத்தின், கவிதையின் உட்பொருள் உணர்ந்து இரசனையை வளர்ப்பதிலும், மொழியைப் பிழையறப் பேச எழுதப் பயிற்றுவிப்பதிலும் இவர்கள் அதிக கவனம் செலுத்தினர். இவர்களின் கற்பித்தல் முறையைப் பற்றித் தனியானதோர் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை,பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் க.சச்சிதானந்தன், பண்டிதர் ச.கந்தையா, பண்டிதை சந்தனநங்கை கந்தப்பு, சத்தியதேவி துரைசிங்கம் முதலானோர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலே விரிவுரையாளர்களாகப் பணியாற்றியமையால் இவர்களின் கற்பித்தல் மரபு தமிழாசிரியர்களுக்கு ஊடாக இலங்கை முழுவதும் வியாபித்தது.பல பண்டிதர்கள் பாடசாலை ஆசிரியர்களாக இலைமறைகாய் போல இருந்து தமிழ்க்கல்வியை வளர்த்துள்ளனர். இப்பண்டிதர்களின் பெயர்ப்பட்டியலைத் தருவது நமது நோக்கமன்று. ஆனால், அந்தப் பட்டியல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது.

பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன், கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களின் குன்றா உழைப்பாலே நின்றுநிலைக்கும் ஆரியதிராவிடபாஷா விருத்திச் சங்கம் 'மீண்டும் தொடங்கும் மிடுக்காக' பண்டித வகுப்புக்களையும் பரீட்சையையும் நடத்திப் புதியதோர் பண்டிதப் பாரம்பரியத்தினை உருவாக்கித் தமிழ்மொழி, இலக்கியக் கல்வியை வளர்க்கிறது. அவர்களை மனமுவந்து பாராட்டுவோம்.

## நினைவில் நிறைந்திருக்கும் பண்டிதர் அய்யா

முருகபூபதி - அவுஸ்திரேலியா (நூற்றாண்டு விழாச் சிறப்பு விருந்தினர்)

இலங்கையின் வடமேற்குக் கரையில் இந்து சமுத்திரத்தாயின் அரவணைப்பில் திகழும் நீர்கொழும்பூருக்கு ஐதீகத்திலும் வரலாற்றிலும் அழியாத அடையாளம் இருக்கிறது. இலங்கேஸ்வரன் இராவணனின் புதல்வன் இந்திரஜித்தன் நிகும்பலை என்னும் யாகம் வளர்த்த ஊர் என்பதனால் அதற்கு நிகும்பலை என்றும் ஒரு காரணப்பெயர் இருக்கிறது.அந்த யாகத்திற்காக இந்திரஜித்தன் இவ்வூரில் ஐந்து இடங்களில் உருவாக்கிய குளங்கள் காலப்போக்கில் அடையாளம் தெரியாதவகையில் உருமாறிக்கட்டிடக்காடுகளாகிவிட்டன. எனினும், இன்றும் மழைக்காலத்தில் அந்த இடங்களில் தண்ணீர் தங்கித் தேங்கிவிடுவதை அவதானிக்கமுடிகிறது.

இலங்கை வரலாற்றில், இடம்பெற்ற துட்டகைமுனுவின் மனைவிக்கு வந்த உடல் உபாதையைப் போக்குவதற்கு இந்த ஊரில் தேன் கிடைத்தமையால் தேன் ஊர் என்ற அர்த்தத்தில் மீகமுவ என்றும் சிங்கள மொழியில் அழைக்கப்பட்டதுதான் இவ்வூர். அவ்வாறே நேபழஅடிழ என ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதற்கும் காரணங்கள் இருக்கின்றன.

மன்னர் காலத்தில் தேனும் சுரந்து, ஒல்லாந்தர் காலத்தில் ஏலம், கறுவா, கராம்பு முதலான வாசனைத்திரவியங்கள் விளைந்த பிரதேசமாகவும் திகழ்ந்தமையாலும் இனிமையும் வாசனையும் நிரம்பிய நகரமாகியது. ஒல்லாந்தர்கள் நீர்கொழும்புக் கடற்கரைக்குச்சமீபமாக ஒரு கற்கோட்டையை அமைத்து முகாமிட்டபோது, அதற்கு வடமேற்கிலிருந்து வருவதற்கு மகா ஓயா நதியிலிருந்து கிளை வெட்டி புத்தள வெட்டுவாய்க்காலையும் அமைத்தனர். அதற்கு அணித்தாக எழுந்தருளிய ஸ்ரீசித்திவிநாயகர் கோயிலின் முன்புறம் நீண்ட காலமாக விருட்சமாக வளர்ந்திருந்த அரச மரத்தின் நிழலில் அக்காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த சைவத் தமிழ்ப்பெருங்குடி மக்களினால் உருவாக்கப்பட்டது இந்து வாலிபர் சங்கம்.

வந்தோரை வாழவைக்கும் சிங்கார நீர்கொழும்பு என்ற பெயரையும் இவ்வூர் பெற்றிருந்தது. கத்தோலிக்க மக்கள் செறிந்துவாழ்ந்த இந்த ஊருக்கு சின்னரோமாபுரி என்றும் ஒரு பெயர் வழக்கிலிருந்தது. நூற்றுக்கணக்கான கத்தோலிக்க வழிபாட்டிடங்கள் அமைந்திருந்தமையினால், இந்தக்காரணப்பெயரும் தோன்றியிருக்கிறது.இவ்வாறு பல காரணப்பெயர்களுடன் விளங்கிய எமது ஊருக்கு காரணம் இல்லாமல் காரியம் இல்லை எனச்சொல்லத்தக்வகையில் 1954 ஆம் ஆண்டு ஒரு விஜயதசமி காலத்தில் தோன்றியதுதான் விவேகானந்தா வித்தியாலயம்.

முகாமைத்துவப் பாடசாலைகள் இலங்கை எங்கும் வியாபித்திருந்த காலத்தில், நீர்கொழும்பில் நீண்டகாலமாக வாழ்ந்த சைவத்தமிழ் மக்களுக்கும் வடக்கிலிருந்து தொழில், வர்த்தகம், திருமண உறவு முறைகளினால் இடம்பெயர்ந்து வருகைதந்த சைவத்தமிழ் மக்களுக்கும் ஒரு குறைபாடு நீடித்தது.அக்குடும்பங்களுக்கு கடற்கரை வீதியில் வழிபாட்டிற்கு மூன்று ஆலயங்கள் இருந்தபோதிலும், அக்குடும்பங்களின் குழந்தைகளுக்கென ஒரு சைவத் தமிழ்ப்பாடசாலை இல்லாத குறை நீடித்திருந்தது. எனினும் சைவ சமயத்தை போதிக்கின்ற - கூட்டுப்பிரார்த்தனை வகுப்புகளை நடத்துகின்ற தேவையை உணர்ந்த இந்து வாலிபர் சங்கம் சமூக அமைப்பாகவும் இயங்கியமையால் அதற்காக சாமி சாஸ்திரியார் என்ற ஆசான் மூலம் சமயபாட வகுப்பினைச் சங்க மண்டபத்தில் நடத்துவதற்கு தொடங்கியது.

எனினும் அதற்கு வந்த குழந்தைகள், இதர பாடங்களை ( கணிதம், ஆங்கிலம், புவியியல், குடியியல்) படிப்பதற்கு அருகிலிருந்த புனித செபஸ்தியார் பாடசாலை, புனித மரியாள் பாடசாலை, நியூஸ்ரட் ஆங்கில மகளிர் பாடசாலை, ஆவேமரியா மகளிர் பாடசாலை ஆகியனவற்றுக்குத்தான் சென்றனர்.1954 ஆம் ஆண்டு வரையில் இந்த நிலைமைதான் நீடித்தது.

இந்த நிலையை மாற்றுவதற்கு ஏதுவாக அச்சமயத்தில் இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராக இருந்த பெரியார் எஸ்.கே. விஜயரத்தினம் அவர்கள் ஒரு வழக்கறிஞராகவும் உத்தியோகப்பற்றில்லாத நீதிவானாகவும் விளங்கினார். அதேசமயம் நீர்கொழும்பு நகர பிதாவாகவும் (மேயர்) தெரிவாகியிருந்தார்.

தனது காலத்திலாவது இங்கு வாழும் சைவத்தமிழ் குழந்தைகளுக்காக ஒரு பாடசாலையை தங்கள் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் தொடக்கிவைக்கவேண்டும் என்ற தீர்மானத்தை சங்கத்தின் உறுப்பினர்களின் ஆதரவுடன் முன்வைத்தார்.

இவ்வாறு அந்தப்பாடசாலை தொடங்கப்பட்ட அக்காலப்பகுதி, இன்று இந்தப் பதிவை எழுதும் எனக்கு நினைவாக ஆழ் மனதில் பதிந்திருக்கிறது. ஒரு மனிதனின் முதலாவது காலடித் தடத்திலிருந்துதான் ஒற்றையடிப்பாதைகள் தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றிய பாதைகள் தான் காலப்போக்கில் பெரிய அகலிக்கப்பட்ட வீதிகளாக மாறுகின்றன.

அவ்வாறு ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் - அதாவது 64 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கிய விவேகானந்த வித்தியாலயத்தின் முதல் மாணவன் என்ற பெருமையை பெற்ற - இன்று நூற்றாண்டு காணும் பண்டிதர் மயில்வாகனன் அய்யா அவர்களின் மடியிலிருந்து அவ்வேளையில் அ எழுத்தை எழுதிய பெரும் பேறும் பெற்ற குழந்தையுமான எனக்கு, 64 ஆண்டுகளுக்குப்பின்னர் நான் பிறந்த ஊரின் வரலாற்றையும் அதன் மகிமையையும் இவற்றின் ஊடாக எமக்கு கல்விக்கண்ணை திறந்த பெருமகன் பற்றி நனவிடை தோய்வதற்கும் இந்த மலர் களமாகியிருப்பதும் விதிப்பயன்தான்!

வட இலங்கையில் 1919 ஆம் ஆண்டு பிறந்திருக்கும் பண்டிதர் அய்யாவோ வடமேற்கிலங்கையில் 1951 ஆம் ஆண்டு பிறந்திருக்கும் நானோ, 21 ஆம் நூற்றாண்டில் ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் பாரிஸ் மாநகரில் இத்தகைய ஒரு நூற்றாண்டு கொண்டாடப்படும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டோம்.இலங்கையில் நீடித்த இனப்பிரச்சினையினால், சங்க இலக்கியத்தில் முன்னர் குறிப்பிடப்பட்ட ஐவகைத்திணைகளிலுமிருந்து ஆறாவது வகைத்திணை உருவாகியிருக்கும் பலனையும் காண்கின்றோம்.

குளிரும் குளிர்சார்ந்த பிரதேசமுமாக ஆறாம் திணையில் - பாரிஸ் மாநகரில் பண்டிதர் அய்யாவின் நூற்றாண்டை கொண்டாடுவதற்கு முன்வந்துள்ள அன்னாரின் சந்ததியினர் தமிழ் கூறும் நல்லுலகினால் மனமுவந்து பாராட்டப்படவேண்டியவர்கள்.1954 ஆம் ஆண்டு விஜயதசமியன்று காலை, கற்கண்டும் வாழைப்பழங்களும் நிரம்பிய தட்டங்கள் முன்னாலமர்ந்திருக்க, வெள்ளைப்பச்சை அரிசி நிரம்பிய பித்தளைத்தட்டத்தின் முன்னே பண்டிதர் அமர்ந்து, என்னை அவர் மடியில் இருத்தி, எனது பிஞ்சுக்கரம் பற்றி, “ தம்பி சொல்லு.... அ. ஆ. இ, ஈ.˙” என்று அடுத்தடுத்து அரிச்சுவடியை அரிசியில் எழுதவைத்த பெருந்தகையின் முன்னே, 1975 ஆம் ஆண்டு அதாவது 24 வருடங்களின் பின்னர் ஒரு எழுத்தாளனாய் - பத்திரிகையாளனாய்த் தோன்றியபோது என்னை வாரியணைத்து உச்சிமோந்தவருக்காக இந்த

நனவிடைத் தோய்தற் குறிப்புகளை எழுதுகின்றேன்.

1954 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையில்தான் அவரிடம் தமிழும் சைவமும் கற்றேன். இந்த எட்டு ஆண்டுகளில் நான்மட்டுமல்ல எங்கள் ஊர் தமிழ்க் குழந்தைகளும் முத்தமிழையும் பயின்றது இன்று கலங்கரை விளக்கமாக ஒளிவீசும் இன்றைய விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியான அன்றைய விவேகானந்தா வித்தியாலயம்தான்.

“தன்னலம் கருதாத விடாமுயற்சியுள்ள தன்னம்பிக்கையும் வலிமையும் பொருந்திய நூறு இளைஞர்களை ஒவ்வொரு ஊரிலும் தாருங்கள் இந்த உலகையே மாற்றிக்காண்பிக்கின்றேன்” என்று சொன்னவர் சுவாமி விவேகானந்தர்.அவர் பெயரில் ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் எங்கள் ஊரில் 32 குழந்தைகளுடன் ஆரம்பமான வித்தியாலயம், இன்று பல்லாயிரம் மாணாக்கருக்கு கல்வியைத் தந்து பெருவிருட்சமாக வளர்ந்தோங்கியிருக்கிறதென்றால், அதற்கு உழைப்பை உரமாக்கிய பண்டிதர் அய்யா உட்பட பல பெருந்தகைகளிடம் இருந்த தன்னலம் கருதாத பொது நோக்கும் தீர்க்கதரிசனம் மிக்க சீரிய சிந்தனையும் விடாமுயற்சியும் மனவலிமையும் தன்னம்பிக்கையும்தான் பிரதான காரணம்.

அவர்கள் ஊருக்கு நூறு பேராக மாத்திரம் திகழாமல் தங்கள் சந்ததிகளின் பெருக்கத்தின் ஊடாக கடல் கடந்தும் பேசப்படும் பரிமாணத்திற்கும் வித்திட்டவர்கள். பண்டிதர் அய்யாவின் மாணவர்கள் என எம்மை அழைப்பதை விட அவரது அருமைக்குழந்தைகள் என அழைப்பதே சாலப்பொருத்தம் எனக் கருதுகின்றேன்-நம்புகின்றேன்.

மாதா, பிதா , குரு, தெய்வம் என்பர். மாதாவும் பிதாவும் வீட்டில்தான். தெய்வத்தை காண்பது அரிது. மனிதர்களின் உருவத்தில் தெய்வம் தோன்றலாம்!. ஆனால், குருவிடம் செலவிடும் நேரம்தான் அதிகம். அதனால் குருவுக்கும் சீடர்களுக்குமான உறவும் நெருக்கமானது.

குருகுல முறைக்கல்வியிலிருந்து பரிமாணம் பெற்றதுதான் இன்றைய நவீன கல்வி முறை. நான் எனது பெற்றோர்களிடம் மட்டுமல்ல பெற்றோருக்கு சமமாக மதிக்கப்பட்ட உறவினர்களின் கால்களைப்பணிந்தும் ஆசிபெற்றும் வளர்ந்தவன். அந்தவகையில் பண்டிதர் அய்யாவை முதன் முதலிற் கண்ட 1954 ஆம் ஆண்டிலும் இறுதியாக 1986 ஆம் ஆண்டிலும் அவரது தாள் பணிந்து ஆசி பெற்றிருக்கின்றேன்.போர்க்காலத்தில் இலங்கை சென்றசமயத்தில் வடக்கிற்குச் செல்ல வாய்ப்பிருக்காத தருணத்திலும் தொலைபேசி ஊடாக எனக்கு ஆசி வழங்கியவர் பண்டிதர் அய்யா.என்னை ஒரு கரகாட்டக்கலைஞனாகவும் பார்த்து இரசித்து மகிழ்ந்த அவரைப்பற்றி எனது சொல்லத்தவறிய கதைகள் தொடரில் ஓர்அங்கம் எழுதியிருந்தேன்.அதனை யாழ்ப்பாணத்தில் வெளிவரும் காலைக்கதிர் நாளேடும் ஜெர்மனி (தேனீ ), அவுஸ்திரேலியா (தமிழ்முரசு - அக்கினிக்குஞ்சு) ஆகிய நாடுகளில் வெளியாகும் இணைய இதழ்களும் வெளியிட்டன.

பண்டிதர் அய்யா பற்றிய குறிப்பிட்ட பதிவின் பின்னணியில் எதிர்பாராதவகையில், நோர்வே மற்றும் பாரிஸ் நாட்டிலிருந்து என்னுடன் தொடர்புகொண்டவர்கள் அன்னாரின் நூற்றாண்டை நினைவுபடுத்தினர்.இந்த நூற்றாண்டுவிழாவில் என்னையும் அவர்கள் இணைத்துக்கொண்டது நான் செய்த பாக்கியம்தான்.

பண்டிதர் அய்யாவின் மாணாக்கன் என்ற பெயரை தக்கவைத்துக்கொள்ளவேண்டியது என்னைச்சார்ந்தது. அவர் என்றும் எம் அனைவரதும் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருப்பார்.

சிவமயம்

# வட்டுக்கோட்டையின் மூத்த பட்டப்படிப்பாளன்

**பண்ணாகத்துப் பாலபண்டிதர் ஆ. விவேகானந்தன் (நூற்றாண்டு விழாச் சிறப்பு விருந்தினர்- நோர்வே)**

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவரும் புலவர்மணியும் ஆகிய பண்டிதர் கதிரேசு. மயில்வாகனனாரின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடும் அன்பர்களுக்கு மனமுவந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் கூறுவதோடு அமரரின் பேரறிவுப் பெருமைகளையும் அடியேனுக்குத் தெரிந்தளவில் எழுத விளைகின்றேன்.

தரவு கொச்சகக் கலிப்பா

**வண்டமிழை வரன்முறையாய் மரபுவழுவாக கற்ற**

**தொண்டுமனத் தாசனாய் வட்டுக்கோட்டைத் தொகுதிப்**

**பண்டிதர் பல்லோரை நல்கிய பண்டிதப் பேராசிரியன்**

**தண்டமிழ்ச் சங்கத்திலந்தாள் தலைவனெனத் துலங்கினார்.**

பண்டிதர் ஐயா கட்டிக்காத்த பைந்தமிழானது அன்பரின் அகங்களில் பூத்துக்குலுங்குகிறது. திவ்விய ஒளியோடு மிளிர்கிறது. புகழோடு போற்றப்படுகிறது. அந்நாட்களில் அன்னாரின் கற்பித்தல் முறையானது அதியற்புதமான ஆளுமையுடையது. முத்தமிழை அறுத்துறுத்து எடுத்தியம்புகின்ற பாங்கானது, ஏற்றிப் போற்றத்தக்கது. தமிழிலக்கண இலக்கியங்களின் செறிவையும் திட்ப நுட்பத்தையும் தெட்டத் தெளிவாக விளங்கப்படுத்தும். ஆளுமையாசானாக அமரர் துலங்கினார். " அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயனே " என்றெடுத்தெழுதிய பவணந்தி முனிவரின் நன்னூற் சூத்திரத்துக்கு அமைவாகக் கற்கை நெறியைக் கற்பித்த கண்ணியவானாகப் பண்டிதர் ஐயா விளங்கினார்.

தொல்காப்பிய இலக்கணத்தோடு பத்துப்பாட்டினதும், எட்டுத்தொகையினதும், பதினெண்கீழ்கணக்கு நூல்களினதும் நுண்ணறிவுகளையும், நுணுக்கங்களையும் கசடறக்கற்று, ஐயம் திரிபறக் கற்பிக்கும் பேராசானாகத் திகழ்ந்தார். அருட்கவிதை பாடுதலே அல்லாது வீண்கவி பாடாத விரதமுள்ள புலவர்மணியாகப் புகழ் பூத்தார்.

அமரரின் பக்தி நூல்களின் மாண்புகள் வீடுபேற்றுக்கும் வழிவகுக்கும் வித்தக நூல்களாகும். இந்நூல்களைக் கற்குந்தோறும், கற்குந்தோறும் திவ்வியானந்தக் களிப்பை அள்ளியற்றி தருவனவாகும். சிவநெறிச் செல்வராகத் திகழ்ந்தார். திருக்குறளின் சான்றோனாக மிளிர்ந்தார். சொல்லும் செயலும் வழுவாத திருநெறியாளராய் உயர்ந்தார். உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய உத்தமனானார். மதுரைப்பண்டிதத் தேர்விலும் ஈழத்து ஆறுமுக நாவலரால் தொடங்கப்பட்ட ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் அன்று நடத்திய பண்டிதர் தேர்விலும் முதன்மைச் சித்தி பெற்று இரட்டைப் பண்டிதராக விளங்கினார்.

தமது வாழ்வும் வளமும் என்றெண்ணாது செந்தமிழின் மாண்பினை மற்றோரும் அறிந்தின்புற வேண்டுமென்று பண்டிதர் ஐயா எண்ணினார். தமது இளமைப்பருவத்தில் தம்மோடு படித்த அருமை நண்பரான பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்களோடு அளவளாவி வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கத்தை நிறுவுவதில் முன்னின்றுழைத்தார். இருவருக்கும் பக்கபலமாகப் பாடுபட்டவரில் பொருள் நூல் விற்பன்னரும் தமிழ்மணியும் புலவரும் வித்துவானுமாகிய நா. சிவபாதசுந்தரனாரும் இன்றியமையாதவராவார். மூவரும் ஒன்று சேர்ந்து தொடங்கப்பட்ட வட்டுக்கோட்டைத் தமிழ்ச்சங்கமானது தற்பொழுதும் செம்மொழிச் செந்தமிழை சீரோடும் சிறப்போடும் வளர்த்துச் செயலாற்றுகின்றதென்பதைத் தமிழ்ப்பேசும் தாயகமறிந்து மகிழ்வெய்துகின்றது.

வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கத்தின் பெருமைக்குரிய மாணவராக விளங்கிய பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் அவர்களின் அரும்பெரும் பணிகளால் வட்டுகோட்டைத் தமிழ்ச்சங்கம் வளர்ந்துள்ளது. தமிழ்ச்சங்கத்தின் தலைவராக அன்பர் கடம்பேசுவரன் தொடர்ந்தும் பணியாற்றுகிறார்.எனது தந்தையாருடன் நற்பண்பையும், நட்பையும் நன்கு வைத்திருந்த பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள், என்னை அன்புடன்

நண்பனே என்று இங்கிதமாக அடிக்கடி அழைத்த நினைவு எனதகத்தில் ஆனந்தத்தை அளிக்கின்றது. எனது தந்தையாரும், பண்டிதர் ஐயாவும் தத்தம் பிள்ளைகளுக்கு நாமங்கள் சூட்டும் பொழுது சமமான பெயர்களை அமைத்து மகிழ்ந்தது நட்பின் பிணைப்பை வலுவூட்டின. பண்டிதர் ஐயாவிடம் பயின்ற தீந்தமிழ்ச் சொற்களும் கற்கை நெறியும் எனதுயிர் உள்ளவரை உள்ளத்திலுயர்ந்திருக்கும். அன்னார் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்துள்ளேன் என்ற பெருமிதத்துடன் வாழ்வதறிந்து பூரிக்கின்றேன்.

அன்னாருக்கு அன்பர்களனைவரும் எடுத்துள்ள நூற்றாண்டு விழாவானது ஏற்றிப்போற்றத்தக்கதாகும். தமிழும், சைவமும், இந்துமதமும் நூற்றாண்டு விழாவால் பெருமை பெறுகின்றன. பண்டிதர் ஐயா அவர்களின் குடும்பத்தினரும், உறவினரும், ஊரவரும், தாயகத்தினரும் பண்டிதர் ஐயாவின் நூற்றாண்டு விழாவால் அளவிலா ஆனந்தமும், மதிப்பும் பெறுகின்றனர். என்னையும் ஒரு பொருட்டாக மதித்து அன்னாரின் நூற்றாண்டுப் பொன்மலரில் இக்கட்டுரையைப் பதிப்பிப்பதறிந்து பெருமை பெறுகின்றேன். நன்றி.

## பண்டிதர் மயில்வாகனனது சிறப்பு எமது ஊரின் சிறப்பு!

**புலவர் சிவநாதன் (நூற்றாண்டு விழாச் சிறப்பு விருந்தினர்)**

என் தந்தையார் முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி அவர்களின் கமலத்தாள்களை நெஞ்சில் அமர்த்தியவாறு, அவர்தம் 'கிணற்றடி வேலியின் அயலுறவாகி'அவரைத் தம்சிந்தையில் ஏற்றி மதித்து வாழ்ந்து அமரராய்ப் போந்த, தமிழாசான், புலவர்மணி, தமிழ்மணி, எமது தாயூரின் தகைசான்ற பண்டிதர் மயில்வாகனனாரின் நூற்றாண்டு விழாகுறித்த மலரிற்கான எனது பங்களிப்பினை நல்க முற்படுகின்றேன்.

எமது தாயில்லமாம் 'முருகனக'த்தின்'கிணற்றுவேலியின் உறவுக்'காரனாக, யான் எனது பிஞ்சு வயதுமுதல் இளவயதுக்காலம் வரை அன்றாடம் தரிசித்த தமிழுருவம் பண்டிதர் மயில்வாகனன் அவர்கள்!

அயல்வீட்டிலிருந்து யான் அடிக்கடி கேட்கின்ற தமிழ்க்குரலாக வாழ்ந்துவந்த பண்டிதர் மயில்வாகனன் அவர்கள் பற்றி, மற்றும் அவர் தொண்டுகள் பற்றிய 'சமகால' அறிவும் 'சந்திப்பு' அனுபவமும் அண்மைக்காலத் தொடர்புகளும் எனக்கு பெரிய அளவில் இல்லை என்பதைப் பலரும் அறியக்கூடும்!

எனது இளவயதிலேயே பெற்ற திருமண்ணைப்பிரிந்து புலம்பெயர்ந்து வந்து வாழும் காரணத்தாலும், எமது மண்ணையும் மக்களையும் எண்ணத்திலும் எழுத்திலும் ஏற்றித் தொழுத காரணத்தாலும், என்னூரோடும் உறவுகளோடும் எனக்கிருந்த 'பின்னிப்பிணைந்த புற நெருக்கம்' புழுதிமூடிப் போனமை என்தலைவிதிப்பயனாகவே யான் நம்புகின்றேன்! இவைபற்றிய எனது உணர்வுகளை 'நிலத்து மீன;' என்னும் எனது கவிதையிலும் வேறும் பல கலை கவிதைப் படைப்புகளிலும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளேன்.

எனினும், பண்டிதர் அவர்களின் தமிழ்ப்பணி பற்றிய செய்திகளை யான் பலநிலைகளிற் பலர் மூலம் அறிந்துள்ளேன். எனது பாசமருகன் சைவப்புலவன், தமிழ்வல்லான் அமரர் க. சரவணபவன் அவர்கள் மூலமும் யான் ஊர்ச் செய்திகள் பற்றி முன்னர் அறிந்துள்ளேன்!'அருள்மிகு விசுவேசர் புராணம்' எனும் அவரது அரிய காவிய நூல் எனது கைக்குக் கிட்டியது. படித்தறியும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழில் அவருக்குள்ள பாண்டித்தியத்தின் பரிணாமத்தினை அந்நூலின் பாக்கள் வடிவிற் தரிசிக்க முடிந்தது!

பண்டிதர் அவர்கள், இந்நூலினை எமது தந்தையார் வட்டுக்கோட்டையூர் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்களின் பெயர் சூட்டப்பெற்ற அரங்கில் வெளியிட்டதன் மூலம், அவர் தமது முன்னோடியாக விளங்கிய ஒரு பெரும்புலவன்மீது கொண்ட பற்றினையும் பெருமதிப்பினையும் வெளிப்படுத்தியமை போற்றற்குரியது. எனக்கு மைத்துனரென யான் அன்புடன் உறவாடிய பண்டிதர் மயில்வாகனனின் நூற்றாண்டு விழாவினைப் பாரிசில் நடத்தவுள்ள செய்தியை முதன்முதலாக அவரது இளைய மகனார் ஒருசில மாதங்கட்கு முன்னர் எனக்கு உரிமையோடு அறியத்தந்தார்!

பண்டிதரின் மக்கள் இந்திரா யோகானந்தசிவம் மற்றும் தயானந்தன் (பாபுஜீ) ஆகியோருடன் மிகவும் பாசத்துடன் பழகிய அனுபவம் எனக்குண்டு! எமது சிறுவயதில் யாம் எமது வீட்டுத்திண்ணையில்

அரங்கேற்றிய நாட்டுக்கூத்தில் ஒருவேடமேற்றுக் கூத்தாடியவன் மருகன் பாபுஜீ! பழைய நினைவுகளை அகழ்ந்தெடுத்து என்முன்னே கொணர்கின்றது பண்டிதர் அவர்களின் நூற்றாண்டு விழாபற்றிய செய்தி! விழா ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாட்டாளர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்!

முதலில் என்னைத் தமிழோடும் தமிழர் வாழ்வோடும் தழுவவைத்த எனது வழ்வியற்பின்னணியைச் சற்றுத் தொட்டுப்பார்க்கத்தூண்டுகிறது எனது தமிழுள்ளம். இதுவரைகாலமும் யான் பதிவுசெய்யாத ஒருசில உண்மைகளை ஈண்டுபதிவுசெய்வதன் அவசியத்தை யான் இன்று உணர்கின்றேன! தாயகத்தையே எனது மக்களின் விமோசனத்தையே எனது தமிழின் களமாகக்கண்டுவந்த என்னுளே, ஒளிந்தும் உறைந்தும் கிடக்கும் எனது ஊர்பற்றிய சங்கதிகளை, சத்திய தரிசனங்களை அவ்வப்போது எனது அரங்க வானொலி வெளிப்பாடுகளிலும் ஏட்டிலும் பாட்டிலும் வெளிப்படுத்திய போதும், என்னூரின் உறவுகளிற் பலருக்கு என்னூர் பற்றிய பற்றையும், பாச உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வாய்ப்புக் கிட்டியதில்லை! எனது சிறுவயதிலிருந்தே என்னோடு நெருங்கிப்பழகிய ஒருசிலரைத் தவிர ஏனையோருக்கு என்னை அறியும் வாய்ப்பு ஏற்பட்டிருக்க நியாயமில்லை என்பதனை யான் நன்கு அறிவேன்!

என்னைப்பொறுத்தவரை, பண்டிதர் மயில்வாகனனது சிறப்பு எமது ஊரின் சிறப்பு! தமிழிற்கும் நமது ஊர்ப்பிறந்த ஒரு வித்துவத்திற்கு யாமளிக்கும் சிறப்பு! எனவே இவ்விழாவிற் பங்குகொண்டு தமிழுக்கும் தமிழர்க்கும் எமது திருவூராம் வட்டுக்கோட்டை அளித்துள்ள பெருமைகளைப் பற்றிப்பேசி இன்புற வேண்டுமென இவ்விழாவின் அமைப்பாளர்கள் விழைவது நலம் பல விளைவிக்கும் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்! பிளவுகளும் பிரிவுகளும் கரைந்து, உறவுகள் கலந்து குலவுகின்ற ஒரு அற்புத நிகழ்வாக அதனை யான் காண்கிறேன்!

இளைஞனாகப் புலம்பெயர்ந்தபோதும், கலையையும் கவிதையையும் இலக்கியத்தையும் போற்றிவரும் என்போன்றவர்கள் உளந்திறந்து உரையாடும் ஒரு களமாக இதனை யான் நம்புகின்றேன்! எமக்கு எமது ஊர் தந்த உரத்தினை, எமது தாயகம் தந்த உறுதியினை, உறவுகள் எமக்களித்த பலத்தினை, பாசப்பிணைப்பினை நினைவுகூராமல் நாம் வேறெதனை இங்கு விளம்பப்போகின்றோம்!

எனை ஈன்ற வட்டுரும் எனைவளர்த்த சத்தியமும்

கூத்தும் பாட்டும் மொழியும் கலையும் கவிதையும் பூத்துக்குலுங்கிப் பொலிந்த ஊரின் காற்றைச்சுவாசித்த மக்களின் வழித்தோன்றல்கள் யாம்! வட்டக்களரியும் கொட்டகையும் அரங்கும் வட்டுக்கோட்டையின் வாழ்வியற்கூறுகள்! அத்தகைய ஊரை, நற்றவப்பயனால் எமையீன்ற திருமடியாய்ப் பெற்றவர்களுள் யானும் ஒருவன்!

அத்திருமண்ணிலுதித்துத் தாயகமும் தமிழகமும் நன்கறியத் தமிழோசை பரப்பிய ஒரு பெரும்புலவனின் மகனாகப்பிறந்த பெரும் பாக்கியம் பெற்று அப்புலவனின் துணையாகி எமக்குத் தாயாகி, எமது வாழ்விற்குத் தூணாகி, எமைத் தாங்கி, எனக்குத் தாலாட்டோடு தமிழ்ப்பாலூட்டிய என்னன்னையளித்த திண்ணைத்தமிழ்கேட்டு எண்ணம் வளர்த்தவன் யான்!

இலங்கையின் தேசிய கீதத்தினைத் தமிழில் யாத்தவராகவும் தமிழகத்தின் திருநெல்வேலித் தமிழ்ச்சங்கத்தினரால் " முதுதமிழ்ப்புலவரென விருதளித்து வியந்துரைக்கப்பட்வராகவும் இன்றும் போற்றப்படுகின்ற அவரது இறுதிப் பேச்சாக அமைந்த தலைப்பு "கண்ணீர் வடித்த கலித்தொகை"எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணத்தில் 1951ஆம் ஆண்டு மே மாதம் அளவில் நடந்தேறிய தமிழ்விழாவில் தமிழறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்த்தப்பெற்ற கருத்தரங்கின்போது முதுதமிழ்ப்புலவர் அவர்கள் ஆற்றிய உரையின் பேசுபொருள் கேட்டறியும் வாய்ப்பு எனக்கு என்றும் கிடைத்ததில்லை! தந்தையாரின் வானொலிச் சொற்பொழிவுகள் பற்றிய தடயங்களைத் தேடி எனது நெஞ்சம் இன்றும் துடிதுடித்துக்கொண்டிருக்கின்றது!

எமது வரலாற்றினை, எமது அடையாளத்தினை இன்று உலகிற்கு எடுத்து அறைகூவி நிற்கும் இனநாதமாக, யாம் இரண்டு பெருஞ்சான்றுகளை நம்பிவருகின்றோம்! சொல்லால் எழுப்பபப்பட்ட காவியங்கள்! கல்லால் எழுப்பப்பட்ட காவியங்கள்! இவ்விரு காவியங்களையும் பற்றிப் பேசவும் எழுதவும் எனக்குத்துணிவும் திறனும் தந்த எனது ஊரையும் அந்த ஊரின் உறவுகளையும் என்னை உலகுக்கு ஈந்த எனது பெற்றோரையும் எண்ணவைத்த எமது பண்டிதர் மயில்வாகனனாரை வணங்கி அவர்புகழ் நிலைக்க இறையருளை வேண்டுகின்றேன்!

# புராணங்களும் உரைநூல்களையும் தந்த உரவோன்

சித்தாந்தப்புலவர். பண்டிதர். ம.ந. கடம்பேசுவரன்

B.Sc.(Media. Comm. in English) M.A.(Tamil - Hons.)

விரிவுரையாளர்- இயக்குநர் கீழைத்தேயக் கல்விக் கல்லூரி

தன்னாசிரியர் வழியில் நின்று ஒண்டமிழில் உயர்ந்தோர் வியக்கப் புராணங்களும், உரைநூல்களும் தந்த உரவோனே உயர்திரு புலவர்மணி பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களது கல்விப் பாரம்பரியமும் ஆக்கங்களும் அவரைச் சான்றோனாகச் சுட்டிக் காட்டுகின்றன.

“சான்றோர் இல்லாத தொல்பதி இருத்தலின் தேன்தேர் குறவர் வாழும் நேயம் நன்றே” என்றதனாலும் “தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு” என்றதனாலும்,

“நாடா கொன்றோ, காடா கொன்றோ,

அவலா கொன்றோ, மிசையா கொன்றோ,

எவ்வழி நல்லவர் ஆடவர்,

அவ்வழி நல்லை வாழிய நிலனே!”

என்றதனாலும் சான்றோருக்கு உள்ள சிறப்பினை உணரலாம். சான்றோராக வாழ்ந்தோர் பற்றிய செய்திகளையும் வட்டு மாநகருக்கு வளஞ்சேர்த்த கலைகளைப் பற்றியும் தொடக்கத்திலேயே - வட்டுமாநகர்ச் சருக்கத்தில் புலவரவர்கள் தொட்டுக்காட்டியும் பின்னர் விரித்தும் உரைத்துள்ளார். வட்டுக்கோட்டை என்னும் பெரும்பகுதியில் வாழ்ந்து பெரும் புகழீட்டியோர் இவரது கணிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் உள்ள ஊரே சிந்துபுரமாகும். அவ்வூர் சிறப்புமிகு வரலாற்று வல்லுநர்களால் விதந்து பேசப்படுவதுமாகும். அதனாலேயே புலவர் அவர்களும் தமது நூலில் தாம் பிறந்த ஊரையும் விளக்கியுள்ளமையைக் காணலாம்.

சிந்துவெளி யிடைவாழ்ந்த

திராவிடர்கள் புலம்பெயர்ந்து

வந்துகுடி யேறியிங்கு

வாழ்வாங்கு வாழ்தரலால்

சிந்துபுர மெனவேத்தும்

சிறப்புமிதற் குளவெனவே

நந்துபுகழ் வரலாற்று

நல்லறிஞர் நவிலுவரால்

எனவே கூகுள் (Google) வலைத் தளத்திலும் சிந்துபுரமெனும் இடத்தினது வழிகாட்டியும் தரப்பெற்றுள்ளது.

சிந்துபுரம், சிந்துவெளி நாகரிகச் சிறப்புடையது. சிந்துவெளி நாகரிகம் சிவவழிபாட்டுத் தொன்மையைக் காட்டுவது. தொன்மைமிக்க சான்றுகளைத் தன்னகத்தேயுடையது. அங்கிருந்து வந்து குடியேறிய சிந்து நாட்டாரும் சிவநெறியிற் பெரிதும் ஈடுபாடுடையவராயினர். நம் புலவர் அவர்களும் சைவ நெறியை உடையராகி, வீரபத்திர சிவனைப் பாட்டுடைத் தலைவனாக உருவகித்து ஒரு புராணமும் காரைநகர் ஆண்டிக்கேணி ஐயனார்க்கு ஒரு புராணமும் என இரண்டு புராணங்கள் பாடியுள்ளார். அவரது புராணங்கள் ஆற்றுப்படை போன்றும் உள்ளதை உணரலாம். சிவபுராணம், வட்டுமாநகர் மாண்புரைப்பாம் எனத் தொடங்கி, ஆற்றொழுக்கு நடையிலே பொருளுரை, ஆற்றுப்படையாக ஆற்றுப்படுத்துகின்றது.

தென்னாட்டுக் கொற்கையுரை

தீந்தமிழர் கலமூர்ந்து

முன்னாளில் ஈங்குவந்தார்

எனமொழிவார் மூதறிஞர்

மின்னுமில்வர் கடற்றுறைக்கும்

மற்றுமிப்பேர் வைப்பவது

பின்னாளில் திரிந்துகொத்தைத்

துறையெனப் பயின்றிடுமால்

என்று கலமூர்ந்து துணிகராய் வந்துசேர்ந்த திறமும் துறையும் சொல்லி வளங்கூறி மேலும் வழிப்படுத்திச் செல்கின்றது.

தலைநகராம் வண்மையுடன்

தழுவுவகை இணைந்துநிற்கும்

அலைவறியாப் பெருந்தெருக்கள்

மூன்றுளவே அறையுங்காலை எனவுரைத்து

ஒன்று சித்தன் கேணிநின்று

மானிப்பாய் ஈடேகும்

நன்றுமற்று மொன்றுசங்க

ரத்தைவழி நவாலிபுகும்

அன்றியொன்று கல்லுண்டாய்

அடைந்தோட்டு மடமெய்தும்

என்றிடலாம் சனநெரிசல்

இரவுபகல் இருந்திடுங்காண்

என்றாற்றுப்படை போன்றும், காவியப்பாங்கமைந்தும் நிறைவான செய்திகள் பலவற்றைக் கொண்டிலங்குகின்றன. இவரது வித்தியாகுருமாரும் தம்மை நிறீஇப் புகழ் எய்தியது போன்று, இவரும் தம்புகழ் நிறீஇய தகைமையாளரானார். தன்னாசிரியர் வழிநின்று தன்புகழும் விளங்கும் வகையில் திக்கைத் திரியந்தாதி, தன்னையமக அந்தாதி ஆகியவற்றுக்கும் உரைவளஞ்சேர்த்த உரவோனாகத் திகழ்ந்தார். அதனாலெல்லாம் அவர்தம் ஆசிரியர்க்கும் பெருமை உளதாயிற்று. இ∴தல்லாமல் மாணவர்களை நினைத்து அவர்தம் வளர்ச்சிக்காகவும், மொழி வளர்ச்சிக்காகவும் மாணவர்க்கான நூல்களையும் வெளியிட்டார். அவை தனித்து நோக்க வேண்டியவையாகும்.

சிவ தீட்சை பெற்ற இவர், குறிப்பாக ஊரில் உள்ள ஆலயங்களுக்கும், பிற ஆலயங்கள் சிலவற்றிற்கும் ஊஞ்சல்களும் பதிகங்களும் மாலைகளும் பாடியுள்ளார். சிவனை நினைந்து வழிபாடியற்றுதல் நன்மையென வேண்டினார்.

ஆகமமும் அருங்கலையும் வேதந் தானும்

அறிந்துணர்ந்து அநுபூதி ஞானங் கூடி

மேதகு புண்ணியங்கள் மிகவு மாற்றி

விழைவகற்றுத் தவம்பயின்று வீடு கூடல்

ஏதமிலா ஞானியர்க்கே ஏற்ற தொன்றாம்

இவையனைத்தும் நீயறிந்த செய்தி யாகும்

ஓதவரும் மேனோர்கள் சிவால யத்தே

உற்றவழி பாடியற்றின் உறுவர் நன்மை.

என்ற கருத்தமைந்த உள்ளத்தின் உணர்வே அவரைப் புராணம் இயற்ற வைத்தது என எண்ணத் தோன்றுகிறது. உரையாளராகத் தம்திறன் உணர்த்தும் வகையிலும் புராணங்கள் பாடும் வகையிலும் இவரது உள்ளத்து உணர்வில் பெரிதும் கலந்திருப்பவர்களாக சுப்பையபிள்ளையும், இளமுருகனாரையும் காணலாம். சுப்பையபிள்ளையை நாளும் பொழுதும் நினைத்மையை உணரக் கூடியதாக,

செந்தமிழ் முருகன் செவ்வேள்

திருவருள் சிறத்த லானே

எந்தனை முன்னி ருத்தி

இணையில் தொல்காப் பியாதி

முந்து தொன்னூல்கள் முற்றும்

மொழிந்தருள் வள்ளல் ஞானத்

தந்தை சுப்பைய பிள்ளை

தாள்மலர் தொழுது வாழ்வோம்

என்கின்றார். இதனால் உரையாசிரியராக சிறந்ததற்கு சுப்பையபிள்ளை முன்னோடியாக உள்ளமையை உணர முடிகின்றது. பண்டிதமணி வித்துவான் சுப்பையபிள்ளை அவர்கள் தஞ்சைவாணன் கோவைக்கும் உரை கண்டவர். இதுபோன்று இலக்கண நுட்பங்கள் கூறும் வேறுபல ஆக்கங்களையும் தந்தவராவர்.

புராணங்கள் பாடும் வகையில் இவரது உள்ளத்துணர்வில் இளமுருகனார் இடம்பெற்றுள்ளமையையும் காணலாம்.

இளமுருகனாரின் வழி தனித்தமிழ். அது வளர வாழ வேற்றுமொழிகள் தேவையில்லை என்று கூறித் தனித்தமிழை வேற்றுமொழிக் கலப்பின்றி நடைமுறைப்படுத்திய பரிதிமாற் கலைஞர் போன்றும் மறைமலை அடிகளைப் போன்றும் தனது மொழிநடை, செய்யுள் நடையெல்லாவற்றிலும் தமிழின் செம்மையைப்போற்றியவரே இளமுருகனார்.

மறைமலை அடிகள் தனது இயற்பெயராகிய வேதாசலம் என்பதை மறைமலை என்று மாற்றியமைத்தமை போல, தமிழ்த்தாத்தா சோமசுந்தரப் புலவரின் மகனாகிய பாலசுப்பிரமணியனும் தனது இயற்பெயரை இளமுருகன் என மாற்றினார். ஈழத்துச் சிதம்பர புராணம் என்னும் புராண காவியத்தைப் பிறமொழிக் கலப்பற்ற தனித்தமிழிற் பாடினார். அவர் வேறுபல நூல்களை படைத்திருப்பினும் ஈழத்துச் சிதம்பர புராணமே அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்ததாகும். தன்னிடத்து வருவோருக்கும் தமிழிடத்துக் காதல் உண்டாகும்படி செய்துவிடுவார். தமிழைக் கொச்சைப் படுத்துவாரையெல்லாம் நாணும்படி தருக்கம் செய்வார்.

தமிழ்நெறியைப் பேணும் வகையில் அவ்வப்போது கண்டனங்களையும் எழுதுவார். இவ்வாறான அவரது துணிவினால், இளமுருகனாரை அவர் காலத்து எழுத்தாளர் பலரும் எதிர்க்க அஞ்சினர். எழுத்தாளரெல்லாம் மிக விழிப்புடனே தம்மெழுத்துக்களை எழுதினர். இதனாலோ என்னவோ அவர் காலத்து வாழ்ந்த கலாநிதி வித்துவான் க.ந. வேலன்( B.O.L. M.A. Phd) அவர்கள் குறிப்பிடுகையில், “இலக்கண வேலேந்தி இளமுருகன் வீதி வலம் வருவானேல் நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழும் அந்நியம் நடுங்கும். தனித்தமிழ்ப்பாக்களால் வடித்த சித்திரமான அருச்சனைப் பாட்டே ஈழத்துச் சிதம்பரபுராணம் ” என்றெல்லாம் கூறியது வெற்றுரையல்ல. இ:்தொரு எடுத்துக்காட்டு. இது போன்று பலரும் வாழ்த்தியுள்ளனர். இளமுருகனார் புராண வகைகளுக்கு முன்னோடியாகத் துலங்கியது போல உரைகளுக்குச் சுப்பையாபிள்ளை முன்னோடியாக விளங்கினார்.

இவர்களைப் போல வித்தியா குருமாராக வந்து வாய்த்தவர்களே பெரும்புலவர்களான வெண்ணைக்

கண்ணனார், நவநீதகிருஷ்ண பாரதியார், கலாநிதி கு. சிவப்பிரகாசம், வித்துவான் கார்த்திகேயன் ஆகியோரும் தனித்தனியே குறிப்பிடத்தக்கவர்களே. அவர்தம் பெருமைகளையும் மயில்வாகனனார் ஏற்ற இடங்களில் ஆங்காங்கே ஏத்திப்புகழ்ந்து விபரித்துள்ளமையையும் காண முடிகின்றது.

யாழ்ப்பாணக் காவியந்தந்த பன்மொழிப்புலவர் கலாநிதி பண்டிதர் க. சச்சிதானந்தன், அளவெட்டியூர் பண்டிதமணியாயிருந்து இலக்கண வழிகாட்டி நூல்களைப் புறந்தந்த பண்டிதர் க. நாகலிங்கம், ஆற்றுப்படை நூல்களையும், மான்மியங்களையும் தந்த புலவர்மணி பண்டிதர் அ. ஆறுமுகம் ஆகியோரும் மயில்வாகனனாரோடு உடன்பயின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதேயாகும்.

பெரும்புலவர்களாக உலாவந்த சச்சிதானந்தம், நாகலிங்கம், ஆறுமுகம் என்போரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து கற்றுத் தமிழ்ப்புலவர், வித்துவான் பட்டங்களைப் பெற்று விளங்கிப் புறப்பொருள் வெண்பாமாலைக்கு உரை தந்தவருமான தொல்புரக்கிழார் சிவபாதசுந்தரம் அவர்களும் நல்ல நண்பர்களாகவே தம் வாழ்நாள் முழுவதும் இருந்தவர்கள். தமிழுலகிற் பவனி வந்து தம்புகழ் நிறுத்தியவர்கள் . இவர்களெல்லோரும் அமரத்துவம் எய்தியவர்களாகிவிட்டாலும், புகழாலே தமிழுலகத்தில் வாழ்பவர்கள்.

புலவர்மணி மயில்வாகனனார் அவர்களின் பாடல்கள, தொல்காப்பியர் கூறும் வனப்பு எட்டினுள் வைத்துக் காணும் தகுதி படைத்ததாகும். வனப்பென்பது பெரும்பான்மையும், பலவுறுப்பும் திரண்டவழிப் பெறுவதோர் அழகு என்ற பேராசிரியரின் கருத்துப்படி தனித்தனி அழகுகளையெல்லாம் பேசினாலும் சேர்த்துப் பார்க்கும்போது உண்டாகும். முழுவழகைப் பேசும் ஒரு நூலை இன்ன வனப்புடையது என்று கூற முடியும். வனப்பு எட்டென்பார் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பனவே அவை.

அம்மை என்பது சின்மென்மொழியால் வரும். குறைந்த அடிகளையுடைய சிறுசிறு செய்யுட்களாக அமையும். சுருங்கத் தொடுக்கப்படும்.

யாழ் நாட்டுச் சருக்கத்தில் கலிநிலைத்துறைப் பாடல்களால், தொன்மை எனப்படும் உரைவிரவிய பழைய கருத்துக்களை உள்வாங்கிப் பொருள் தழுவி, அம்மையென்னும் வனப்புடன் தமது பாடல்களை வெளிப்படுத்தியுள்ளார். வனப்பென்பது.

இற்றை நாளிதனில் இந்துமாக் கடலென இயம்புங்
குற்ற மற்றதொன் னிலத்தினில் கூறிடின் முந்தை
உற்று நின்றதால் குமரியாம் உயர்நிலப்பரப்பும்
மற்று மாங்கதில் தமிழினை மாந்தரே வாழ்ந்தார்

ஆய சீர்த்திகொள் குமரிநா டாங்கதும் பண்டை
ஓய தோர்கடற் கோளினுள் மூழ்கியே ஏக
மேய ஈழமும் வேறுள தீவகம் பலவும்
மாய்த லின்றிறே நின்றன மாநிலப் பரப்பில்

பண்ணும் ஈழமாம் நாட்டினுள் யாழகம் பகரின்
துன்னு மேற்கொடு வடக்குடன் கதிரெழு குணக்கும்
மண்ணு மாக்கடல் எல்லையாய் வகுத்திட ஓங்கும்
பின்னும் தெற்கில் வன்னிநா டுயர்வுடன் பிறங்கும்

சீர்கொள் நல்வள யாழகத் திருவெனுஞ் செல்வி

ஓர் கொள் தண்டமிழ் சிவநெறி எனுமிரு விழிகள்

பேர் கொள் தண்ணளி பெருக்கிட இருந்தர சோச்சித்

தார் கொள் மன்னரும் மக்களும் தழைத்திட நின்றாள்

நீடு வான்புகழ் நிலவுநல் யாழக நாட்டில்

ஈடில் தொன்மைய தமிழரோ டொருகோடி வந்தோர்

நாடு சீர்மலி நாகராங் குழுவினர் தாமுங்

கூடி வாழ்ந்தனர் தண்டமிழ்ப் புலமையுங் கொண்டே

என்ற பாடல்கள் இதன் வகையை ஒத்தனவாகக் கொள்ள முடியும். இதுபோன்று இவர்தம் நூல்களில் அமைந்துள்ள பாடல்கள் எல்லாம் மரபு பிறழாத பாடல்களோடும் தரவு, கொச்சகம், அராகம், கலி என்றெல்லா வகைகளையும் பாடியுள்ளார். அதனால் நாற்கவிராசன் என்று அழைக்கப் பெற்றவர். தொல்காப்பியர் சுட்டும் வண்ணங்கள் பலவும் இவரது பாடல்களில் உள்ளன.

வண்ணம் என்பது சந்த வேறுபாடு என்பது பேராசிரியர் என்னும் உரையாசிரியர் கருத்து (தொல்காப்பிய உரையாசிரியர்). பாட்டின்கண் அமையும் நடைவேறு காண்பது, பாட்டின் கட்டமைப்பு, பாட்டின் ஓசைவிகற்பம் இவ்வாறு மூன்று திறத்தாலமைவது வண்ணமாகும். இதன் சிறப்பு அடிகளிலோ அல்லது பாடல் முழுவதிலுமோ அமையும். இதனைக் கருத்திற் கொண்டு இலகு நடையிலமைந்த சில பாடல்களைப் பார்ப்போம்.

மாதுளைக் கிளைகள் தோறும்

மரகதக் கனிகள் தொங்கும்

வாதிடு புலவோர்க் காக

வைத்திடு பரிசில் மானும்

ஓதிடும் கேள்வர் தாமும்

காதலிக் குரைக்கச் சொல்லும்

தூதினைக் கேட்பார் போலக்

தொடருமோல் நாரை பாங்கர்

பாற்கடல் றுயில்செய் மாயன்

பங்கய விழியில் வந்த

கோற்றொடி அமிர்த வல்லி

குலவுசுந் தரிப்பேர் வல்லி

வேற்கரத் தோனை வேண்டி

வேட்டிடத் தவம்ப யின்றார்

கூற்றுகைத் தருள்வோன் மைந்தன்

கோதையர் முன்னே போந்தான்

வயலெல்லாம் செந்நெ லோடு

வளருங்காண் மலரி னீட்டம்

புயலெலாம் இடித்து நின்று

பொழியுங்காண் அமுத நீரைக்

கயலெலாம் நீரி னூடே

கலக்குங்காண் வாளை துள்ளும்

அயலெலாம் கன்றை எண்ணி

அலறுங்காண் கறவை யீட்டம்

புலவரவர்களின் கல்விப்பணி ஈழத்திருநாட்டின் பல பாகங்களிலும் அமைந்திருந்தது. அவ்வாறே நீர்கொழும்பிலும் இவரது சேவை இருந்தமையால் அருள்மிகு நீர்கொழும்பு சித்தி விநாயகர் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். உதாரணத்துக்கு ஒன்றைத் தருகின்றேன்.

பொழுது புலர்காலை நீராடிப்

போதுகைக் கொண்டுநின்றே

அழுது விழிநீர் உகுத்திட்டு

நீர்கொழும் பத்திமுக

முழுது கொளியெம் சித்தி விநாயக

வாழி யென்றே

தொழுது பணிவார் தமையேத்

திடுமிந்தத் தொல்லுலகே

இவ்வாறெல்லாம் 'பா'வால் பேச்சால், எழுத்தால் ஆசிரியவாண்மையால் தமது பணியையெல்லாம் செய்த புலவர் அவர்கள், தமிழ்ப் பராம்பரியத்தில் வந்தவராவர். இவரது கொடி வழியில் தழிழறிஞர்கள் உள்ளனர். அக்கொடியில் மருமக்கள் பேரர் பீட்டர் எனப்பலர் உள்ளனர்.

கணீரென்ற குரலில் செந்தமிழ் நடையில் யாவரும் மெச்சும் வகையில் உயர்தர மிக்க பேச்சாளராய் விளங்கியவர். யாழ்ப்பாணத்தில் இவரை நல்லமுறையில் பயன்படுத்தியோரில் கு.வி. அச்சகத்தாருக்கும் பெரும்பங்குண்டு. ஆண்டு ஒன்றுமுதல் பன்னிரண்டாம் ஆண்டு வரையுள்ள மாணர்களுக்கான பயிற்சி நூல்களை, இவரது புலமையைப் பயன்படுத்தி வெளியிட்டனர். அரச பாடவிதானத்துக்கு அமைவதாகவும் இந்நூல்களிருந்தன.

மேலும் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கட்டுரைகளையும் காலத்துக் காலம் எழுதி வந்தவர் ஆவர். மேலும் மிக்க தரமுடைய கவிதைகளாலும், சொல்லழகு பொருளழகு மிக்க மேடைப் பேச்சாலுமே மக்களை ஈர்த்தார்.

இவர் அமரத்துவம் அடைந்து பத்தாண்டுகளுக்கு மேற்பட்டபோதிலும் அந்த வெளியை - நினைவுகளை மீள நிரப்புவதாக நூற்றாண்டு விழா அமைந்துள்ளது. இவர் பற்றிய ஆய்வைத் தமது பட்டப்படிப்பிற்காக மேற்கொண்டு எழுதியவர்களிருவர். இவர்கள் பல்கலைக்கழகத்தில், பண்டித வகுப்பில், தனிப்பட்ட முறையிலும் என்னிடத்தும் கற்றவர்கள். ஆய்வுக்காக தரவுகளையெல்லாம் கையளித்துதவினேன். இருவேறு தளத்திலிருந்து தமது ஆய்வை மேற்கொண்டவர்கள். தவராணி - சுப்பிரமணியம் வரலாற்று முறையிலும் வெ. வரதிதாசன் அவர்கள் நூலாய்வு முறையிலும் ஆய்வு செய்தனர். ஆய்வுநூல்கள் பல்கலைத்கழகத் தமிழ்த்துறையில் உள்ளன என்பதை இவ்விடத்து நினைவுக்குக் கொண்டு வருகின்றேன். பாரிஸ் நகரில் இந்நூற்றாண்டு விழாவை மேற்கொண்ட அன்பர்கள் பாராட்டுக்கு உரியவர்களே!

சீதக் கடலின் பரப்பெல்லாம்

தெளியக் காணும் நிலைப்போல்

சீதக் கடலின் அலைதாங்கித்

திமிலம் ஓட்டி வாணிபத்தால்

மேதைச் சிந்து புரமென்ன

விளங்கும் இந்தப்பதி வாழும்

ஆதி இனத்தின் வழித்தோன்றல்

அகல உரைக்கும் பெருங்கலைஞன்

என்று புலவரை வாழ்த்தி அமைகின்றேன்.

வாழ்க இவர் புகழ். வளர்க நம்மொழி.

## "புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனாரின் தலபுராணங்கள்"

**ஓர் ஆய்வு - லயந்தினி பகீரதன்** (B.A.Hons, PGD, M.A, M.Ed.)

**ஆசிரியர், யாழ். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.**

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைமாணி கற்கைநெறியின் (2014) நிமித்தம் "புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனாரின் தலபுராணங்கள் - ஓர் ஆய்வு" என்னும் தலைப்பில் ஆய்வொன்றினை மேற்கொண்டேன். அவ் ஆய்வின் பதிவுகளை பண்டிதரின் நூற்றாண்டு விழா மலருக்காக வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.)

### பண்டிதரின் தலபுராணங்கள்

ஈழவள நாட்டில் சிகரமாகவும் தமிழரின் தாயகமாகவும் விளங்குகின்ற திருநகரம் யாழ்ப்பாணம். இந்நகரின் மேற்குப் பக்கமாக வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் தனித்துவம் மிக்க இடமாகத் திகழும் வட்டுக்கோட்டை என்னும் பதியிலே சிந்துபுரம் என்னும் கிராமத்தில் கதிரேசன் வள்ளியம்மையார் தம்பதிகளின் இளைய மகனாக 1919 ஆம் ஆண்டு தை மாதம் இருபத்தைந்தாம் திகதி (1919.01.25) பண்டிதர் மயில்வாகனனார் பிறந்தார்.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர், பலதரப்பட்ட ஆளுமையாளர்களிடம் கல்வி கற்றார். இவர் இயல்பாகவே எல்லோரையும் முகமலர்ச்சியுடன் வரவேற்று அன்பாகவும் பண்பாகவும் பழகி மற்றவர்களின் நிலையை உணர்ந்து தானாகவே முன்வந்து வேண்டிய உதவிகளைத் தன் வல்லமைக்கு ஏற்றவாறு செய்பவர். இலங்கையில் பல பாகங்களில் இவர் பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர். "நல்லது செய்தல் அற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்" என்று அடிக்கடி கூறுவார் என இவருடன் பழகியவர்கள் குறிப்பிடுவார்கள்.

மேலும் பண்டிதர் பற்றி பண்டிதர் பொன். பாக்கியம் அவர்கள் குறிப்பிடுகையில், "அகத்தியரைப் போன்ற சிறிய உருவம், அட்சரங்களைத் தெளிவுபட உச்சரிக்கும் பேச்சு, தமிழ் மரபு நிலையினின்றும் வழுவக்கூடாது என்ற கண்டிப்பான நோக்கு, எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்க வேண்டுமென்னும் மனவுறுதி, யாரிடமும் மண்டியிடக்கூடாது என்ற தன்மான உணர்வு இவை நிரம்பியவர்தான் பண்டிதர் மயில்வாகனனார்." என அழகாக பண்டிதரின் தனித்துவங்களைப் பதிவுசெய்துள்ளார்.

இவரது எழுத்துக்கள் சுத்த செந்தமிழாலானவை. ஆசிரியர் மற்றும் அதிபர் பணிக்காகப் பல ஆண்டுகள் தென்னிலங்கையில் வாழ்ந்தவர். ஆசிரியப்பணி புரிந்து பல மாணாக்கர்களை வாழ்க்கையில் முன்னேற்றம் அடையச் செய்தவர். ஆழ்ந்த ஆராய்ச்சித் திறனுடையர். இவர் தென்னிலங்கையை விட்டு ஊரோடு வந்து சில ஆண்டுகளின் பின் சைவ ஆசாரங்கள் தவறாதவராக வாழ்ந்து பல சமயப்

பிரபந்தங்களை எழுதியதோடு சிறுவர்களுக்கான செந்தமிழ் கட்டுரைகள் மற்றும் சில நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். சஞ்சீவியில் சிகண்டியர் என்ற பெயரில் பல கட்டுரைகளை எழுதி வந்தார்.

இலக்கண இலக்கிய அறிவை உயிர்ப்புடன் நிலைநாட்டுதல் ஒன்றே எல்லா உலகும் பெறும் என்று பண்டிதர் கொண்டிருந்த உறுதியை அவரது கற்பித்தல் பணிகள் உணர்த்தி நிற்கின்றன. தாம் பணியாற்றிய பெரும்பாலான நகரங்களில் செந்தமிழ்க் கழகங்கள் கூடி தமிழ் இலக்கண இலக்கியங்களை இளைஞர்களுக்கும், ஆர்வலர்களுக்கும் இனிது ஊட்டினார். இவர் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றியமையை,

"பண்டிதராய் பயிற்சிபெற்ற ஆசானாய் மாத்தளையில் கொழும்பில் முன்னாள்

வண்டமிழ்கற் பித்தபின்பு நீர்கொழும்பு விஜயரத்ன மாகல் லூரி

கண்டமுத லதிபராய் நல்லவண்ணம் பத்தாண்டு காலம் சேவை

கொண்டுபின்பு சங்கானை வட்டூரில் சேவைசெய்தின் றோய்வு கொள்வோன்"

என அருட்புலவர் பண்டிதர் அ. ஆறுமுகனார் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல் வரிகள் இவர் இல்லாத இவ் வேளையிலும் அவரது இருப்பை நிலைநாட்டுவதாகவும் அவரது சேவைகளை நினைவுகூர உதவுகின்றது.

மரபுவழி அறிஞரான மயில்வாகனனாரின் படைப்புக்களில் சைவசமயம் சார்ந்த இலக்கியங்களே பெருமளவில் காணப்படுகின்றன. பொருத்தமான இலக்கிய வடிவங்களைப் பொருள் நிலைக்கேற்பக் கையாண்டு படைத்துள்ளார். இவரின் ஆக்கங்கள் எல்லாவற்றையும் பெறமுடியாமை துரதிஷ்டமே. இவருடைய படைப்புக்களை மூன்று வகையான வகைப்பாட்டினூடாக நோக்கலாம்.

1. செய்யுள் நூல்கள்
2. உரைகண்ட நூல்கள்
3. வசன நூல்கள்

இவரால் படைக்கப்பட்ட செய்யுள் இலக்கியங்களில் தலபுராணங்கள் மிகவும் கனதியான படைப்பாகக் கருதப்படுகின்றன. இவரால் இரண்டு தலபுராணங்கள் படைக்கப்பட்டன. அவையாவன,

1. விசுவேசர் புராணம்
2. ஆண்டி கேணி ஐயனார் புராணம்.

இவ்விரு தலபுராணங்களினதும் பிரதான பாடுபொருளாக தலவரலாறு, தலமகிமை, இறைவனின் சிறப்பு என்பன பேசப்படுகின்றன. தலபுராண மரபுக்கமைய சருக்கங்களாகவும் விருத்தம் முதலிய பல்வேறு யாப்புக்களாலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ் இரு நூல்களிலும் புராண சம்பவங்கள், இத்தலங்களில் நிகழ்ந்த அற்புதங்கள், வரலாற்று நிகழ்வுகள் போன்ற விடயங்களைத் துணைநிலையான பாடுபொருளாகக் கொண்டு பாடியுள்ளார். அத்துடன் வாசகரின் இரசனையைத் தூண்டும் வகையில் ஆங்காங்கே நகைச் சுவையுணர்வையும் புகுத்தியுள்ளார்.

வட்டுக்கோட்டையிலே கோயில் கொண்டு அருள்புரியும் விசாலாட்சி சமேத விசுவேசர் மீது பாடப்பட்டதே "விசுவேசர் புராணம்". யாழ்ப்பாணத்தில் வடபால் அமைந்துள்ள காரைநகரில் கோயில் கொண்டு அருளாசி புரியும் ஆண்டிக்கேணி ஐயனார் மீது பாடப்பட்டதே "ஆண்டிக்கேணி ஐயனார்" புராணம்.

தலபுராணங்களினூடாக வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளமையானது மிகவும் உன்னதமான செயற்பாடாகும். ஏனெனில் தமிழர்களின் வரலாறுகள் அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் உருமாற்றம் செய்யப்பட்டும் வருகின்ற வேளையில் இவரது படைப்புக்கள் தமிழர்களின் இருப்பை நிலைநாட்டும் சான்றாதாரங்களாகத் திகழ்கின்றன. யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களின் சிறப்பு குறிப்பாகச் செகராசசேகரன், பரராசசேகரன், சங்கிலி மன்னன் ஆகியோரின் ஆட்சி சிறப்புக்கள் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஐயனார் புராணத்தில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட நூலகம் யமுனா ஏரி போன்றவற்றின் உருவாக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆதிக்குடிகளான இயக்கர், நாகரின் செயற்பாடு, இந்திய உபகண்டத்திலிருந்து இலங்கை கடல்கோளால் பிரிவுபட்டுத் தனித்தீவாகியமை போன்ற விடயங்களும் போர்த்துக்கேய, ஒல்லாந்தர், ஆங்கிலேயரின்

வருகை, இதனால் ஏற்பட்ட விளைவுகள் குறிப்பாக சைவமக்கள் எதிர் நோக்கிய இன்னல்கள், ஆலயங்களின் அழிவு, ஆறுமுகநாவலரின் எழுச்சி போன்ற பல விடயங்களைப் பதிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இப்புராணங்களில் மக்கள் வாழ்வில் கடைப்பிடித்தொழுக வேண்டிய நல்ல அறச்செயல்கள், மற்றும் ஒவ்வொரு ஊருக்குமான பெயர்க்காரணங்களையும் கூறியுள்ளார்.

விசுவேசர் புராணத்தின் சிறப்பினை "ஈழத்து மரபுவழித் தமிழ்ப் புலமை பற்றி ஆராய்வோர் பண்டிதர் அவர்களின் விசுவேசர் புராணத்தைக் குறிப்பிடாமல் ஆய்வு செய்ய முடியாது." எனப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள் சுட்டியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

பண்டிதரின் செய்யுள்களினூடாக கம்பர், சேக்கிழார், பாரதி போன்றோரைக் காணக் கூடியதாகவுள்ளது. பாரதியார் பராசக்தியிடம் வேண்டுவதைப் போல இவர் விசுவேசரிடம்,

திண்ணிய உள்ளம் வேண்டும்

திருவோடு கல்வி வேண்டும்

எண்ணிய எண்ணியாங்கு

இயற்றிட அருளும் வேண்டும்- (வி.பு 886)

என வேண்டுகின்றமையானது இவரது பன்நூலறிவை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

ஆக பண்டிதர் அவர்களின் சிறப்பு, கவியாற்றல், புலமைத்துவம் என்பன போன்ற தனித்துவங்களை அறிவதற்கு இத் தலபுராணங்களே போதுமானவை என்று சொன்னால் மிகையில்லை. இவ்வாறாக இவரது இரு தலபுராணங்களும் எண்ணற்ற தகவல்களைத் தன்னகத்தே கொண்டு இருப்பதன் மூலம் எதிர்காலச் சந்ததியினர் இவ் வரலாறுகளை அறியும் ஒரு வரலாற்று ஆவணமாகவும் விளங்குகின்றது.

இவரது காத்திரமான படைப்புக்கள் மூலம் இவர் நம்மிடையே இன்றும் உலா வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.



# "ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற் பொன்றாது நிற்பதொன் றில்"

திரு.சு.புஸ்பரங்கன். அதிபர், (யாழ்.வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்,

வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை)

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்

பொன்றாது நிற்பதொன் றில"

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கமைவாக ஓங்கிய அழியாப் புகழாய் வட்டுக்கோட்டை மக்களின் மனங்களில் மட்டுமல்லாது உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மனங்களிலே வாழ்ந்து கொண்டிருப்பவர் எமது பண்டிதர் மயில்வாகனனார் ஐயா என்றால் அது மிகையாகாது. உடல், உயிர் இன்று இல்லாவிட்டாலும் புகழிற்கும் பெருமைக்குமுரிய மனிதராக போற்றி வணங்க வேண்டிய ஒரு உன்னத மகானாக மக்களின் மனங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயா அவர்கள் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்திலே சிறப்பான இடத்தைப் பெற்ற தழிழும் சைவமும் புலமை நிலையிற் செழிப்புற்றிருக்கும் கூத்துக்களின் பிறப்பிடமான வட்டுக்கோட்டை மண்ணிலே பிறந்து ஆரம்பக் கல்வியை யாழ். வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயமான எமது பாடசாலையிலே கற்று எமது பாடசாலைக்கும் பெருமை தேடித்தந்துள்ளார். பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயா அவர்கள் எமது பாடசாலை பழைய மாணவன் என்பதோடு மட்டுமல்லாது எமது பாடசாலையின் போற்றுதற்குரிய முன்னை நாள் அதிபர் என்பதையிட்டும் எமது பாடசாலைச் சமூகம் பெருமை கொள்கிறது. இவர் எமது பாடசாலையின் வளர்ச்சிப்பாதையில் அளப்பரிய பங்கினை வகித்து தன்னை இப்பாடசாலைக்கு முழுமையாக அர்ப்பணித்த ஒரு அதிபராக 1969 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவையாற்றியுள்ளார்.

இவரது சேவைக்காலத்திலே எமது பாடசாலையிலே மிகப்பெரிய பிரார்த்தனை மண்டபம் கட்டப்பட்டதுடன் அது தற்போதும் பாடசாலையின் முன்புறத்தே காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. அத்துடன் எமது பாடசாலையை மகா வித்தியாலயமாக தரமுயர்த்தியதோடு மட்டுமல்லாது ஏறக்குறைய எண்ணூறுக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட மிகப் பெரிய பாடசாலையாக மாற்றியமைத்த பெருமை அமரர் பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயா அவர்களையே சாரும். அது மட்டுமல்லாது அவர் அதிபராக தன்னை அர்ப்பணித்த காலப்பகுதியில் எமது பாடசாலையில் இருந்து அதிகளவான மாணவர்கள் பொதுப்பரீட்சைக்கு தோற்றியது மட்டுமல்லாது அதிக மாணவர்கள் அதில் சித்தியடைந்து மேற்படிப்புகளுக்கு செல்வதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்து யாழ்ப்பாண மண்ணிற்கு யாழ்.வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் பெருமையை பறைசாற்ற காரண கர்த்தாவாக விளங்கினார்.

இவர் தான் வாழ்ந்த காலப்பகுதியிலே தனியே வட்டுக்கோட்டை மண்ணுக்கு மட்டுமன்றி ஏனைய மாகாணங்களிலும் தனது கல்விப் பணியை மேற்கொண்டு தன்னுடைய புலமையினால் அப்பிரதேச மக்களினதும் மனங்களை வென்ற ஒருவராக காணப்பட்டதோடு மட்டுமல்லாது, தமிழ் இலக்கியத் துறையிலே தனக்கிருந்த அறிவு ஆற்றல் புலமை ஈடுபாடு என்பவற்றினூடாக பல்வேறுபட்ட பதிகம், ஊஞ்சல், மணிமாலை, சிறுவர் பாடல்கள், கட்டுரைகள், நூல்கள் போன்றவற்றை எழுதி மாணவச் செல்வங்களுக்கு மட்டுமல்லாது மக்களுக்கும் வழிகாட்டக்கூடிய பல சமய நூல்களையும் எழுதி வெளியிட்ட ஒரு போற்றுதற்குரியவராக காணப்பட்டார்.

இவர் விட்டுச் சென்ற பணியினை இவரது பிள்ளைகள் பல்வேறுபட்ட வழிகளிலும், துறைகளிலும் மேற்கொண்டு வருவது போற்றுதற்குரிய விடயமாக காணப்படுவதுடன் இவ்வாறான ஒரு உத்தமர் தான்வாழ்ந்த காலத்தில் எமது பாடசாலைக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய தொண்டினை மீட்டிப் பார்ப்பதற்கும் பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயா அவர்கள் தொடர்பாக ஒருசில வரிகள் எழுதுவதற்கும் எனக்கு வாய்ப்புத்தந்த அவரது குடும்பத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலை தெரிவித்துக் கொள்வதுடன் அவர் விட்டுச் சென்ற பாதையிலே பாடசாலையை வளர்ச்சிப் பாதை நோக்கி கொண்டு செல்ல திடசங்கற்பம் கொள்வோமாக.

# வட்டுக்கோட்டை முத்தமிழ் மன்றம்

## முத்தமிழ் வித்தகர் புகழ்வாழி

நாற்கவிராசர் புலவர்மணி கலாபூசணம் பண்டிதர் ஓய்வுபெற்ற
அதிபர் மயில்வாகனனாரின் நூற்றாண்டு விழாவினைப் பாராட்டு
முகமாக வட்டுக்கோட்டை முத்தமிழ் மன்றத்தினரால் அளிக்கப் பெற்ற பாமாலை

**வெண்பா**

வாழிசிவன் நாமம் வாழி யெழில்வட்டூர்
வாழிமயில் வாகனனார் வான்புகழும் – வாழியவே
நூற்றாண்டு சேர்விழாவும் நல்லவிழா வென்றுநாடு
பேற்றிடவே வாழி பொழிந்து

**விருத்தம்**

மன்னுபுகழ் தொல்குடியில் வந்துதித்த ஐயன்
மாண்புமலி கதிரேசன் வள்ளியம்மை மைந்தன்
பன்னவரு வட்டுநகர் பிறப்பிடமாய் கொண்டோன்
பாவலனாய் பண்டிதனாய் பலவரிசை கண்டோன்
கன்னலொடு தேன்கலந்த கட்டுரைகற் கண்டு
காலமெல்லாம் மேடையுனைக் காதலிக்கும் கண்டு
அன்புபயில் மயில்வாக னாரினது நூற்று
ஆண்டுவிழா நிகழ்வினையும் வாழ்திடுவோம் வரீர்

முத்துநல்லா சிரியராக முயன்றுநன்கு கற்று
முனைப்புடனே மாணவரும் திரண்டுவரப் பெற்று
சந்ததமும் அறிவமுதஞ் சிந்தையவர் ஊட்டி
சால்புடையோ ரெனவவரை ஏற்றிவைத்தீர் கூட்டி
அந்தநல்ல மாணவரும் வளர்மதியாய் நின்று
அரியதமிழ்த் தொண்டினையும் ஆற்றிவாரார் ,ன்று
நந்துதிசை மயில்வாக னாரினது நூற்று
ஆண்டுவிழா நிகழ்வினையும் வாழ்திடுவோம் வாரீர்

கந்தபுரா ணக்கடலி னடியினிலே சென்று
கடல்படுநற் றிரவியங்கள் எடுத்துவைத்து நன்று
வந்துபயன் விரித்தடுமவ் வேளையிலே அள்ளி

வனப்புடனே தந்திடுவீர் மகிழ்திடுவோம் துள்ளி
சிந்தைக்கு விருந்தளிக்கும் செந்தமிழின் செல்வன்
சீர்புகழும் பேருக்கு உள்ளவரை செப்பும்
வந்தனைக்கே உரியமயில் வாகனனார் நூற்று
ஆண்டுவிழா நிகழ்வினையும் வாழ்திடுவோம் வாரீர்
அறமிதென மறமிதென அறிவுறுத்தும் ஆன்றோன்
ஆக்கமெலாம் அறன்வழியென் றுரைத்த சான்றோன்
நெறியுரைக்கும் திருக்குறளின் வழியினிலே நின்று
நேர்மையொடு கருத்தினையும் வெளிப்படுத்தி வென்றாய்
திறமையினை ஊருலகு போற்றிடவே ஆங்கே
தினகரனாய் உழைத்தபுகழ் திசையெல்லாஞ் சென்றோங்கும்
உறுவுமுறை ஊட்டுமயில் வாகனனார் நூற்று
ஆண்டுவிழா நிகழ்வினையும் வாழ்திடுவோம் வாரீர்

ஊர்நடுவென் பழந்தருநல் விருச்சமென உற்றாய்
உண்டுமகிழ் திடவரிய கனிகொடுத்தாய் நற்றாய்
நீருதவு குளமாகி நின்றுகல்வி ஈந்தாய்
நிலமகளும் முகமலர்ந்து சிரித்திடநீ வைத்தாய்
பேருதவி புரிந்துபலர் பெருமையுறச் செய்தாய்
போற்றுதலும் ஏற்றுதலும் செய்நன்றிப் பண்பே
மேருவல்லி அடிபணிந்து மேன்மையுற நூற்று
ஆண்டுவிழா நிகழ்வினையும் வாழ்திடுவோம் வாரீர்

**ஆக்கம்:- புலவர் புவனசுந்தரம்**

**அன்பின்**

**கந்த. ஸ்ரீபஞ்சநாதன் க.குலசிங்கம் ந.புவனசுந்தரம் முருகு வேதாந்தசிவம்**

**நா.கணேசலிங்கநாதன் அ.சர்வேஸ்வரன் க.பேரானந்தசிவம் க. தவராசா**

**நா.பரமேஸ்வரநாதன் கு.பூலேகசுந்தரம்பிள்ளை.க.பிரேமகாந்தன்.ஆ.சித்தன்**

**ACADEMY OF OKINAWAN MARTIAL ARTS**
**(A.O.M.A) FRANCE**

75 rue Julian Grimau,
93700 Drancy
L'association n° W931017779
E-mail: aoma.karate.fr@gmail.com

# வாழ்த்துரை

வட்டூரில் பிறந்து செந்தமிழிற்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றிய சான்றோன் பண்டிதமணி க.மயில்வாகனனார் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா என்பது இன்றையகாலத்தில் அவசியமானதொன்றாகும். மொழியறிவூட்டும் இவருடைய ஆளுமையான புத்தகங்கள், எமது வளர்ந்துவரும் சிறார்களுக்குத் தமிழ்மொழி பற்றிய அறிவினையும் தெளிவினையும் ஒரு விளக்கமான சிந்தனையையும் ஏற்படுத்துவதுடன் புலம்பெயர் தேசங்களில் வாழும் எமது இளையோர் இவருடைய நூற்றாண்டு விழாவில் வெளியிடப்படும் புத்தகங்களைப் படிப்பதன் மூலமாகத் தமிழ் மொழியை மறவாது தமிழ்மொழியில் அக்கறையை ஏற்படுத்தித் தமிழைக் காப்பதற்கு இவரது படைப்புக்கள் ஏதுவாக அமையும்.

இலங்கைத் தேசத்திலே பல பாகங்களில் பல ஆயிரம் மாணவர்களையும் தமிழ்ப் பண்டிதர்களையும் பல அறிவாளிகளையும் உருவாக்கிய பண்டிதர் க.மயில்வாகனனார் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழாவினைப் பாரிஸில் முன்னெடுக்கின்ற விழாக்குழுவினர் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

பிரான்ஸ் நாட்டில் இயங்கிக்கொண்டிருக்கும் அக்கடமி ஒவ் ஒக்கினோவா மார்ஷல் ஆட்ஸ் (யு.மு.ஆ.யு) ஆகிய நாங்கள் பண்டிதர் க.மயில்வாகனனார் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழாச் சிறப்புற வாழ்த்துவதிலும், கரம் கோர்ப்பதிலும் பேரானந்தமும் பேருவகையும் அடைகின்றோம்

பிரதம ஆசிரியர் திரு நடராசா சுரேஸ்குமார்

**INTERNATIONAL SHOTOKAN KARATE**

**ACADEMY OF OKINAWAN MARTIAL ARTS**

**Black belt 3dan -ffk, daf-ffk ,dif-ffk,**
**cqp-ffk, dejeps-ffk,refree-ffk**

# தமிழ்மலையின் புகழ் வாழ்க

வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திகுழு -பிரான்ஸ்கிளை

பண்டிதர் ஐயா அவர்களை ஒற்றைச்சிமிழுக்குள் அடைத்துவிடமுடியாது. அவர் பன்முக ஆற்றல் உள்ளவர். ஆயினும் அவரின் அடிநாதங்களாக உள்ளவை தமிழும் மனிதநேயமும் ஆகும். அவர் தமிழ்கடல், தமிழாசான், புலவர், சித்தாந்த, வேதாந்த விற்பன்னர், சமூகசேவையாளர். கலை அவர் குருதியில் ஊறியது. மிகச்சிறந்த ரசிகமணி. கலை ஊக்குவிப்பாளன்.

பண்டிதர் ஐயாவிடம் தமிழ்கற்றவர்கள் பாக்கியசாலிகள். பூவில் ஊறும் தேனை அள்ளிக்கொடுக்கும் தேனிபோல் தமிழாய்ந்து பாடம் நடத்துவார். தமிழின் உச்சரிப்பு, அழகு, சொல்நயங்களை விளக்கும்பாங்கு அவரது தனித்துவம். மிகச்சிறந்த குருமாரைப்பெற்றவர் அவர். அதுபோல் மிகச்சிறந்த மாணவர்பரம்பரையை உருவாக்கியவர். பண்டிதர் ஐயாவைப் புலவர் என்று அறிமுகப்படுத்தத் தேவையில்லை. அது தமிழ் உலகம் அறிந்தது. எத்தனை பா இனங்கள், விருத்தம் என்றால் அதில் எத்தனைவகை, வெண்பாவில்புலி, அகவல்,கலிப்பா இன்னும் சொல்லிக்கொண்டே போகாலாம். பா இலக்கணங்கள் அவர் கையில் கட்டுப்பட்டுக் கிடந்தன. அவர்பாடிய இலக்கியவகைகள் பதிகம், மாலை, அந்தாதி, பிள்ளைத்தமிழ், ஊஞ்சல், அம்மானை, திருப்பள்ளி யெழுச்சி, குழந்தைபாடல்கள் இத்தனைக்கு உச்சம்வைத்த விஸ்வேசர்புராணம். அவர் எழுதிய உரைநூல்கள் , வசனநூல்கள் மொத்தத்தில் தமிழ்கடல்.

அவரது ஆசிரியப் பணியும் சமூகப்பணியும் தனித்து எழுதக்கூடியவை. நீர்கொழும்பு விஜயரத்தின இந்து மத்திய கல்லூரி, அவர் புகழை இன்றும் பாடியபடி உள்ளது. அதுபோல் அவர் அதிபராக இருந்தகாலத்தில் வட்டு.திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் வளர்ச்சி பொன் எழுத்துகளால் பொறிக்கப்படக்கூடியது .

பண்டிதர் அவர்கள் மிகச்சிறந்த சொற்பொழிவாளர். அவர் தமிழ்பேசும் அழகையும், சொற்களை உச்சரிக்கும் வனப்பையும் , எவ்வளவு சிக்கலான ஆன்மீக தத்துவங்களையும் இலகுவாகத் தெளிவாகப் பேசும்முறையையும் கேட்டுகொண்டே இருக்கலாம். அவரது தமிழ்மொழி அறிவு எவ்வளவு ஆழமானது என்பதை அவர் உரை வெளிபடுத்திக்கொண்டேயிருக்கும்.

இவருக்கும் வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்துக்கும், தொடர்பு தனித்துவமானது. குறிப்பாக கலாபூசணம் அண்ணாவியார் முருகவேள்ஐயா அவர்களுக்கும் இவருக்கும் இருந்த தொடர்பு தனித்துவமானது. கூத்து பயிற்சி நடக்கும் வேளையில் ஊக்குவிப்பதும், கூத்தின் ஆரம்பத்தில் இவரது கதைச்சுருக்கமும் தவறாமல் இடம்பெறும். இதற்கெல்லாம் உச்சமாக இவர் எழுதிய விஸ்வேசர் புராணத்தில் வட்டூரின் உயிர்நாடியான கூத்துகலை பற்றி பதினெட்டுபாடல்கள் எழுதியுள்ளார். அதில் முதல் எட்டுசெய்யுள்களும் கலிநிலைதுறையில் கூத்தின் அறிமுகமாகவும், அடுத்த பத்து அறுசீர்விருத்தங்களாக வட்டூர்க் கூத்தைப் படம்பிடித்ததுபோல் வரலாற்றுதகவல்களும் அடங்க, அவர் சித்திரித்தபாங்கு அற்புதமானது. படிக்கப் படிக்கச் சுவை தருவன அக்கவிதைகள். அதுபோல் விழாவயர்சருக்கத்தில் காவடி, கரகம், சூரன்போர் போன்ற எமது பாரம்பரியக் கலைகளை அவர் விவரிக்கும் பாங்கு சிறப்பானது. கலையில் ஊறிய ஒருவரால்தான் இவ்வளவு அழகாகப் பதிவு செய்யமுடியும்.

பண்டிதர் அவர்களின் நூற்றாண்டு விழாவை வாழ்த்துவதில் நாங்களும் இன்பம் அடைகின்றோம். இவ்விழாவை ஏற்பாடு செய்யும் விழாக்குழுவையும் பாராட்டுகின்றோம்.

## பண்டிதர் ஐயா புகழுக்கு வானமே எல்லை

ஒருங்கிணைப்பாளர்கள் - வட்டுக்கோட்டை ஒன்றியம் -பிரான்ஸ்

நட்சத்திர வானத்தில் சூரியதீபம்
அபஸ்வரங்களுக்கிடையில் தேவகானம்

குன்றுகள் நாணும் தமிழிமயம்

வார்த்தையில் வசப்படும் தத்துவம்
சொற்களில் சிந்தும் கவிதைத்தேன்
பாவினங்கள் சேவைசெய்ய
பதிகம் முதல் புராணம் வரை
எத்தனை எத்தனை கவிசொட்டும் காவியங்கள்

இனிமைகொஞ்சும் தமிழணங்கின் நாட்டியம்
கவிமேடையில் களிநடம்புரிய
தமிழ்தேன் மாந்தி மதிமயங்கி வாழ்த்தொலிக்கும்
வாழ்த்துக்கு வானமே எல்லை இல்லையேல்

அதற்கும் அப்பாலும் அப்பாலாய்....

குழந்தைகள் களிக்க குழந்தைப்பாடல்
கூத்துச்சிறக்க கூத்துப்பிரதி
செந்தமிழ்செல்வங்கள் தெளிவுற உரைநூல்கள்
கோயில் சிறப்புச் சொல்ல விஸ்வேசர்புராணம்
தமிழ் பயின்றார் தவம்செய்தார்
சொற்பொழிவு கேட்பவர்மனம்கரைந்தார்
தமிழுக்காய்பிறந்து தமிழ்சமூகத்துக்காய் வாழ்ந்து
தரணியெங்கும் புகழ்படைத்த
தமிழ்மலையின் நூற்றாண்டு விழா பெருமசிறப்புற
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## அவன் அருளால் அவன் தாள் வணங்கி,

**சில்வர் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் - பிரான்ஸ்**

அகிலம் தந்த ஒரு அறிவுப்புள்ளி பண்டிதர் புலவர்மணி க. மயில்வாகனனார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழோடு இலக்கண இலக்கியக் கவிநாலும் இயம்பிடும், உரைத்திடும் வித்தக உயர்ஞானி. கற்றவர் மதித்திடும் கல்வியில் ஆதவன். பல்கலை கற்ற தமிழ்ப் பண்டிதராவார் .

கந்தபுராணம் கலைநயம், களிநடம் கலந்து கருத்துடன் புரண்டு இயம்பிடும் உம் நாவில். புத்தி புகட்டிடும் புதுவழி காட்டிடும் சமயம் சார்ந்தது. புதுமை துலங்கிடப் புலவர் போற்றும் நூல் பல தந்த பெருமேதை.

சைவமும், தமிழிலும் சார்ந்தே விளங்கிடும் தத்துவ ஞானம் சேர்ந்தே மிளிர்ந்திடும் உம் தோற்றம். வித்தகன், விற்பன்னர் வியப்புறு நாவண்ணன். வையகம் போற்றிட வந்துதித்த வட்டூர்மைந்தன். ஆசானாய், சான்றோனாய், செந்தமிழனாய்த் திகழ்ந்த பண்டிதர் புலவர்மணி க. மயில்வாகனனாரே, அகிலம் தந்த ஒரு அற்புத அறிவுப் புள்ளி. நூற்றாண்டு காணும் பெருந்தகையை வாழ்த்திப் பணிகின்றோம்.

| ச. பரமானந்தசிவம் | தே. சசிகரன் | இ. ஜக்ஸ்சன் |
|---|---|---|
| **தலைவர்** | **செயலாளர்** | **பொருளாளர்** |

## வாழ்த்து மடல்

**நேருஜீ கிராம அபிருத்திச் சங்கம் கலைநகர், சித்தன்கேணி**

வட்டூர் தந்த அமரர் கதிரேசு மயில்வாகனனார் நாடறிந்த கல்வியியலாளர். அவருக்கு நூற்றாண்டு விழா நடைபெறுவதையொட்டி எமது கிராமம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது. நாற்கவிராசர், புலவர்மணி, பண்டிதர், கலாபூசணம் என்ற பட்டங்களைப் பெற்றுப் பெருமதிப்புடன் வாழ்ந்த பெருந்தகை அன்னார் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கான பண்டிதர்களை உருவாக்கியவர். தமிழ் மொழிப் பற்றும், சமயப் பற்றும் மேலோங்கி நின்ற மேன்மையாளர்.

எமது சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வாணி விழாக்களில் சமயச் சொற்பொழிவுகள் பல தடவை ஆற்றியவர். வட்டுக்கோட்டை இந்து அபிவிருத்திச் சங்கம் நடத்திய இந்து சமய வகுப்புகளில் ஆசிரியராகக் கடமையாற்றி 1964 ம் ஆண்டுப் பகுதியில் க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் இந்து சமய பாடத்தில் எமது மாணவர்கள் மிகுதித்திறன் (டிஸ்ரிங்சன்) பெறுபேறு அடைவதற்கு வழிகாட்டியவர்.

எமது கிராமத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் கந்தபுராணத்திற்கு இலகு தமிழில் பொழிப்புரையாற்றி அனைவரினதும் பாராட்டைப் பெற்றவர். கம்பகா மாவட்டத்திலுள்ள முதல்தர தமிழ்ப் பாடசாலையான நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்துக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றி இந்து சமயத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடு பட்டவர். எமது கிராமத்தின் திருநாவுக்கரசு மகாவித்தியாசாலையில் அதிபராகப் பொறுப்பேற்று எமக்கும் எமது சிறார்களுக்கும் நல்லதொரு ஆசானாக எம்மை வழிநடத்தியவர். அவரின் உதவுகின்ற பண்பு, உறுதியான மனம் எமக்கு நல்லுதாரணமாக அமைகின்றது. அமரரின் வாழ்வின் அரிச்சுவடுகள் எமக்கும் எதிர்காலச் சந்ததியினருக்கும் வழிகாட்டிகளாக அமைய வேண்டுமென எமது கிராம முன்னேற்ற சங்கத்தின் சார்பில் வாழ்த்தித் தமிழ்த்தாயை வேண்டிக் கொள்கின்றோம்.

| தெ. கஜேந்திரன் | தெ. இரவீந்திரன் | மு. பாஸ்கரன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

# நாற்கவிராசரின் புகழ் நாற்றிசையும் பரப்பிடுவோம்

வட்டூர்த் தமிழர் ஒன்றியம் பிரித்தானியா

வளமிகு நகராம் வட்டூரில் பிறந்து பைந்தமிழ் ஆர்வம் பற்றுமிக்குடைய அமரர் உயர்திரு பண்டிதர் க.மயில்வாகனனாரின் நூற்றாண்டு விழா கண்டு உவகை அடைகிறோம். அன்னாரின் பணியை நாம் வரையறையிட்டுச் சொல்லமுடியாத அளவிற்கு உயர்ந்து இருப்பதை யாவரும் அறிவீர்கள். அன்னாரின் பணி நம் வட்டூர் மக்கள் மட்டுமன்றித் தமிழ்மக்கள் யாவரும் பயனடையும் வண்ணம் ஆக்கங்களும் அவரின் படைப்புக்களும் நாவன்மையும் இருந்ததைக் கண்டு வட்டூர் தமிழர் ஒன்றியம் பெருமிதமடைகின்றது. நடந்து முடிந்த எமது 11வது கலை விழாவில் அமரர் பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்களைக் கௌரவிக்கும் முகமாக எமது கலை நிகழ்ச்சி அரங்கிற்குப் பண்டிதர் மயில்வாகனனார் நூற்றாண்டு அரங்கம் எனப் பெயர்சூட்டி அவர் புகழ்தனைப்பாடி எமது கலை விழாவைச் சிறப்பாக நடத்தினோம்.

கடந்த 11 வருடங்களாக எமது வட்டூர் மண்ணுக்குப் பெருமை தேடித்தந்தவர்களை நினைவுகூருமுகமாக அவர்களைப் பற்றிய வரலாற்றைப் பொது அறிவுப்போட்டி வினாக்களில் உள்ளடக்கி வருவதை யாவரும் அறிவர். அவ்வாறான வினாக்களில் உயர்திரு பண்டிதர் க.மயில்வாகனனாரின் வரலாற்றையும் உள்ளடக்கத் தவறியதில்லை என்பதைத் தெரிவிப்பதில் பேருவகை கொள்கிறோம். அன்னாரின் இந் நூற்றாண்டு விழாவிற்கு ஒன்றிய அங்கத்தவர்களிடம் நிதி சேகரிக்கப்பட்டு, இச் சிறு தொகையினை நன்கொடையாக வழங்குவதில் நாம் புளகாங்கிதம் அடைவதோடு இவ் அரியவாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த அமைப்பாளர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ் விழா எவ்வித இடையூறுகளும் இன்றிச் சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்பதோடு, அமரர் பண்டிதர் க.மயில்வாகனனார் ஐயா அவர்களின் புகழ் உலகெங்கும் பரவ வாழ்த்தி வணங்கி நிற்கின்றோம்.

வாழ்க அன்னாரின் தமிழ்த்தொண்டு ! வளர்க எம் வட்டூர் மண் !



# மாமனிதர் பண்டிதமணி அமரர் க. மயில்வாகனனார் அவர்களின் நூற்றாண்டு விழா வாழ்த்துமடல்

**வட்டூர் காந்திஜீ கலாமன்றம்**

மயில் மீதேறிய முருகக்கடவுளாய் மங்காத புகழுடன் வட்டூரில் வந்துதித்தார் பண்டிதமணி மயில்வாகனனார் ஐயா அவர்கள். தமிழுக்கு அவரால் பெருமையோ இல்லை, தமிழால் அவருக்குப் பெருமையோ என எடை போட யாருமிலை.

சக்திக்கு ஒரு புலவன் பொங்குதமிழ்ச்
சாகரம் போற்றும் தமிழன்
பக்திக்கு ஒரு கவிஞன் – இந்தப்
பார்போற்றும் தமிழ் மறவன்

பட்டங்கள் பல பெற்றும்
வெற்றிகள் பல கண்டும் கதர்
வேட்டியே அவர் எளிமை
எண்ணத்தில் என்றும் எளிமை – பலர்
ஏற்றமே அவர் உடமை

மண்ணுக்கும் கவிசொல்வார் – அவர்
விண்ணுக்கும் கவிசொல்வார்
பண்ணுக்கும் பொருள் உரைப்பார் –பல்வகைப்
பாக்களும் படைத்திடுவார்.

சொல்லொண்ணா படைப்புக்கள் படைத்த
தமிழ் மறவன் வாழியவே
எண்ணமெல்லாம் என்றும் அவர் தம்
நாமம் வாழியவே.

| | |
|---|---|
| துரை பாலச்சந்திரன் | செ.குணரத்தினம் |
| தலைவர் | செயலாளர் |

## வன்னியன் தோட்டம் சின்னக் கதிர்காமம் தொண்டர் சபையினரின் வாழ்த்து

**மார்கண்டுபிள்ளை ஞானேஸ்வரன்**

அற்புதன் சன்னதி அங்கே சங்கத் தமிழ் அழகன். பன்மதி அங்கு அருள் கொட்டும் பண்டிதர். செந்தமிழ் சந்தணம் விபூதி வந்தனமான முகம். வந்தனமான முகம் வாசனை வீசியே நிற்கும் எங்கள் செந்தமிழ் வேந்தர் செப்பனிடும் சந்தமிகு வரியினில் சிந்தையில் ஆயிரம் பந்தமிகு பரவசம் பூக்கும். எத்தனை பூசைகள் செய்யினும் சத்தான பைந்தமிழே பிடிக்கும் எம் முத்தான குமரனுக்கு வித்தகர் மயில்வாகனனாரோடு குமரன் தத்துவம் கற்றவர் கூடியே எத்தனை அற்புதம் நல்குவர். எப்படி எப்படிச் சொல்வது இதை எண்ணிய பொழுதினில் எத்தனை சுகம் தரும் அப்படி அது ஒரு அதிரசம் எத்தனை முறை கேட்பினும் சித்தத்தில் இனித்திடும் சின்னக் கதிர்காமத்தில் நல்ல நாற்கவிராசன் நாற்றிசையும் கமகமக்க நற்றமிழ் ஓதி எத்தனை திருவடி பக்தியில் நாடியும் கருணைக் கடலேனின் கந்தபுராண படனத்தில் அருமை உரை தருவார். உருளும் உடல் இதைக் கேட்டு உருகி உருகி இருமை முத்திக்கு அணி சமைக்கும். பித்தம் ஏறிய சித்தமெல்லாம் ஞான முத்தம் பெற்று ஞாயிற்று ஒளி கமழும் முத்தமிழ் முப்பாட்டன் எங்கள் முது பெரும் முதல்வன் சிந்திடும் சிரிப்பினில் எத்தனை சுகம் பெறும் எங்களின் ஊர்தான். நற்றவம் செய்திட்டோம். உற்ற எம் பண்டிதர் பிறப்பினில் தொண்டர் சபையவர் வணங்கியே வாழ்த்துகிறோம் நூற்றாண்டு நினைவினில் பண்டிதர் திருவடி போற்றுவோம்.

**வாழ்த்துச் செய்தி**

## மூன்று தமிழும் ஒரு சேரப்பெற்ற முத்தமிழ் வித்தகர்

**வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் - பிரான்ஸ் கிளை**

நூற்றாண்டு விழாக் காணும் ஐயா பண்டிதர் கதிரேசு மயில்வாகனனாரின் விழா பிரான்ஸ் நாட்டில் பாரீஸ் நகரில் ஆன்றோர், சான்றோர் புடைசூழ விமரிசையாகவும், சிறப்பாகவும், கோலாகலமாகவும் நடைபெறும் இவ்வேளையில் வட்டு விளையாட்டு கழகத்தின் பிரான்ஸ் கிளையும் பெருமதிப்புக்குரிய ஐயா பண்டிதர் கதிரேசு மயில்வாகனனாரை வாழ்த்தி, வணங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது ஊரின் கல்வி வளர்ச்சியில் அதீத அக்கறைக் கொண்டவர், முத்தமிழ் வித்தகர். நல்ல தமிழ்ப் பற்றாளர். இவர் தமிழுக்கும், சைவத்திற்கும் செய்த தொண்டினை மறக்க இயலாது. இவர் வட்டுக்கோட்டை காந்திஜீ கிராம முன்னேற்ற சங்கத்தின் தலைவராகவும், வடக்கு இந்து சமய அபிவிருத்திச்சங்கம், வட்டு தமிழ்ச்சங்கம் போன்றவற்றின் ஆசானாகவும் செயற்பட்டு செயல்வடிவம் கொடுத்து பல தமிழ்ப் பண்டிதர்களை உருவாக்கியவர். இப்படிப்பட்ட ஆசானை வாழ்த்துவதில் வட்டு விளையாட்டுக்கழகமும் கரமிசைத்து வாழ்த்தி வணங்குகின்றது.

இவர் எமது ஊரில் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் உள்ள மண்சுவர், சுண்ணாம்பு சுவர்களை அகற்றி நிலையான கட்டிடங்களைக் கட்டி மாணவச் செல்வங்களுக்குக் கல்வியின் தகுதியைப் போதித்து உயர்தர வகுப்புகளுக்கு செல்ல வித்திட்டவர்.

இதே காலத்தில் ஐயா மயில்வாகனனார் பத்திரிகைகளில் (புனைபெயரில்) சிகண்டியார், தோகையார் என்றும் பல இலக்கியக் கதைகளையும், கவிதைகளையும் எழுதிப் பாராட்டினைப் பெற்றவர். இத்தோடு நின்று விடாது, இலங்கை வானொலியில் கவிதை நிகழ்ச்சிகள், நாடகங்கள், பட்டிமன்றங்கள், சமயச் சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள் போன்றவற்றில் தன்னை முழுமையான ஈடுபடுத்திக் கொண்டவர். நாட்டுக்கூத்தினை எழுதிப் பாடும் திறன் கொண்டவர். "உழவன் உலகநாதன்" என்னும் கூத்தினை எழுதி அரங்கேற்றியும் உள்ளார்.

இவர் இலங்கையின் பால் உள்ள வட மாகாணத்தோடு மட்டும் இல்லாது ஏனைய மாவட்டங்களான கொழும்பு, நீர்கொழும்பு, கண்டி, மாத்தளை போன்ற இடங்களில் பாடசாலையில் அதிபராக இருந்தது மட்டும் அன்றி, சென்ற இடங்கள் எல்லாம் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்து, அத்தோடு அங்குள்ள இறை தலங்களுக்கும் தல புராணம், ஊஞ்சற்பா, திருப்பதிகம், மும்மணி மாலை, திருச்சதகம், நான்மணி மாலை, அந்தாதி என்று பாமாலைகள் புனைந்து பாடிச் சூடி உள்ளார். இந்த

கவிமகானை வாழ்த்துவதில் நாமும் பெருமைக் கொள்கின்றோம்.

இவர் குழந்தைகளுக்கான இன்பத்தமிழ் , பாலர் தமிழ், மாணவருக்கான தமிழ்மொழி வினா விடை, சுற்றாடல் விஞ்ஞானம் போன்ற பாட நூல்களையும் எழுதி உள்ளார். இவரின் திறமையினை எழுத்தில் எழுதி அடக்கி விட முடியாது. மூன்று தமிழும் ஒரு சேரப்பெற்ற முத்தமிழ் வித்தகர்.

இப்பெருமகனார்க்கு பண்டிதர், செந்தமிழ்ச்செல்வர், கலைவாருதி, கலாபூசணம், புலவர்மணி, நாற்கவிராசன் என பட்டங்கள் வழங்கி கௌரவப்படுத்தியதனைப் பார்க்கின்றபோது, அவரின் தமிழ்ப் புலமை வட்டூர் மண்ணின் கலங்கரை விளக்கமாக எமக்குத் தெரிகின்றது. ஐயா கதிரேசு மயில்வாகனனாரின் நூற்றாண்டு விழாவினில் செயல்படுத்தும் செயல் வடிவங்கள் யாவும் நல்ல முறையில் நிறைவுபெற வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழமாகிய நாமும் உறுதுணை புரிவோம், என்று வாழ்த்தி வணங்குகின்றோம்.

## வட்டூர்க் கல்வித்தாயின் தலைமகன் பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்களுக்காக...

நூற்றாண்டு விழாப் பாமாலை- கலைநகர் விளையாட்டுக் கழகம்- பிரான்ஸ்

ஈழமணித் திருநாட்டின் வட்டூர் மண்ணைக்

கல்வியால் செழிக்க வைத்த கலைமகனே!

பைந்தமிழைப் பறைசாற்றிய செந்தமிழ்ச் செல்வனே!

கல்விப் புதல்வர்கள் நாங்கள்

கந்தகாப்புக்கு பொருள் கூறும் போது

கந்தன் அருள் உமக்குண்டு என்பதை நாம் அறிவோம்.

எம் ஊர்க் கல்வி சிறக்க

எம் நாட்டில் மட்டுமல்ல

புலம் பெயர் தேசங்களிலும் உங்கள் கவிகளால்,

மாணவர்களால் பெருமை சேர்த்த எம் பெருநாயகனே!

உம் கல்விப் பணிக்கு நூற்றாண்டு அல்ல

இன்னும் பல நூற்றாண்டு சென்றாலும் மங்காத புகழ் உண்டு.

இந் நாளில் உந்தன் புகழ் பாடி நிற்கின்றோம்

## வாழ்த்துப் பாடி வணங்குகின்றோம்

பாரீஸ் முத்தமிழ் இசைக்குழுவினர்

முத்துத் தமிழ்
முதுதமிழ் – உயிர்
வித்துத் தமிழ் விளைதமிழ்
பண்டித ஞானி எம்
சொத்துத் தமிழ்
வட்டூரின்
புலமை சொரியும் தமிழ்
இத் தமிழை வாழ்த்த
வந்த யாமோ
முத்தமிழ் இசைக்குழு எனும்
இசைத் தமிழ்!!!!

கோடி கோடி ஆண்டுகள்
தேடித் தேடி ஓடினும் உம் போல் ஒரு வரகவி இல்லை
உம் தனை விஞ்ச ஓர் பிற கவி இல்லைடேே
நீரே தமிழ் ஊற்று நீர் செல்லும் எல்லை டேே
தரணி எங்கும் தலை நிமிர்ந்து பார்க்க வைத்தீரே !!!!!!

வட்டுக் கோட்டை எனும் சொல்லை.......
நீடித்து தமிழ் வாழப் புலமை
போதித்துத் தந்த புகழே – கல்வியில்
சாதித்து கல்வி மான்களோடு
வாதித்து வென்ற தமிழே !!!

பண்டித மணியே –– நின்
அமுதத் தமிழ்த் தகையாலே
அறிவுத் திசை காட்டிய உமக்கு

எம் முத்தமிழ் இசையாலே
வாழ்த்துப் பாடி வணங்குகின்றோம்

வாழ்கவே நின் தமிழ்!!!
நன்றி

# மண்ணின் சான்றோன்

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகம் - பிரித்தானியக் கிளை

வட்டூரின் மண்ணைத் தன் படைப்புக்கள் மூலம் பெருமைப்படுத்திய பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயா அவர்களின் நூற்றாண்டு விழா காலத்தின் பதிவு மட்டுமல்ல புதிய தலைமுறையினருக்கு எமதூர்ப் படைப்பாளி ஒருவரின் நினைவூட்டல் நாளாகவே அமைகின்றது.

எமதூரின் பல்துறை வித்தகர்களில் பண்டிதர் ஐயாவும் ஒருவர். தனது தமிழ், சமய, ஆன்மீகப் பாண்டித்தியத்தினால் அவர் ஆற்றிய சேவை அளப்பெரியது.

“வாழ்க தமிழ்” என அவரின் படைப்புக்கள் முத்தமிழில் இயல், இசை, நாடகம் மூன்றிலும் பரவிக்கிடக்கின்றன.

“வளர்க சைவநீதி” எனப் பண்டிதரின் சமயச் சொற்பொழிவுகள், புராண விளக்கங்கள், பாடல்கள், கருத்துரைகள், விளக்கவுரைகள் எமதூரின் கோவில்களில் வழக்கமான நிகழ்வாகியிருந்தது. அவரின் சைவசமயப் பற்றுக்கு அவர்தம் படைப்புக்கள் சான்றாகும்.

,ங்கு புலம்பெயர் தேசத்தில் தமிழ்ப் பாடசாலைகள் தமிழை வளர்ப்பது பாராட்டப்பட வேண்டியது. அதே நேரத்தில் சைவசமய வகுப்புக்கள், கருத்துரைகள், சமயப் பிரசங்கங்கள் நடத்த முடியாத போது மாறிவரும் ,ளைய சமூகத்தவர்களிற்கு சைவ சமயத்தை விளக்குவதற்கு பண்டிதர் ஐயாவை நினைக்கத் தோன்றுகின்றது.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையினராகிய நாம் எமதூரின் மொழி, சமய, ஆன்மீகத் தொண்டாற்றிய பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் ஐயாவின் நூற்றாண்டு விழாவில் உரிமையுடனும் தோழமையுடனும் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.



## சைவத் தமிழ் வளர்த்த புலவர்மணியின் புகழ் ஓங்குக!

**ஸ்ரீலஸ்ரீ மகேந்திரசுவாமி அவர்களின் வாழ்த்துரை - பாரீஸ் ஸ்ரீ பத்திரகாளி அம்மா தேவஸ்தானக் குருக்கள்**

ஈழத்திருநாட்டில் சைவத்தையும், தமிழையும் வளர்த்தெடுத்த ஐயா மயில்வாகனனாரின் நூற்றாண்டு விழாவையொட்டி அவரது தமிழ், சமயப் பணிகளை அறியும் வாய்ப்புக்கிட்டியது. இறைமார்க்கம் பற்றியும், தமிழ் இலக்கியங்கள் பற்றியும் பல்வேறுவகையான படைப்புகளை ஆக்கியிருக்கும் பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் மாகாளியம்மன் மீதும் திருவூஞ்சல், திருப்பதிகம் ஆகியவற்றைப் பாடியருள-ியமை அறிந்து பேரானந்தம் அடைந்தோம். பக்திச்சுவை சொட்டும் படைப்புகள் பலவற்றைப்பாடியிருக்கும் பண்டிதர் ஐயா அவர்கள் கடல்கடந்தும் பாரீஸ் நகர்நோக்கி இறைதுதிபாடும் பாமாலை பாடியுள்ளார் என்பது இன்னும் சிறப்பைக் கூட்டுவதாகும்.

இத்தனை பெரும்பணி செய்திருக்கும் இவர் இறைவனை நாடி இரண்டாம் சிவதீட்சைபெற்ற சைவத்திருமகனார் என்பதே இவரது மெய்ஞானப்பற்றைப் பறைசாற்றி நிற்கின்றது. இப் பெருமகனாரின் நூற்றாண்டுப் பெருவிழா முத்தமிழ் விழாவாகச் சிறப்புடன் நடந்தேறவும், அவரது படைப்புக்களைப் பாதுகாத்துத் தமிழரெல்லாம் நற்பயன் பெறவேண்டும் என்றும் எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளி அம்மாவின் திருவருளை வேண்டுகின்றேன்.

**வாழ்க தமிழ்! ஓங்குக பண்டிதமணியின் மங்காப்புகழ்!**
**அம்மன் திருவருள் அனைவர்க்கும் கிட்டட்டும்**

ஸ்ரீலஸ்ரீ மகேந்திரசுவாமி அவர்கள்

## தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பண்டிதர்

**பண்டிதை திருமதி. பொன். பாக்கியம், சுழிபுரம்.**

பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்கள் வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியைச் சேர்ந்தவர். அவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆவார். வெளி மாவட்டங்களிலும் யாழ் குடா நாட்டிலும் ஆசிரியராகவும், அதிபராகவும் கடமையாற்றியவர். பல நூல்களை ஆக்கம் செய்தவர்.

பண்டிதர் அவர்களை 1950ம் ஆண்டு தொடக்கம் நான் நன்கறிவேன். எனது ஆசிரியர் பண்ணாகம் பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்களின் உத்தம நண்பராவார். இருவரும் பரமேஸ்வரா பண்டித ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஒன்றாகக் கற்றவர்கள். வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஒரு தமிழ்ச்சங்கத்தை உருவாக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு உழைத்தவர்களுள் பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் முதன்மையானவர். அச்சங்கத்தின் தலைமைக் காரியாலயம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இயங்கியது. அதன் ஆரம்பகாலத் தலைவராக பண்டிதர் அவர்களே இருந்தார். அச்சங்கத்தை வளர்ந்தோர் கல்வி நிலையமாக பதிவு செய்யப் பாடுபட்டு உழைத்தார்.

1970 ஆம் ஆண்டு அச்சங்கத்தின் கன்னி வெளியீடாக பண்டிதை திருமதி. பொன். பாக்கியம் அவர்களின் நாவலர் சரித்திர ஆராய்ச்சி நூல் வெளியீடு இடம் பெற்றது. அந்நூல் வெளியீட்டின் தலைவராக பண்டிதர் மயில்வாகனனார் அவர்களே இருந்து நடத்தினார்.

தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் திருநாமம் தமிழ் கூறும் நல்லுலகில் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

# நாற்கவிராச நம்பி

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் பொன்னாலை, யாழ்.

அமரர் பண்டிதர் மயில்வாகனனாரின் கௌரவப் பட்டங்களில் ஒன்று "நாற்கவிராச நம்பி" என்பதாகும். இப்பட்டம் மயில்வாகனனார் ஆசுகவி - மதுரகவி - சித்திரகவி - வித்தாரகவி என்று நான்குவிதப் பாடல்களை இயற்றுவதில் வல்லவர் என்பதைக் குறிப்பதாகும்.

பொதுவாகக் கவிதைகளை இரசித்து மகிழ்வதிலும் அதன் நயன்களைப் பிறர் கூறக்கேட்டு மகிழ்வதிலும் ஆர்வம் உள்ள எனக்கு கவிதை இயற்ற வராது. அதனால் கவிதை இயற்றுபவர்களிடம் எனக்குத் தனி மதிப்பு உண்டு. இந்த நிலையில் ஒருவர் நாலுவிதக் கவிதை இயற்றும் வல்லமை உடையராய் இருந்தார். அதனால் இப்படி ஒரு பட்டமும் பெற்றிருக்கிறார் என்றால் அவரிடத்து மதிப்பும், மரியாதையும் உண்டாவது இயல்பு. இப்படியான அடிப்படையில் மயில்வாகனனாரிடம் எனக்கு மதிப்பு அதிகம்.

மயில்வாகனனார் இப்படியான பட்டம் பெறத்தக்க வகையில் நாலுவிதக் கவிதைகளை இயற்றியிருக்கிறார். பட்டம் பெற்றிருக்கிறார் என்பதற்கு மேல் இப்படியான பட்டம் பெற்ற பின்னரும் அப்பட்டம் தனக்குத் தகுதியானதே என்பதை நிரூபிப்பதுபோல் பல பாடல்களை இயற்றி இருக்கிறார். இவர் இயற்றிய விசுவேசர் புராணத்தில் நான்கு விதமான பாடல்களும் இடம்பெற்றுள்ளன என அறிகிறேன்.

இத்தகைய சிறப்புக்களுடன் இவர் கல்வியில் கொண்ட ஆர்வம் பற்றியும் இவர் முதலில் யா.ஆ.தி பாஷாபிவிருத்திச் சங்கத்திலும் பின் மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும் பண்டிதப் பரீட்சைக்குத் தோற்றிச்சித்தி பெற்றவர் என்னும் செய்தி இவர் அறிவின் வலிமையையும், பரீட்சைக்கு அஞ்சாத பண்பையும் சுட்டி நிற்கின்றன. இவர் வாழ்க்கை வரலாறு இவர்போல் பிறரை ஊக்குவிக்கும் தன்மை கொண்டது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. மறைந்தும் மறையாத மயில்வாகனனார் நாமம் வாழ்க.

# "செந்தமிழ் காத்த மயில்வாகனப் பேராசான்

# செந்தழல் வாய் காக்குமோ செப்பு "

ஈழத்தில் இருந்து -புலவர் பெருமாள் மகேசன்

சைவத்திற்கும் தமிழுக்கும் எட்டு தசாப்தங்களுக்கு மேலாக அயராது பெருந் தொண்டாற்றி வட்டூரின் பெருமைகளை வெளிக் கொணர உழைத்தவரும், வட்டூருக்குப் பெரும் புகழ் சேர்த்தவருமான அமரர் சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி ,கலாபூசணம் கதிரேசு மயில்வாகனனார் அவர்களின் சேவைகளை நினைவு கூரும் நூற்றாண்டுப் பெருவிழா ஐரோப்பிய மண்ணிலே நடைபெற இருப்பதாக ஊடக வாயிலாக அறிகிறேன்.அதனையிட்டு அன்னாரின் மாணவர் என்ற ரீதியில் மனநிறைவு அடைவதோடு விழாச் சிறப்புற வாழ்த்துகிறேன்.

கொழும்பு மாநகரிலே 60 வருடங்களுக்கு முன்னர் தமிழறிஞர் சிவகருணாலயப் பாண்டியனார் அவர்கள் பண்டித வகுப்புகளை நடாத்தி வந்தார். அச்சமயம் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் முதன்மை ஆசிரியராகக் கற்பித்த பண்டிதமணி மயில்வாகனனார் அவர்கள் கருணாலயப் பாண்டியனார் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பண்டித வகுப்புக்களைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அப்பொழுது பண்டிதமணி மயில்வாகனனார் அவர்களிடம் தமிழ்கற்றவர்களில் நானும் ஒருவன் என்ற பெரும்பாக்கியம் பெற்று அவரால், அவர் ஊட்டிய தமிழால் நான் ஈழத்தில் தமிழ்ப் புலவராக பட்டம், புகழ் பெற்று விளங்குவதனைப் பெருமையுடன் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

முதுபெரும் தமிழறிஞரான பண்டிதமணி அவர்கள் தமிழ்மொழியினதும், சைவசமயத்தினதும் பெருமைகளையும் அதன் சிறப்புக்களையும் தனது எழுத்து வன்மையாலும், நாவன்மையாலும் அடுத்த தலைமுறையினரும் அறியும் வண்ணம் , உணரும் வண்ணம் நகர்த்தியவர். மறைந்தாலும் பண்டிதமணி அவர்கள் மங்காப் புகழுடன் தமிழ் உள்ளவரை வாழ்ந்து கொண்டே இருப்பார்.

# நூற்றாண்டுவிழா வாழ்த்துப் பாமாலை

ஒய்வுநிலை அதிபர் கலாபூ'ணம் வ. யோகானந்தசிவம் (யாழ்ப்பாணம்)

பண்டிதராம் புலவர்மணி கலாபூஷணம் கலைவாரிதி
பலதரப்பட் டங்களுடன் மிளிர்ந்தவ ராம் மயில்வாகனனார்
கண்டவர்கள் புகழ்ந்துரைக்கும் சீமானாம் இவர் பெருமை
கண்டறிந்தார் பலருண்டு இவர்களுக்கும் இன்பராவார்
விண்ணவரும் வியந்துரைக்கும் திறன்கொண்ட பெருமானாம்
விரும்புபவர்கள் எல்லார்க்கும் இனியவராய் இருப்பாராம்
மண்ணில்வாழ் பவர்க்கெல்லாம் இவரொருமா மருந்தாவார்
மாற்றாரும் ஏற்றிப்போற் றுகின்றதொரு மனிதராவார்
மருகராக வந்த என்னை மூத்த மகனாய்க் கண்டு கொண்டார்
மகிழ்ந்துரைத்தார் மற்றவர்கள் போற்றுகின்றார் ஏற்றுக்கொண்டு
அருகிருந்து தாயைப் போல் அணைத்துக் கொண்டக மகிழ்ந்தார்
அனைத்திலுமே சிறந்தவராய் விளங்கிடவே வைத்துநின்றார்
பெருமை கொண்ட தன் பேர்த்தி பேரன் முன்னேற்றம் பேணிநின்றார்
பெறற்கரிய பேறுகளைப் பெற்றுத்தந் துமகிழ்ந்தார்
இருளகற்றி ஒளிதந்த எங்கள் தெய்வ மகனாவார்
என்றென்றும் புகழோடு உள்ளத்தில் வாழ்கின்றார்



# புலவர்மணி மயில்வாகனனார் நூற்றாண்டு விழா

பல் மருத்துவ கலாநிதி இளமுருகனார் சோ. பாரதி.

சிட்னி - அவுஸ்திரேலியா.

கந்தகுகன் அருள்பெற் றுயர்ந்த செம்மல்!
கவிசிந்தா மணியூட்டிய கவித்துவத் திறனால்
சிந்தைகவர் செந்தமிழ்ப் புராண மொன்றைத்
திருவாரும் வட்டுநகர் விசுவே சர்மேல்
சந்ததமும் நிலைத்திருக்க யாத்து மகிழ்ந்த
தமிழ்ப்பண்டிதர் புலவர்மணி மயில்வாக னனாரின்
சுந்தரஞ்சேர் நூற்றாண்டு விழாவுஞ் சிறக்க
தூமணி ஐங் கரன்கழல்கள் காப்ப தாமே!.

வெண்முத்துச் சிரிப்புள்ளத் தூய்மை காட்டும்!
வித்துவத்தின் அறிவொளியை விழிகள் காலும்!
கண்ணெனவே இணைபிரியாத் துணையுடன் கூடிக்
காதலொடு கரங்கூப்பிக் களிகூர்ந்(து) அந்தப்
பண்பாளன் விருந்தினரை ஓம்பும் திறனைப்
பார்ப்பவரின் விழிகளும்நீர் பனிக்கா நிற்கும்!
எண்ணியன்பர் நினைந்தவரை அஞ்சலி செய்ய
எடுக்கும்விழா நனிசிறக்க வாழ்த்து கின்றேன்!.

தமிழ்பயில வந்தெந்தை யுடன்கூடி நின்று
தனித்தமிழ் வளர்த்தோம்பச் சபதமெலாம் ஏற்று
அமிழ்தான செஞ்சொற்கள் தேர்ந்தவையோர் கிறங்க
அழகாகச் சொற்பொழிவு ஆற்றுந்திற னுடனே
கமழ்தேனாய் மதுரிக்க அணிகள்பல விஞ்சக்
கருத்தாழப் பொருள்நயமும் கச்சிதமாய்ப் பொலியப்
புகழ்பூக்கக் கவியாற்றும் புலவர் மணி யவரின்
புகலரிய வித்துவத்தைப் போற்றியென்றும் மகிழ்வோம்!.

அன்புமிளிர் பண்புக்கு அவரோர் வித்து!
அறிவார்ந்த படைப்புக்களோ தமிழர் சொத்து!
இன்புமிளிர் உபசரிப்பால் எவரையும் ஈர்த்த
எளிமையான செம்மைவாழ்வு எடுத்துக் காட்டு!
புன்முறுவற் பொலிவுடனே பேசிய உரைகள்
புலமைதனைப் பறைசாற்ற உதிர்ந்த முத்து!
பன்முகத்து ஆளுமையாற் புகழ்பெற் றுயர்ந்த
பண்டிதரை நினைவுகூர்ந்து களிகொள் கின்றேன்!.

'அமுதமான கவிதை பொழியும் அழக வருக வருகவே!
அன்பும் நண்பும் இன்புங் கொண்ட அறிஞ வருக வருகவே!
திமித திமியென் றழகு நடனம் செய்யுங் கலப மடமயில்
சேருஞ் சோலை யூர வருக செல்வ மாணி வருகவே!»

இப்படிப் பாராட்டி வாழ்த்தி மகிழ்ந்தவர் எனது தந்தையார் புலவர்மணி இளமுருகனார் அவர்கள்.

புலவர்மணி மயில்வாகனனார் அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகும் பேற்றினைப் பெற்றவர்களில் நானும் ஒருவன். திருவள்ளுவனார் காட்டிப்போந்த, அறத்திறம் பிறழா அன்புநெறி ஓம்பி வாழ்ந்த பண்டிதர் தமிழையும் சைவத்தையும் தனதிரு கண்களாகப் போற்றி வளர்ப்பதிலே தம்மை முழுமனதுடன் அர்ப்பணித்தவராவர்.

வித்துவான் பண்டிதமணி ந. சுப்பையபிள்ளை – வித்துவான் கார்த்திகேயன் - பண்டிதர் கவிசிந்தாமணி புலவர்மணி இளமுருகனார் ஆகியோரிடம் செவ்வனே தமிழ் பயின்று தமிழன்னைக்குப் பல ஆரங்கள் சூட்டிமகிழ்ந்த பெருந்தகை.

சீரிய நன்னெறி காத்துத் திருத்தக வாழ்ந்து செந்தமிழ் மரபை இலங்கச் செய்த புலவர்மணி மயில்வாகனாரின் நூற்றாண்டு விழா எல்லா நிலைகளிலும் சிறப்புற்று இனிதே நிறைவுபெற விசுவேசப் பெருமானின் விரைமலர்த்தாள்களைத் தொழுதேற்றி வாழ்த்துவதிற் பெரு மகிழ்வெய்துகிறேன்.

# என் குருநாதர் புலவர்மணி, பண்டிதர் க.மயில்வாகனனார்

நா.புவனசுந்தரம் (நன்றி மறவாச்சீடன்)

அருவாய் உருவாய் இலதாய் உளதாய்

மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்

கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்

குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

- கந்தரநுபூதி

முதுமையிலே யான் அடிக்கடி அசைபோடும் அந்த நிழலாடும் பொற்காலப் பழைய நினைவுகளிலொன்றான புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனாரின் மறக்கமுடியாத நினைவினை அவரின்

நூற்றாண்டு விழாவின் போது எடுத்தியம்புவதில் மட்டற்ற மகிழ்வெய்துகின்றேன்.

இற்றைக்கு ஏறத்தாழ 65 ஆண்டுகளுக்கு முன்னர் யான் சிறுவனாயுற்றபோது எனது பெரிய தந்தையார் நிறைகுணச் செம்மல் ஆசிரியமணி மு.வடிவேலர் அவர்கள் இல்லத்துக்குச் சென்று கல்வி பயின்றுவரும் காலத்தில், தமிழ்ப் பாடத்தில் யான் குறைவாக இருப்பதைக் கண்ட பெரிய தந்தையார் அதனைப் பூர்த்தி செய்யும் விதத்தில் தான் கற்பித்து வந்ததோடு அமையாது தனது மருமகனார் பண்டிதர் மயில்வாகனனாரிடமும் சென்று தமிழைக் கற்பிக்கும்படி என்னை அனுப்பிவைத்தார்.

யானும் தமிழ் நூலொன்றைக் கையிலேந்திப் பண்டிதர் ஐயா அவர்கள் அமர்ந்திருந்த அறையினுள் சென்றபோது சிரித்த முகத்துடன் இருக்கை தந்து வந்த விடயம் யாதுவென வினவ, யானும் பெரிய தந்தையார் தங்களிடம் தமிழ் பயில அனுப்பிவைத்தாரெனக் கூறினேன். அன்று அவரிடம் கற்கத் தொடங்கிய யான் கல்லூரிக் கல்வி பூர்த்தியாகும் வரை பாடம் கேட்டுவந்தேன். தமிழ் மொழியில் ஆர்வலராய் இருந்த யான் பரீட்சைகளில் சித்தியடைந்த பின்னரும் அவருடைய திருமனைக்கு ஒருமனதோடு சென்று அவருடன் உரையாடி வருவதை நியமமாக கொண்டிருந்த வேளையில் அங்கே வழமையாக வருகை தரும் தலைமை ஆசான் அ.முருகவேள் ஐயா அவர்களையும் சந்தித்து உரையாடி வந்ததன் காரணமாய் எங்கள் மூவருக்கும் இடையில் இணைபிரியாத நட்பு ஏற்பட்டது.

பண்டிதர் ஐயாவின் திருமனையில் ஓர் அறை சங்ககால இலக்கியங்கள் உட்பட பலவகையான புத்தகங்களைக் கொண்ட நூல்நிலையம். அதற்கு அண்டிய பகுதியில் ஒரு மேசையும், மூன்று நாற்காலிகளும் , இன்னொரு புறத்தில் சாய்வு நாற்காலியுமொன்றுமிருக்கும். ஒரு நாற்காலியில் பண்டிதர் ஐயா அமர்ந்து எழுதிக்கொண்டு இருப்பார்.

இன்னொரு நாற்காலியில் நான் இருந்து அவர் எழுதியவற்றைப் படியெடுத்துக் கொண்டிருப்பேன். அதிபர் முருகவேள் அவர்கள் சாய்வு நாற்காலியில் இருந்து தான் கற்றறிந்த தமிழ் இலக்கண இலக்கியங்கள் சைவநெறி போன்றவற்றில் மேலும் தெளிவு பெற பல வகையான கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருப்பார். பண்டிதர் அவர்களும் பல நூல்களை ஆதாரம் காட்டி விளக்கிக் கொண்டிருப்பார். அங்கே சிலவேளைகளில் சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஐயா அவர்களின் உழவல் நண்பன் அருட்கவி பண்டிதமணி அ.ஆறுமுகம் ஐயா அவர்களும் , புலவர்மணி வித்துவான் நா.சிவபாதசுந்தரனார் மற்றும் பண்டிதர் சச்சிதானந்தன் ஆகியோரும் வருகைதருவதுண்டு. பல புதிய விடயங்களை அறிந்து கொள்ளவும் எழுந்த சந்தேகங்களை ஐயந்திரிபறக் கேட்டுத் தெளிந்து கொள்வதற்கும் எனக்கு கிட்டிய அந்த வாய்ப்பினை யான் கிடைத்தற்கரிய பெறும் பேறாக கருதி வருகின்றேன் .

விட்டகலா கெழுதகை நட்பின் காரணமாக இட்டமுடன் ஊரில் உள்ள வைபவங்களில் நாம் மூவரும் ஒன்றாய்ச் சேர்ந்து வரவு கொடுத்துக் கலந்து கொள்வதைக் கண்ட மக்கள் “முருகவேளோடு

மயில்வாகனத்தார் பூலோகத்தை சுற்றி வருகிறார் ". என மொழிந்து ஆங்கே சைவத் தமிழ் சந்தேகங்களையும் தெரிந்து கொள்வர்.மற்றும் ,சிந்தை மகிழுமந்த மாலை நேரங்களில் சிவந்த நல்ல கதிர் பரப்பிச் செங்கதிரோன் வண்ண வண்ண சாலம் செய்யும் அடிவானின் அழகினைப் பார்த்து இரசிப்பதற்கும் தூய நல் காற்றினை வாங்கும் பொருட்டும் அயலில் உள்ள வயல் வெளிக்கு அல்லது பொன்னாலைப் பாலத்திற்குச் சென்று வருவது வழக்கம் .

ஒருமுறை பொன்னாலைப் பாலத்தில் நாம் செக்கர் வானை இரசித்துக் கொண்டிருந்த காலை எனது சட்டப் பையினுள் இருந்த பத்துரூபாய்த் தாளினை வெளியே எடுக்க முயன்ற போது காற்றுப் பறித்துக் கடலில் இட்டதைக் கண்ட பண்டிதர் அவர்கள் 'காத்து வாங்க ' பத்து ரூபாய் எனக் கூற 'நல்ல இலாபம் ' என ஆசிரியரும் சொல்லிச் சிரித்தார்கள் .

மேலும் ஆலயங்களில் அலைமோதும் அடியார் வெள்ளத்தின் மத்தியில் புராண படன விதிப்படி கந்தபுராணம் படிக்க உரை(பயன்) விரித்தும் உரைமாலை ஆற்றியும் நற்புகழ் குவித்து வந்த பண்டிதர் ஐயா அவர்கள் என்றென்றும் நாவலர் பெருமான் வழி நின்று கந்தபுராண கலாசாரம் என்றென்றும் எங்கள் ஊரிலும் நிலைத்திருக்க வேண்டுமென்ற நல்நோக்குடனும் , புராணம் படிப்போர் வழுவின்றி சந்தி பிரித்து வாசிக்கும் திறனை மேம்படுத்தும் பொருட்டும் முதியோர்களுடன் இளைஞர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துப் "புராண படன சபை" ஒன்றை நிறுவிப் புராண படன வகுப்புக்களை நடத்தி வந்தார் .

பக்திச்சுவை தனி சொட்டச் சொட்ட பல செந்தமிழ்ப் பாமாலைகளை இறைவன் திருவடியில் சூட்டி மகிழ்ந்துவந்த அக்காலத்தில், ஆலயங்களில் தமிழோடு இசைபாடும் சில அடியார்கள் பிழையோடு பஞ்சபுராணம் ஓதுவதைக் கண்ட பண்டிதர் ஐயா அவர்கள் மனம் நொந்து அந்தப் பிழையோடு பாடும் அடியார்களைத் தனிமையில் அவ்வப்போது அழைத்து அவர்கள் விட்ட சொற்பிழை ,பொருட்பிழை, பாடும் ஒழுங்குமுறை முதலியவற்றை சுட்டிக்காட்டி ஈற்றில் பாடும் புராணம் சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரிய புராணமாகவே இருக்கவேண்டு மெனத் தெளிவு படுத்தியதோடு அமையாது அவ்விடயங்களைப் புராண வகுப்புக்களிலும் வலியுறுத்திவந்தார்.

வட்டுக்கோட்டை விசாலை அன்னை உடனுறை காசிவிசுவநாதப் பெருமான் தேவஸ்தான ஓதுவா மூர்த்தியாயிருந்த ஆசிரியர் அ. முருகவேள் ஐயா அவர்களும் இந்த விடயத்தில் முனைப்பாக நின்று நடைமுறைப் படுத்தி வந்தார். மகோற்சவத்தில் துவச ஆரோகண அவரோகண காலங்களில் பிழையாக "நவ சந்திப் பண்கள்" ஓதப்பட்டு வந்ததைக் கண்டு வருந்தி, நவசந்திகளைக் குறிப்பிட்டு அந்தந்தச் சந்திகளுக்குரிய வேதம் , தேவாரம் , இராகம் முதலியவற்றை விபரமாகக் குறிப்பிட்டு, மக்கள் அனைவரினதும்கரங்களில் தவழக்கூடிய வகையில் துண்டுப் பிரசுரமொன்றை அச்சிட்டு இலவசமாக வெளியீடு செய்து விநியோகித்தும் வந்தார்.

அருள்மிகு செல்வச்சந்நிதி திருக்கோயிலில் நேர்த்திக்கடனை நிறைவேற்றத் தலத்திற்கு குழந்தையாக இருந்த இவரை 40 ஆம் நாள் அன்று கொண்டு சென்று வைத்திருந்த வேளை, திருத்தவ மூதாட்டி ஒருவர் அவ்விடத்தில் வருகை தந்து விசாக நாளில் இவன் பிறந்தமையால் இவன் பெயர் மயில்வாகனன் எனப் பெயர் சூட்டி ஆசீர்வதித்து உச்சி மோந்தாரென அச் செய்தியை புந்தியில் வைத்து போற்றி வந்த இவர், ஒருமுறை திருவருள் கூட்டச் சந்நிதி முருகன் சித்திரத் தேர் காண விழைந்து எங்கள் இருவரையும் நடைபவனிக்கழைப்ப நாமும் உடன்பட்டு அதிகாலை 5 மணியளவில் பன்னிரு திருமுறையோடு ஐயா பாடிய "சந்நிதி முருகன் செஞ்சொல் மாலை" கையெழுத்துப் பிரதியையும் எடுத்துப் புறப்பட்டுச் சென்றோம். ஐயா அவர்களும், ஆசிரியர் அவர்களும் பாடல்களை மாறி மாறி படித்துக் கொண்டே வர, யானும் சேர்ந்து சொல்லிக்கொண்டே வந்தேன் . ஆலயத்தை அண்மித்து பன்னிரு திருமுறைகளைப் பூர்த்தி செய்து சந்நிதி முருகன் செஞ்சொல்மாலைப் பாக்களைப் பாடிக்கொண்டு வர, சந்த இன்பம் கேட்டுச் சுவைத்த அடியார் சிலர் எம்முடன் சேர்ந்து பாட நாம் திருவீதி வலம் வந்து பாடல்களைப் பூர்த்தி செய்தோம்.

சிந்தனையில் நினைந்தன வெல்லாம் செப்புவோர்களும் சந்நிதி முருகன் சன்னிதானத்தில் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னைநாள் விரிவுரையாளர் அ.அரியரத்தினம் தலைவராகவும் ,கலைஞர் நா.புவனசுந்தரம், பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் ஆகியோர்களை இணைச் செயலாளராகவும் கொண்ட சிவன் வளாகம் வட்டுக்கோட்டை பதிப்பாளர் வட்டத்தினரால் சந்நிதி முருகன் செஞ்சொல் மாலை எனும் பக்திப் பனுவலும் அப்பாடலைக் கொண்ட இறுவட்டும் தாரண வருஷ தைப்பூசத் திருநாளில்

வெளியிடப்பட்டு விசேட பூசைகளும் செய்யப்பட்டன.

ஈழத்துச் சிதம்பரத்தில் இரட்டை சந்நிதான திருவொற்றான ஆண்டிக்கேணிஐயனார்க்கும் புராணமொன்று வேண்டுமென பண்டிதமணி சிவத்திரு க.வைத்தீசுவரக்குருக்கள் ஐயா கேட்க, முகம் மலர்ந்து , அகங் குளிர்ந்து பண்டிதர் ஐயா உடன்பட்டு அவருடன் பல விடயங்களைப் பற்றிஉரையாடிக்கொண்டு இருக்கும் போது ஆங்கே ஒரு பாங்கா படியெடுத்துக் கொண்டிருந்த என்னைப் பார்த்து "தம்பி புவனசுந்தரம், பண்டிதர் சிறிது நோயுற்று இருக்கிறார் . நீங்கள் அவரை ஊக்கப்படுத்தி உதவிகள் செய்து விரைவில் தரவேண்டும் எனக் கேட்க, நானும் உடன்பட்டுக் கொண்டேன் .ஆண்டிக்கேணி ஐயனார் அருளால் வேண்டியபடி புராணமும் இனிது எழுதப்பட்டு நல்லமுறையில் இளவாலையூர் சைவப் புலவர்,சித்தாந்த செம்மல் கலாபூசணம் இளைப்பாறிய அதிபர் செல்லத்துரை உரையுடன் அச்சிட்டு , மார்கழி மாதம் 2007 ஆம் ஆண்டு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் வெளியிடும்போது ஆங்கே வழமைபோல் பண்டிதர் ஐயாவுடன் யானும் இருந்தேன் .

ஆவலோடு ஐயனார் புராண வெளியீடு காண அடியார் வெள்ளம் அலைமோதிக் கொண்டிருந்த வேளை வாயு பகவானும், வர்ணபகவானும் தாமும் இவற்றைப் பார்க்க வேண்டுமெனத் தவிக்கும் போது பண்டிதர் ஐயா தான் வெளியே செல்லவேண்டுமென எனக்குக் கூற நானும் கூட்டிச் சென்று மீண்டும் மேல் அங்கிகளை கழற்றிவிட்டு, மண்டபத்துள் வந்தோம். கூட்டம் தொடங்கிய போது பண்டிதமணி வைத்தீசுவரக்குருக்கள் ஐயா ஆகவேண்டிய ஒழுங்குகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் பிரமுகர்கள் எல்லாம் மேடையில்அமர்ந்து கொண்டிருக்கிறார்கள் .ஒருவர் பின் ஒருவராக உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள் .அடுத்துபண்டிதர் ஐயாவின் செந்தமிழ்த் தேன் உரை பாய்ந்து கொண்டிருக்கிறது . மக்களும் ஆவலுடன் செவிமடுத்துக் கொண்டிருக்கிறார்கள் . திடீரென நடுக்கமுற்று கொடு கொடுத்து உரையாற்றுவதைக் கண்ட பண்டிதமணி வைத்தீசுவரக்குருக்கள் ஐயா அவர்கள் "பண்டிதர் மேலங்கியை எடுத்து அணியுங்கள் எல்லாவற்றிற்கும் நான் இருக்கிறேன்" என்று அன்புரை கூறி அணிய வைத்தது பத்தியில் ஒரு பரிவாகும்.

நாம் மூவரும் உரையாடும் போது நகைச்சுவைச் சம்பவங்கள் இடம் பெறுவதுண்டு. சொல்லாக்கத்திற்கும் இலக்கணம் படிப்பதற்கும் அவை எனக்கொரு வாய்ப்பாக அமைந்தது.

"ஐயுற்பியென்று பஞ்சாங்கத்தை அழைக்கலாமா?இளநீர் குடிக்கிறான் இது என்ன ஆகுபெயர், குருவாத்தியார் இது இரு பெயரொட்டா?" இவை போன்ற பல கேள்விகளைக் கேட்பேன். அவர்களும் மகிழ்ந்து விடை பகருவார்கள். இவற்றை எல்லாம் விரிவாகக் கூறின் கட்டுரை விரியுமென அஞ்சி நிறைவு செய்வதற்கு முன்னர் குருவாய் வரும் குகன் ஒன்றும் போதாவெனக்கு மயில்வாகனனாய் வந்து செந்தமிழ்ச் சமுத்திரத்தில் இருந்து ஒரு திவலை நீரெடுத்துப் பருகச் செய்ததோடு அமையாது நூல் பல எழுதவேண்டுமென ஊக்குவித்து கலைஞராக இருந்த என்னைக் கவிஞராக்கிச் "சந்தக் கவி" பட்டமும் வழங்கி மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்தி சிலர் நன்றைத் தீதென்பர், தீயதை நன்றென்பர் எனக் கூறி இவற்றை எல்லாம் செவி சாய்க்க வேண்டாமென அறிவுரை கூறி

வாரம் பட்டுளித் தீயவும் நல்லவாம்

தீரச் சாய்ந்தளி நல்லவும் தீயவாம்

சிந்தாமணிப் பாடலை உரை விரித்து, அச்சம் தவிர்த்து, ஆண்மையொடு வையத்துள் வாழ்வாங்கு வாழச் செய்த என் குருநாதரின் திருவடிகளை வணங்கி, அவரின் நூற்றாண்டு விழா வெகு விமரிசையாக நடைபெற வட்டூர் விசாலை அன்னை உடனுறை காசி விசுவநாதப் பெருமானாரின் பாதாம்புயத்தினைப் பணிந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழ் விளங்குக குருபணி.

# விஞ்ஞானபூர்வமான பேருண்மையை எமது இளம் வயதில் எம்மனதில் விதைத்த பெரியார்

முருகானந்தன் - கோயம்புத்தூர் - தமிழ்நாடு

”வந்தோரை வாழ வைக்கும் சிங்கார நீர்கொழும்பு ” என்ற பெருமையைப் பெற்றது எங்கள் ஊர். இலங்கையின் வடமேற்குக்கரையில் 1954 ஆம் ஆண்டு அங்கு வாழ்ந்த இந்து தமிழ்ச் சமூகத்திற்கு, கல்விச்செல்வத்தை வழங்குவதற்காக எம்மக்கள் மத்தியில் ஒரு அமுதசுரபியாகத் தோன்றியது விவேகானந்தா வித்தியாலயம்.

பண்டிதர் க. மயில்வாகனன் அவர்கள் அதன் முதலாவது தலைமை ஆசிரியராக அங்கு பணியாற்றவந்தார். என்னுடன் சேர்த்து 32 குழந்தைகளுடன் நீர்கொழும்பு இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் ஒரு விஜயதசமி நாளன்று ஏடு துவக்கி வித்தியாரம்பம் செய்துவைக்கப்பட்ட தினத்தன்றுதான் விவேகானந்த வித்தியாலயம் தோற்றம் கண்டது.

அவர் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த காலங்களில், எனது ஆரம்பக் கல்வி அங்கு தொடங்கிற்று. கொழும்பிலிருந்து புத்தளம் வரையில் அந்தக் காலங்களில் இயங்கிய ஒரே ஒரு தமிழ் இந்துப் பள்ளி இதுவாகும்.

ஐயாவிடம் கல்வி கற்றவர்கள் இன்று உலகம் பூராவும் தமிழ் உணர்வுடன் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதில் நானும் ஒருவன். குழந்தைப் பருவத்தில் சமயக்கல்வி, அதி முக்கியமானது. வெள்ளிக்கிழமை காலைகளில் எதிரே அமைந்த சித்திவிநாயகர் கோயிலுக்கு வரிசையாகக் கட்டுப் பாட்டுடன் சென்று சிவபுராணம் பாடி வழிபடுவோம்.

பிரார்த்தனையின் இறுதியாக " எல்லோரும் வாழ்க, இன்பமே சூழ்க " எனச் சொல்லி நிறைவு பெறும். அதன்பின்னர் தலைமை ஆசிரியர் பண்டிதர் எம்முன்னே தோன்றி நல்வழிபற்றி உரையாற்றுவார். நம்மைச் சுற்றி இருப்பவர்களை "வாழ்க வளமுடன் வாழ்க வையகம்” என மனதார வாழ்த்துங்கள். அது பன்மடங்காகப் பெருகி நம்மை வந்தடையும் என மகரிஷி சொல்வார். விஞ்ஞான பூர்வமாக நிருபிக்கப்பட்ட இந்தப் பேருண்மையை நம் சின்ன வயதில் எல்லோரையும் வாழ்த்தி அனைவரும் இன்பம் பெற்று வாழணும் என்கிற உயர்ந்த சிந்தனையை நம் மனதில் ஆழமாகப் பதிய வைத்தவர்,பண்டிதர் ஐயா அவர்கள். பின்னாளில் இதே பள்ளி விஜயரத்தினம் மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்ந்து இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு வரப்பிரசாதமானதற்கு தேவையான அடித்தளம் அமைத்துக் கொடுத்த ஐயாவை நன்றியுடன் நினைவு கூர்வோம்.

இன்று அந்த வித்தியாலயம் அந்தப்பிரதேசத்தில் ஒரே ஒரு இந்து மத்திய கல்லூரியாக வளர்ச்சி கண்டு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் இயங்கிவருகிறது.அதற்கு அடித்தளம் இட்ட எங்கள் ஊர் பெரிய மனிதர்களையும் பண்டிதர் அவர்களின் நூற்றாண்டுக் காலத்தில் நாம் நினைவுகூர்ந்து வழிபடுகின்றோம்.

இலங்கையின் வடபகுதியில் பிறந்து பல அறிஞர்களின் வழிகாட்டுதலினால் ஆசிரியராக - பண்டிதராக - தமிழ்ப்புலவராக உயர்ந்த ஐயா, இலங்கையில் மலையகம் தொடங்கி, கரையோரம் வரையில் தமிழ்ப்பணியாற்றியவர். அன்னாரின் நூற்றாண்டு விழா இன்று கடல் கடந்து பாரிஸ் மாநகரில் கொண்டாடப்படுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த அதியற்புதக்காட்சியை மேல் உலகிலிருந்து பண்டிதர் ஐயாவினதும் எமது பெற்றோர்களினதும் ஆன்மா பார்த்துக்கொண்டிருக்கும் என நம்புகின்றோம். பண்டிதர் அவர்களுக்கு நூற்றாண்டு கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ள அன்பு நெஞ்சங்களை தமிழ் கூறும் நல்லுலகின் சார்பில் மனதார வாழ்த்துகின்றேன்.

# இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காத பண்டிதர் க.மயில்வாகனனார்

சிவநெறிச்சாகரம் வீரசுப்பிரமணியம் - பிரான்ஸ்

(முன்னை நாள் அரச அலுவலர், சமூக ஆர்வலர்)

சிவநெறியும் செந்தமிழும் ஓம்பிய செல்வராகத் திகழ்ந்த புலவர்மணி பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் அவர்கள் நம் மண்ணிலே தமிழுக்கும்,சைவத்திற்கும்,சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காது நிலைத்துநிற்கின்றன.இற்றைக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்னர் பண்டிதர் ஐயாவுடன் பழகிய தருணங்கள், அவருடன்இணைந்து தமிழ் சமய சமூகப் பணிகள் ஆற்றியமை ஆகியன இமைப்பொழுதும் என் நெஞ்சில்நீங்காது நிலைத்து நிற்கின்றன.

பண்டிதர் க.மயில்வாகனனார் தலைமையிலே வட்டுக்கோட்டை இந்து சமய அபிவிருத்திச் சங்கம்ஆரம்பிக்கப்பட்டு அச் சங்கம் நமது கிராம வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்துச் செயலாற்றிய அக்கால கட்டத்திலேயே பண்டிதர் ஐயாவுடன் இணைந்து செயலாற்றும் சந்தர்ப்பம் எணக்குக் கிடைத்தது.பண்டிதர் ஐயா அவர்கள் மாணவர்களின் எதிர்கால நலன் கருதி தமிழ் சமய பாட வகுப்புக்களைஇலவசமாக நடத்தியும் , சித்தாந்தம் வேதாந்தம் ஆகியவற்றைப்போதித்தும், தமிழைப் பிழையறக்கற்பித்தும் மாணவர்களை உயர்வடைய வைத்தார். அன்றைய காலகட்டத்தில் அறிவாசான் பண்டிதர் ஐயாஅவர்களுடன் இணைந்து செயலாற்றச் சந்தர்ப்பம் கிடைத்தது எனக்குப் பெரும் பேறாகும்.

பண்டிதர் ஐயா அவர்கள் நம் மண்ணிலே "சைவத் திரு நெறி விழா" நடத்த அரும்பணியாற்றி அதனைவெகு சிறப்பாக நடத்தி அனைவரினதும் பாராட்டையும் வாழ்த்துக்களையும் பெற்றார்.மாணவர்கள் அனைவரையும் சிறந்த பேச்சாளர்களாக உருவாக்குவதற்காக தானே முன்னின்றுபயிற்சியாளராகவும் நடுவராகவும் பணியாற்றி அவர்களுக்கு மேடைப் பேச்சுக்களின்நுணுக்கங்களையும் தமிழ் உச்சரிப்புக்களையும் கற்றுக்கொடுத்து அவர்களைச் சிறந்தபேச்சாளர்களாக வெளிக் கொணர்ந்தார்.

விசாலாட்சி சமேத காசி விசுவநாதர் ஆலயத்தில் உற்சவ காலங்களிலே சமய சொற்பொழிவுகள் ,பிரசங்கங்கள் நடத்தி அடியார்கள் அனைவரையும் கவர்ந்தார்.மற்றும் தமிழ்ச் சான்றோர்களுடன் இணைந்து இலக்கிய ஆய்வு நிகழ்சிகள், தமிழ் சார்ந்த மாநாடுகள், பட்டிமன்றங்கள் என அனைத்தையும் தலைமை தாங்கி நடத்தியும் சிறப்புரைகளை வழங்கியும்,தமிழில் பல நூல்களை எழுதியும் தமிழுக்கு அருந்தொண்டாற்றினார். பண்டிதர் ஐயா அவர்களுடையஇலக்கியப்பணிக்கு இலங்கை அரசும், சான்றோர் அமைப்புக்களும் பல தடவைகள் ஐயா அவர்களுக்குவிருதுகள் வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வள்ளுவர் இளைஞர் மன்றத்தினரால் நேருஜி சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட நவராத்திரி 8 ஆம்நாள் பூசையில் பண்டிதர் ஐயா அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். R D S நூல் நிலையத்தினை "ஆசியா பவுண்டேசன் " நிறுவனத்தின் உதவியுடன் விரிவு படுத்திச் சிறப்பாக இயங்க வழி செய்தார்.பண்டிதர் ஐயா அவர்கள் வீதி செப்பனிடுதல் போன்ற சிரமதானப் பணிகளிலும் மிகப் பங்கு கொண்டுஉழைத்தார்.

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களுக்கு நினைவு விழா நடத்தியும் முதுதமிழ்ப் புலவருடையஆக்கங்களைத் தேடிப் பெற்று "இளைஞர் விருந்து" என்னும் பெயருடன் வட்டுக்கோட்டை இளைஞர்மன்றத்தார் வெளியிட உதவியும் வழங்கியவர் பண்டிதர் மயில்வாகனனார் என்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.வட்டுக்கோட்டை சிவன் தேவஸ்தான முதல்வர் , வைத்திய கலாநிதி இராச வைத்தியர் அ.க.குமாரசாமி அவர்களுக்குப் பாராட்டு விழா எடுப்பதற்குத் தலைமை தாங்கியும் , மலர்குழுவின் தலைமை ஆசிரியராய் பொறுப்பேற்றும் விழாவினையும் நடத்தி, பாராட்டு விழா மலரினையும் சிறந்த முறையில்,வெளியிட்டும் வைத்த பண்டிதர் ஐயா அவர்கள் ,சமூக ஆர்வலர், சமாதான நீதவான் , ஆசிரியமணி தெய்வேந்திரம்பிள்ளை அவர்களின் பட்டமளிப்புப்பாராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி விழாவினைச் சிறப்பித்தார் .

நம் கிராமத்திலே பண்டிதர் ஐயாவுடன் பல நிகழ்வுகளில் அன்று இணைந்து கடமையாற்றிய எனக்குஐயாஅவர்களின் நூற்றாண்டுக் காலத்திலே ஐயா அவர்களுக்கு விழா எடுக்கும் தம்பிமார்களுடன்இணைந்து செயலாற்றக் கிடைத்த சந்தர்ப்பம் என் மனதுக்குப் பெரும் நிறைவைத் தருகின்றது. பண்டிதர் ஐயா அவர்கள் நம் கிராமம் தாண்டி ஈழத்தின் பல பாகங்களிலும் அனைவராலும்

அறியப்பட்டவர் . அங்கேயும் தனது தமிழ் சமயசமூகப்பணிகளை ஆற்றியுள்ளார் . சிறந்த மேடைப் பேச்சும் எழுத்தாற்றலும் கொண்ட பண்டிதர்அவர்கள் ஈழத்தில் பல தசாப்தங்களாக தமிழுக்கும் , சைவத்திற்கும் ஆற்றிய பணிகள் மகத்தானது.

" ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்

பொன்றாது நிற்பதொன் றில்"

என்ற குறளுக்கமைய ஒப்பில்லாது உயர்ந்து நிற்கும் புகழைத் தவிர உலகத்தில் அழியாது நிற்பது வேறொன்றுமில்லை என்பதற்கமைய அமரத்துவம் எய்தியும் ஓங்கிய புகழால் பண்டிதர் க.மயில்வாகனனார் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்.

## தனித்தமிழ்ப் புலவர் ஏறு

**நாகரத்தினம் கணேசலிங்கநாதன், பி.ஏ. எம்.எஸ்.**

**சித்தமருத்துவர்,வைத்தியகலாநிதி. சமாதான நீதவான்**

**கலாபூ'ணம் கலைவாரிதி - வட்டுக்கோட்டை**

வட்டுக்கோட்டைக் கோவிற் பற்றில் அநேக கிராமங்கள் உள்ளன. அவற்றுள் துரித வளர்ச்சிடைந்த கிராமம் சிவன் கோவிலடியாகும். முத்தமிழிலும், கலைகள் பலவற்றிற்கும் இருப்பிடமாகவும் ஊற்றாகவும் உள்ளது. பாரம்பரிய சித்த மருத்துவம், மந்திரம், சோதிடம் முதலானவற்றில் மிளிர்வது. கல்வி கேள்வியிலும், சைவ சமயத்தை தமது உயிரெனப் போற்றிய கிராமமாக விளங்கியது. நாட்டுக் கூத்திலும் முதன்மை பெற்று விளங்கியது. "அண்ணாவி முருகர் உண்டு, அடிக்கும் மத்தளம் தானும் உண்டு, பரியாரி அப்பாவுண்டு, பரியாரம் மெத்த உண்டு" என்னும் நாட்டுப் பாடல் புகலும். "எவ்வழி ஆடவர் அவ்வழி வாழிய நிலனே" என்னும் சங்கச் செய்யுள் நினைவு கூர வைக்கும்.

ஐயா மயில்வாகனனார் அவர்கள் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர், யாழ்ப்பாணம் தவத்திரு யோக சுவாமிகளை அதிட்டவசமாகச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. அப்போது "வருகிறான் தமிழ்ப் பண்டிதன்" என்று உரக்கக் கூறி ஒரு ஏட்டுப் பிரதியை எடுத்துக் கொடுத்து ஆசீர்வதித்த தன்மையை பிற்காலத்தில் கூறி மகிழ்வார். அந்த ஆசீர்வாதம் புலவர் அவர்களை படிப்படியாக உயரச் செய்தது எனலாம். அவ் ஏட்டுப் பிரதியை மிகவும் பக்குவமாக ஆயுள் பரியந்தம் தன்னுடன் வைத்துப் பேணிப் பாதுகாத்து வந்தார்.

வட்டூர் சின்னக்கதிர்காமத்தில் புராண படன சபையின் தோற்றத்திற்கு மூலக்காரணகர்த்தவாக இருந்து செயல்பட்டவர். கந்தபுராணத்திற்கு பயன் கூறும் பாங்கை கற்பித்து வந்தார். வயது வேறுபாடின்றி ஓய்வுநிலை ஆசிரியர்களும், ஓய்வுநிலை அரச உத்தியோகத்தரும் இவ்வகுப்பில் கற்றுப் பயனடைந்தார்கள். தமது ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொண்டார்கள். பயனும் அடைந்தார்கள். ஒரு சமயம் திடீரென்று மின்விளக்கு அணைந்து தடைப்பட்டது. அப்போது கோவிற் கிரியைகள் புனிதமாகப் போற்றப்படல் வேண்டும். புனிதத் தன்மையோடும் கந்தபுராணத்தைக் கற்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நின்றார். இச்சம்பவம் நடைபெற்ற ஒரு கிழமைக்குள் 2ஆம் தீட்சை பெற்றுக் கொண்டார். தனது ஆத்மீக பக்குவத்தால் கந்தபுராணத்தை நிறைவாகக் கற்றுக் கொடுத்தார். இச்சம்பவத்தின் பின்னர் பலரும் மேன்மேலும் ஆத்மீக பக்குவத்தை வளர்த்துக் கொண்டார்கள்.

புலவர் அவர்கள் ஆயிரம் பிறை கண்ட உத்தமர். அமாவாசைப்பட்சம் வந்த மூன்றாம் நாள் பிறையைக் கண்டு தரிசிப்பதற்கு வயல்கரை அல்லது பொன்னாலய கடல்வெளிக்கு செல்லும் வழக்கமுடையோராக இருந்தார்கள். சங்க கால மரபு பிறையைப் பெண்கள் தொழுவதில்லை. பிற்காலத்தில் வந்த சிறந்த புலவராகிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பராம்பரிய விதிமுறையை மிகவும் நுட்பமாக மாற்றியமைத்தார். அவரது மலரும் மாலை என்ற நூல் எனது சுக துக்கங்கள் என்ற மகுடவாசகத்தின் கீழ் "கூனல் இளம்பிறை வரவே சிவன் திருக்கோலம் தெளிவேனடி'' எனக் கூறி சைவத்தின் செழுமையையும் சிவனின் பிறை தரிசனத்தை பொதுவாக்கிய பெருமை கவிமணியைச்

சாரும். இலக்கியத்தின் பெரும் திருப்பம் எனவும் கூறி மகிழ்ந்தார். அன்னை அம்பிகையின் தரிசனத்தை "முற்றிய ஆழியிலே அலைவந்து எறிகையிலே, கற்றைக் கதிர் எழவே உமைதிருக்காட்சி வியப்பேனடி" என அழகாகப் பாடி இலக்கிய மரபில் பெரும் திருப்பத்தை கவிமணிகள் ஏற்படுத்தியதாக கூறி பேச்சை நிறைவு செய்தார். செம்மொழித் தமிழ் மகனாக புலவர் அவர்கள் மிளிர்ந்தார் என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

கந்தபுராணக் கலாசாரத்தைக் கடைப்பிடித்துத்தொழுகியவர். தன்னிடம் கற்றவர்களையும் அந்நெறியில் செல்லத் தூண்டி வாழவைத்தவர். சைவ சித்தாந்த வாழ்க்கை நெறிமுறையில் தன்னை வரித்த உத்தமர். சிவனே முழுமுதற் தெய்வமென வரித்துக் கொண்டு விசுவேசர் தலபுராணத்தை மிகத் திறம்பட இயற்றினார். கற்ற பண்டிதர்கள் எல்லோரும் காய்தல், உவத்தல் இன்றி வரவேற்றார்கள். பண்டிதர் அவர்களைப் பற்றி பல்கால் பல நூல்களைப் புனையலாம். ஆயினும், அவர்களது பணிகள் மிக மிக அடக்கானது என சிவத்திரு வைத்தீஸ்வர குருக்கள் ஐயாவும், உருவல் அன்பர் பண்டிதர் ஆறுமுகனார் அவர்களும் பலமுறை கூறக் கேட்டேன். அவர்களிடம் கந்தபுராணத்தை முறையாக கற்றவர்களுள் நானும் ஒருவன். மிக நெருங்கிய உறவினர் என்பதை விட செம்மொழி தனித்தமிழ் பண்டிதர் தமிழ் சைவப் பண்பாட்டுடையவர் என்பதால் மிகவும் நட்புரிமையோடு பழகியவன்.

புலவர் அவர்களின் புகழ் எக்காலமும் நிலைத்து நிற்கும் "அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பது (குறள்) அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை மேன்மேலும் தொட அவரது தலைமுறையினரை அன்னை காசி விசாலாட்சி உடனுறை காசி விசுவேசப் பெருமான் அருள்புரிய வேண்டி நிறைவு செய்கின்றேன்.

## நீர்கொழும்பில் தமிழ் நாடகக் கலைக்குப் புத்துயிரூட்டிய எங்கள் மதிப்பிற்குரிய ஆசான் பண்டிதர்!

**«செல்வி» சண்முகவடிவம்பாள் சண்முகம்**

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் நீர்கொழும்பில் தமிழ்ப்பேசும் கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தமையால், அவர்களின் பாதிரிமார் மற்றும் கலைஞர்கள், பரிசுத்த வேதாகமத்திலிருந்து சில காட்சிகளை தேர்வுசெய்து நாடகமாக்கி வருடாந்தம் தங்கள் தேவாலய முன்றலில் மேடை அமைத்து இரவிரவாக அரங்கேற்றிவந்தனர்.

இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்து இவ்வாறு நாடகங்கள் அரங்கேற்றம் கண்டுள்ளன. குறிப்பாக நீர்கொழும்புக் கடற்கரை வீதி செபஸ்தியார் தேவாலயம், மற்றும் முன்னக்கரை, குடாப்பாடு, பெரியதெரு (Grand Street) ஏத்துக்கால், பள்ளஞ்சேனை முதலான பிரதேசங்களில் இருந்த தேவாலயங்களில் கத்தோலிக்க மதம் சார்ந்த நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

அரங்க நிர்மாணம், மேடைத்திரைச்சீலை வடிவமைப்பு, பாத்திரங்களுக்கு ஏற்ற ஒப்பனை அலங்காரம் முதலானவற்றில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களும் இந்தப்பிரதேசங்களில் வாழ்ந்தனர்.வாய்க்கால் என்ற ஊர் நீர்கொழும்பு - சிலாபம் வீதியில் மகாஓயா நதியின் தீரத்தில் வருகிறது. இங்கு சரித்திர நாடகங்களுக்குத் தேவையான ஆடை, அணிகலன்கள், அரச மகுடங்கள், இமிடேசன் ஆபரணங்கள் யாவும் வாடகைக்கு கிடைக்கும்.

எங்கள் ஊரில் தொலைக்காட்சியின் வருகைக்கு முன்னர், ஒரு சில சினிமா தியேட்டர்கள்தான் இருந்தன. அங்கு தியாகராஜ பாகவதர் என். எஸ். கிருஷ்ணன் காலத்துப்படங்கள் திரையிடப்பட்ட காலத்தில், தேவாலய முன்றல்களில் நாடகங்கள் மேடையேறின. அதனை எம்மூர் மக்கள் டயலோக் என்றுதான் அப்போது அழைத்தனர்.

னுயைடழபள என்ற ஆங்கிலச்சொல்லின் தமிழ் அர்த்தம் உரையாடல். அன்று அவர்களினால் அரங்கேற்றப்பட்ட நாடகங்களில் உரையாடல் அதிகமாக இருக்கும். இவ்வாறு அவர்களின் நாடகக்கலை வளர்ந்தோங்கிய வேளையில் கடற்கரை வீதியில் அரச மரநிழலில் நூறு ஆண்டுகளுக்கு முன்னர்

தோன்றிய இந்து வாலிபர் சங்கம் முதலில் கீற்றுக்கொட்டகையாகத்தான் காட்சி அளித்தது.

எங்கள் ஊருக்கு வடபிரதேசத்திலிருந்து வருகை தந்தவர்களில் பெரும்பாலானோர் சுருட்டுக்கைத்தொழிலை அங்கு அறிமுகப்படுத்தினர். அரசமரத்திற்கு சமீபமாகவே சுருட்டுக்கொட்டில்கள் தோன்றி, சுருட்டுக்கம்பனிகள் வளர்ந்தன. அங்கு பணியாற்றிய முன்னோர்கள் ஒன்றிணைந்து சுருட்டுத் தொழிலாளர் சங்கம் அமைத்தனர். அவர்களுக்கென

ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது நான்காம் நாள் திருவிழா நடைபெற்றது.இன்றும் இந்த நடைமுறையிருக்கிறது. இவர்கள்தான் நீர்கொழும்பில் யாழ்ப்பாணம் சின்னமேளம் கலையை அறிமுகப்படுத்தியவர்கள். அத்துடன் நீர்கொழும்புக்கு சமீபமாக குருநாகல் செல்லும் பாதையில் வரும் தங்கொட்டுவ பிரதேசத்தில் பலசரக்கு கடைகளும் நகை அடவு நிலையங்களும் புடவைக்கடைகளும் நடத்தி வர்த்தகத்தில் மேலோங்கிய வடபகுதி காரைநகர் பகுதி மக்களுக்கும் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் ஏழாம் திருவிழாவிற்கான உபயம் கிடைத்தது. இவர்களும் வடக்கிலிருந்து பிரபல நாதஸ்வர - தவில் வித்துவான்களை அழைத்து வந்து கச்சேரிகளை நடத்தினர்.

எமது இளைமைக்காலத்தில் இரண்டு தரப்பினரும் நடத்திய கோயில் திருவிழாக்கள் பெரும் கொண்டாட்டமாய்த்தான் அமைந்தன. ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக நூறாண்டுகளுக்கு முன்னர் அமையப்பெற்ற இந்து வாலிபர் சங்கத்தில் நடந்த கலை விழாக்களில் எமது தாய்மாமனார் இரா. சுப்பையா அவர்களும் , அவருடைய தாய் மாமனார் வெற்றிவேல் அவர்களும் மற்றும் இவர்களின் நண்பர்களும் வேடங்கள் தரித்து நாடகங்கள் நடத்தியிருப்பதாக எமது அம்மா அடிக்கடி சொல்லியிருக்கிறார்கள்.

கீற்றுக்கொட்டகையாக இருந்த சங்கத்தின் மண்டபம் கல்லினால் கட்டப்பட்டு, கூரைக்கு ஓடு வேயப்பட்டு, பூரணத்துவமான அரங்கமாக மாற்றுவதற்கு எமது முன்னோர்கள் அங்கு வேடங்கள் தரித்து கலைநிகழ்ச்சிகள் நடத்தி நிதி திரட்டியதாகவும் , சுருட்டுத்தொழிலாளர் சங்கத்திற்கும் இந்தப்பணியில் பங்களிப்பு இருந்ததாகவும் எமது தாத்தாவும் ஆச்சியும் , அம்மா மற்றும் அத்தைமார் உறவினர்களும் தெரிவித்துள்ளார்கள்.

இந்தப்பின்னணியில்தான் பண்டிதர் க. மயில்வாகனன் அவர்களின் வருகை 1954 இல் நடந்தது. அவரது தலைமையில் விவேகானந்தா வித்தியாலயம் தொடங்கப்படுவதற்குக் காரணராக இருந்த ( அமரர்) எஸ். கே. விஜயரத்தினம் அய்யா இந்து வாலிபர் சங்கத்தின் அக்கால கட்டத்தின் தலைவராக இருந்தார்.

அச்சமயம் நான் கடற்கரை வீதியில் செபஸ்தியார் தேவாலயத்தின் கட்டுப்பாட்டிலிருந்த றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையில்தான் கற்றேன். எமது தாய்மாமனார் இரா. சுப்பையாவின் மகள் தேவா ( இன்று ஜெர்மனியில் வசிக்கிறார்) ஆவே மரியா மகளிர் பாடசாலையில் பயின்றார். இவ்வாறு எனது வயதிலும் என்னை விட குறைந்த வயதிலும் இருந்த சைவத்தமிழ்ப்பிள்ளைகள் அனைவரும் அங்கு ஏதாவது ஒரு கத்தோலிக்கப் பாடசாலையில்தான் கற்றுக்கொண்டிருந்தனர்.

இந்து வாலிபர் சங்கத்தில் வார விடுமுறை நாட்களில் சாமி சாத்திரியார் என்ற பெரியார் என்போன்ற பிள்ளைகளுக்குச் சைவ சமய பாடம் போதித்துக் கூட்டுப்பிரார்த்தனை வகுப்புகளும் நடத்தினார். பண்டிதர் மயில்வாகன் அவர்களின் வருகையையடுத்து அங்கு மறுமலர்ச்சி ஏற்பட்டதென்றே சொல்லவேண்டும். அவர் மாணவர்களின் கலை, இலக்கிய ஆற்றலை இனம்கண்டு ஊக்குவிப்பதற்காக மாணவர் இலக்கிய மன்றம் என்ற அமைப்பை மாணவர்களைக்கொண்டே உருவாக்கினார். அதுவரை காலமும் கத்தோலிக்கப் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்த ஆண் - பெண் சைவத்தமிழ் மாணவர்கள் படிப்படியாக விவேகானந்தா வித்தியாலயத்திற்கு வந்து சேர்ந்தனர்.

மாதாந்தம் மதியவேளையில் மாணவர் இலக்கிய மன்றத்தைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் மயில்வாகனன் அவர்கள் ஆசிரியர்கள் மூலமாக ஒருங்கிணைப்பார். மாணவர்களின் சுயவிருத்தி இதனால் முன்னேறியது.பாடுதல், ஆடுதல், பேசுதல் , நடித்தல் முதலான துறைகளில் மாணவர்களுக்கு அந்த இலக்கிய மன்றம் சிறந்த ஊக்கியாகத்திகழ்ந்தது.

அந்த நிகழ்ச்சிகளில் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதனால்,

கலைத்துறையில் தேர்ச்சி பெறக்கூடிய மாணவர்களையும் பண்டிதர் அவர்கள் அடையாளம் கண்டு பயிற்சிகளை வழங்கினார். ஆசிரியை திலகமணி தில்லைநாதன் அவர்கள் எனக்கும் என்னுடன் படித்த கமலா என்ற மாணவிக்கும் குறத்தி நடனத்தைப் பயிற்றுவித்தார். பண்டிதரின் முயற்சிகளுக்கு அக்காலத்தில் பக்கபலமாக இருந்தவர்கள் இரண்டு ஆசிரியர்கள். ஒருவர் வில்லிசை வேந்தன் என பின்னாளில் நன்கு அறியப்பட்ட உடப்பூர் பெரி. சோமாஸ்கந்தர் மாஸ்டர். மற்றவர் நீர்கொழும்பு முன்னக்கரையைச்சேர்ந்த அல்.ஃபிரட் நிக்கலஸ் மாஸ்டர். இவர்களின் கூட்டணியில் தயாரிக்கப்பட்ட நாடகம்தான் செழியன் துறவு. அதற்கான கதை வசனத்தை எழுதியவர் உடப்பூர் பெரி. சோமாஸ்கந்தர் மாஸ்டர். மேடை அரங்க நிர்மாணம் மற்றும் ஒப்பனை ஆடை அணிகலன் விடயங்களை அல்.ஃபிரட் நிக்கலஸ் மாஸ்டர் கவனித்தார்.

பாண்டியன் செழியனுக்கும் சேர மன்னனுக்கும் இடையில் தொடங்கிய மோதலில் சேரனின் மகள் சிக்குண்டு போர்க்களத்தில் மடியும் காட்சியுடன் முடிவடையும் நாடகம். " பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கவேண்டாம்" என்று சேரனிடம், அவன் மகள் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும், அவன் அவளது கோரிக்கையை நிராகரித்துப், படையெடுக்கின்றான். இறுதியில் கைதாகி பாண்டியன் அரசின் சிறையில் தடுத்துவைக்கப்படுகிறான்.

சேரனின் மகள் புலவர் வேடம் அணிந்து பாண்டியன் அரசவையில் தன்னைச் சேரநாட்டுப்புலவர் என அறிமுகப்படுத்திக்கொண்டு பாண்டியனைப் புகழ்ந்து பாடுகிறாள். பாண்டியன் அவளுக்கு என்ன பரிசுவேண்டும்? எனக்கேட்கவும், தங்கள் சேரநாட்டு மன்னனைச் சிறையில் பார்ப்பதற்கு அனுமதி தரவேண்டும் என்கிறாள். சேரன் மகளைப் புலவர் என்று நம்பிவிடும் பாண்டியன் செழியன் அதற்கு அனுமதி தருகிறான்.

சிறையப் பார்வையிடப் புலவர் வேடத்தில் செல்லும் மகள், தந்தை சேரனுக்கு இனியும் போர்வேண்டாம், இங்கிருந்து தப்பிச்சென்று சேரநாட்டு மக்களைப் பரிபாலிக்குமாறு சொல்லி அனுப்புகிறாள். சேரன் மகள் சேரனுக்குத் தரப்பட்ட சிறைச்சாலை உடையை அணிந்துகொண்டு, தனது புலவர் வேடத்து ஆடைகளைக் கொடுத்து அணியச்செய்து தந்தையைத் தப்பி ஓடவைக்கிறாள்.

ஒருநாள் பாண்டியன் செழியன், சிறைக்கு வந்து சேரனைப்பார்க்கும்போது அவனது வேடத்தில் மகள் - புலவர் - இருப்பது கண்டு அதிர்ச்சியடைகின்றான். ஒரு பெண்ணை அவ்வாறு சிறைவைப்பதற்கு விரும்பாத பாண்டியன் அவளை எச்சரித்து விடுதலை செய்து சேரநாட்டிற்கு திருப்பி அனுப்புகின்றான். ஆக்கிரமிப்பில் ஆர்வம் கொண்டிருந்த சேர மன்னன் மீண்டும் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருகின்றான். போர் நடக்கிறது. சேரன் தந்திரமாக மறைந்து நின்று அம்பை எய்தபோது குறுக்கே ஓடிவந்து தனது மார்பில் அம்பை ஏந்தி பாண்டியனை காப்பாற்றுகிறாள் சேரன் மகள்.

அதனால், சேரன் கலங்கித் துடிக்கும்போது, " சேர மன்னா, இனியாவது உனது ஆக்கிரமிப்பு எண்ணத்தைக் கைவிடு. உனக்கு எனது நாடுதானே வேண்டும். நீயே வைத்துக்கொள், வீணாக மக்களைப் பலியெடுப்பதற்கு ஆக்கிரமிப்புப் போர்கள் நடத்தவேண்டாம்" எனச்சொல்லிவிட்டு மணிமுடியைக் கீழே வைத்துவிட்டுத் துறவறம் பூண்டு காட்டுக்குச்செல்கின்றான்.

செழியன் துறவு என்ற இந்த நாடகத்தில் நான் பாண்டியன் செழியனாகவும் சக மாணவி சுப்பம்மாள் சேரனாகவும் எங்கள் பெரியம்மா மகள் மனோன்மணி சேரன் மகளாகவும் - புலவராகவும் நடித்தோம். பாண்டியனின் அமைச்சராக மாணவி கமலாவும் சேவகர்களாக மாணவிகள் சத்தியவாணி, கிருஷ்ணவேணி ஆகியோரும் நடித்தோம். கனல் தெறிக்கும் வசனங்கள். அரண்மனை, சிறைக்கூடம், போர்க்களம் முதலான காட்சிகள் பிரமிக்கத்தக்கவையாக அமைந்தன. பண்டிதர் அவர்களும் சோமாஸ்கந்தரும் தீவிர பயிற்சி வழங்கி எம்மைப் பழக்கினர். அனைவரும் நீண்ட வசனங்களை ஏற்ற இறக்கமுடன் மனனம் செய்து உணர்ச்சிகரமாக நடித்துப் பாராட்டுப்பெற்றோம். செழியன் துறவு நாடகம் நீர்கொழும்பு தமிழ்ப்பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் முதல் பரிசும் சான்றிதழ்களும் பெற்றது.

அதே நாடகம் வீரத்திருமகள், மகுடம் காத்த மங்கை முதலான பெயர்களில் மீண்டும் மீண்டும் நீர்கொழும்பில் பெற்றோர் தின விழாக்களில் மேடையேற்றப்பட்டது. அத்துடன் குமணன் என்ற அரச நாடகத்தையும் பண்டிதர் தயாரித்து மேடையேற்றினார். நீண்ட நெடுங்காலமாக எங்கள் ஊரில் கத்தோலிக்க சமயம் சார்ந்த நாடகங்கள் Dialogs என அழைக்கப்பட்ட பின்னணியில், பண்டிதர்

அவர்களின் வருகையுடன் தமிழர் வரலாற்று நாடகங்களை நோக்கிய சிந்தனைகள் மலர்ந்தன. எமது மாணவர்கள், கரகாட்டம், ஒயிலாட்டம், குறத்தி நடனம், காவடி நடனம் முதலான தொன்மையான கலை வடிவங்களைப் பயின்றனர். ஆரங்கேறினர். அத்துடன் செவ்விந்தியர் நடனமும் ஆடினார்கள்.

அதற்காக அன்று கடுமையாக உழைத்தவர்தான் பண்டிதர் மயில்வாகனன் அவர்கள். இவ்வாறு நாடகம், நடனம் முதலான துறைகளில் மாணவர்களை ஊக்குவித்துப் பயிற்சியளித்த பண்டிதர் அவர்கள், பேச்சுப்போட்டிகளுக்கும் சைவசமய பாடப்பரீட்சைகளுக்கும் மாணவர்களைத் தயாரித்து அனுப்பிவைத்தார். வருடாந்தம் கொழும்பு விவேகானந்த சபை நடத்திய பரீட்சைகளில் நாம் தோற்றினோம். அன்று எமக்குப் பரிசாகக் கிடைத்த சான்றிதழ்களும் பெறுமதியான நூல்களும் இன்றும் எமது வீடுகளில் பத்திரமாக இருக்கின்றன.

அவற்றில் எல்லாம் பண்டிதர் அவர்களினதும் இதர ஆசிரியர்களினதும் நினைவுகள் ஆழமாகப் பதிந்திருக்கின்றன. பண்டிதர் அவர்கள் என்றும் எங்கள் நினைவுகளில் நிழலாகத் தொடருவார். அன்னாருக்காக அவரின் மாணவர்கள், சந்ததியினர், தமிழ்ப்பற்றாளர்கள் பாரிஸ் மாநகரில் நூற்றாண்டு விழா நடத்துவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

# நூற்றாண்டு காணும் மறைந்த எம்புலவர் திரு.க.மயில்வாகனனாருக்கு வாழ்த்துமடல்

**வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து பிரான்ஸ் அண்ணாவியார்**

**திரு .தில்லையம்பலம் யோகேஸ்வரன்**

தமிழை ரசித்துப் பேசிடும் சொல்வேந்தர். ஆசான் செந்தமிழ்ச்செல்வர் பண்டிதர் க. மயில்வாகனனார் புலவர் கலாபூசணம் நாற்கவிராசர் அவர்களின் அகவை நூற்றாண்டு விழாவினை விளம்பி வருடம் தைத் திங்கள் 27-01-2019 இல், வட்டுக்கோட்டைமக்களும் சான்றோர்களும் பெரியோர்களும் தமிழ் நலன் விரும்பிகளும் நடத்தும் இவ்வேளையில் இவ் விழாவினில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

“நாற்கவிராசர்” பண்டிதர் ஐயாவை புகழாரம் சூட்டுவதற்கு எம்மால் முடியாது! ஏனெனில், அவர் ஆசான். நாம் மாணாக்கர்கள். ஆதலினால் அவருடன் நேரில் நடந்த அனுபவத்தை மட்டும் உங்களிடம் சிறு குறிப்பாகத் தருகின்றேன்.

1974 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்துக்குழுவினரால் நடத்தப்பட்டதுதான் “குருக்கேத்திரன்” நாட்டுக்கூத்து. அதில் நான் குருக்கேத்திரன் பாத்திரத்தில் நடித்தபொழுது, அரங்கேற்றம் நடைபெற்ற அன்று புலவர்மணி முன்னுரையாற்றி கூத்து முடியும்வரை வட்டக்களரியிலே இருந்து பார்த்து, கூத்து முடிந்த பின்பு என்னை கட்டித்தழுவி, "பேரா உன்னுடைய குரல்வளத்தினுக்கு ஆட்டம் மட்டுமில்லை ஆடிமுடிந்தபின்பு உன்கட்டம் வரும்வரைக்கும் அண்ணாவியார் அ. முதலீங்கத்துடன் இருந்து பாடவேண்டும்" என்றுகூறி, என்னை ஊக்கப்படுத்தினார். அவருடைய ஆசியுடன் அன்றுதொட்டு நாட்டுக்கூத்து ஆடியபின்பு அண்ணாவியாருடன் பாடிவந்தேன்.அவர் இறை எய்தியபின்பும் தொடர்ந்து தாய்மண்ணில் போராட்ட காலங்களில் நாட்டுக்கூத்து, தெருக்கூத்து , புரவிநடனம், காவடியாட்டம், ஒயிலாட்டம் போன்ற கலை வடிவங்களுக்கும் அன்று ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து அண்ணாவியாராக அ.க.முருகவேள் ஆசிரியருடன் இணைந்து நடத்திவந்தேன். காலத்தின் கோலத்தினால் புலம்பெயர்ந்து

நாடுவிட்டு நாடுவந்து இன்று பிரான்ஸில். வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அண்ணாவியாராக ஐரோப்பிய நாடுகளில் வலம்வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் இங்கு பதிவிடுகின்றேன்.

சின்னக்கதிர்காமம் (முருகன் ) சுப்பிரமணியர் ஆலயத்தில் திருவாளர் ஐயம்பிள்ளை சதாசிவம், அ.க.முருகவேள் ஆகியோர் கந்தஷஸ்டி காலத்தில் கந்தபுராணம் படித்து பயன் கூறியபோது, அவர்களுடன்1968 ஆம் ஆண்டு முதல் அடியேனும் பாட்டுப் பாடி வந்தேன். அதன்பின்பு 1983 இல் ஆசான் திரு.சதாசிவம் அவர்கள் மறைந்தபின்பு, பண்டிதர் க.மயில்வாகனனார் பயன் சொல்லிட நான்பாடியபோது மகிழ்ச்சி பொங்கிட அன்று நாற்று நட்டு இன்று அறுவடை காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன் "பேரா " என்று பேரானந்தம் கொண்டவர் பேரன் மயில்வாகனனார். அவருடைய ஆளுமைகள் சொற்பொழிவுகள் அணுகுமுறைகள சின்னஞ்சிறு குழந்தைகளையும் தன்பால் இழுக்கும். அவருடைய எளிமையான தோற்றமும் குனித்த புருவமும் புன்சிரிப்பும் எம்மைப் பெரிதும் கவரும்.

நாட்டுக்கூத்து ஆடுவதற்கு முன்பு முழு நீள வண்ணமான கதை வடிவங்களை கதைச்சுருக்கமாக பண்டிதர் ஐயா கூறும்போது , ஒலிவாங்கியுடன் கதைப்பதுபோல் சிரித்துத் சிரித்துப் பேசியும் மக்கள் மனங்களை கதைக்குள் ஈர்த்து ரசிக்கச் செய்திடுவார். ஐயாவையும் அவருடைய இலக்கியப் படைப்புக்களையும் சொல்லிக்கொண்டேபோகலாம். அவருடைய படைப்புகள் மேலைத்தேசங்களிலும் பதியப்பட்டு உள்ளதை நான் இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும் 1995 ஆம் ஆண்டு. திரு.து.நிர்மலசிங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி ஆசான் பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்களால பாரிஸ் லாச்சப்பல் மாணிக்கவினாயகருக்கு “ஊஞ்சல்பாட்டு” இயற்றப்பட்டது. திரு.தி.யோகேஸ்வரனாகிய நான் முதல் முறையாக ஊஞ்சல் பாட்டினை பாடியதோடு அப்பாமாலையில் வருகின்ற எதுகை மோனையையும். ஏற்றத்தாழ்வுகளையும் கவனித்துப்பாடினேன்.

“எச்சரிக்கை” - “பராக்கு” படிக்கும்போது அடியவர்களின் முகங்களில் கருணையின் வடிவு கண்டு ஐங்கரனை தொழுதழும் காட்சிதனை கண்டு நானும்அழுதேன். அதுகண்டு என் உடன்பிறவாத்தம்பி நிர்மலசிங்கம் ஓடிவந்து கட்டித்தழுவி " பாடுவோர் பாடினால் கேட்போரும் கசிந்திடுவர்" என்று நாம் எடுத்த முயற்சி வீண்போகவில்லை அண்ணையா என்று அகம் மகிழ்ந்தார்.

ஆசான் வாழ்க! அவர் தொண்டுவாழ்க! செந்தமிழ்ச்செல்வர் தம் சைவநெறி தழைத்தோங்கி வட்டூர் மக்களும் வையகமும் போற்றிட வாழ்த்திடுவோம். தமிழ் உள்ளவரை ஆசான் பண்டிதனார் பெயர்நிலைத்திடும் என போற்றிடுவோம்.

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி

வையகம் போற்றிடவே வட்டுநகர் தந்திடு

செம்மல் நாற்கவிராசர் பண்டிதனார் புகழ்

பாரினில் ஓங்கிடவே பாரினில் ஓங்கிடவே!

## உலகத்தமிழராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்ட பாரிஸ் மாநகரில் பண்டிதர் நூற்றாண்டுவிழா – வாழ்த்துரை

Dr. K.S. திரவியராசா, Dip. M.S. M.A.C. F.D.M.S.B.M.S. R.M.P. R.A.M.P.

**இங்கிலாந்து**

ஈழத்தின் வட மாகாணத்திலுள்ள வட்டுக்கோட்டை என்னும் கிராமத்திற்கு புகழ் சேர்த்தவர்கள் வரிசையில் பல பட்டங்களைப் பெற்றவர்தான் அமரர் க. மயில்வாகனனார் அவர்கள். அவர் சைவத்திற்கும், தமிழுக்கும் பணி செய்தவர். அதாவது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்தவர்.

சங்ககால இலக்கண, இலக்கியங்கள் காலத்தால் அழிந்துப் போகாது பாதுகாத்துப்பண்டிதர்களை உருவாக்கி அவர்களுக்கெல்லாம், தலைமைப் பண்டிதராகவும், பெரும் விரிவுரையாளராகவும், எழுத்தாளராகவும், கவிஞராகவும் செந்தமிழ்ச்சொல் பேச்சாளராகவும் விளங்கியவர். அகில இலங்கை ரீதியாகப் புகழ் பரப்பி ஈடில்லாப்புகழைப் பெற்றவர்.

இவ்வளவு தகுதி வாய்ந்தவருக்கு, அகில உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்ற பிரான்சின் தலைநகராம் பாரீசில் நூற்றாண்டு விழா நடைபெறுவது சாலவும் சிறந்தது. அத்துடன் பாரீஸ் சிறீ மாணிக்க விநாயகர் ஆலயத்தின் மீது அவர் இயற்றிய ( 1995ஆம் ஆண்டில்) ஊஞ்சல் பதிகம் 23 வருடமாகப் பாடப்பட்டு வரும் பூமியில் நடைபெறுவது மேலும் சிறப்புத் தருகிறது.

> ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்
>
> பொன்றாது நிற்பதொன் றில். (திருக்குறள்)

நூற்றாண்டு விழா இனிதே நிகழவும், இப்பணியில் எல்லாவற்றிலும் பணியாற்றியவர்களும் எல்லாச் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

## நினைவுக்குள்ளே தங்கிவிட்ட பண்டிதர் பற்றிச் சில குறிப்புகள்

தேவா ஹெரால்ட் - ஜெர்மனி

பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள், நீர்கொழும்பில், நாம் படித்த விவேகானந்த வித்தியாலயத்தின் முதலாவது தலைமை ஆசிரியராக கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டவர். எம் ஆரம்ப பள்ளிவாழ்வும் அவரோடு சம்பந்தப்பட்டது. நமக்கு அந்தநாள் ஞாபகங்களை அழைத்துவர அவரின் இந்தநூற்றாண்டுவிழா ஒரு அருமையான சந்தர்ப்பம் தருகிறது. அவருடன் கழிந்த எம் இளமைவாழ்வின் ஒருபகுதியை மீள்நினைவில் நோக்கவும் முடிகிறது.

ஐம்பதுகளின் இறுதியிலே நீர்கொழும்பில் புதிதாக தமிழ் சைவபிள்ளைகளுக்கென்று ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. விவேகானந்தா வித்தியாலயம் என்ற பெயரில் உருவான பாடசாலைக்கு முதல்தலைமை ஆசிரியராக வந்துசேர்ந்தவர் பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள். அவர் வட்டுக்கோட்டையில் பிறந்து, ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப்பயிற்சி பெற்றவர். பின்னாளில் தனித்த முயற்சியால் தமிழ்ப்பண்டிதர்பரீட்சையில் சித்தியடைந்தார். தமிழ் இலக்கணத்தில் அவருக்கிருந்த ஆற்றலும் பற்றும் அளவிடற்கரியது. மேடைப்பேச்சின்போது இவரிடம் தமிழ் நிமிர்ந்து நிற்கும். விழாக்களின்போது, அவரின் உயரத்துக்கு அளவாகவே ஒலிவாங்கி அமைக்கப்பட்டிருந்தாலும், பேசும்போது, அவர் முன்பாதங்கள் உயர்ந்து எழும்பும், பணியும். தமிழ் மொழியை உயர்த்தி, பாராட்டி, போற்றுதற்கு அவர்

உடலும் சேர்ந்து புளகாங்கிதம் அடைந்ததை நாம் அவருடைய உணர்வுபூர்வமான உரையிலிருந்து புரிந்துகொண்டோம்.

தமிழ்பெற்றோர்களும், வித்தியாலய ஆசிரியர்களுமாய் தமிழுக்காக, சைவத்துக்காக பாடசாலை மாணவர்களைத் தயாரப்படுத்திக்கொண்டிருந்த எமது இளமைக்காலத்தின் பகுதிகள் அவை. நீர்கொழும்பிலே கிறிஸ்த்துவத்தின் வேர்கள் ஆழப்புதைந்திருந்த அந்தக்காலத்திலே புதிதாக யாழ் பகுதியிலிருந்து பொருள்தேடியும், தேடிய பொருளை பெருப்பிக்கவும் வந்துசேர்ந்தவர்களும், வேலைதேடி வந்தவர்களும், வேலைக்காக கொண்டுவந்து சேர்க்கப்பட்டவர்களும் என பலதரப்பட்டவர்கள் வாழ்ந்தார்கள்.

மேலும் இங்கு ஏற்கனவே வாழ்ந்த தமிழர்களால் உயிர்ப்பிக்கமுடியாமல்போன ஒரு தமிழ்ப்பள்ளிக்கூடத்தை வடக்கிலிருந்து இங்கு புலம் பெயரந்தோரில் சிலர் ஆரம்பித்துவைத்தார்கள். பாடசாலைக்கு முன்னாலிருந்த பிள்ளையார் கோவிலை பெருப்பித்தார்கள். அதற்கு அவர்களிடம் அரசியல் செல்வாக்கு இருந்ததும் ஒரு காரணம். வடபகுதியிலிருந்து வந்து வித்தியாலயத்தில் படிப்பித்த ஏனைய ஆசிரியர்களுக்கு, பண்டிதர் மயில்வாகனன் அவர்களின் தலைமைத்துவம் அவருடைய தமிழ்ப்புலமையை வைத்து மதிப்புத் தரச்செய்திருந்தது.

பாடசாலை ஆரம்பிக்கும் முன்பாக எல்லா மாணவர்களும் பாடசாலை முன்றலில் அணிவகுத்து நின்று, தேவாரம் பாடியபின் வகுப்புகளுக்குச் செல்லவேண்டும் என்றும், பாடசாலை முடிந்ததும் எல்லா வகுப்பு மாணவர்களும் எழுந்து நின்று தேவாரமும் நமச்சிவாய வாழ்கவும் பாடிய பின்னரே கலையவேண்டும் என்றும் தன்சைவக்கொள்கையை வித்தியாலயத்திலே நிலைநிறுத்தியவர் பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலையின் முதற்பாடம் பாடசாலைக்கு முன்பாகவிருக்கும் பிள்ளையார்கோவிலுக்கு பாடசாலை மாணவர்கள் அனைவரும் போய் அணிவகுத்துத் தேவாரம் பாடியபடி மூன்றுமுறை கோவிலை வலம்வரவேண்டும். முடிவில் பண்டிதர் சைவம்பற்றி சிறப்புச் செற்பொழிவாற்றுவார்.

மாலை நேரங்களில் சைவசித்தாந்தம் தொடர்பான விளக்கங்களை என் தந்தையாரோடு பேசிக்கொண்டிருப்பார். அப்பாவின் கடைக்கு முன்னால் அவருடைய சைக்கிள் நிற்கும். நின்றுகொண்டே உரையாடல் மணிக்கணக்கில் தொடர்ந்திருக்கும். வியாபாரமும் அதுபாட்டுக்கு நடந்துகொண்டிருக்கும். அப்பாவுக்கென்று ஒரு சிறந்த நண்பராக பண்டிதர் மயில்வாகனனார் இருந்தார்.

பாடசாலை பகல் ஒன்றரைமணியோடு முடிந்துவிடும். குடும்பம் ஊரிலே இருக்கும். (இப்படித்தான் அன்றைய வடக்கிலிந்து தெற்கு-மேற்குக்கு மாற்றமாகி வந்த அரசு ஊழியர்கள் ஊரில் ஒரு காலும், வேலை பார்த்த ஊர்களில் இன்னொரு காலுமாய் வாழ்ந்தார்கள்.) அன்றாட சாப்பாட்டு விவகாரம் முடிந்தபின், இந்தத் தொழில் பிரம்மச்சாரிகள் மறுநாளைக்குரிய சமையலுக்கான தேவைகளை நிறைவேற்றியபின்னர், மீதிப்பொழுதைப் போக்க நண்பர்களிடம் வருவார்கள். அப்பாவும், பண்டிதர் மயில்வாகனனார் அவர்களும் நெருக்கமாவதற்கு பல ஒற்றுமையான விடயங்கள் வாய்த்திருந்தன. இவர்களுடைய நட்பு, எங்கள் குடும்பத்தின் ஆண்பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு ஆதாரமாய், பெரிய இலட்சியங்களை நோக்கிய கனவாய் அமைந்தது.

இது இவ்விதமிருக்க, வெள்ளைவேட்டியும், ஆபாரமுமாக (அன்றைய இலங்கை ஆண் ஆசிரியர்களின் தேசிய உடை எனவும் கொள்ளலாம். பழைய புகைப்படங்களில்தான் இந்தமாதிரி உடையுடன் காணலாம்!) பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் சைக்கிளில்தான் பாடசாலைக்கு வருவார். மீளுவார். அவர் வீட்டுக்குப் போக நேர்ந்தால், முதலிலே அவர் வீட்டின் எந்த மூலையில் இருக்கிறார் என்பதை அவர் பாடும் திருவாசகம், தேவார, வெண்பாப்பாடல்கள் முன்னறிவித்தல் தந்துவிடும். இலக்கணச்சுத்தமாகச் செய்யுள், வெண்பாக்களில் சீரடி, மறுசீரடி போன்ற வகையறாக்கள் அமைந்திருக்கவேண்டிய அவசியத்தையும் அவர் எமக்கு கற்பித்தார். எம் மூளைகளுக்குள் அவை இன்றுவரை விடுகதைளாகவே வாழ்கின்றன.

மத்தியான வேளைகளில் சிலவகுப்புகள் வித்தியாலய முன்றலில் நடைபெறும். மாணவர்கள் ஆசிரியரை

மையமாகக் கொண்டு நின்றபடி புத்தகத்தைக் கையில் ஏந்தியபடி வகுப்புகள் நடைபெறும். பண்டிதர் இப்படியான வகுப்புகளை ஒரு சுற்றாகச் சுழன்று வந்து கண்காணிப்பார். யாருக்குமே தெரியாது அவர் எமக்கு பின்னால் நின்று எம்மைக் கவனிப்பது. அவர் யாராவது ஒரு குறும்புமாணவருக்கு பின்னால் நிற்பார். அவர் குட்டையாயிருந்தது ஒரு இலாபம். குறும்பு செய்த மாணவனைப் பின்னால் நின்று காதுகளை அழுத்திப் பிடித்தபடி தூக்கிப் பின் கீழே வைப்பது அவரின் அன்றைய தண்டனைமுறை.

பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் தனக்கு முரண்பட்ட சிந்தனை-செயற்பாடு கொண்டிருந்தவர்களோடும், இயைந்து போனார். அதற்கு பலமான காரணிகள் இருந்தன. அவருடைய காலத்திலே இந்தப்போக்கு பலரிடமும் இயல்பாகவே தெரிந்தது. மேலும் யாவரையும் அணைத்துப் போவது பாடசாலை வளர்ச்சிக்கு முக்கியம் என்பது அவர் கருத்து. தனக்குக் கீழே பணியாற்றியவர்கள், சில பெற்றோர்களின் ஒத்துழையாமை மற்றும் அன்றையஅரசியல் கொந்தளிப்புகள் ஆரம்பமாகியதும் அவருக்கு பெரும் கவலை தந்தமையும் உண்டு. ஓய்வூதியக்காலம்வரை பண்டிதர் மயில்வாகனனார் அவர்களின் பணி வித்தியாலயத்துக்கு கிடைத்தது ஒரு பேறேயாகும்.

எமக்காக அவர் அளித்த பங்கு மதிப்புக்குரியது. தமிழ்க்கல்வியை நம்முள் திளைக்கச் செய்த அவரின் முயற்சியை பாராட்டவேண்டும். தமிழ்மொழி உலகிலேயே உயர்ந்த- சிறந்தமொழி என வெற்றுக்கூப்பாட்டை விடுத்து, தாய்மொழியை சரிவர மாணவர்களுக்கு பயிற்றுவிக்கவேண்டும் என்பது அவருடைய பெரும் ஆவல். நமக்குள் எமது மொழிக்கான ஆர்வத்தை விதைத்த பெரும் ஆசான் அவர்.

பண்டிதர் மயில்வாகனன் அவர்களின் நூற்றாண்டு விழாவிலே அவரை நினைவுகூர்வதற்கு எமது வித்தியாலய பழைய மாணவர்கள் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## தமிழையும் சைவத்தையும் தனது உயிரினும் மேலாக மதித்த பெருந்தகை

**அமரர்கள் தாமோதரம்பிள்ளை தம்பதியினரின் பிள்ளைகள்**

தமிழையும் சைவத்தையும் தனது உயிரினும் மேலாக மதித்த பெரும் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அமரர் பண்டிதர் மயில்வாகனனாரின் நூறாவது பிறந்த நாளை ஒட்டி அன்னாரை நினைவு கூர்ந்து பெருவிழா எடுக்கும் ஏற்பாட்டாளர் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிதா மாமா ! ,வ்வாறுதான் நாம் அவரை அழைப்போம். எமக்கு நினைவு அறிந்த காலம் தொட்டு எம்மோடு பண்போடும் பாசத்தோடும் பழகிய ஒரு நல்ல அன்புள்ளம் கொண்ட மனிதர். எமது தந்தைக்கு அவர் மைத்துனர் முறை ஆனாலும் எமது தந்தைக்கு ஒரு நல்ல நண்பர். எமது தந்தையார் எமது வீட்டில் எந்தவொரு காரியமென்றாலும் அவரைஆலோசித்துத்தான் செய்வார். அவரின் நட்பின் பிணைப்பாலும் அவர் எமது வீட்டில் பெண் எடுத்து அந்த உறவு முறையை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்.

அமரர் தாமோதரம்பிள்ளை அவர்களின் மூத்த மகனான எனக்கு அவர் ஆசிரியராகக் கடமையாற்றும் காலங்களில் பெரும்பரீட்சயம் ,ல்லையென்றாலும், அவர் ஓய்வு பெற்ற பின்னர் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் கொழும்பு வரும் காலங்களில் எம்முடன் தங்கியிருப்பார். நான் யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவன். அவர் தானும் ஆரம்பத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்றதாகவும் அந்த நேரங்களில் மொழி சமயம் மாறுபவர்களுக்கு நிறைய சலுகைகள்

கொடுத்ததாகவும் அந்த அற்ப சொற்ப சலுகைகளுக்கு மனதைப் பறிகொடுக்காமல் அந்தக்கல்லூரியை விட்டு விலகித் தமிழ் மீதும் சைவத்தின் மீதும் வைத்த பற்றின் காரணமாக அவை ,ரண்டையும் தனது பிரதான பாடமாக எடுத்துப் படித்து புலமை பெற்றது மட்டுமல்லாமல் அவை ,ரண்டையும் தனது வருங்கால சந்ததியினருக்குப் புகட்டியதாகவும் கூறினார். தமிழ் சைவம் ,வை ,ரண்டையும் வளர்க்க வேணடும் அந்தவொரு காரணத்தினால்தான் ஆரம்ப காலங்களில் மலையகத்திலும் 1950 களில் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்திற்கும் தான் தமிழ் படிப்பிப்பதற்காக அங்கு சென்றதாகவும் சில காலங்கள் தமிழ் பயிற்றுவித்ததாகவும் அதன்பின் நீர்கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தின் முதலாவது தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்று அந்த வித்தியாலயத்தின் தரத்தினை உயர்த்தியதாகவும் கூறினார். கூறினது மட்டுமல்லாமல் அவர் பிற்பாடு நீர்கொழும்பு செல்லும்போது என்னையும் கூட்டிச்சென்று அவருடைய பழைய சினேகிதர்களுக்கு அறிமுகப்படுத்திவைப்பார். அவர் கொழும்பு வரும் காலங்களில் வட்டுக்கோட்டை நாட்டுக் கூத்தைப்பற்றியும் அது உருவான கதை பற்றியும் நாட்டுக் கூத்து வட்டுக்கோட்டை மக்களிடம் பெரு வரவேற்பு பெற்றதையும் சொல்லுவார்.
எமது தந்தையார் காலமாகிய போது எம்மை விட கலங்கிப்போய் நின்றவர் அவர்தான். எமது தந்தையார் ,றந்த பின்பும் எமது குடும்பத்திற்கு தேவையான அனைத்தையும் தந்தையின் இடத்தில் இருந்து செய்து கொடுத்தார் என்றால் அது மிகையாகாது.

## பசுமை நினைவு நிழலாடுகின்றது

**சைவப்புலவர் பண்டிதர் மா. கணநாதன் (வட்டுமேற்கு- வட்டுக்கோட்டை)**

செந்தமிழின் இனிமையும் சைவத்தின் தொன்மையும் கலையின் பொக்கிஷமும் நிறைந்த பதி வட்டூர் என்றால் மிகையாகாது. இங்கு வாழும் மக்களின் இரு கண்களாகத் திகழ்வது தமிழும் சைவமும் ஆகும். கலைகள் அறுபத்து நான்காக வகுக்கப்பட்டுள்ளன. இக் கலைகளில் இலக்கியம், ஓவியம் , இசை, நாடகம் என்பன நுண்கலை வடிவங்களாகக் காணப்படுகின்றன. இக்கலைகள் நிறைந்து, மலிந்து, புகழ் கொள்வதும் இங்கே ஆகும்.

“இலக்கணக் கவிஞர் சொல் இன்பம் தேடுவீர்” என்ற ஒளவையின் பொன்மொழிப்படியே இலக்கணத்தைக் கற்றுணர்ந்தோரும், இப்பகுதிக்கு மேலும் அணி செய்தனர். பழகு தமிழ்ச்சொல்லின் இனிமையை உணர்ந்தோர் பலர் இருந்தனர். இப்படி கல்வி ஞானம் கரை கண்டவர் வரிசையில் பண்டிதர் என்ற பெருமைக்கு உரியவர் புலவர்மணி, நாற்கவிராசன் க. மயில்வாகனனார் ஆவார். மரபுவழித் தமிழைக் காத்த பாரம்பரியத்தின் வாரிசாக விளங்கியவரும் இவரே.

யாழ். வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நாங்கள் கற்ற காலத்தில் அதிபராக இருந்தார். அவ்வேளையில் எங்கள் தமிழ் ஆசிரியராகவும் கல்வி கற்பித்தார். விஞ்ஞானமும் கற்பித்துள்ளார்.

“மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்

உலைவி லுணர்வுடையார்”

என்ற தொல்காப்பியம் தரும் ஆசிரிய இலக்கணத்துக்கும்,

குலனரு டெய்வங் கொள்கை மேன்மை

கலைபயி றெளிவு கட்டுரை வன்மை

நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்

உலகிய லறிவோ டுயர்குண மினையவும்

அமைபவ னூலுரை யாசிரி யன்னே.

என்னும் நன்னூல் இலக்கணத்திற்கும், இலட்சணமாகப் பண்டிதர் ஐயா திகழ்ந்தார். கல்வி கற்பிக்கும் முறை ஏற்ற விளக்கம் கொண்டு கற்பித்தலின் முதன்மையானவராகச் செயற்பட்டார்.தமக்குக் கிடைத்த நன்மாணாக்கரை மேம்பாடடைய வைத்தார்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்

தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்

எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்

மம்மர் அறுக்கும் மருந்து.

என்னும் நாலடியாரின் கருத்து உடன்பாடாக வட்டூரில் பல மாணவர்களை சிற்பிகளாக்கிய பெருமை பண்டிதர் ஐயாவுக்கு உரியது. கற்பிக்கும் போது ஐயந் திரிபற பலதரம் விடயங்களைக் கூறுவார். பாடல்களை தெளிவாகக் கரும்பலகையில் எழுதி, சந்தி பிரித்துக் காட்டுவார். கல்வியைப் பற்றிக் குறிப்பிட வந்த வள்ளுவர் பத்துக் குறளில் கூறி அடங்காமை கண்டார். இதனால் கல்வி, கல்லாமை, கேள்வி என்ற அதிகாரங்களையும் படைத்தார். இவற்றைவிட அறிவுடைமை, சொல்வன்மை, அவையஞ்சாமை எனக் கல்வியுடன் தொடர்பான அதிகாரங்களையும் தந்தார். இதனைப் போலவே பண்டிதர் ஐயாவும் அரசினர் பாடப்புத்தகங்கள் கிடைத்த போதும், கு.வி. அச்சகம் மூலம் பல புத்தகங்களைத் தந்தார். கற்பிக்கும் காலத்தில் மாலை நேர வகுப்புக்களை இலவசமாக நடத்திக் கல்வியை இறை பணியாக அர்ப்பணித்த பெருமகனும் இவரே.

அறிவை வளர்த்திட வேண்டும் – மக்கள்

அத்தனை பேருக்கும் ஒன்றாய்

சிறியரை மேம்படச் செய்தால் – பின்பு

தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்

வயிற்றுக்கு சோறிட வேண்டும் – இங்கு

வாழும் மனிதருக் கெல்லாம்

பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்

பாரை உயர்த்திட வேண்டும்

என்ற பாரதியின் எண்ணக் கருவிற்கு உருவம் அமைத்தவர் பண்டிதர். ஒவ்வொரு நாளும் பாடசாலை ஆரம்பமாகிக் காலையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். இதன்பின்பு எமது அதிபர் பண்டிதர் ஐயாவின் நற்சிந்தனை நிகழும். நல்ல அறக் கருத்துக்களைக் கூறுவார். அதிமதுர அற்புத சுவை நிரம்பிய பைந்தமிழைக் கேட்கும் ஆவலில் நாம் இருப்போம். செவிக்கு விருந்தாக அவர் தந்த தீஞ்சுவை இன்று எம்மை மேடையில் சொற்பெருக்காற்ற வைத்தது என்றால் மிகையாகாது.

வாக்கி னைக்கடந் தோங்கிமற் றெங்கணும்

நீக்கமின்றி நிறைந்த அறிவினை

ஊக்க முற்றுணர் தற்கிட னாதலின்

ஆக்கை யுங்குரு வாயது அரசனே.

இத்தேகம் முக்தியடைய இறைவனை ஊக்கத்துடன் உணரவேண்டும். இத் தேகம் அப்படி இடனாயிருத்தலால் இதுவும் குருவுக்கு ஈடானது ஆகின்றது. எனவே பண்டிதர் ஐயா படைத்த மாணவர்களின் தேகமும் அவருக்கே ஈடானது ஆகின்றது.

புலவர்மணி அவர்கள் அதிபராக இருந்த காலத்தில் பாடசாலையில் குருபூசைகள் இடம்பெற்றன. அப்போது மாணவர்களைப் பேச வைப்பார். இதனால் சமயப்பற்றும், தமிழ்மொழிப் பேச்சும் வளர்ந்தது. மாதந்தோறும் மாணவர் மன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும். பெற்றோர் மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் உறவு வளர்ந்தது. இன்றோ, ஆசிரியர் ஒரு பக்கம், மாணவர் ஒரு பக்கம், பெற்றோர் ஒரு பக்கம் என நிலைமை மாறிவிட்டது. பண்டிதர் ஐயா போன்றோர் வந்தால் மீண்டும் நன்மை ஏற்படும். பெற்றோர் ஆசிரியர் தினவிழா அன்பின் இனிய ஆசிரியர் ச. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. பண்டிதர் ஐயா தலைவராக இருந்தார். நேரம் தவறாது தொடங்கி குறித்த நேரத்தில் முடிவு பெற்றது. காலம் பொன்னானது என்பதைச் செயலில் காட்டினார்.

அவ்வேளையில் சிவவேடனும் தவவேடனும் என்னும் நாட்டுக்கூத்தை ( ஏழு நிமிடம்) மேடையேற்றி மாவட்ட ரீதியிலும் முதலிடம் பெற வைத்தார். அப்போது எமது சக மாணவர்கள் சந்தம் நிறைந்த அப்பாடல்களைப் பாடுவார்கள். இதில் நான் சிவவேடனாக நடித்தேன். தந்தையார் பெரும்புலவர் முருகவேள் ஐயா பயிற்றுவிப்பதில் ஒத்துழைப்பு நல்கினார்.

கண்ணப்பன் என்னும் வேடன் அவன் இறைச்சிகளும் தருவான்

காதலுடன் திண்டுருசி கண்டிருப்போம் ஐயே

என்று பாடி துள்ளி ஆடும் பண்டிதர் ஐயாவின் ஆட்டம் பசுமரத்தாணியாக நிழலாடுகின்றது.வாழ்க்கை என்பது ஒருகலை, அதில் தேறுவது கடமை. வாழத்தெரிந்தவர்களாக இருப்பதுதான் உலகத்தவர்க்கு நாம் செய்யக் கூடிய பெரிய தொண்டு என்ற மு. வரதராசனாரின் வரிகளுக்கு பண்டிதர் ஐயா வாரிசானார்.

பண்டிதர் ஐயாவும் பெரும்புலவர் முருகவேள் ஐயாவும் கொண்ட நட்பு அளப்பரியது. பிசிரோன் என்பான் உயிர் ஓம்புநனே எனப்பகிரும் பிசிராந்தையார் - கோப்பெருஞ்சோழன் நட்பும், கண்ணன் - குசேலன் கொண்ட நட்பும், பாரி ஒருவனும் அல்லன் மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே என்னும் பாரி - கபிலர் நட்பும் என்னும் அளவிற்கு இருவர் நட்பும் இதயத்தைத் தொடுகின்றது. இருவரும் அண்ணன் தம்பியாக இலக்கணச் சொல்லோந்தி இலக்கிய மணம் வீசி துவிச்சக்கர வண்டியில் வருவது இப்போதும் நினைக்க இனிக்கிறது.

“நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்

பண்புடை யாளர் தொடர்பு”

என்கிறது வள்ளுவம். நூலைக் கற்று அதன்வழி தொடர்புபட்ட இருவருடைய நட்புறவும் மேலும் இறுகிப் பற்றியது. படிக்கப் படிக்கக் கிடைக்கும் நயத்தில் உள்ளம் உருகி இதுவரை இதனை அறியாது விட்டோமே என இரக்கம் கொண்டனர். இதன் மூலம் பிராட்டி வளவு ஞானவைரவர் பழைய அந்தாதிக்கு பண்டிதர் ஐயா மூலம் உரை கண்டு நண்பர் முருகவேள் பெருமை கொண்டார். முருகவேள் அவர்களுடன் நாட்டுக்கூத்தை நடத்துவதில் புலவர் மணி முன்னின்று செயற்பட்டார்.

நட்பிற் குறுப்புக் கெழு தகைமை மற்றதற்கு

உப்பாதல் சான்றோர் கடன்.

எனப்பகரும் பொய்யாமொழியின் வாக்கு பொய்யாகா வண்ணம் இரு சான்றோரும் இயைந்தார்கள்.

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய

மாமலை பயந்த காமரு மணியும்

இடைபடச் சேய ஆயினும் தொடைபுணர்ந்து

அருவிலை நன்கலம் அமைக்கும் காலை

ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்

சான்றோர் பாலர் ஆப

சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

என்கிறது புறநானூறு.

இரு சூரியர்களும் ஒருநாள் கூட சந்திக்காது இருந்ததில்லை. கற்றாரை கற்றாரே காமுறுவர் என்றவாறு நட்புரிமையோடு கன்னித்தமிழ் வளர்த்தார்கள்.

அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும் கேடும்

உடங்குடம்பு கொண்டார்க் குறலால் – தொடங்கிப்

பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை

உறப்புணர்க அம்மாஎன் நெஞ்சு.

என்பதால் இரு சந்திரர்களும் ஞானியரை நாடினார்கள். புராணபடனம் ஆற்றும் பணியினை ஆற்றினார்கள். இறைப்பணியிலும் இருவரதும் மாசற்ற நட்பு உணர்ச்சி யொப்பின் உயர்வு கொண்டது. புலவர் மணி அவர்கள் புராணபடனம் செய்யும் மரபை ஊக்குவித்தார்கள். தம் பணி பின்வரும் சந்ததியினர் செய்ய வழி செய்தார். வட்டுர் முருகையா ஆலயத்தில் நான் பயன் கூறிக் கொண்டிருந்தேன். நீண்ட நேரமாக வீற்றிருந்தார் பண்டிதர் ஐயா.

மாசறு மறைகளின் மறையதனை

மலைமுனி யுணர்வகை யருள்புரியந்

என்ற பாடலுக்குரை கூறியது போது, பொதிகை மலை வாசரான அகத்திய முனிவருக்கு முருகவேற் பெருமான் வேதங்களை உணர்த்தினார் என்றேன். பயன் முடிந்து நேராகப் பண்டிதர் ஐயாவிடம் சென்று அவர் பாதங்களை வணங்கினேன். உன்னைப்பற்றி முருகவேளுக்கு எப்பவோ சொன்னேன். கூறியது உண்மையாயிற்று தம்பி. அகத்திய முனிவரை வட கடலையும் தென் கடலையும் உண்ட அகத்திய முனிவரெனக் கூறினால் சிறப்பாக அமையுமெனத் தட்டிக் கொடுத்தார்.

“இலட்சியவாதி மெதுவாகச் செல்கின்றான்

ஆனால், அவன் தான் செல்ல வேண்டிய இடத்தை

நிச்சயம் அடைவான்”

என்கிறது சீனப் பழமொழி.

மெல்லெனப் பாயும் தண்ணீர்

கல்லையும் உருவிப் பாயும்

கல்லை உருவும் தண்ணீர் கலையையும் உருவும்

என அசையாத நம்பிக்கை கொண்டு தமிழ் வளர்த்த பண்டிதர் க. மயில்வாகனனார் புகழ் வாழ்க.

# மங்காப் புகழ்மணி பண்டிதர் ஐயா

**முன்னாள் மாணவன் ராஜா தங்கவேல்.**

நாம் பிறந்த மண்ணாகிய வட்டுரிற்கே பெருமை சேர்த்தவர் பண்டிதர்ஐயா க.மயில்வாகனனார் அவர்கள். 1970 களின் ஆரம்பம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நாம் கல்விகற்ற காலமது. பண்டிதர் ஐயாவே தமிழ்ப்பாடத்தை நடத்துவார். அப்போது அவரின் தமிழ் உச்சரிப்பும், வசனநடைகளும் தமிழ்மொழிமேல் எமக்கு ஒருதனிப்பற்றை உருவாக்கியது. நன்கு கற்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. தமிழுக்கேயுரிய சிறப்பு ழகரம் அவரது நாவில் தவழும் அழகே தனி அழகுதான்.

பண்டிதர் ஐயா கலையார்வம் மிக்கவர். நாடகங்கள், நாட்டுக்கூத்துக்களை எழுதி மேடையேற்றியவர். பாரம்பரியக் கலைகளை இளைய சந்ததியினரிடம் ஊட்டவேண்டும் என்பதனைச் செயல்படுத்தி வெற்றியும் கண்டவர். எமது ஊரின் பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்தைத் தானே முழுமூச்சாகநின்று ஆட்ட வல்லுனர்களைக்கொண்டு எமக்குப் (சக மாணவர்கள் க.தருமகுலராசா, மா.கணநாதன் ) பயிற்றுவித்தார்.

பண்டிதர் ஐயா தனது நேரடி மேற்பார்வையில், எம்மூரின் பிரபல நாட்டுக்கூத்துக் கலைஞரான கலாபூசணம் அருச்சுனன் அவர்களைக்கொண்டு பல இரவுகளாகப் பயிற்றுவித்தார். அதனை வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற போட்டியில் அரங்கேற்றினார். போட்டியில் முதலாவது பரிசையும் பெற்றுக் கொடுத்து எமது திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திற்கும், மாணவர்களான எமக்கும், எம்மூர்க்கலைஞர்களுக்கும் பெருமை சேர்த்தவராவார். அப்படி எங்களுக்கு வழிகாட்டியாக இருந்து எமது ஊரிற்கும், தமிழ்கூறும் நல்உலகிற்கும் பெருமைசேர்த்த மங்காப் புகழ்மணி பண்டிதர் ஐயாவிற்கு எடுக்கும் நூற்றாண்டுவிழா சிறப்பாக நடைபெற வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

# தமிழுக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும், பெரும்பணியாற்றிய எங்கள் அதிபர்

**முன்னாள் மாணவன் ச. சிவானந்தம் -இலண்டன்**

பண்டிதமணி மயில்வகனனார் அவர்களிடம் அறிவும், நல் ஒழுக்கமும் கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களில் நானும் ஒருவன். அவருடைய மாணவர்கள் பலர் மிகச்சிறந்த அறிவாளிகளாகவும், தமிழ்ப் புலவர்களாகவும், பண்டிதர்களாகவும் மிக உயர்ந்த பதவிகளிலும் உள்ளனர்.

பண்டிதமணி ஐயா மயில்வகனனார் அவர்களின் தமிழ்த் தொண்டைப் பற்றிக் கூற எமக்கு அறிவு போதாது. நான் சிறிய வகுப்பு மாணவனாக இருந்தமையால் அதிபரிடம் அதிகம் நெருங்க முடியவில்லை. என்றாலும் அவர் என்போன்றவர்களுக்கு இளமையில் ஊட்டிய தமிழ் சிலையில் பதிந்ததுபோல் அடிநெஞ்சில் ஊறியதால் மொழியுணர்வு எங்கள் மூச்சோடு கலந்துவிட்டது.

அவரது அன்பும் அதேவேளை கண்டிப்பும் மறக்க முடியாதவை. அவர் மேல் நாம் வைத்த அன்பும் மதிப்பும் அளவிடமுடியாதவை. அவரின் சமயப் பணி மிகச் சிறந்தது. எமது நாடெங்கிலுமுள்ள பல கோவில்களிற்கும் பாடல்கள் இயற்றிக் கொடுத்துள்ளார். சின்னக்கதிர்காமத்தில் கந்தசஷ்டிக் காலத்தில் அவர் பாடல்களிற்குப் பயன் கூறும் அழகைக்காண கண் கோடி வேண்டும். எனது பார்வையில் அவருடைய சமுதாயப் பணியானது திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துடன் பின்னிப்பிணைந்தது.

தனித்தனியாக இருந்த பாடசாலையின் நடு வளவை வாங்கி ஒன்றாக இணைத்துப் பெரிதாக்கினார். அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் மூலமாகப் பாடசாலைக்குக் கட்டிட நிதியினைப் பெற்றுக்கொண்டார். இன்னொரு அதிபராயிருந்தால் கிடைக்கப்பெற்ற நிதியில் அதற்கான கட்டடத்தை கட்டி விட்டுப் போயிருப்பார்கள். ஆனால், எமது அதிபரின் சிந்தனைகள் விசாலமானவை, விரிந்தவை. அவர் அந்த நிதியை வைத்து ஊர் மக்களின், மாணவர்களின் உதவியுடன், பெரும்பாலான வேலைகளைச் சிரமதான அடிப்படையில் முன்னெடுத்து மிகப் பெரிய கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார்.

இன்னும் வித்தியாலயமாக இருந்த பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயரச் செய்து, பொதுப்பணி விரும்பும் நல்லாசிரியர்களின் துணையோடு மாணவர்களுக்கு இலவசமாகப் பிரத்தியேக வகுப்புக்களை பிற்பகலிலும், விடுமுறை நாட்களிலும் நடத்தி, அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்களுக்கு உயர்கல்வி கற்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தவர். தமிழுக்கும், தமிழ்ச் சமூகத்திற்கும் இத்தனை பெரும்பணியாற்றிய பெருமைக்குரிய பண்டிதமணியின் நூற்றாண்டு விழாவிற்கு அவருடைய மாணவர்களாகிய நாங்கள் பெருந்திரளாகப் பங்குபற்றி விழாவைச் சிறப்பிப்போம்.

வாழ்க தமிழ்மொழி! ஓங்குக பண்டிதமணியின் புகழ்!

## நான் கண்ட பண்டிதர் ஐயா

**சிவபிள்ளை சிவகுணாளன் (சிவா சிவபிள்ளை) ஒலிபரப்பாளர் இலண்டன்**

நீர்வளமும் நிலவளமும் சொற்செறிவும் பொருட்செறிவும் நல்லறிவும் நன்மக்களையும் கொண்ட சீலமிகு கிராமம் வட்டூர் ஆகும். சிவனும் சக்தியும் வலதும் இடது புறமாக அமைந்திருக்க, சுற்றிவர சுப்பிரமணியரும் பரிவார மூர்த்திகளும் ஆலயங்களாக அலங்கரிக்க, எமது ஊரின் மகுடமாக அமைந்ததே திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

அங்கேதான் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி எனக்கும்தான் உலகம் அறியாத சிறுவனாகப் பாடசாலை வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்ட காலம் பாடசாலை ஆரம்பமாகும் போதும் முடியும்போதும் ஒருவர் கம்புடன் வாசல் அருகே நின்று ஒழுங்காக வருதல், தூய ஆடை அணிதல், ஒழுங்காக தலை சீவுதல் என திருவள்ளுவர் வழியில் ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் எனத் தலைமைப் பண்புடன் எமது பாடசாலை அதிபராக விளங்கிய அவர் உடலால் உயர்ந்தவரல்ல. எனினும், உயரம் குறைந்தவருமல்ல ஆனால், சமூகத்தில் என் உள்ளத்தில் உயர்ந்த மனிதராகத் திகழ்ந்தார்.

அவருடைய முகமும், உருவமும் என் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல பதிந்து விட்டது. எமது பாடசாலையின் தாரக மந்திரம் போல் என் பணி செய்து கிடப்பதே எனத்தன் பணியாற்றிய தயாள சிந்தனையாளராக விளங்கினார். காலங்கள் கரைந்து ஓட அவரும் ஒய்வு பெற்று விட்டார்.

அவர் பாடசாலையில் ஒய்வு பெற்றாலும் அவருடைய தமிழ் சமூக, சமயப் பணிகள் தொடர்ந்தன. அந்த மாபெரும் மனிதர்தான் பண்டிதர்.க.மயில்வாகனனார் அவர்கள். ஐயாவை அடிக்கடி சின்னக்கதிர்காமம் ஆலயத்தில் காண்பேன். அவர் புராணபடன சபையின் தாபகராகவும் தலைவராகவும் திகழ்ந்தார். புராணபடன சபையில் பண்டிதர் ஐயா வழியில் மறைந்த அதிபர் அ.முருகவேள் மற்றும் கவிஞர் நா.புலோகசுந்தரம் ஆகியோர் இணைபிரியாதவர்களாக வலம் வந்தார்கள்.

இதனால்தான் ஊரில் சுவையான பேச்சுத் தமிழில் முருகவேலுடன் மயில்வாகனத்தார் பூலோகம் சுற்றுகின்றார் எனப் பொருள்படச்சொல்வார்கள். சின்னக்கதிர்காம திருவிழா காலத்தில் பண்டிதர் தலைமையில் உரை மாலை இடம்பெறும். புரணபடன சபையினரால் அடியார்களின் அறியாமை நீக்கப்பட்டு, அறிவொளி ஏற்படும் அளவிற்கு மேற்கோள்கள் உதாரணங்காட்டப்பட்டு உரைகள் அமையும். உரைமாலை கேட்க ஊரே திரண்டுவிடும். கந்தசஷ்டி காலம் ஊரில் ஒரு பொற்காலமாகும். ஆலய காண்டாமணி டாங்டாங் என ஒலிக்க எமது ஊர் அடியார்கள் மட்டுமல்ல, அயல் கிராம அடியார்களும் ஆலயத்தில் நிறைந்து வழிவார்கள். அங்கே புராணபடன சபையினைச் சேர்ந்தவர் கந்தபுராணம் பாட, பண்டிதர் ஐயா பயன் சொல்ல ஆரம்பித்துவிடுவார். ஆறு முகங்களையும், பன்னிரண்டு கரங்களையும் கொண்ட முருகப்பெருமான் முக்கண்ணன் சிவனின் மூன்றாவது கண்ணில் ஆறு குழந்தையாக அவதரித்துப் பயன் தொடரும். அடியார்கள் வைத்த கண் அகலாது அமைதியாகச் செவி இன்பம் பெறுவர். பண்டிதரின் தனித்துவமான தமிழும் வளமான குரலும் உச்சரிப்பும் மடை திறந்த வெள்ளம் போல் பாய்ந்து ஓடும்.

இதில் ஆச்சரியம் என்னவெனில் எந்த நூலோ அல்லது குறிப்புகளோ இல்லாது பண்டிதர் ஐயா பயன் சொல்வது கண்டு வியந்துள்ளேன். அந்தக்காலத்தில்தான் சின்னக் கதிர்காமத்தில் தொண்டர் சபையை அடியேனும் நண்பர்களும் உருவாக்கினோம். அதில் முதல் தலைவராக பணியாற்றும் வாய்ப்பு அடியேனுக்கு கிட்டியது. அப்பொழுது ஆலயத்தில் அறிவிப்பு செய்வது எனது பணியாக

இருந்து, அடியேனும் ஒலிவாங்கியின் முன்னால் கம்பீரமாக "பக்தகோடிகளே" என விளித்து அறிவிப்புச் செய்தேன்.

பண்டிதர் ஐயா என்னை விளிப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். கை,கால்கள் நடுநடுங்கியது. பண்டிதர் சொன்னார்: " இங்கு கோடிக்கணக்கான பக்தர்கள் வருவதில்லை, எனவே அடியார்களே என விளித்தால் போதுமானது" அவரது கருத்தை ஏற்றுக்கொண்டேன்.

மீண்டும் ஆலய கரும்பலகையில் எழுதும் போது பண்டிதர் ஐயா வந்துவிட்டார். படித்தார். என்னை அழைத்தார். " இது முருகன் ஆலயம். சிவனடியார்களே என எழுதக்கூடாது. முருகன் அடியார்களே அல்லது குகனேச செல்வர்களே" என எழுதலாம் என்றார். உடனே திருத்தி எழுதிவிட்டேன்.

ஒன்றை நன்றாக உணர்ந்தேன். எவ்வளவு கனகச்சிதமாக ஒவ்வொன்றையும் அவதானிக்கின்றார் என்பதை உணர்ந்து கொண்டேன். மீண்டும் ஒரு நிகழ்வு. வீதியில் வந்த சண்டை வீட்டுக்குள்ளும் வந்துவிட்டது. வாய்த் தர்க்கத்தில் ஒருவர் மறைந்த அதிபர் அ.முருகவேள், மற்றவர் கவிஞர் நா.பூலோகசுந்தரம். அது ஒரு தமிழ்மொழி வாதம். இரவு எட்டு மணி இருக்கும். கடைசியாக அந்த தமிழ் வழக்கு பண்டிதர் ஐயாவின் தீர்ப்புக்குச் சென்றது.

அடியேன் உறைந்து போனேன். பண்டிதர் ஐயா பல பாக்களையும், நூல்களையும் எழுதி இருந்தாலும், எமது சிவன்கோயில் மீது எழுதிய மும்மணிமாலை தமிழ்க் காவியமாகச் சான்றோரால் போற்றப்பட்டது. இந்த மும்மணிமாலையை எனது தந்தையார் சங்கீதபூசணம் க.சிவபிள்ளை, சங்கீதபூசணங்கள் பொன்னையா, சுகுர்தகுணசீலன் ஆகியோர் இசை அமைத்துப் பாடியுள்ளார்கள். பண்டிதர் ஐயாவின் தமிழ் எழுத்துகளும், பாடல்களும், பயன்களும் நூற்றாண்டு காலமல்ல முதல் மொழியாம் செம்மொழி தமிழ் மொழி உள்ளவரை வாழும். எமது ஊடகப்பணியிலும் ஐயா என்றும் வாழ்வார் என்பது திண்ணம் .

வாழ்க பண்டிதர் நாமம்.

## பன்முகத் தேர்ச்சிப் பெற்ற வாழ்வியல் வழிகாட்டி

தியாகராசா மோகனபாலன். முதுகலைமாணி **M.Ed**

அதிபர் யாழ்- பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை

தமிழர் தம் கலை, கலாசார விழுமியங்களைப் பேணிக் காத்து சைவமும் தமிழும் தழைத்தோங்க வழிசமைத்த வட்டூரின் மூதறிஞர் பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி கல்வியியலாளர்களும் அறிஞர்களும் ஆர்வலர்களும் தமது கருத்துக்களைக் கட்டுரைகளாக கவிதைகளாக வெளிக்கொணர்ந்துள்ளனர். அவற்றை விடுத்து பண்டிதமணி அவர்களிடமிருந்து மறைக்கலைத்திட்டத்தினூடாக வாழ்வியல் சார்ந்த விழுமியங்களைப் பெற்றுக் கொண்டவன் என்ற வகையில் அவர் தொடர்பான அனுவங்கள் சிலவற்றை பகிர்ந்து கொள்வதில் மன நிறைவடைகின்றேன்.

மொழியானது ஓர் இனத்தின் அடையாளமாகும். "எந்த ஒரு மனிதனும் தனது தாய்மொழியின் மூலம் கல்வி கற்கும்போது சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றான்" என்ற கல்வியியலாளர்களின் கருத்தியலுக்கமைய எமது தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்று சிறந்த பாண்டித்தியம் பெற்று அத்தமிழ்மொழி ஆசானாக அதிபராக ஆலோசகராக ஆய்வாளராக பல வகிபாகங்களில் மிளிர்ந்தவர் பண்டிதர் க. மயில்வாகனனார் ஆவார். இவர் இலங்கை நாட்டின் பல பாகங்களிலும் ஆசிரியராக அதிபராகக் கடமையாற்றும் போது அச்சமூகத்தவர்களது வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டவராக மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு வழிகாட்டியவராக அவர்களுடைய வாழ்வியலின் ஒவ்வொரு கட்டங்களிலும் ஆலோசனை வழங்கியவராக சமூக மாற்றத்தை ஏற்படுத்தியவராக திகழ்ந்ததை அறியக் கூடியதாக உள்ளது.

பண்டிதமணி மயில்வாகனனாரது இருப்பியமானது மனித வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொடுத்துள்ளது. இவர் தன்னுடைய வாழ்க்கைக் காலத்தில் சுதந்திரமாகச் செயற்பட்டு சமூக அங்கத்தவர்களதும், மாணவர்களதும் ஆளுமை விருத்தியில் அதிக ஆர்வம் செலுத்தி வழிகாட்டியாகத் தொழிற்பட்டுள்ளார். இதனால் மக்களதும், மாணவர்களதும் சமூகமயமாக்கலில் பெரும்பங்காளியாகத் திகழ்ந்து அவர்களின் மனங்களில் இடம்பிடித்துக் கொண்டதை இன்றும் அறியக்கூடியதாக உள்ளது.

எனது சமூகத்திலும் பண்டிதமணி அவர்களின் பணி அளப்பரியது. அதற்கு மேலாக எமது குடும்ப உறவு காரணமாக இவரிடமிருந்து நாம் முறை சார்ந்த கற்றலுக்கு அப்பால் வாழ்வியல் அனுபவ வழி நடத்தலில் பெற்ற அறிவாற்றலும் ஒழுகலாறு விழுமியங்களும் இன்றும் எம்முடன் இணைந்திருக்கின்றன. இன்பியல், துன்பியல் சார்ந்த எந்தவொரு நிகழ்விலும் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும். எமது கலை, காலாசார பண்பாட்டு விழுமியங்களை அனுசரித்து எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பவற்றை செயலில் காட்டி வழிப்படுத்திய உந்துசக்தி பண்டிதரேயாவார்.

பண்டிதர் ஐயா அவர்கள் எமக்குப் பெயர் சூட்டி ஏடு தொடக்கி கற்றலுக்கான அடித்தளம் இட்டு அகமகிழ்ந்தார். இவரால் சூட்டப்பட்ட பெயர்கள் இறைநாமங்களைக் கொண்ட தூயதமிழ்ப் பெயர்களாக இருப்பதை மறக்க முடியாது. எம்மைச் செந்தமிழில் செல்லப் பெயர் சொல்லி புன்முறுவலுடன் அழைத்து உபசரிக்கும் உவகை உன்னதமானது. உறவை மேம்படுத்தியது. இன்று நாம் யாரிடம் சென்றாலும் எம்மை அறிமுகஞ்செய்வதற்கு பண்டிதரின் பெயரைச் சொல்லி உறவு முறையை குறிப்பிட்டால் அவர்களால் கௌரவப்படுத்தப்பட்டு,மதிப்பளிக்கப்பட்டு, உபசரிக்கப்படுகின்றோம். இவ்வாறாக பண்டிதரது நாமத்தால் நாம் பெருமைப்படுத்தப்படுகின்றோம். பெருமைக் கொள்கின்றோம். மேலும் பண்டிதமணியின் பேச்சாற்றல், எழுத்தாற்றல் நிறுத்தற்குறியீடுகளுக்கு ஏற்ப, ஏற்ற இறக்கங்களுடன் எப்போதும் இரசனை உள்ளதாக, வியக்கக்கூடியதாக இருக்கும். இவரது ழகர - ளகர வேறுபாடு றகர - ரகர வேறுபாடுகளின் உச்சரிப்பும் தொனியும் கூறும் உதாரணங்களும், பேச்சாற்றலை மீள நினைவூட்டுகின்றது.

பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் வித்தகராக விளங்கியதோடு சமயம், சமஸ்கிருதம், சாஸ்திரம், அறிவியல், சமூகவியல், சுற்றாடல், வரலாறு போன்ற பல்துறைகளிலும் மிகுந்த தேர்ச்சி உடையவராகத் திகழ்ந்தார். இவர், தான் பெற்றுக்கொண்ட பாடத்துறைகள் சார்ந்த அறிவாற்றல்களை தனது தமிழ்மொழி எழுத்தாற்றலால் கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும், கதைகளாகவும், பதிகங்களாகவும், பாடநூல்களாகவும், படைப்பாக்கம் செய்து எமது கைகளில் தவழ விட்டார். இவரது ஆரம்ப விஞ்ஞானம், சுற்றாடல்சார் செயற்பாடுகள் தொடர்பான எண்ணக்கருக்கள் சார்ந்த ஆக்கங்கள் இன்றும் எம் மனக்கண் முன் நிஜமாக நிழலாடுகின்றன.

பன்முகத் தேர்ச்சியினால் பல பட்டங்களைப் பெற்ற பாட்டனார் பண்டிதமணி அவர்கள், நான் எனும் இறுமாப்புக் கொள்ளாது, சைவ மரபுக்கமைய அன்பு, பண்பு, ஆன்மீகம் ஆகிய உயர் விழுமியங்களுடன் எல்லோருடனும் நட்புரிமையுடன் பழகி, தமிழ் - சைவப் பராம்பரியத்துடன் வாழ்ந்து பலராலும் போற்றப்பட்டார். செந்தமிழில் பேசியும் எழுதியும் உரையாடியும் தமிழை வளர்த்து, சிறந்த சைவத் தொண்டனாக விளங்கி ஆலயங்களுக்கு எழுத்தாக்கங்கள் படைத்து மனித வாழ்க்கைக்கு வலுச்சேர்த்தார். இவ்வண்ணம் எம் வாழ்வியல் இயக்கத்துக்கு இயங்கு சக்தியாகத் திகழ்ந்த பண்டிதமணி அவர்களின் வழித்தடங்களைப் பின்பற்றி "தமிழ் எங்கள் மொழி" "சைவம் எங்கள் வழி" என வாழ்வோமாக.

# பண்டிதர் மயில்வாகனார்.

## சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர், பண்டிதர், மறையாசிரியர்

**வெற்றிவேலு வரதிதாசன்** BA, MA (Hons), DPHY,DAC, Physiotherapist SLMC 166

வட்டுக்கோட்டையின் காலம் தந்த கொடை பண்டிதர் புலவர்மணி கதிரேசு மயில்வாகனனார். இலக்கணத்தோடு இலக்கியம் பாடியும் பல உரைநடைகளை யாத்தும் கலைப்பணி செய்த கலைக்குரிசில் அவர். தொண்டமனாறுதீரத்துச் செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்தே அவருக்கு மயில்வாகனன் என்ற பெயர் சூட்டப்பட்டதாம். அவ்விறையின் அருட்கடாட்சம் பட்டே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதாக ஆன்றோர் கூறுகின்றனர்.

வட்டுக்கோட்டையில் உள்ள பாடசாலைகளில் (யாழ்ப்பாணக்கல்லூரி முதலான) கல்விகற்ற புலவர்மணி அவர்கள், பால பண்டிதர் கற்கையை நிறைவு செய்து ஆசிரியராகிப் பின்னர் பண்டிதராகி பல்வேறு சமய தமிழ் சமூகபணிகளைத் திறம்படச் செய்திருக்கின்றார்.

அவர் யாத்த இலக்கியங்களும் ஏனைய நூல்களும் அவர் செய்த அத்தனை பணிகளும் அவர் மறைந்துவிட்டபோதிலும் அவருக்கொரு நூற்றாண்டு விழா எடுக்கத்தூண்டியுள்ளது. ஒரு கலைஞனைக் கொண்டாடுவதன் மூலமே அவனுடைய இலக்கியத்தைச் சுகிக்கலாம். எத்தனை பேர் வந்து எத்தனை இலக்கியத்தைப் படைத்து வட்டுக்கோட்டையைப் பற்றிக் கூறினாலும் பண்டிதர் அவர்களைப் பற்றிக்கூறினாலே அது முழுமை பெறும்.

வட்டுக்கோட்டையின் கண் வாழும் பண்டிதர் அவர்களின் ஊர்மக்கள் இயல்பாகவே முத்தமிழ் ,கைப்பணி எனப் பலபரிமணாங்களில் ஊறி வளர்ந்தவர்கள். தமிழையும் சைவத்தையும் தமிழ்ப்பண்பாட்டையும் தமது மூச்சாய் கொண்டவர்கள். பல்வேறு இலக்கிய ஆதாரங்களும் சான்றாதாரங்களும் அவர்களது புலமையை பறை சாற்றிநிற்கின்றன.

நல்ல நிலத்திலே நல்ல பயிர் விளையும். தரிசு நிலத்தில் நற்பயிர் வாராது. புலவர்மணி அவர்களின் பெற்றோர் நன்னிலம் போன்றவர்களே.

தாய்வழியூடே இழைமணி என்னும் கலப் புன்னங்கம் கடத்தப்படுவதாய் விஞ்ஞானம் கூறுகின்றது. என் தாய்வழி முப்பாட்டனாகி புலவர்மணியை எனது முதுகலைமாணி ஆய்வுக்காய் தேர்வு செய்ததையிட்டு மனமகிழ்வடைகின்றேன். எனது நீண்ட ஆய்வில் இவரைப்பற்றி பல்கலைக்கழக ஆய்வு எல்லைக்குள் கூறிவிட்டேன். மேலும் இப் பெருமகனின் நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்தி வணங்குகிறேன்.

# சைவத்திற்கும் தமிழிற்கும் பெரும் தொண்டாற்றிய தமிழ்ப் பெருந்தகை

அமரர் திருமதி. சாரதாம்பாள் தங்கராசா- அமரர் திரு க . தங்கராசா ( ஓய்வு நிலை பொலிஸ் உத்தியோகத்தர் ) அவர் தம் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

புலவர்மணி , பண்டிதர் , நாற்கவிராசர் , கலைவாரிதி , கலாபூசணம் க.மயில்வாகனனார் அவர்களுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகிறோம் . புலவர்மணி அவர்கள் இவ்வுலகை விட்டு நீத்திருந்தாலும் அவர் படைத்த உரைநடைநூல்கள், புராணநூல்கள், இலக்கண இலக்கிய நூல்கள், செய்யுள் வடிவிலான நூல்கள், என்பன அவர் தம் பெருமையை என்றும் அழியாப்புகழைக் கூறுகின்றன. திக்கெட்டும் தேமதுரத் தமிழ் பரவ வேண்டும் என்ற வேணவா கொண்டவர் புலவர்மணி அவர்கள்.

பாலர் முதல் பெரியவர் வரை படித்துச் சுவைக்க வேண்டிய இலக்கிய இலக்கண நூல்களையும் சைவசமயம் சார்ந்த கட்டுரைகளையும், நாளேடுகளில் தொடர் கட்டுரைகளையும் எழுதிச் சைவத்திற்கும் தமிழிற்கும் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளார். எமது தந்தையார் அமரர் திரு க.தங்கராசா அவர்களுக்கும் புலவர்மணி அவர்களுக்கும் இடையே நல்லதொரு நட்பு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இத்தகைய நீண்ட நட்பின் நல்ல விளைவுகளின் வரப்பிரசாதத்தை நாம் நல்லபடியாக கண்டு கொண்டுள்ளோம். குறிப்பாக எமது தந்தையார் ஒவ்வொரு பொழுதும் போற்றித்துதித்து வந்த வட்டூர், கணவன்தோட்டம் பத்திரகாளியம்மை மீது, அவரின் வேண்டுதலுக்கு இணங்கி கணவன் தோட்டம் காளியன் ஒல்லை. அருள்மிகு மாகாளிப் பதிகம், மாகாளி போற்றி அகவல். ஹஹமாகாளிஅம்மைப் பதிகம்ஹஹ என்ற பெயரில் புலவர்மணி அவர்கள் யாத்த பனுவல் அச்சு வாகனம் ஏறி பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் அமரர் திரு அ .அரியரத்தினம்.

யா∴அராலி இந்துக்கல்லூரி அதிபர் அமரர் திரு வே.மோகனநாதன், ஆகியோரது முயற்சியால் 1999 ஆம் ஆண்டு விஜயதசமி நன்னாள் அன்று, மாகாளியம்மை ஆலயத்தில் புலவர்மணி முன்னிலையில் அப்பதிகம் பாடப்பட்டு புலவர்மணி அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது சிறப்பிற்குரிய தொன்றாகும்.

புலவர்மணி அவர்கள் இலங்கைத்திருநாட்டில் உள்ள பல திருத்தலங்கள்மீது பதிகம், ஊஞ்சல், தலபுராணம் என்பவற்றைப் பாடியுள்ளார். அவர் படைத்த அத்தனை படைப்புக்களும் மிகவும் கனதிவாய்ந்தவை. புலவர்மணி அவர்களுடைய படைப்புக்கள் யாவும் சந்தத் தமிழோசையும், சிறப்பான எதுகை மோனை அமைந்த சீர்களையும் உடையனவாக விளங்குகின்றன.

நீத்தவர்களை அடுத்த நொடிப்பொழுதே நினைவிழக்கும் இன்றைய காலகட்டத்தில் புலவர்மணி அவர்கள் மறைந்து ஒரு தசாப்தகாலம் சென்றாலும், புலவர்மணி அவர்களுக்கு நூற்றாண்டு விழா எடுத்துக் கொண்டாடும் விழாக்குழுவினர் மிகவும் பாரட்டப்படவேண்டியவர்கள்.

அந்தவகையில் புலவர்மணி அவர்களது நாமத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சென்றுள்ள விழாக்குழுவினருக்கும்,ஐரோப்பா எல்-4 நிறுவனத்தினருக்கும், இவ் விழாவிற்காக உழைத்த அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று (திருக்குறள் -108)

நூறாண்டு மட்டுமல்ல பலநூறு ஆண்டுகள் சென்றாலும் புலவர்மணி அவர்களுடைய நாமமும் அவர்படைத்த படைப்புக்களும் ஒவ்வொரு தமிழ் மக்கள் நெஞ்சத்திலும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்

தெய்வத்துள் வைக்கப்படும் (திருக்குறள்-50 )

## எங்கள் நினைவை விட்டு நீங்காத பண்டிதர் ஐயா

மானசீக முன்னாள் மாணவன் ச.ஆனந்தகுமார்

தமிழ்த்தேசங்கள் எல்லாம்
புத்தகச்சிறகுகளால் பறந்தே கடந்த,
“சிறந்த மயில்”........பறவை நீங்கள்.
நீங்கள் இளைப்பாற எம்மை விட்டு விண்னுலகம் சென்றாலும்
உங்கள் புத்தக சிறகுகள் உள்ளவரை என்றும் மறவாது இவ்வுலகம்........
எத்தனிக்கின்றோம் ஐயா
ஆங்கிலக்கால்வாய் கடந்து எங்கள் கால்தடம் பதிக்க
உங்கள் நூற்றாண்டு விழாவில்.......
நீண்ட நெடிய இலக்கியப்பயணமொன்றை
முடித்து இன்று நூற்றாண்டு விழாக்காணும் உங்கள் விழாவை ஆசுவாசப்படுத்திட
நாமும் எத்தனிக்கின்றோம் ஐயா.........

தன்னம்பிக்கைப் பறவையே!
நீங்கள் பல இலக்கிய போராளிளைப்
படைத்து எம்மை விட்டுப் பறந்தாலும்
அதில் நீங்கள் உதிர்த்துவிட்டுப்
போன இலக்கிய படைப்புகள்
எங்கள் நினைவுகளில் என்றும்
வண்ண பூக்கள் போன்று
அழகிய விம்பங்களாக
ஒளிர்விட்டுகொண்டே இருக்கின்றன....

தமிழ் இலக்கிய மரபுகளை
விதைபோட்டு நீரூற்றி
வட்டூர் மண்ணிலே
வேர்பாயச்செய்து,
பெரும் விருட்சங்களாக வட்டுரை அலங்கரித்தவர் நீங்கள்.
உங்களை என்றும் வட்டூர் மண் மறவாது.
மயில் பறவையே....
உயர்ந்த இலட்சியம்

கொண்டவர் நீங்கள்....

ஆகாயக்கூண்டில்

இலக்கிய முட்டைகளை

அடைகாக்கப் புறப்பட்டவரே!....

நீங்கள் அடைகாத்து ஆகாயத்தில்

பறக்கவிட்ட இலக்கிய குஞ்சுகள்தானே

இன்று பலர் ....

பல மாணவர்களை

மாண்புக்குரியவர்களாக

மாற்றிய மாபெரும் சாதனையாளர் நீங்கள்!....

தாய்க்கே உரிய அன்புள்ளம்

தந்தைக்கே உரிய வழிகாட்டலும்

ஒருங்கே பெற்றவர் நீங்கள்.

ஆதலால்தான் எங்கள் சமூகத்தில் உயர்ந்து நிற்கிறீர்கள்.

வானத்தையும் தாண்டிய எங்கள் உள்ளங்களிலும்,

உணர்வுகளுடனும் கலந்து நிற்கின்றீர்கள்.

அறப்பணியாம் ஆசிரியர் பணி. சூாதனைப் பெருமகனே!....

பறந்து களைப்புற்ற உங்களுக்கு வட்டூர் மக்களால் எடுக்கப்படும் மாபெரும் நூற்றாண்டுவிழாவில் எங்கள் கருத்தையும், கரத்தையும் இணைப்பதில் பெரும் மகிழ்வடைகின்றோம். எம் சமூகத்திற்கு வழிகாட்டிகளில் ஒருவர் நீங்கள், பெரிதாய் எம் சமூகத்தில் சாதித்தீர்கள். நூறாண்டு விழாவையும் தாண்டி

**என்றும் வாழ்க எம்முடன் நினைவுகளாக.**

**பல நூற்றாண்டு கடந்தாலும் உங்கள் புகழ் பாடும் எங்கள் வட்டூர் மண்.**



# தமிழ் ஒரு செம்மொழி

பேராசிரியர் அ. சண்முகதாஸ், Ph. D. (Edinburgh) D.Litt. (Hon. UJ)

தகைசார் வாழ்நாட் பேராசிரியர், யாழ். பல்கலைக் கழகம்

**1. தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட்ட வரலாறு**

இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக் கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழிகளெனக் கருதப்படுகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும், நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமுடையதும், வேறெந்த மொழியிலுமிருந்து கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, பாரசிகம், அரபிக், சீனம் ஆகிய மொழிகளே செம்மொழிகளெனப் போற்றப்பட்டன. தற்போது தமிழ் மொழியும் இந்த செம்மொழி வரிசையிலே சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இந்த வரிசையிலே சேர்ந்தது ஒரு பெரிய கதை. அதனை முதலிலே நோக்குவோம்.

இந்திய மத்திய அரசு 12.10.2004 அன்று பிறப்பித்த அரசாணையால் தமிழ் செம்மொழி என வகைப்படுத்தப்பட்டது. இந்திய அரசின் இணைச் செயலாளர் A.K. ஜெயின் இந்த அறிவிப்பினை வழங்கினார். இவ்வறிவிப்பில் நான்கு விடயங்கள் அடங்கியிருந்தன:

1. 'செம்மொழிகள்' என ஒரு புதிய மொழிப் பகுப்பினை உருவாக்குவதென இந்திய அரசு முடிவுசெய்துள்ளது.

2. 'செம்மொழி' என வகைப்படுத்தக் கருத்திற் கொள்ளப்படும் மொழிகளின் தகுதிப்பாட்டினை உறுதி செய்யப் பின்வரும் அளவைகள் பயன்படுத்தப்படும்:

   (i) 1500 - 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட உயர் பழைமை வாய்ந்த அதன் நூல்கள் ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு.

   (ii) தலைமுறை தலைமுறையாக அதனைப் பேசுபவர்களால் மதிப்புயர்ந்த பாரம்பரியச் சொத்து எனக் கருதப்படும் ஒரு தொகுதி பண்டை இலக்கிய நூல்கள்.

   (iii) இன்னொரு மொழி பேசும் மக்கட் குழுவிடமிருந்து கடன் பெற்றதாக அல்லாமல் தொடக்க முதலாக இருந்துவரும் இலக்கிய மரபு.

3. 'தமிழ் மொழி' மேற்படி 2 ஆவது பந்தியில் பட்டியலிடப்பட்டுள்ள அளவைகளுக்கு ஏற்புடையதாயமைவதால் 'செம்மொழி' என இன்று முதல் வகைப்படுத்தப்படும் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

4. மேற்படி தீர்வுகளை நடைமுறைப்படுத்தவும், தொடர் நடவடிக்கைகளுக்கும் பண்பாட்டு அமைச்சு மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்திய அரசு இந்த அரசாணையைப் பிறப்பிப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. 1887 இல் ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தது. இந்திய மத்திய சட்ட சபையில் "சுதேசத் தாய் மொழிகளையெல்லாம் சர்வகலாசாலைப் பாடப் பகுதிகளினின்றும் நீக்கிவிடவேண்டும்" என்பதாக ஒரு பிரேரணை கொண்டுவந்தனர்.

ராஜப்பிரதிநிதி, இப்பிரேரணையைச் சென்னை சர்வகலாசாலைக்கு அதன் கருத்தைத் தெரிவிக்கும்படி அனுப்பினார். சர்வகலாசாலை சென்னை ஆசிரியர் சங்கத்திற்கு இப்பிரேரணையை அனுப்பிவிட்டது. இந்நிலையில்தான் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் மு.சி. பூரணலிங்கம் பிள்ளை துணையுடன் ஆசிரிய சங்கத்திலே தமிழ் ஒரு செம்மொழி என்று பிரகடனஞ்செய்து, அது பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாக இருக்கவேண்டுமென வலியுறுத்தி சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அறிவித்தனர். வி.கோ, சூரியநாராயண சாஸ்திரியார் மு.சி. பூரணலிங்கம் பிள்ளை ஆகியோரின் முயற்சிதான் நம்

தமிழ்மொழியின் இன்றைய உயர்வுக்குக் காரணமாயிற்று.

தமிழ் ஒரு செம்மொழி என்பதிலே ஈடுபாடு கொண்டு அதனை உலகுக்கு உரத்துக் கூற வேண்டுமென்ற ஆவலுடன் வி.கோ, சூரியநாராயண சாஸ்திரியார் கட்டுரைகள் எழுதினார். சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். வடமொழி, கிரீக், இலத்தீன் போன்றவற்றைப்போல தமிழும் ஒரு உயர்தனிச் செம்மொழி என்று தன்னுடைய தமிழ் மொழியின் வரலாறு என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

1887இல் வி.கோ, சூரியநாராயண சாஸ்திரியாரின் செம்மொழிப் பிரகடனத்தின் பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்துக்குப் பல தீர்மானங்கள் அனுப்பப்பட்டுவந்தன. செம்மொழித் தமிழிலே தேர்ச்சி பெற்ற அறிஞர் பலர் செம்மொழி பற்றிக் கட்டுரை எழுதியும் அரசுடன் தொடர்பு கொண்டும் முயற்சிகள் மேற்கொண்டனர். தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஒரு கருத்துரையை வழங்கும்படி தமிழக அரசு பேராசிரியர்களான ச. அகத்தியலிங்கம், பொன். கோதண்டராமன், டாக்டர் வ.செ. குழந்தைசுவாமி, டாக்டர் ஜான் சாமுவேல், மணவை முஸ்தாபா ஆகியோரைக் கொண்ட குழுவினை நியமித்தது. அக்குழு வழங்கிய கருத்துரை மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மத்திய அரசு அதனை மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவகத்துக்கு அனுப்பியது. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம் என்னும் பரிந்துரை அங்கிருந்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் விளைவாகவே 12.10.2004 அன்று செம்மொழித் தமிழ் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

**௨.செம்மொழி என்றால் என்ன?**

இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக் கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழிகளெனக் கருதப்படுகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும், நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமுடையதும், வேறெந்த மொழியிலுமிருந்து கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரூ, அரபிக், சீனம் ஆகிய மொழிகளே செம்மொழிகளெனப் போற்றப்பட்டன. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் செம்மொழித் துறையொன்று உருவாக்கப்பட்டது. சமஸ்கிருத மொழிக்கெனத் தனியாக ஒரு துறை இருந்ததால், செம்மொழித் துறையிலே கிரேக்கம், இலத்தீன், அரபிக், சீனம் ஆகிய மொழிகளும் அவற்றின் பண்பாடுகளும் கற்பிக்கப்பட்டன. செம்மொழி பயிலும் மாணவர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். செம்மொழி ஒன்றினைப் பயில விரும்பும் மாணவர் பண்டைய மொழி, பண்டைய இலக்கியம், பண்டைய பண்பாடு ஆகியனவற்றைக் கட்டாயம் கற்கவேண்டியுள்ளதால் பெரும்பாலான மாணவர்கள் இக்கற்கைநெறியினைத் தேர்ந்தெடுப்பதில்லை. பல பல்கலைக் கழகங்களிலே செம்மொழிக் கற்கைநெறி இருந்து வந்துள்ளது.

செம்மொழிகளெனக் கருதப்பட்டனவற்றிற் காணப்படும் தகைமைகள் யாவும் தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன. எனினும் தமிழ் மொழி ஒரு செம்மொழி எனக் கருதப்பட்டுப் பறைசாற்றப்படவில்லை. அதற்குச் சில காரணங்களும் உள. தமிழ் மொழியின் பண்டைய இலக்கியங்கள் பற்றி ஆங்கிலேயர்களுக்கு 19 ஆம் நூற்றாண்டளவிலேயே தெரியவந்தது. சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே. சாமிநாதையர் போன்றோர் சங்க இலக்கியங்களையும் தொல்காப்பிய இலக்கண நூலையும் பதிப்பித்த பொழுதுதான் தமிழ் மொழியில் இத்தகைய பண்டைய நூல்கள் இருக்கின்றன என்னும் உண்மை உலகுக்குத் தெரியவந்தது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (1856இல்) திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதி வெளியிட்ட டாக்டர் கால்ட்வெல் தமிழ் மொழியின் சிறப்புக்களையெல்லாம் மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். அவ்வாறு எழுதிய கால்டுவெல்டு அவர்களுக்கு தமிழ் மொழியிலே பண்டைத் தமிழ் இலக்கியத் தொகுதியாகிய சங்க இலக்கியங்கள் இருந்தமை பற்றித் தெரியாது. இதனால் தமிழ் மொழியிலே கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரேயே இலக்கியங்கள் தோன்றின எனக் குறிப்பிட்டுள்ளார். உலக அறிஞர்கள் இதை நம்பினார்கள். எடுத்துக்காட்டாக, ஜப்பானிய மொழி இலக்கிய வரலாற்றினை எழுதிய சேம்பர்லெயின் (Chamberlain) என்னும் ஆங்கிலேய அறிஞர் தமிழ் மொழியிலே இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே ஜப்பானிய மொழியில் இலக்கியங்கள் தோன்றின எனக் கூறியுள்ளார். தன்னுடைய கூற்றுக்கு டாக்டர் கால்டுவெல்டினைச் சான்று காட்டியுள்ளார். ஜப்பானிய மொழியிலே கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே இலக்கியங்கள் தோன்றின என்பது உண்மை. அதனைத் தமிழ் மொழியோடு ஒப்பிட்டமை பிழையானதாகும்.

தமிழருடைய தொன்மை பற்றியும் தமிழருடைய பண்பாடு பற்றியும் பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பற்றியும் பி.ரி. சிறிநிவாச ஐயங்கார் (History of the Tamils) தி. கனகசுந்தரம்பிள்ளை (The Tamils Eighteen Hundred Years Ago), M.S. பூரணலிங்கம் பிள்ளை (History of Tamil Literature) போன்றவர்கள் ஆங்கில மொழியில் எழுதியும், உலகம் தமிழ் மொழியை ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கவில்லை. சமஸ்கிருத மொழியின் ஒரு கிளை மொழியே தமிழ் என்னும் கருத்து வட இந்திய அறிஞர்களிடையே வேரூன்றியிருந்தது. இதனால் சமஸ்கிருத மொழியைச் செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்றுக்கொண்ட இந்திய அரசு தமிழ் மொழியைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாயிரமாம் ஆண்டிலிருந்து தமிழறிஞர்களும் தமிழ்நாடு அரசும் தமிழ் ஒரு செம்மொழியென உத்தியோக பூர்வமாக ஏற்று அறிவித்தல் செய்யவேண்டுமென இந்திய அரசுக்கு வேண்டுதல்கள் விட்டனர். அவற்றின் பலனாக சென்ற ஆண்டு இந்திய அரசு தமிழ் ஒரு செம்மொழி என ஆணை பிறப்பித்தது.

இந்த ஆணையினாலே பெறக்கூடிய பயன்கள் யாவை? உலகப் பல்கலைக் கழகங்களிலே தமிழ் மொழியை ஒரு செம்மொழியாகக் கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். தமிழ் மொழிக்கான தவிசுகள் (Chairs for Tamil) உலகப் பல்கலைக் கழகங்களிலும் இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் ஏற்படுத்தப்படலாம். இந்திய அரசு செம்மொழி வளர்ச்சிக்கென ஒவ்வோராண்டும் வழங்கும் ஐந்து கோடி ரூபா தமிழ் மொழிக்கும் வழங்கப்படுகின்றது. மைசூரில் தமிழ்ச் செம்மொழி மையம் உருவாக்கப்பட்டுள்ளது.

**3. செம்மொழிகள் யாவை?**

செம்மொழிகள் யாவும் பண்டைய மொழிகளே. அவை பண்டைய நாகரிக, பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன. பண்டைய நாகரிகங்களின் இலக்கிய, தத்துவ பாரம்பரியங்களை இச்செம்மொழிகளே உருவாக்கியுள்ளன. இச்செம்மொழிகளை உலக மொழிக்குடும்ப அடிப்படையில் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

**1. இந்தோ- ஐரோப்பிய மொழிக்குடும்பம்:**

கிரேக்கம்

லத்தீன்

சமஸ்கிருதம்

பாரசிகம்

**2. ஆபிரிக்க-ஆசிய மொழிக்குடும்பம்:**

அரபிக்

ஹீபுறு

**3. திராவிட மொழிக்குடும்பம்:**

தமிழ்

**4. சினோ - திபேத்திய மொழிக்குடும்பம்:**

சீனம்

மேற்படி செம்மொழிகளுள் லத்தீனும் சமஸ்கிருதமும் இறந்த மொழிகளாகிவிட்டன. சமஸ்கிருத மொழி ஒரு காலகட்டத்தில் தேவ பாஷையாகக் கருதப்படலாயிற்று. வேதங்களை ஓதவும் மந்திரங்களைக் கூறவும் உயர் நிலையினர் பேசவும் சமஸ்கிருதம் பயன்படலாயிற்று. பொது மக்கள் பாகத மொழி பேசினர். உயர்நிலையினர் எண்ணிக்கையில் குறைந்தவர்கள். இதனால் சமஸ்கிருதம் ஒரு சிறு குழுவினரிடையே மந்திரம் ஓதும் மொழியாக மாறிவிட்டது. பொதுமக்கள் பேச்சு மொழியாக அது ஆக முடியவில்லை. இந்நிலை சமஸ்கிருத மொழி வழக்கிறந்து போவதற்குக் காரணமாயிற்று. லத்தீன் மொழிக்கும் இந்நிலையே ஏற்படலாயிற்று.

செம்மொழிகளுக்குக் கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் எவ்வாறு தமிழ் மொழிக்கும் பொருந்துகின்றன என்பதை இனி விரிவாக நோக்குவாம்.

**4. பண்டைக்காலம் தொடக்கம் பயன்பாடுடையது**

செம்மொழிகள் என்பவற்றுக்குப் பண்டைய வரலாறு இருக்கின்றது. தமிழ் மொழியும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே வழக்கிலிருந்தது மட்டுமன்றி இலக்கிய மொழியாகவும் இருந்துள்ளது. கி.மு. 2ஆம் நூற்றாண்டுத் திருநாதர்குன்றத்துத் தமிழ்க் கல்வெட்டு ஒரு சான்றாக அமைகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கக்கூடிய தொல்காப்பியம் தமிழ் எழுத்துக்கும் எழுத்தாலான இலக்கியத்துக்கும் இலக்கணம் கூறுகின்றது. தமிழ் எழுத்து மொழியாக அமைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகப் பேச்சு மொழியாக பயன்பட்டிருக்கும். இவ்வாறு பண்டைக்காலந் தொடக்கம் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ் மொழி இன்றும் பயன்பாட்டிலே உள்ளது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகங்கொடுக்கும் மொழியாகவும் அமைந்துவருகின்றது.

செம்மொழி எனக் கருதப்பட்ட மொழிகளுள் பண்டைக் கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகியவை வழக்கிறந்துவிட்டன. இவை சமயக்கிரியை மொழிகளாக □தேவ பாஷை□களாக இருந்தபடியாலே இயல்புநிலை மக்களுடன் ஒட்டி உறவாட முடியாதனவாக வழக்கிறந்துபோய்விட்டன. இந்த வகையில் பண்டைக் காலந்தொடக்கம் வழக்கிறந்து போகாமல் இன்று வரைக்கும் நின்றுநிலவும் மொழியாகத் தமிழ் விளங்குகின்றது.

**5. மிகச்சிறந்த உலகுதழுவிய இலக்கியங்களைக் கொண்டது**

கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரூ, அரபிக், சீனம் ஆகிய மொழிகள் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களை எமக்குத் தந்துள்ளன. இந்த வகையில் தமிழ்மொழி உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களைத் தந்துள்ளதா? ஒரு நூலினுடைய சிறப்பு அதன் பயன்பாட்டினையொட்டி அமைந்துள்ளது. பண்டைய சமய மறை நூல்களாகிய பைபிளும் திருக்குரானும் உலகெலாமுள்ள கிறிஸ்தவ இஸ்லாமிய மக்களுடைய தேவைக்காகப் பல மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. சமயப் பயன்பாட்டுக்காக இவை பெருந்தொகையான மொழிகளிலே பெயர்க்கப்பட்டுள்ளன. செம்மொழி இலக்கியங்கள் பல பிற மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. அவற்றின் பயன்பாடு அம்மொழிகளைச் சார்ந்தவர்களுக்காக மட்டுமன்றி பிறமொழி பேசுபவர்களுக்கும் சென்றடைந்தது. தமிழ் மொழியிலும் திருவள்ளுவர் இயற்றித் தந்த திருக்குறளுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. உலகத்திலே எங்கு வாழ்பவர்களுக்கும் எம்மொழி பேசுபவர்களுக்கும் பயன்படக்கூடியதாக திருக்குறள் நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்நூல் முதன்முதலாக ஆங்கில மொழிக்குப் பெயர்க்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். பின்னர் பல ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் தென்னாசிய தென்கிழக்காசிய மொழிகள் சிலவற்றிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. "வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி பாரதி கூறியதை இவ்விடத்திலே நினைவுகொள்ளலாம்.

கம்பன் இயற்றிய இராமாயணமும் இளங்கோவினுடைய சிலப்பதிகாரமும் உலக காவியங்களின் தரமுடையனவாக அமைகின்றன. வால்மீகியினுடைய இராமாயணத்தை அடியொற்றிக் கம்பன் இக்காவியத்தைப் படைத்தபோதிலும் தமிழ் மொழியின் பொருள் செய்யுள் மரபுகளின் செழுமைகளை அதனூடாகப் புலப்படுத்துகிறான். அவனுடைய சொந்தக் கற்பனைத் திறன், காவியக் கட்டமைப்பு, பாத்திர வார்ப்பு ஆகியன அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் முழுமையான ஒரு தமிழ்க் காப்பியம். இதனுடைய பிற மொழிபெயர்ப்புகள் அதிகமாக இல்லை. இக்காவியத்தினை பிற மொழிகளிலே முறையாக மொழிபெயர்த்துக் கொடுத்தால் தமிழ் ஒரு செம்மொழி எனக் கூறுதற்கு மிகச் சிறந்த சான்றாக அமையும்.

**6. நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது**

தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரிருந்து இன்றுவரை இடையறாத இலக்கியப் பாரம்பரியமுடையதாக அமைகின்றது. இலக்கியச் செழுமையுடையனவாகவும், பண்டைத் தமிழருடைய சமூக, பண்பாட்டு, கலை விவரங்களை வெளிப்படுத்துவனவாகவும் அமையும் சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்தவையாகும். வள்ளுவனையும் இளங்கோவையும் பெருந்தொகையான

அறநீதி நூல்களையும் கொண்ட தமிழ் "பக்தியின் மொழி தமிழ்" என்று கூறக்கூடியதாக அமைந்தது. எலும்பினையே உருகவைக்கும் பாடல்கள் என்று சொல்லத்தக்க பக்திப் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. டாக்டர் ஜி.யு. போப் திருவாசகப் பாடல்களை ஆங்கில மொழியிலே பெயர்த்துப் பிற மொழியாளர்களுக்கு அவற்றின் சிறப்புக்களை உணர்த்தினார். காவியங்கள், புராணங்கள், தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல இலக்கியங்கள் தமிழ் மொழியிலே தோன்றின. நவீன காலத்துக்கேற்ப நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரையிலக்கியம், மறுமலரச்சியடைந்த கவிதை என்பன பெருவாரியாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்ச் சமய இலக்கியத்தின் ஒரு தனித்தன்மை இங்கு குறிப்பிடப்படவேண்டியது. எவ்வெச் சமயங்கள் தமிழ் மொழியுடன் தொடர்புற்றனவோ அவ்வச் சமயங்களுக்கெல்லாம் தமிழ் மொழியிலே காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சமணம், பௌத்தம், வைணவம், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம், றோமன் கத்தோலிக்கம் என்பன தமிழ் மொழியுடன் தொடர்புற்ற சமயங்களாயின. இந்நிலையில், சமணசமய சீவகசிந்தாமணி, பௌத்தசமய மணிமேகலை, வைணவசமயக் கம்பராமாயணம், சைவசமயப் பெரியபுராணம், இஸ்லாம் சமயச் சீறாப்புராணம், கிறிஸ்தவசமய இரட்சணிய யாத்திரிகம், றோமன் கத்தோலிக்க சமயத் தேம்பாவணி காவியங்களைக் குறிப்பிடலாம்,

தமிழிலே தோன்றிய செவ்வியல் இலக்கியங்களுக்கு ஊற்றாக இருந்துவந்த வாய்மொழி மரபுகளும் நாட்டார் இலக்கியங்களும் சமாந்தரமாக வளர்ந்துவருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். செவ்வியல் மரபும் நாட்டார் மரபும் இணைகின்ற போது மிகச் சிறந்த தமிழ் இலக்கியங்கள் உருவாகியுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. சிலப்பதிகாரமும் பக்திப் பாடல்களும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

**7. வேறெந்த மொழியிலுமிருந்தும் கிளைத்தெழாதது**

தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து கிளைத்தெழுந்ததென்பதை நிலைநாட்டப் பல முயற்சிகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையைக் குறிக்க 28 சொற்கள் தமிழிலே இருக்கின்றன. அப்படி அவை இருக்கவும் 27 சொற்கள் வடமொழியிலிருந்து பெறப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் இருபத்தேழும் வழக்கிலே வர, தமிழ்ச் சொற்கள் இருபத்தெட்டும் வழக்கிழந்துபோய்விடலாம். வடமொழி இல்லாமல் தமிழ் மொழி இயங்கமுடியாது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகிவிடும். இவை யாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் டாக்டர் கால்ட்வெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் தமிழ் மொழி திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் அது இலக்கண அடிப்படையில் சமஸ்கிருத மொழியைச் சாராதது என்றும் விளக்கமாகவும் தெளிவாகவும் உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

**8. முடிவுரை**

தமிழ் செம்மொழி என்பதற்கு ஊன்றிய அணை கொடுப்பன அதன் பண்டைய இலக்கியங்களேயாகும். இவற்றை இன்றைய தலைமுறையினர்க்கும் இனி வருவோர்க்கும் செம்மையான முறையிலே கையளிப்புச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகள் செய்ய வேண்டும். சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் ஆகிய நூல்களையும் சிறப்பாகக் கற்பதற்கு இளம் மாணவர்களுக்குப் பல புலமைப் பரிசுகள் வழங்கி ஊக்கம் கொடுக்கவேண்டும். உலகப் பல்கலைக் கழகங்களில் வாய்ப்பு ஏற்படக்கூடிய இடங்களில் செம்மொழித் தமிழ்த் துறையினை அமைக்கவும், பேராசிரியர்ப் பதவிநிலையினை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ் ஒரு செம்மொழி என்று அறிவித்தபின்னர் அது இன்னும் 50 ஆண்டுகளில் செத்துவிடும் என்று அச்சப்படாமலிருக்க வழிசெய்யவேண்டும். தொலைக்காட்சிகளிலும் வானொலியிலும் ஆங்கிலத் தமிழுக்குப் பதிலாக தனியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்த வழிசெய்யவேண்டும்.

# திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான கும்ப விழா ஒரு பண்பாட்டியல் பார்வை

பாலசுகுமார் - இங்கிலாந்து

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த வகையில் திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான அடையாளமாக விளங்குவது கும்ப விழாவாகும். நாம் இங்கு கும்பவிழா என அழைத்தாலும், 'கும்பம்' என்பதே இங்கு பொதுப்படையான வழக்கு.

திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரத்திலும் நகரை அண்டிய பகுதிகளிலும் தம்பலகாமத்திலும் மூதூர் கிழக்கிலும் நிலாவெளியிலும் சாம்பல் தீவிலும் கும்ப விழா பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மூதூர் கிழக்கில் வரலாற்றுப் பழமை மிக்கதும் தொன்ம மரபு சார்ந்த கிராமங்களான சேனையூர் கட்டைபறிச்சான் மருத நகர் கல்லம்பார் அம்மன் நகர் கடற்கரைச் சேனை சாலையூர் சந்தோச புரம் ஆகிய கிராமங்களில் கும்ப விழா மிகச் சிறப்பாக பரம்பரை பரம்பரையாகக் கொண்ட்டாடப் பட்டு வருகிறது.

தம்பலகாமம் நீண்ட வரலாறு கொண்ட பண்டைத் தமிழ் கிராமம் கடல் நடுவே காணும் தீவுக் கூட்டங்கள் போல வயல்களின் நடுவே திட்டுத்திட்டாய் தெரியும் குடியிருப்புக்கள் கோயில் குடியிருப்பு புதுக் குடியிருப்பு பட்டி மேடு கூட்டாம் புளி கள்ளிமேடு முன்மாரித்திடல் சிப்பித் திடல் வர்ண மேடு நாயன்மார் திடல் குஞ்சடப்பன் திடல் கரச்சிதிடல் நடுப்பிரப்பன் திடல் என தம்பலகாமத்தில் கும்ப விழா அதன் தனித்துவத்தைப் பறை சாற்றி நிற்கிறது.

திருகோணமலை கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்து வரலாற்றுப் பழமையும் நவீனத்துவத்தின் வாசல்களையும் ஒருங்கே கொண்ட அழகிய தமிழர் தலை நகர்.இங்கு கும்ப விழா ஒரு பெரும் பண்பாட்டின் அடையாளமாகக் கொண்டாடப் பட்டு வருகிறது கும்பத்து மாலில் தொடங்கிய இம் மரபு இன்று பெரும் சமஸ்கிருத மயப்பட்ட ஆலயங்களுக்குள்ளும் தன் செல்வாக்கை வீச்சை வெளிப்படுத்தி நிற்கிறது.நகரை அண்டிய பகுதிகளான சல்லி புளியங்குளம் சல்லி லிங்க நகர் நிலாவெளி ஆகிய இடங்களிலும் நகரத்தில் கும்பத்து மால் திருக்கடலூர் பேச்சியம்மன் கோயில் காளி கோயில் பத்தாம் நம்பர் கண்ணகியம்மன் வட பத்திர காளி கோயில் வராகி கோயில் மடத்தடி மாரியம்மன் மனையாவெளி மாரியம்மன் கந்தசாமி கோயிலடி உவர்மலை காளி கோயில் என நீட்சி கண்டுள்ளது.

கும்பம், கும்பத்துமால், சாமியாட்டம், சாட்டையடி, மறிப்புக்கட்டு தீத்தச்சட்டி, மறிப்பை முறித்தல், கட்டை வெட்டுதல், உருவேற்றுதல், மந்திரம், மந்திர உச்சாடனம் மடை, சிலம்பு, பறை உடுக்கு, பூசாரி, இணைப்பூசாரி என இதனோடு இணைந்து வருகின்ற கலைச்சொற்களின் பட்டியல் நீளும்.

கும்பம் என்பதற்கு நேரடியான தமிழ் சொல் குடம் என்பதாகும். இதனால் தான் கும்பாபிசேகம் என்ற சமஸ்கிருத சொல்லுக்குப் பதிலாக குடமுழுக்கு என்ற சொல் பயன்பாட்டில் உள்ளது. ஆனால் கும்பம் ஒரு தமிழ் சொல்லாகவே இங்கு மாறி ஒரு பண்பாட்டின் அடையாளமாக வெளிப்பட்டு நிற்கிறது.

கும்பம் பற்றி பண்டிதர் வடிவேல் அவர்கள் சீக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளதாக பல குறிப்புக்களில் எழுதியுள்ளனர். ஆனால் சீக்கியரது மத அனுஸ்டானங்களிலோ அவர்களது கலை நிகழ்வுகளிலோ இத்தகைய கலாசார அடையாளங்களை காணமுடியவில்லை. அவர்களது நடனமாக பங்காரா நடனமும் அதனோடு இணைந்து துள்ளல் இசையும் அமைந்திருக்கிறது. அத்துடன் அவர்களது சடங்கு முறைகளில் கும்பம் போன்ற எந்த ஆதாரத்தையும் காணமுடியவில்லை.

இலங்கையில் வேறு எங்கும் கும்ப விழா நடைமுறையில் இல்லையென்றே சொல்லலாம். மட்டக்களப்பில் கும்பம் சொரிதல் நடைமுறையுள்ளது. மாரியம்மன் பேச்சியம்மன் சடங்குகள் முடிவடைய கடைசி நாளில் கடலில் அல்லது ஆற்றில் கும்பம் சொரிதல் சடங்கு நடைபெறும், அதற்கும் திருகோணமலையில் நடக்கும் முறைமைகளுக்கும் நிறையவே வேறுபாடு காணப்படுகிறது.

திருகோணமலையில் நடைபெறும் கும்பவிழா நவராத்திரியோடு தொடர்புபட மட்டக்களப்பு கும்பம் சொரிதல் வைகாசி ஆனி மாதங்களில் நடைபெறும். மாரியம்மன் சடங்குகளோடு தொடர்புபட்டு நிற்கிறது. கும்ப விழா எப்போது தொடங்கியது என்ற கேள்வி பலர் மனதிலும் எழுவது இயற்கையே. என்னிடமே பலர் கேட்கிருக்கிறார்கள். சடங்குகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் தொடக்கமென்ன? முடிவென்ன? என அடிமுடி தேடமுடியாது. சடங்குகளும் நம்பிக்கைகளும் மனித நாகரிகத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளே. அவை காலங்காலமாக பல தலைமுறைகள் தாண்டி நீண்டு செல்லும் மரபுகள் திருகோணமலை கும்ப விழாவும் அத்தகயதே.

இத்தகைய கேள்விகளும் விடைகளும் இருந்தாலும் மூலத்தைத் தேடுதல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.கேரளாவில் நடைமுறையில் உள்ள சடங்குகளில் நாம் இந்த முறையிலான அமைப்பைக் காணலாம். தேயாட்டம் ஒட்டம் துள்ளல் பகவதி அம்மனுக்கு நடக்கும் சடங்குகள் நம் கும்ப சாயலைக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு பிரதேசமும் தமக்கான பண்பாட்டு மரபுகளை தமக்குள்ளாகவே உருவாக்குகின்றபோது வேறொரு பண்பாட்டிலிருந்து வருகின்றவைகளையும் உள்வாங்கிக்கொண்டு புதிய வடிவமாய் பரிணமிக்கின்றமையையும் உலக பண்பாட்டு வரலாறு உணர்த்தி நிற்கின்றது.பொதுவாக, தென்னாசிய மரபுக் கலைகள் சடங்குகளின் அடிப்படையிலேயே உருவாகியிருக்கின்றன. கும்ப விழாவும், ஒரு சடங்காகவும் கலையாகவும் வெளிப்படுவதை நாம் காணலாம்.

தென்னாசிய மரபில் சடங்குகள் கலையோடு இணைந்தே பயில் நிலையில் உள்ளன. கும்பவிழா ஒன்பதுநாள் சடங்கும் அதனோடிணைந்து வருகின்ற பூசைகளும் சாமியாட்டமும் மனிதனின் நம்பிக்கையின் வழிவந்த கலையின் சங்கமிப்பே.

சடங்குகளினடிப்படையிலேயே கலைகளின் உருவாக்கம் என்பது உலக வரலாற்றில் நாம் கிரேக்கத்தில் டயோனிசஸ் தெய்வத்துக்குச் செய்கிற சடங்குகளே நாடகமாக உருமாறுவதையும் ரோமா மரபில் வீனஸ் தெய்வத்துக்குரிய சடங்குகளும் எகிப்தின் பழைமைமிகு நாடக உருவாக்கமும் கலைகளின் உருவாக்கத்தால் சடங்குகளின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இங்கு கும்பமும் இன்றுவரை சடங்காகவும் கலையாகவும் தொடரும். இரு பண்பாட்டு கையளிப்பாக அமைந்துள்ளது.

ஆசிய மரபில் சீன நடனங்கள் யப்பானிய மரபில் நோ கபுகி, நடன நாடக முறைமைகள் இதற்குரிய பாலித்தீவு நடனங்கள் தாய்லாந்தின் நடன முறைமைகள் சடங்காக உருவாகி கலையாக மாறியவையே. இன்றும் அவற்றுள் சில சுவையாகவும் சடங்காகவும் தொடர்வதை நாம் காணலாம். ஏன் சிங்கள மரபில் பல்வேறு கலைகளையும் பயின்று அதன் வெளிப்பாடாக பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். கும்ப விழாவில் வருகின்ற கும்ப ஆட்டம் ஒவ்வொருவருக்குள்ளிருக்கும் அல்லது புதைந்து கிடக்கும் கலைதிறனின் வெளிப்பாடாகவே நாம் காணமுடியும்.

கும்பம் எடுத்தல், கும்பம் தூக்குதல் என்ற நிகழ்வில் பூசாரியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை உருவகப்படுத்தி அவர்கள் மீது மந்திரங்களை ஏற்றுகிறார்களோ அதன்மூலமாக அந்தத் தெய்வங்கள் பற்றிய ஐதீகங்களையும், புராணங்கள் கதைகள் கூறுகின்ற குணாம்சங்களையும் உள்வாங்குகிறார்கள். பின்னர் ஆடுகிறபொழுது அந்த தெய்வமாகவே தங்களை உருவகித்துக் கொண்டு ஆடுகிறார்கள். பரம்பரையாகத் தங்கள் குலமரவு தெய்வங்களையும் வெளிப்படுத்துவர். உதாரணமாக மாரியம்மன் என்றால் மிகவும் நளினமான ஆட்டம் வெளிப்படும். காளியென்றால் மிகவும் ஆக்ரோசமான ஆட்டத்தைக் காணலாம். அந்தந்தக் கடவுளர்களை உருவகித்துக் கொள்ளல் இங்கு முக்கியப்படுகிறது. ஒரு நாடக நெறியாளன் எப்படி ஒரு பாத்திரத்துக்கான குணாம்சங்களை நடிகர்களுக்குச் சொல்லிக் கொடுப்பானோ அதேபோலவே மந்திரம் மூலம் ஒரு பூசாரி அந்தத் தெய்வத்துக்குரிய மந்திரங்களை உச்ச ரித்தல் அழைக்கிறபொழுது அந்தத் தெய்வமே எழுந்து வருகிறது போல அமையும் அந்தக்காட்சி, வீரபத்திரன் என்றால் தக்க யாகத்தை அழிக்க அகோர வீரபத்திரன் புறப்பட்ட காட்சியை மந்திரம் மூலம் வெளிப்படுத்த வீரபத்திரனாகத் தன்னை உருவகித்து கொண்ட ஆட்டம் வெளிப்படும். இங்கு பங்குகொள்கிற ஒவ்வொருவரும் தாங்கள் ஒரு கலை வெளிப்பாடடைச் செய்கிறோம் என்று அறியாமலேயே கலைஞர்களாக பரிணமிக்கின்றனர்.

இந்திய நாட்டிய சாஸ்திரத்தில் பரத முனிவர் முதல் நாடகமாக பாற்கடல் கடைந்த கதை என்பது ஒரு சடங்குத் தன்மையுடன்தான் நடைபெறுகிறது. நாட்டிய சாஸ்திரத்தின் தொடக்கமே சடங்குதான்.

அந்த சடங்கிலிருந்துதான் நடனமுறைமைகளை பின்னாளில் வேறுபடுத்தி அதற்கான இலக்கணங்களை உருவாக்கினார்.

நாட்டிய சாஸ்திர ஆசிரியர் சொல்கிற ரசானுபவம் நமக்கு கும்ப சடங்கில் கிடைக்கிறது. ஒன்பது வகையான ரசங்களும் அதற்கு மேலதிகமாக ஊற்றுப்பெறும் ராசானுபவங்களும் கும்ப ஆட்டத்தில் காணலாம். இங்கு போலச் செய்தலின் மிக உச்சமான வெளிப்பாட்டுத் திறன் ஸ்ரனிஸ்லாஸ்கி சொல்வாரே பாத்திரங்களை வெளிப்படுத்தல் என்பது இங்கு கும்பவிழாவில் ஒரு ரசவாதமாக மாறி நம்மை பிரமிக்க வைக்கிறது. எத்தனை முகங்கள், எத்தனை பாவங்கள் மாறிமாறி வருகின்ற உணர்ச்சிப் பிரவாகம் எல்லாம் இங்கு கொட்டித் தீர்க்கப்படுகின்றன.

குரொட்டவஸ்கியின் குரூர அரங்கிற்கான மூலத்தையும், மேயர்கோல்டின் உடற்பொறிமுறை அரங்கிற்கான ஆதாரங்களும், பெரக்டின் அன்னியமாதல் கோட்பாட்டையும், ஸ்ரனிஸ்லாஸ்கியின் பாத்திரமாதல் மரபையும், றிச்சட் செக்கனாரின் அனைத்தும் உட்கொண்ட அரங்கின் கூறுகளையும் நாம் இந்தக் கும்பவிழாவில் ஆடப்படும் ஆட்டத்தில் அவதானிக்க முடியும்.

அரங்கியல் வரலாற்றில் உருவான கோட்பாடுகள் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன. இரண்டு பிரதானமான விவாதங்கள் உள்ளன.

**(1) சடங்கிலிருந்து நாடகங்கள் உருவானது**

**2) சடங்கே நாடகம்.**

இந்த இரண்டு கோட்பாடுகளும் ஒன்றையொன்று இணைத்த முறைமைதான் இங்கு சடங்கே நடனமாக மாறுவதை நாம் காணலாம். ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்தில் நீங்கள் எத்தனை விதமான பாவங்களையும் ரசானுபவத்தையும் பெறுவீர்களோ அதற்கு அதிகமாகவே நீங்கள் கும்ப ஆட்டத்தில் காணமுடியும். சில இடங்களில் நரசிங்க கலைஆடுபவர்கள் நாக்கை நீட்டிக்கொண்டு கோர முகத்தை வெளிப்படுத்துகிறபோது எந்தவொரு நடிகனாலும் அத்தகைய பாவத்தைக் கொண்டுவர முடியாத அளவுக்கு கும்ப ஆட்ட முறைமை அமைந்திருக்கும்.

கும்ப விழாவை என் சிறுவயது தொடக்கம் பக்கத்திலிருந்து பார்த்து ரசித்தவன் என்ற வகையிலும் பின்னாட்களில் இவற்றை அறிவியல் ரீதியாக எப்படிப் பார்க்கலாம் என்ற வகையிலும் எனக்கு மேலைத்தேய, கீழைத்தேய கலை மரபு கோட்பாடுகள் துணை நிற்கின்றன. ஒன்றை நாம் எப்படிப் பார்க்கின்றோம் என்ற வகையில்தான் அதன் தன்மை நமக்குள் வெளிப்படும். அதன் உள்ளிருந்து பார்ப்பவர்களுக்கு ஒரு சடங்காகப் பக்தி அனுபவமாக இருக்க வெளியிலிருந்து ரசிப்பவர்களுக்கு அது ஒரு கலையாக உணரப்படுகிறது.

கும்பவிழா ஒரு தெரப்பியாகவும் தொழிற்படுகிறது. வருசம் முழுவதும் தங்களுக்குள் அடக்கி வைத்திருக்கும் கோபம், சந்தோசம், துக்கம், வெப்பிசாரம் என எல்லா உணர்வுகளையும் வெளிப்படுத்தும் ஒரு களமாகவும் இவை அமைகிறது. இங்கு ஆடுபவர்கள் அந்த நிலையை பெறுகிற போது பார்ப்பவர்கள் அதனுள் சென்று அந்த அனுபவத்தைச் சுவைக்கிறார்கள். மன அழுத்தங்களுக்கு மருந்தாக இவை மாறுவதை நாம் இங்கு அவதானிக்க முடியும்.

திருகோணமலை மாவட்டத்தின் தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக நாம் இங்கு கும்ப விழாவைப் பார்க்க முடியும். ஒரு நடன ஆசிரியர் திருகோணமலையில் இந்த கும்ப நடனத்தை மேடையில் தன் பிள்ளைகளைக் கொண்டு நிகழ்த்தியிருந்தார். அவர் யாரென்று எனக்கு ஞாபகமில்லை. ஆனாலும் அவை ஒரு முக்கியமான மடைமாற்றம் தனியே ஒரு சடங்கு முறைக்குள் அடங்கிப் போகாமல், இதனை நாம் ஒரு கலையாகவும் அடையாளப்படுத்த வேண்டும்

# பவளவிழா மலரிலிருந்து.....

**வட்டுக்கோட்டை அருள்மிகு விசாலாட்சி சமேத விசுவநாதர் தேவஸ்தான முதல்வரின் ஆசியுரை**

**வைத்திய கலாநிதி அ.க. காசிப்பிள்ளை**
**சரபராசன் மருத்துவமனை, வட்டுக்கோட்டை.**

பவள விழாக் காணும் பண்டிதர் அவர்களை, உறவுமுறையிலும் நெருங்கிப் பழகிய நட்பு நிலையிலும் பல்லாண்டு காலமாக நன்கு அறிவேன். யாழ், குடா நாட்டில் தமிழ்மொழியை இனிது கற்றுணர்ந்த பெரியோர் வரிசையில் ஒருவராக. இவர் சமய, சமூக, கலாசார, கல்வி மேம்பாட்டுத் துறைகளில் ஈடுபட்டுழைத்து வருபவர். வட்டுக்கோட்டை இந்து சமய அபிவிருத்திச்சங்கத்தின் தலைவராய் இருந்த நற்பணி புரிந்தவர். அக்காலப் பகுதியில் இளைஞர்க்கும் வளர்ந்தோருக்கும் சைவசமய வகுப்புக்களைத் தொடக்கிச் சிறப்புற நடத்தி வந்தவர். இந்நாளிலும் அவ்வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. ஆண்டிறுதிதோறும் சைவத்திருநெறி விழாக்களைப் பலரின் உதவியுடன் நடத்தி வந்தவர்.

வட்டுக்கோட்டை அருள்மிகு விசாலாட்சிசமேத காசி விசுவநாத தேவஸ்தானத்தோடு நெருங்கிய தொடர்பை நீண்ட நாள்களாகக் கொண்டுள்ளவர். மகோற்சவ காலங்களில் தாம் மட்டுமன்றிப் பல்வேறு நல்லறிஞர்களையும் அழைத்து வந்து சைவசமய விரிவுரைகள் இடம்பெற உழைத்து வருபவர். விசுவநாதப் பெருமானைக் குலதெய்வமாகக் கொண்டொழுகுமிவர், “விசுவேசர் மும்மணிமாலை” என்னும் பத்திச்சுவை மிகுந்த பிரபந்தமொன்றைச் சில ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றி வெளியிட்டவர். எமது வேண்டுகோளுக்கியைய அண்மையில் ஆயிரத்து முந்நூற்றுக்கும் அதிகமான பாடல்களுடன் கூடிய விசுவேசர்புராணத்தை எம்பெருமான் பாதகமலத்தில் வைத்து மகிழ்ந்தவர். அவ்வேளை பொன்னாடை சாத்திப் பொற்கிழி வழங்கிச் சிறப்புச் செய்த நிகழ்வு இன்றும் என் இதயத்தில் பசுமையாக இருக்கிறது.

எமது ஊர் நூல் நிலையத்தை ‘ஆசியா பவுண்டேசன்’ நிறுவனத்தின் உதவியுடன் விரிவுபடுத்திச் சிறப்பாக இயங்க வழி செய்தவர். பல உரைநடை, செய்யுள் நடை நூல்களுக்கு ஆசிரியராக உள்ள பண்டிதர், வீதி செப்பனிடுதல் போன்ற சிரமதான முயற்சிகள் பலவற்றில் மிக்க பங்கு கொண்டுழைத்தவர். முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களுக்கு நினைவு விழா எடுப்பித்ததோடு அமையாது, அவருடைய பாடல்களைத் தேடிப் பெற்று ‘இளைஞர் விருந்து’ என்னும் பெயருடன் வட்டுக்கோட்டை இளைஞர் மன்றத்தார் வெளியிட உதவியவர். வட்டுக்கோட்டை, சைவ வாலிபர் கழகத்தாரின் நன்முயற்சியினால் தொடக்கப்பட்டு உயர்நிலையிலிருந்து தாழ்வுற்ற திருநாவுக்கரசு வித்தியசாலையைத் தாம் அதிபராயிருந்த காலத்தில் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்து தரமுயர்த்துவித்துக் கட்டடங்களை அமைப்பிப்பதில் பேரார்வம் கொண்டுழைத்தவர். வெற்றி கண்டவர்.

அளப்பரிய தொண்டுபல புரிந்த எங்கள் பண்டிதர் அவர்கள் இன்னும் பல பணிகள் செய்து பல்லாண்டு வாழ விசாலாட்சி சமேத விசுவநாதப் பெருமானின் திருவடியை வழுத்தி வாழ்த்துகின்றேன்.

# மயில்வாகனார் மகிழ்ந்து வாழ்க!
# வாழ்த்தியற் பாமாலை

அருட்புலவர். பண்டிதர் அ. ஆறுமுகனார்
தலைவர்,
வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம். பண்ணாகம், சுழிபுரம்.

1.நல்லவர்கள் கற்றவர்கள் கலைகள்பல வல்லவர்கள் நயக்கப் பெற்றுக்
கல்விவளர் திருநாவுக் கரசுவித்தி யாலயமிந் துக்கல் லூரி
எல்லையிலா ஆத்மீக சுகந்தரும்பல் கோயில்கள் இயைந்து சூழத்
தில்லைநடுக் கோவிலெனத் திகழும்விசு வேசர்தலம் சிறக்கும் பேரூர்

2.எழில்வட்டுக் கோட்டையூர்க் கதிரேசர் இல்லறத்தில் இருந்து தெய்வ
வழிபாடு தவம்தானம் செய்பேறாய்க் குலம்விளக்க வந்த மைந்தன்
பழிபாவம் சாராதான் கற்புடையான் பண்புடையான் பரந்த கல்வி
வளஞ்சிறந்த பேரறிஞன் இனியமயில் வாகனனார் மகிழ்ந்து வாழ்க.

3.பண்டிதராய்ப் பயிற்சிபெற்ற ஆசானாய் மாத்தளையில் கொழும்பில் முன்னாள்
வண்டமிழ்கற் பித்தபின்பு நீர்கொழும்பு விஜயரத்ன மாகல் லூரி
கண்டமுத லதிபராய் நல்லவண்ணம் பத்தாண்டு காலம் சேவை
கொண்டுபின்பு சங்கரனை வட்டூரில் சேவைசெய்தின் றோய்வுகொள்வோன்.

4.குழந்தைகளுக்கிளைஞருக்கு வளர்ந்தோருக் கேற்றதரம் கொள்ளஅன்னார்
உளங்கனியும் கவிதையினில் உரைநடையில் நூல்கள்பல உவந்து செய்தோன்
விளங்கிடுதன் குலதெய்வம் விசுவேசர் புராணமதும் விரித்துச் செய்தோன்
வழங்குசிவ நெறிநியமம் பூண்டமயில் வாகனனார் வாழ்க நன்றே.

5.செந்தமிழை மரபுவழு வாவண்ணம் காப்பதற்குச் சித்தங் கொண்டு
முந்துறஇவ் வட்டுக்கோட் டைத்தொகுதித் தமிழ்ச்சங்கம் முயன்று கால்கோள்
சந்தமுறச் செய்துபல பண்டிதரை உருவாக்கும் பணிமேற் கொண்ட
செந்தமிழின் செல்வரெனும் புகழ்பெற்ற தமிழ்ச்சான்றோன் சிறந்து வாழ்க.

6.வெள்ளியொடு பொன்கண்டு மணிகண்டு சீர்ப்பவள விழாவுங் கண்டோன்
தெள்ளுதமிழ் போலினிய தேவிமக்கள் சுற்றத்தார் சேவையாற்ற
விள்ளுமெண் பதில்முத்து விழாவும்நூ ற்றாண்டுபெரு விழாவும் கண்டு
வள்ளல்சிவ பெருமானார் திருவருளால் வாழ்வாங்கு வாழ்வாராக!

## மயில்வாகனனார் பற்றி......

புலவர் மணி, பண்டிதர் சோ. இளமுருகனார்.

06.05.1970

"அமுதமான கவிதை பொழியும் அழக வருக வருகவே
அன்பும் நண்பம் இன்புங் கொண்ட அறிஞ வருக வருகவே
திமித திமியென் றழகு நடனம் செய்யுங்கலப மடமயில்
சேருஞ்சோலை யூரவருக செல்வமாணி வருகவே....... "

## இனிய மயில்வாகனன்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும் ஒருசாலை மாணவருமாகிய பண்டிதர் க. சச்சிதானந்தன் **B.A (Hons.) Lon. M.Phil. (Lod.) Dip. in Edu. (Lond.)** அவர்கள் சொல்லியவை

இன்பத் தமிழேதன் இன்னுயிராய் மன்சேவை
அன்புக் குடலம் அளித்தான் – என்புக்குள்
ஈரம் இனிக்குமயில் வாகனனை, ஏத்துவிழா
நேரம் நினைத்த கவி.
வாச மலரெடுக்கார் மாலை தொடுப்பதற்க்
நேச மலரெடுத்தார் நெஞ்சினிலே – வீசுமணச்
செந்தா மரைமுகமாம் முல்லை சிறுசிரிப்பாம்
வந்தார் தொகுத்த மலர்.
வேறு
இனமிவன் தமிழால் எமதுற வென்பார்
நினைவுறு பவளவிழவினை நேர்வார்
தினமலர் முளரிச் செழுமுகை யோடு
மனமலர் தந்தனர் மமல ரென்றே.

பகைமுக மறியான் பலபல தொண்டின்
வகைமுக மறிவான் விழவினில் வந்தார்
முகைமுகக் குமுத முடிபிணைக் கின்றார்
நகைமுக இதழில் நறுமலர் முல்லை.

நறைசிறை படநெல் நடுபவர் வட்டூர்
உறைசிவன் அடிக்கே ஒருகவி மாலை
நிறைசெயும் இவனின் நினைவினில் நின்றார்
முறைசெயக் கரமாம் முகையெடுக் கின்றார்

வேறு

கயல்வாழ் கழனிக் கதிர்பொன் மலைசெய் வளவட்டூர்
மயில்வா கனனார் பவளத் திருநாள் மகிழ்வார்கள்
இயல்வா ரிதியர் இவர்மா ணவர்கள் தமிழின்றேன்
பயில்வார் குயிலாய்க் கவிபாடுபவர் பலரொன்றாய்.

வேறு

மடைசாய்த்த வயல்நெல்லின்
கிடைசாய்த்த பிடியரிவாள்
மிடிசாய்த்த முடிமன்னர்
குடிவாழும் வளவட்டூர்

மயில்வாகனன் அயல்வாழ்ந்திட
செயல்வாகனச் சிரமேறினன்
புயல்மாரியிற் பொழிபாவினன்
இயல்பாகவே இனிதானவன்

புவியொடும் புகழொடும்
கவியொடும் கனித்தமிழ்
அவியொடும் வாழுக
ஆண்டுபல் லாண்டே.

# நீர்கொழும்பிற் செந்தமிழ்ச் செல்வரின் சேவைகள்

இரா. சுப்பையா
199, கடற்கரை வீதி,

நீர்கொழும்பு.

முதன் முதலாக நீர்கொழும்பூரில் சைவத் தமிழ்ப் பள்ளிக்கூடம் ஒன்றினை ஆரம்பிப்பதற்காக, அவ்வேளை மாநகரச்சபைத் தலைவரும், இந்துவாலிப சங்கத் தலைவருமாகிய அமரர். உயர்திரு. ச.க. விஜயரத்தினம் J.P.U.M. வழக்கறிஞர் அவர்கள் பெருமுயற்சியினை மேற்கொண்டிருந்தார்கள். நீர்கொழும்பில் வாழ்கின்ற, சைவ நன்மக்களின் நலன் கருதிச் சைவத்தையும், தமிழ் மொழியையும், தமிழ்ப்பண்பாட்டையும் நிலைபெறச் செய்ய வேண்டுவது சிறந்த தொண்டென மதித்திருந்தார்கள். அக்காலங்களில் பதிவுசெய்யப்பெற்ற சங்கங்கள் சபைகள் மூலமாகப் புதிய பள்ளிக்கூடங்களைத் தொடங்க வாய்ப்பிருந்தது. அப்படித் தொடங்கிய பள்ளிக்கூடங்களுக்கு அரசினர் உதவி நன்கொடை அளித்து வந்தனர். எனவே கொழும்பு விவேகானந்த சபையை நாடினார். ஆரம்பப் பள்ளிக்கூடம் என்பதால் நியமனம் பெற்றிருக்கும் ஆசிரியர்கள் யாரும் இப்பள்ளிக்கூடத்திற்குப் படிப்பிக்க முன்வரவில்லை. அவ்வமயம் கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்த பண்டிதர் திரு. க. மயில்வாகனம் அவர்களை நேரிற் கண்டு உயர்திரு ச.க. விஜயரத்தினம் பேசிய பொழுது, பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதைப் பற்றியும், ஆசிரியுர் முன்வராத நிலைமையினைப் பற்றியும் கூறினார். தான் பள்ளிக்கூடத்தை ஆரம்பிக்க வருவதாகவும், தற்சமயம் கடமையாற்றுமிடத்திலிருந்து இராஜினாமாச் செய்து வருவதாகவும் கூறிக் கடமையினை ஏற்றார். பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளைச் சேர்த்தல் முதற் பல ஆரம்பத் தேவைகளை எல்லாம் உருப்பட உழைத்தார். இந்தப் பரோபகார சிந்தை தன்னலம் கருதாத செயல் என்பதையும், அவரது தமிழ்ப்பண்பாட்டினையும், சைவமும், தமிழும் தழைக்க வேண்டுமென்ற பரந்த பெருநோக்கத்தையும் காட்டுவதாயிற்று.

1954ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் விஜயதசமியன்று நீர்கொழும்பு இந்து வாலிப சங்க மண்டபத்தில், நீர்கொழும்பு விவேகானந்த விதித்தியாலயம் என்ற பெயருடன், பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணிணையேற்றுப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து வைத்தார். அந்நாள் 32 பள்ளிச்சிறுவர்களுன் ஆரம்பிக்கப்பெற்றது. சிறிது காலத்தில் விஜயரத்தினம் மகா வித்தியாலயமாக மாற்றம் பெற்றும் இன்று 1600 மாணவ மாணவிகளுடன் பல மாடிக்கட்டிடங்களுடன் ஒப்புயர்வின்றித் தனிச் சிறப்பெயற்தி, 1993ஆம் ஆண்டிலிருந்து மேலும் தரம்உயர்ந்து விஜயரத்தினம் மத்திய கல்லூரியாக வெற்றி வாகை சூடி முன்னணியில் திகழ்கின்றது.

இங்கு இவரது முயற்சியின் பயனாகச் செந்தழ் மொழியை வளர்க்கவும், தமிழ் ஆராய்ச்சிகளைப் பல வழிகளிலும் மேற்கொள்ளவும், ஆசிரியர் குழுக்களும், உயர் வகுப்பு மாணவர்களும் தொடர்புகள் வைத்திருந்தனர். இவரது இல்லத்தில் பாடங்கேட்போர் ஒரு பக்கமும், கருத்துக்கள் அறிய விரும்புவோம் இன்னொரு பக்கமும், மன்றங்கள் சபையோர் மற்றொரு பக்கமும் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

அன்பும், தமிழ்ப் பண்பாடும், நேர்மையும் ஒழுக்கமும் கடமையும் கொண்ட பண்டிதரிடம் சாதி சமய மொழி வேறுபாடில்லாதவர்களும் நண்பர்களாயிருந்தனர். அகத்தும் புறத்தும் முரண்பாடில்லாத வாழ்க்கை நெறியைக் கைக்கொண்டு தவறாது ஒழுகி வந்தார் என்றால் மிகையாகாது. சைவ சமய ஆலயங்களிலும், சங்கங்கள் சபைகளிலும் முக்கிய தொடர்புகளிருந்தன. அவ்வப்போது அவர்கள் தேவைகளுக்கு ஏற்பக் கருத்துரைகள், பேருரைகள் முதலியன ஆற்றயம் வரலானார். குறிப்பாக 1962ஆம் ஆண்டு தவப் பெருந்திரு குன்றக்குடி அடிகளாரை நீர்கொழும்புக்கு வரவழைத்து அருள்நெறிப் பேருரைகள் உபந்நியாசம் ஆகியனவற்றைத் தாமும் கலந்து சொற்பெருக்காற்றியிருக்கின்றார். எனவே இன்னோரன்ன செயல்களால் சைவநன்மக்கள் அனைவரும் இவரிடம் பெருமதிப்பு வைத்திருக்கின்றனர்.

குன்றிடைத் தீபமாக ஒளிரும் நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயத்திற்குப் பாடசாலைக்

கீதமியற்றித் தந்தமை இவரைச் சார்ந்ததே. இவர் தாமாகவே செயல்படுத்திய ஆலயத்தொண்டுகள் பலவாகும்.

ஸ்ரீ சித்திவிநாயகர் திருவிரட்டை மணிமாலை

ஸ்ரீசிங்கமாகாளி அம்பாள் திரு ஊஞ்சல்

ஸ்ரீ முத்து மாரியம்மன் திருப்பதிகம்

ஆகிய பிரபந்தங்களைப் பாடியிருப்பது மக்கன் நன்மனதைக் கவர்வனவாகும்.

சில வேளை நாம் அவரோடு பேசிக்கொண்டிருக்கும் போதே செய்யுள்களை எழுதுவார். நாவன்மை, பயிற்சிப்புலமைத்திறன் முதலியவற்றை நேரில் கண்டிருக்கின்றேன். வாழ்க்கையில் சோதனைகள் ஏற்பட்டாற் கூட “நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே” என மனத்திடம் கொள்ளும் மாண்புடையவர்.

மிக அண்மையில் பெருங்காப்பியமாக ‘விசுவேசர் புராணம் ’ இயற்றியிருக்கின்றார் என அறிகின்றேன். சைவ ஆசாரசீல அனுட்டானங்களைத் தழுவி எந்நேரமும் சிவனைப் போற்றும் சான்றோராகிய பண்டிதர் க. மயில்வாகனம் அவர்கள் ‘சித்தம் அழகியார் பாடாரே நஞ்சிவனை’ என்பது போல மனத்தூய்மை உடையார் என்பது புலனாகின்றது.எழுப்த்தைந்து - அகவையை அடைந்த இவ்வேளையில் அன்னார் வாழுங் காலத்திலேயே அவரை கௌரவிக்க வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம் முன்வந்தமை பாராட்டுதற்குரியது.

பண்டிதர்கள் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம். பாராட்டுகின்றோம்.

## தமிழ்ப்பணியும் கலைப்பணியும் புரியும் தலைவர்

## வாழ்த்துரை

யா/வட்டு திருநாவுக்கரசு வித்தியாசாலை முன்னைநாள் அதிபர்

வட்டுக்கோட்டை, நாட்டுக்கூத்துக் குழு ஆயுட்காலத் தலைவர்

அன்புக்கும், மதிப்புக்கும் உரிய பண்டிதர் அவர்களுக்கு வட்டுக்கோட்டைத் தொகுதித்தமிழ்ச் சங்கத்தார் பாராட்டு விழாவெடுப்பது குறித்துப் பெருமகிழ்வடைகிறேன். தொன்மைமிக்க நம் தமிழ்மொழி இயல், இசை, நாடகமெனும் முப்பிரிவுகளைக் கொண்டது.பண்டிதர் அவர்கள் இயற்றமிழில் எத்துணை ஈடுபாடுடையாரோ அதுபோல இசை, நாடகத்தமிழிலும் ஈடுபாடு உள்ளவர். இயற்றமிழை நல்லாசிரியர்பால் கற்ற இவர், இசைத் தமிழ் வல்லார் பலருடன் பழகி இசையறிவை வளர்த்துக் கொண்டார். அதன் பயனாகக காலத்திற்குக்காலம் பல அன்பர்களின் வேண்டுகோளுக்கியையப் பாடசாலைக் கீதங்கள் மற்றும் இசைப்பாடல்கள் போன்றவற்றையெலாம் ஆக்கியிருக்கின்றார்.

நாடகத்தமிழைப் பொறுத்தவரையில் அது வட்டுக்கோட்டை ஊரவர்களின் உதிரத்துடன் கலந்துள்ளது. பண்டிதர் அவர்கள் நூல்கள் வாயிலாக நாடகத் தமிழைப் பற்றி நன்கு அறிந்துக் கொண்டவர். அவர் முன்னோர், நாட்டுக்கூத்தில் நாட்டங்கொண்டு சிறப்புற நடித்தவர்கள். நாட்டுக்கூத்துக்கலை எம் ஊரவர்களின் பரம்பரைப் பழம்பெருஞ்சொத்து. அதை அழிந்து விடாமற் பாதுகாக்க வேண்டுமென்ற பேரார்வத்தினால் 1961 ஆம் ஆண்டில் ‘நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழு’ என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இவருக்கு நாட்டுக்கூத்தில் உள்ள அபிமானத்தைக் கண்ட அமைப்பினர் இவரையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர். அதனால் உண்டாய பயன்களோ அளப்பிலவாம்.

இலங்கை அரசினர், விவசாய எழுச்சி சம்பந்தமான நாடகங்களை, ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களும் ஆக்கி மேடையேற்றி உதவ வேண்டுமென வேண்டுகோள் விடுத்தபொழுது வலிமேற்கு உதவி அரச அதிபர் மட்டத்தில் நடைபெற்ற பெருவிழாவின் போது 'உழவன் உலகநாதன்' என்ற பெயரில் அருமையான நாட்டுக்கூத்து நிகழ்ச்சியொன்றினை ஆக்கி நெறிப்படுத்தி நடத்தி எமது கூத்துக் குழுவுக்குப் பாராட்டும், பரிசும் பெற்றுத் தந்தவர். வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளின் கலைவிழாக்கள் நினைவுறுத்துக் கழகங்கள் முதலியவற்றில் பல்வேறு நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளை மேடையேற்றி உதவியவர். அனைத்திலங்கை மட்டத்தில் நடத்தப்பட்ட ஐ.நா. சபைக் கலை, கலாசார விழாவில் இவர் பயிற்றுவித்து உதவிய 'சிவவேடனும், தவவேடனும்' என்னும் நாட்டுக்கூத்து நிகழ்ச்சி முதல் இடம்பெற்றுத் தமிழ்மக்களால் அன்றிப் பிறமொழி மாந்தராலும் பாராட்டப்பட்ட செய்தி மகத்தானதாகும்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க விழாக்கள் சிறப்புறுவதற்குப் பல சந்தர்ப்பங்களில் நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளைப் புகுத்தி நாட்டுக்கூத்துக் குழுவுக்கும் சங்கத்திற்கும் பெருமை தேடித்தந்தவர்.நாட்டுக்கூத்தன்றி மேடை நாடகங்களை எழுதி நெறிப்படுத்திக் கொழும்பு, நீர்கொழும்பு, சங்கானை முதலிய இடங்களில் பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டவரென்பது யாவரும் அறிந்ததே.

வட்டுக்கோட்டை அருள்மிகு விசாலாட்சி சமேத காசிவிசுவநாத சுவாமி தேவஸ்தான மகோற்சக காலங்களில் இவர்களுடைய திருவிழாவின் போது புராண இதிகாச சமய கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு நாடகங்களை எழுதி நடத்துவிப்பவர். சகுந்தலையென்னும் நாடகம் இன்றம் எமது நினைவிலிருந்து நீங்காது இருக்கின்றது. மேலும் இவர் வானொலி நாடகங்களிலும் பங்கு கொண்டு உழைத்தமை குறிப்பிடத்தக்கது.பண்டிதர் அவர்கள் தமிழ்ப்பணியோடு கலைப்பணியும் புரிந்து பல்லாண்டுகள் வாழவேண்டுமென்று இறைவனை வணங்கி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# விசுவேசர் புராணத்திற் கண்ட பாராட்டுரைகளிற் சில துளிகள்

பண்டிதர் க. மயில்வாகனனார் அவர்களது படைப்புக்களில் முத்தாரமாக திகழ்வது

அருள்மிகு விசுவேசர் புராணம்

“...................... இப்புராணம் மரபுவழி தவறாது அமைந்துள்ளது. மயில்வாகனனாரின் சீரிய ஆற்றலைச் செப்புகின்றது”.

நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய ஸ்வாமிகள்.

“...................... அருள்மிகு விசுவேசர் புராணத்திலிருந்து இவர்தம் சைவ சமய ஆற்றலையும் தமிழ்மொழிப் பாண்டித்தியத்தையும் எவரும் இலகுவில் உய்த்துணரலாம்”.

யாழ் சிவத்தொண்டன் தலைவர் தவத்திரு. அ. செல்லத்துரை சுவாமிகள்.

“................... இந்நூல் தலபுராணங்களைப் போல வடமொழியிலிருந்து செய்யப்படாது புதுமையாகப் புனைந்த ஓர் இலக்கியம். சிந்தாமணி, இராமாயணம், பெரிய புராணம், கந்த புராணம், தேவாரம், திருவாசகம் முதலியவற்றின் சாயல் இந்நூலில் படிந்திருப்பதை நூற்பயிற்சியுடையோர் நன்கு அறிவர்”.

காரை ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம் மூதறிஞர் பண்டிதமணி சிவத்திரு த. வைத்தீஸ்வர குருக்கள்.

“................. தலபுராண மரபுகள் ஒன்றும் வழுவாது அழுத்தமான பக்தியுணர்வு இழையோட செம்மாப்புடைய விருத்தப் பாக்களால் கற்போரை களிபேருவகையில் ஆழ்த்தும் ஓர் அரிய சமயக் கருவூலமாக ஆசிரியர் இப்புராண நூலை சைவ உலகிற்கு உபகரித்துள்ளார்.”

“................... இலங்கை வாழ் தமிழ்ப் புலவர்களிடம் காணப்படும் இலக்கணப் புலமையும் மரபுவழித் தமிழ் உற்றமும் விரிவான பன்நூல் அறிவும் பண்டிதர் க. மயில்வாகனனாரிடம் நிறைந்திருப்பதில் வியப்பேதுமில்லை.”

தமிழ்நாடு, மயிலாடுதுறை முனைவர் இரா. செல்வக்கணபதி, எம்.ஏ. பி.எட். பி.எச்.டி.,

“.................... பல்லாற்றானும் மெய்ப்பயன் விளைக்கும் இப்புராணத்தில் சம்பிரதாயப்படி குற்றங் காணில் ஆனந்தக்குற்றம் காணப்படலாம். ஆசிரியர் தம் வாக்காகவும், கதாபாத்திரங்களின் வாக்காகவும், அளவிறந்த பக்தி வாசகங்களை தந்துள்ளார். இது பக்தி ஆனந்தம் என்றுமாம் ........ நாளிதுவரை சைவசமய தத்துவ ஞான தாம் தேடித் தேக்கி வைத்திருந்த அறிவனுபவப் பயன் முழுவதையும் இத் தலபுராணத்தின் மூலம் சைவ உலகிற்கு வழங்கியுள்ளார்.”

யாழ் ஏழாலையூர் இலக்கியக் கலாநிதி, பண்டிதமணி சித்தாந்த கலாநிதி திரு. மு. கந்தையா.

“................ விசுவேசர் புராணத்தை புலவர்மணி மயில்வாகனனார் ஒரு சிறப்புமிக்க சைவக் களஞ்சியமாக ஆக்கியுள்ளார். சிவ வழிபாட்டின் மேன்மையையும், அவ்வழிபாட்டில் இணைவோர் பெறும் பயனையும் தெளிவுபடக் கூறியுள்ளார். இப்புராணத்தில் பல்வேறு பாவடிவங்கள் கையாளப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும் .”

பேராசிரியர், கலாநிதி, சிவத்திரு ப. கோபாலகிருஸ்ணஐயர் அவர்கள், இந்து நாகரிக பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்

“............ புராண ஆசிரியர் தமிழ் இலக்கிய இலக்கண வல்லுநர் என்பதனாலே, செய்யுள்கள் செம்மையுடன் அழகுடனும், கற்பனைத் திறனுடனும் அமைகின்றன. சென்ற காலப் பழுதிலாத்

திறமையும் இக்கால நிலைப்பாடுகளையும் ஒருங்கமைத்துப் புராணத்தினை ஆசிரியர் இயற்றியுள்ளார். தமிழன்னைக்கு இன்னுமொரு அணிகலனை விசுவேசர் புராணமாக அளிக்கும் பண்டிதர் தமிழ்மக்களின் பாராட்டுக்குரியவர்."

பேராசிரியர் திரு. அ. சண்முகதாஸ் அவர்கள். முதுநிலைப் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்.

"இனிய அன்புக்குரிய பண்டிதல் க. மயில்வாகனம் அவர்கள் நல்ல தமிழறிஞர். நுண்ணி நூல் பல கற்றவர். திருஞானசம்பந்தர் அருள்வாக்குப்படி கற்றல், கேட்டல், உடையார், பெரியர் போன்றவர். இவருடன் உரையாடல் நிகழ்த்துவது சிந்தைக்கும், செவிக்கும் இன்பமாக அமையும்."

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

"............... இலக்கியத் துறையிலும், சமயத் துறையிலும் நற்பணியாற்றி வருபவர். தமிழில் நல்ல பாண்டித்தியமும், செய்யுள் இயற்றுவதில் சிறந்த ஆற்றலும், புராணங்களிற்கு பொருள் விரித்துரைப்பதில் நல்ல தேர்ச்சியும் உடையவர். சிறந்த சொற்பொழிவாளர்."

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணர், யாழ். பல்கலைக்கழகம்

மனித நேயப் பண்பு படைத்த ஆசிரியனாக, அதிபராக, பேச்சாளராக, எழுத்தாளாக, கலைஞனாக, சமூக சேவையாளராக, சமயப் பிரசாரகனாக பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு ஒரே சிந்தனையுடன் செயற்பட்டு ஒவ்வொரு துறையிலும் புகழுடன் விளங்கினார்.

ப. சச்சிதானந்தம், முன்னாள் கல்வி அதிகாரி.

இந்நூல் தலமும் தலஞ்சார்ந்த ஊரும், அதன் வளங்களான கலைவளம், கலாசார வளம், மக்கள் வாழ்வைப் பயனுள்ளதாக்கும் பக்தி வளம் எனப் பல்வேறு வளங்களை உள்ளும் புறமுமாக ஆராய்ந்து வெளியிடுகிற்து. அன்றியும், புராண மரபினைப் பேணும் தல புராணப் பெற்றியும் கொண்டது. சுருங்கக் கூறின் கல்வியால் அமைவது ஒழுக்கம். ஒழுக்கத்தின் விளைவு தெய்வப் பேறு. அது சிவகதிக்கு இட்டுச் செல்லும். இதனை,

**மன்னு சீர்வீசு வேசர்தம் மாக்கதை**

**முன்னும் அன்பின் மொழிந்தவர் கேட்டவர்**

**இன்னல் நீங்கி நெடிதிங் கிருந்துபின்**

**துன்னி வானஞ் சிவகதி துய்ப்பரே.**

என்னும் நிறை மொழியால் ஆணையிட்டுக் கிளந்த மந்திரமாகத் தந்துள்ளார் நூலாசிரியர். அவர் தல வரலாற்றுடன், யாழ் நாட்டின் தொன்மை சிற்புமெல்லாம் இந்நூலின் வரலாறாக இயம்பும்....

**பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன், செயலாளர், இலக்கிய மன்றம்.**

# நான் கண்ட பண்டிதர் மயில்வாகனனார்

கலாநிதி க. வைத்தீசுவரக் குருக்கள்,

ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

எதிர்பாராத பேரதிர்ச்சி தரும் சில நிகழ்வுகள் மக்களைப் பெரிதும் பாதிப்பதுண்டு. பண்டிதர் மயில்வாகனனாரின் மறைவு எனக்குப் பேரதிர்ச்சியைத் தந்தது. உடல்நலம் குன்றியிருந்தாரெனினும், அவர் தமிழ்மொழியையும் தமிழ் மக்களையும் பெரிதும் பாதிக்கும் நிகழ்ச்சிகள் குறித்து இடையிடையே எனக்கு கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தார்.

நான் அவரோடு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் நெருங்கி அந்நியோன்னியமாகப் பழகியிருக்கிறேன். அவர் பழகுவதற்கு இனியவர். மாற்றுக் கருத்து உடையவர்களுடனும் அன்பாகப் பழகும் பண்பாளர். மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது கருமமே கண்ணாயிருந்து தமிழுக்கு உழைக்கும் இயல்பினர். தம் பெருமை தாமறியாத் தன்மையினர். வித்துவான் சுப்பையாபிள்ளை முதலான தொல்லாசிரியர்களிடம் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும், சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கிய நூல்களையும் பழைய குருகுல மரபில் முறையாக கற்று, அவற்றில் ஊறித் தேர்ச்சிப் பெற்ற, முதிர்ந்து பகுத்த பெருந் தமிழறிஞர். அவருடன் உரையாடுவது சுவாரசியமாகவிருக்கும்.

பண்டிதர் பலராலும் மதிக்கப்பட்டார். அவருக்கு இயல்பாக அமைந்திருந்த ஆற்றலும், அவரது ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், பலதுறைப் பயிற்சியுமே அவரை இத்தகைய உயர்ந்த மதிப்புக்கு உரியதாக்கின.

எழுதும் ஆற்றல், செய்யுள் இயற்றும் ஆற்றல், உரை நிகழ்த்தும் ஆற்றல் ஆகிய இந்த மூன்று ஆற்றல்களும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள் ஒரு சிலரே உளர். அச்சிலருள் முன்னணியில் இயங்கியவர் பண்டிதர்.

அவருடைய வசன நடை, சோவரையர், பரிமேலழகர், நச்சினாக்கினியர் என்வர்களின் வசன நடையை நினைவுக்கு கொண்டுவரும்.

பண்டிதர் சிறந்த உரையாசிரியருமாவார். நாவலரின் மதிப்பைப் பெற்ற கார்த்திகேயப்புலவர் பாடிய திக்கைத் திரிபந்தாதி, தன்னை யமக அந்தாதி என்னும் நூல்களுக்கு அவர் எழுதிய உரையின் சிறப்பையும், ஆழத்தையும் பாராட்டி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி ஆ. சுப்பிரமணியம் அவர்கள் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

‘செந்தமிழ்ச்செல்வர்’ என்று பாராட்டப்பட்ட மயில்வாகனனார் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார். அவராற் பாடப்பட்ட விசுவேசர் புராணம், ஆண்டிகேணி ஐயனார் புராணம் என்ப அவரது புலமையை எடுத்துக்காட்டும்.

பண்டிதர் சபையோரைக் கவர்ந்து வசீகரிக்கும் இனிய பேச்சாளர். 1975ஆம் ஆண்டு காரைநகரில் நடந்த மணிவாசகர் விழாவில் சொற்பொழிவாற்றுவதற்குத் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த வித்துவான் வி.சா. குருசாமி தேசிகர் எம்.ஏ. அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார். விழாவின் போது பண்டிதர் மயில்வாகனனாரும் மூன்று நாள்கள் சொற்பொழிவாற்றினார். அதனைக் கேட்டு மகிழ்ந்து அவரைப் பெரிதும் பாராட்டியதும், ஆதீனத்துக்கு வந்து அங்கே சில நாட்கள் தங்கியிருக்குமாறு அவருக்கு அழைப்பு விடுத்ததும் இன்றும் என் நினைவில் இருக்கின்றன.

பண்டிதர் புராணங்களுக்குப் பயன் சொல்லுவதிலும் வல்லவர். அவருடைய பயனைக் கேட்பதற்கு மக்கள் கூட்டங்கூட்டமாக வருவதை யான் கண்டிருக்கிறேன்.

அவர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் கற்பித்த காலத்தில் அங்கிருந்த புலவர் சிவகருணாலய

பாண்டியனார், பண்டித வகுப்பு நடத்தி வந்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்கி மயில்வாகனனார் அவருடன் சேர்ந்து பண்டிதர் வகுப்பு மாணவர்களுக்கு கற்பித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலத்தில் ஆண்டிகேணி ஐயனார் புராண வெளியீட்டு விழா காரைநகர் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் பண்டிதரும் கலந்துக் கொண்டார். இதுவே அவர் கடைசியாகக் கலந்துக் கொண்ட நிகழ்ச்சியாகும். அன்று காரைநகர் மணிவாசகர் சபையின் சார்பில் அவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமை குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கற்பகத்தருவை ஒத்த பண்டிதரின் மறைவு எமக்கும் எமது சமூகத்துக்கும், நாட்டுக்கும் பேரிழப்பானதாகும்.

**மயில்வாகனனாரின் பிரிவாற்றாது விடுத்த செய்திகள் சில....**

## பக்தியும் கனிவும் புலமையும்......

**கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் முன்னாள் ஆசிரிய கலாசாலை அதிபர்**

**(ஆங்கில விரிவுரையாளர்)**

பழந்தமிழ் மரபைப் பேணிகாத்து வளர்த்ததொரு தலைமுறையின் கடைசி ஓலைகளில் ஒன்று பழுத்து உதிர்ந்து, காலநதியில் நித்தியத்துவத்தை நோக்கி விரைகிறது. ஆம்!. வட்டூர் சிந்துபுரத்து மூதறிஞர் பண்டித மயில்வாகனனார் மறைவையே குறிப்பிடுகிறேன்.

1939 ஆம் ஆண்டளவில் பரமேஸ்வரக் கல்லூரியில் இயங்கிய பண்டித ஆசிரிய கலாசாலையில் சேர்ந்து மூன்று ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சியும் பண்டிதர் பட்டமும் பெற்றுத் தேர்ந்தவர் மயில்வாகனனார். அங்கு கற்றுத் தேறிப் பின்னாளில் பேரும் புகழும் பெற்றவர்களுள் க. வீரகத்தி, மன்னவன் கந்தப்பு, க. சச்சிதானந்தன், க. நாகலிங்கம், க. மயில்வாகனம், சேர். தியாகராசா முதலியோர் குறிப்பிடத்தக்கோர். கலாசாலையில் விரிவுரையாளர்களாய் இருந்தோர் கலாநிதி கு. சிவப்பிரகாசம், சு. நவநீதகிருஸ்ணபாரதி, மு. ஞானப்பிரகாசம், சிதம்பரப்பிள்ளை வித்துவான் கார்த்திகேசு, சு. நடேசபிள்ளை முதலிய பேரறிஞர்கள் (பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை முதலியோர் அழுக்காறு கொண்டு செய்த விஷமப் பிரசாரங்களை மீறி இம்மாணவர் எழுந்தது சுவாரசியமான கதை).

பண்டித மயில்வாகனனார் ஆசிரியராகவும், அதிபராகவும், பாடநூல் எழுத்தாளராகவும் நெடுங்காலம் பணியாற்றியவர். இன்று முதன்மைக் கல்வி நிலையமாக விளங்கும் நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டபோது நிறுவுநரின் அழைப்பின் பேரில் அங்குபோய்த் தமிழ் வளர்த்தவர். தமது சொந்த ஊராகிய வட்டுக்கோட்டையில் அமரர் புலவர்மணி ஆறுமுகனாரோடு சேர்ந்து தமிழ்ச்சங்கம் நிறுவியர். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சகர்களுள் ஒருவராக நெடுங்காலம் பணியாற்றியவர். பல தசாப்தங்களுக்கு முன்பே இவர் எழுதிய பாடநூல்கள் யாழ்ப்பாணம் கு.வி. அச்சகத்தினரால் வெளியிடப்பட்டு மாணவர்களுக்குப் பெரிதும் உதவின.

மயில்வாகனனார் எழுதிய நூல்கள் பெரும்பான்மையும் சைவசமயம் சார்ந்தவையே. ஊஞ்சல், பதிகம், பிள்ளைத்தமிழ், திருபள்ளியெழுச்சி, அம்மானை, தவபுராணம் என அவை விரியும். இவற்றுள் வட்டுக்கோட்டை விவுசேசர் புராணம், ஆண்டிக்கேணி ஐயனார் புராணம் இரண்டினையும் வெளியீட்டு விழாக்களில் கலந்துக்கொண்டு உரையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்புலவர் பெருமானது ஆழ்ந்தகன்ற நூலறிவும் கற்பனை வளமும் சொல்லிற்பனமும் என்னைப் பணித்தன. இரண்டொரு உதாரணங்கள் காட்ட விழைகிறேன்.

விசுவேசர் புராத்தில் யாழ் நாட்டுச் சுருக்கம் பாடும் புலவர், யாழகத்தின் எல்லைகள் பாடி, நாகர்வழி வந்தோர் பெருமை விரித்து, வீணாகாப் புரப்பதி பற்றிப் பேசுவார். பேசுகையில் தம்பாட்டுடைத் தலைவராகிய விசுவேசரையும் குறிப்பிடுகிறார்.

‘‘கோணாகணையில் துயில்வானும்

குளிர்தா மரையின் மேலானும்

காணார் கழலே தொழுதேத்தும்

கடவுட் பெருமான் விசுவசன்

தாணா ளுந்தந் தலையேத்தும்

தக்கோர் உறையுஞ் சால்புமலி

வீணா கான புரப்பதியாய்

விளம்பும் பெருமைத் திருநாடு

வட்டுக்கோட்டை வரலாற்றைச் சுட்டிச்செல்கையில், அமெரிக்கர் நிறுவிய வட்டுக்கோட்டை செமினறி என்ற கலைக்கழகம் ஆற்றிய பணியைப் போற்றுகிறார். குறிப்பாக பிக்கினல் ஐயர் என மக்களால் போற்றப்பட்ட அதிபரை.

புக்கசீர்க் குரவர் தம்முள்

பொறையுடன் அருளும் பூண்டு

மிக்குயர் சிலுவை தாங்கி

விளங்கும் அதிபர் தம்முள்

பிக்கினல் ஐயர் போலப்

பேசிட எவரும் இல்லை

தக்கபேர் ஆசான் அன்னோன்

தன்புகழ் வாழி வாழி.

கூத்திலே கட்டியங்காரனுக்கு முக்கிய இடமுண்டு. சபையோரை நாடகத்தோடு இசைவிப்பவன் அவன். அவன் வருகையே கலகலப்பாக இருக்கும்.

கட்டியங் காரன் றானுங் கனத்தமுண் டாசு கட்டிப்

பட்டுரை தரித்து மிக்க பவிசடன் சபைக்கு வந்து

மட்டிலா உவகை விஞ்ச வளமலி கதைதொ டுத்து

இட்டமாய் வரவு கூறி ஏவரும் மகிழ வைப்பானன்

விசுவேசர் புராணத்தில் வரும் அம்பிகை துதி,

அவள் தாள்தொழா அன்பர்களைக் கூவி அழைக்கிறது

பெருமாட்டி எமையாளும் பெண்ண ணங்கு

பிறங்குமுயிர்க் குலமனைத்தும் பேணு மன்னை

உருமாற்றித் தக்கனுக்குத் தண்டம் தந்தே

உற்றமறித் தலையீந்தோன் உவக்கும் தேவி

கருமாற்றிப் பிறவாமே காக்கும் சூலி

கைதொழுவார் கருள்புரியும் காளி வட்டூர்

மருவாருங் காக்கையம் பதியுள் வந்தாள்

மலரடிகள் தொழுதெழவே மகிழ்ந்த வாரீர்

இன்று விசுவேசர் புராணத்தை மீளப் புரட்டிப் படிக்கும்போது நம் புலவர் பெருமானின், பக்தியும் கனியும் புலமையும் நம்மை ஆட்கொள்கின்றன.

நிறைய எழுதலாம். நெடுநாளுக்கு முன்பே பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா சொன்னதைவிட மேலாக நம்மால் ஏதும் சொல்ல முடியாதே!


‘‘அறிவற்றம் போகார் நடுநிலை நீங்கார்,

அறிவியல் வாணிபம் விரும்பார்,

அன்புநெறி வழுவார் அறத்திறன் பிறழார்

இத்தகையது இவர் வண்ணம் எழுத்து

வண்மும் இயையே.’’



# பண்டிதர் வழங்கிய செவ்வி

செவ்விகண்டவர்: ப. மகாலிங்கசிவம் **B.A. (Hon.)**

**கேள்வி: உங்களது இலக்கியப் பணி பற்றிக் கூறுங்களேன்?**

பதில்: நான் கவிதை, கட்டுரை, சொற்பொழிவி என்ற மூன்று துறைகளிலும் சைவத்துக்கும், தமிழுக்கும் இயன்றளவு பணியாற்றியுள்ளேன்.

**கேள்வி: இத்தகைய பணிகளில் நீங்கள் ஈடுபடுவதற்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் யார்?**

பதில்: எனது ஆசிரியர்களே எனக்கு வழிகாட்டிகளாக இருந்தனர். ஈழத்தின் புகழ்பெற்ற கவிஞர்கள், அறிஞர்கள் பலரிடம் நான் கல்வி கற்றுள்ளேன். நவாலியூர் சோமசுந்தரப்புலவர். அவர் மகன் புலவர்மணி சோ. இளமுருகனார், நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதமணி ந. சுப்பையாபிள்ளை, வித்துவான் க. கார்த்திகேயர், கலாநிதி கு. சிவப்பிரகாசம் முதலியோரிடம் நான் கற்றிருக்கிறேன். இவர்களுள் ந. சுப்பையாபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தார். நான் வட்டுகோட்டையில் இருந்து நடந்து சென்றுதான் அவரிடம் படித்தேன்.

**கேள்வி: நீங்கள் முப்பதுக்கு மேற்பட்ட செய்யுள் இலக்கியங்களைப் பாடியிருக்கிறீர்கள். உங்களது கவிதைத்துறை ஆர்வத்துக்குக் காரணமாய் இருந்தவர் யார்? உங்களது பிரபந்தங்களில் முக்கியமானவை எவை என்பன பற்றிச் சிறிது கூறுங்கள்?**

பதில்: எனது ஆசிரியராக நவநீத கிருஷ்ணபாரதியாரின் கவிதைகளைப் படித்துப் பார்த்த பின்னரே எனக்கு கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. சோமசுந்தரப்புலவரும் எனது ஆர்வத்துக்கு காரணமாக இருந்தார். எனது இலக்கியங்கள் பிள்ளைத்தமிழ், அம்மானை, தலபுராணம், பதிகம் எனப்பலவகை வடிவங்களில் அமைந்தவை. பல்வேறு அனுபவங்களின் விளைவாக எழுந்தவை. உதாரணமாக சந்நிதி முருகன் செஞ்சொல் மாலை சந்நிதி ஆலயத்துக்கு நடந்து செல்லும் போது பாடப்பட்டது. அருள்மிகு விசுவேசர் புராணம் எனது செய்யுள் இலக்கியங்களிலேயே மிகவும் நீண்டதாகவும் 1320 பாடல்களை கொண்டதாகவும் உள்ளது. அண்மையில் வெளிவந்த 191 செய்யுள்களைக் கொண்ட ஐயனார் புராணத்தை எனது 87ஆவது வயதில் பாடினேன்.

**கேள்வி: உங்களது பிரபந்தங்களுள் பெரும்பாலனவை சமயச் சார்பானவையாக உள்ளன. இதற்குக் காரணம் என்ன?**

பதில்: இன்றைய காலத்தவரிடையே சமய நம்பிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அவர்களிடம் சமய அறிவையும், சமய நம்பிக்கையும் வளர்த்தெடுக்க வேண்டுமென்பது எனது முதலாவது நோக்கமாகும். முன்னோரால் தொடக்கப்பட்ட சமய இலக்கிய மரபை வளர்த்தெடுப்பது இன்னொரு நோக்கமாகும்.

**கேள்வி: குழந்தைகளுக்கான இன்பத்தமிழ்ப் பாடல்கள் என்னும் குழந்தைப் பாடல் தொகுதியையும் வெளியிட்டிருக்கின்றீர்கள். குழந்தைப்பாடல்கள் எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கருதுகின்றீர்கள்?**

பதில்: அவை சிறார்களுக்கு எளிதில் விளங்கக் கூடியனவாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய சந்தத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

**கேள்வி: உங்களது கட்டுரை முயற்சிகள் பற்றி கூறுங்கள்?**

பதில்: மாணவர் செந்தமிழ்க் கட்டுரைகள் சங்க நூல்களில் வரும் சொல்லோவியங்கள் முதலிய பல கட்டுரை நூல்களை வெளியிட்டிருக்கின்றேன். அது மட்டுமன்றி கு.வி. அச்சகம் வெளியிட்ட தமிழ் சமய நூல்களிற் பெரும்பாலானவற்றையும் நானே எழுதியிருக்கின்றேன். காசதளகம் அச்சகத்திலும் எனது பாடநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வீரகேசரி, ஈழநாடு முதலிய பத்திரிகைகளில் எழுதியுள்ளேன். “சிகண்டிர்” என்னும் புனைப்பெயரில் தேன்கூடு என்னும் பகுதியில் இலக்கியம், இலக்கண கட்டுரைகளை சஞ்சீவியிலும், உதயனிலும் எழுதியிருக்கின்றேன்.

**கேள்வி: இலக்கணத் தமிழில் அமைந்த உமது சொற்பொழிவுகள் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்டதாக அறிகின்றோம். அது பற்றிக் கூறுங்கள்?**

பதில்: நான் மிக நீண்ட காலமாகவே சொற்பொழிவுகள் செய்து வந்துள்ளேன். பல்வேறு இலக்கிய விழாக்களிலும் தமிழ் சங்கங்களிலும் சொற்பொழிவாற்ற விரும்பி அழைக்கப்பட்டிருக்கின்றேன். திருக்கேதீஸ்வர உற்சவத்தின் போதும் வருடாவருடம் எனது சொற்பொழிவும் இடம்பெற்றது.

**கேள்வி: நீங்கள் சொற்பொழிவாற்றிய போது, மறக்க முடியாத ஏதாவது இடம்பெற்றிருக்கிறதா?**

பதில்: ஆம். ஒரு முறை கொழும்பிலுள்ள சிறைச்சாலை ஒன்றிற்குச் சொற்பொழிவாற்ற சென்றேன். பேச்சினிடையே, 'தேடிக்கண்டு கொண்டேன் திருமாலோடு நான்முகனும்...." என்னும் பாடலலைப் பாடினேன். அவ்வேளை கைதிகளில் ஒருவர் ஓடி வந்து "உதனைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கின்றேன். எங்கே எனக்கு காட்டுங்கள் பார்க்கலாம்" என்று என்னை இறுகக் கட்டிப்பிடித்துக் கொண்டார். சிறைக்காவலர்கள் தலையிட்டுத்தான் என்னை மீட்டெடுத்தனர்.

**கேள்வி: உங்களது ஆசிரிய கலாசாலைக்கல்வி பற்றி கூறுங்கள்?**

பதில்: 1939 ஆம் ஆண்டு பரமேஸ்வரா ஆசிரியர் கலாசாலைக்குத் தெரிவானேன். பண்டிதர் கா. பொ. இரத்தினம், நாவாலியுர் சோமசுந்தரப்புலவர் முதலிய பலரிடம் கற்கும் வாய்ப்பு அங்கு கிடைத்தது. பண்டிதர் க. சச்சிதானந்தம், பண்டிதர் இ. நாகலிங்கம், பண்டிதர் அ. ஆறுமுகம் ஆகியோர் என்னுடன் கற்றவர்களில் குறிப்பிடக் கூடியவர்கள்.

**கேள்வி: பண்டிதர் பட்டத்தை எந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்டீர்கள்?**

பதில்: நான் மதுரைத் தமிழ்ச்சங்கம் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் ஆகிய இரண்டினதும் பண்டித பரீட்சைகளுக்குத் தோன்றி இரண்டு பண்டிதர் பட்டங்களையும் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி: நீங்கள் பெற்ற விருதுகள் சிறப்புக்கள் பற்றிக் கூறுங்கள்?**

பதில்: நான் பண்டிதர் மு. கந்தையா அவர்களிடம் இருந்து புலவர்மணி என்னும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். பலிமேற்குப் பிரதேசக் கலாச்சாரப் பேரவையினர் கலை வாரிதி என்னும் பட்டம் தந்து கௌரவித்தனர். 2002இல் இலங்கை அரசிடமிருந்து 'கலாபுஷணம்' விருதைப் பெற்றுக் கொண்டேன்.

**கேள்வி: தங்களது நூல்களில் இன்னும் அச்சில் வெளிவராதவையும் உள்ளனவா?**

பதில்: ஆம். மாரியம்மன் பிள்ளைத்தமிழ் முருகையாசுவாமி நான்மணிமாலை நீர்கொழும்பு சித்திவிநாயகர் அந்தாதி ஆகிய நூல்களும் சிறு சிறு பிரபந்தங்களும் அச்சேறுவதற்கு தயாராக உள்ளன.

# பழந்தமிழர் பண்பாடு என்ற கட்டுரைத்தொகுப்பிலிருந்து ஒரு பகுதி

### கண்ணுடையர் கற்றோர்

பழந்தமிழர் தாம் வாழுங்குடும்பத்தையும் நாட்டையும் உலகையும் வாழ்விற்குத் தேவையான பிறவற்றையும் அறியவும் அறிந்து நல்வழியில் நடக்கவும், கல்வி இன்றியமையாததெனக் கண்டனர். அதனால் கல்வியைக் கண்ணெனக் காத்தோம்பினர். தமிழ்மறை தந்த வள்ளுவரும், 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்று கூறுவர். மரத்தின் கோட்டத்தை - வளைவை மாற்றி நேராக அரிவதற்கு நூல் உதவுகின்றது. அதனையொப்ப மனக்கோட்டத்தினை மாற்றுவதற்கு நூலறிவு இன்றியமையாததெனக் கண்டவர் தமிழர். ஒருவர்க்கு நெஞ்சத்து நல்லம யாமென்னும் நடுவுலைமையை அளிப்பது கல்வி. "யாதும் ஊரே யாவருங்கேளிர்" என்ற சீரிய கோட்பாட்டை வளரச் செய்வதும் அது. கல்வியால் மனம் விரிவடைந்து உலக இன்பம் கண்டு உவக்கு உளப்பாங்கும் ஏற்படுகின்றது. கல்வி, மன்பதையுள் மக்களை உயரச் செய்கின்றது. உலகிற்கு ஒப்பவாழும் தகைமையை உதவுகின்றது. தீதினை நீக்கி நன்றின் பாற் செலுத்தித் தளர்வு வந்துழியும் உதவுகின்றது. எனவே கல்வி மிகுதிப்பாட்டால் உயர்ந்த பண்பாடு வளர்தல் புலனாகின்றது.

### உயரிய ஒழுக்கம்

ஒழுக்கமென்பது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் வல்லிதின் உணர்ந்து அறத்தின் வழுவாது ஒழுகுதல். உயிராலும் அறிவாலும் அன்றி ஒழுக்கம் ஒன்றே பற்றிப் பொருள் அனைத்தையும் உயர்திணை அஃறிணை எனப்பிரிப்பர் தமிழ்ச் சான்றோர். தமிழில் திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும் மரபுச் சொல்லாகும். மாந்தர் ஒழுக்கமுடைமையால் மக்கள் எனவும், அஃதின்மையால் மாக்கள் எனவும் கொள்ளப்படுவர். உருவத்தால் மக்களே போல் வார் எல்லோரையும், மக்களென்று கொள்வதற்கில்லை. இதனை

> "உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
>
> பண்பொத்த லாப்பதாம் ஒப்பு"

என வரும் குறட்பாவால் அறியலாகும். இதனால் ஒழுக்கமே மக்கட் பண்பென்றும் ஓதுவர். எல்லா நன்மைகளுக்குமே ஒழுக்கமே வித்தும் விளைபயனுமாகும். இதனை, "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்" என்பதனால் உணரலாம். மக்களுள் உயர்வு தாழ்வு ஒழுக்கத்தானே கொள்ளப்படும். பிறப்பினால் கொள்வது பழந்தமிழ் நெறியல்ல. "ஒழுக்கத்தின் எய்துவர் எய்தாப்பழி" என்பது தமிழ்மறை அன்றோ! ஒழுக்கம் விழுப்பந்தலால் அது உயிரினும் ஓம்பப்படும். எனவே, உயரிய ஒழுக்கத்தினைப் பழந்தமிழர் பேணிக் காத்தனர். அந்த ஒழுக்கத்தில் சீரிய பண்பாடு மலர்ந்தது.

### நாகரிகத்தின் சிறப்பு

நாகரிகம் என்பதனைக் கண்ணோட்டம் என்று திருக்குறளும், நகரத்தொடர்பான ஒழுக்கம் என்று பெருங்கதையும், மரியாதை என்று சிவரகசியமும், பலகலை வன்மை என்று சீவகசிந்தாமயும், கலை இலக்கியம் முதலியவற்றை இரசித்தல் என்று நாலாயிரத்திவ்விய பிரபந்தமும் பேசுகின்றன. எனவே கலை கல்வி உணர்வு மரியாதை முதலியவற்றின் திரட்சியே நாகரிகம் என்பது பெறப்படும். நந்தமிழர் சிறந்த நாகரிகத்தை உருவாக்கினர். வளர்த்தனர். அவர்தம் நாகரிகத்தின் சிறப்பை,

> "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
>
> நாகரிகம் வேண்டுபவர்"

என்னும் திருக்குறளும்

> "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
>
> நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"

என்னும் நற்றிணை அடிகளும் நன்கு விளக்கும். அன்பினால் இல்லறமும் அருளினால் துறவறமும் வளர அவற்றைப்பேண நல்லரசு நிலவிய தமிழகத்திலே உயர்ந்த நாகரிகம் நிலை பெற்றதில் வியப்பெதுவும்

இல்லை. சீரிய நாகரிகத்துனூடே விழுமிய பண்பாடு மலர்ந்தது.

**யாதும் ஊரே யாவரும் கேளிர்**

பழந்தமிழகத்திலே சிறந்த பண்பினர் பலர் வாழ்ந்தனர். அவர்களிடத்தில் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்னும் பெருங்கோட்பாடு குடி கொண்டிருந்தது. இரண்டாயிரம ஆண்டுகட்கு முன்பே 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று கண்டவர் - தீமையும் நன்மையும் அவரவராலே தான் ஏற்படுகின்றன என்றும், ஏன்? இன்பத்துன்பங்கள் கூட அவரவரே பொறுப்பாளிகள் என்றும் கண்டவர், உலக வாழ்க்கையை இனிதென மகிழாதது போலவே துன்பு நிறைந்தது மரணங்கனிந்து நிற்பது என்று வருந்துவதும் செய்யாதவர் அவர்கள் மக்களைப் பார்த்து 'நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்' என்று அன்புக்குரல் எழுப்பினர். தாம் உயர்ந்த கோட்பாடுகளின் வழி வாழ்ந்ததுமன்றிப் பிறரையும் வாழத்தூண்டினர். யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று எண்ணினர்.

**தேன்கூடு**

**பண்டிதர் மயில்வாகனனார் அவர்கள் சிகண்டியார் என்ற புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதிவந்த**

**(தேன்கூடு) சங்கப் புதையல்களில் இருந்து சில துளிகள்**

அறம், அருள், அன்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் இன்பம்

உலகம் இனிது வாழ்வு இனிது உயிர் இனிது. இனிய வாழ்விற்கு நுகரப்படும் பொருள் வேண்டும். பொருளைப் பெறப் பொன் வேண்டும். பொருளால் – போகம் கிட்டுகின்றது இன்பம் கிட்டுகின்றது.

பொருளில், நெல் முதலிய உணவுப் பண்டங்களும் மாடம், மனை, குடிசை முதலிய வதிவிடங்களும், மாடு, குதிரையுடன் பல்வேறு வகைப்பட்ட ஊர்திகளும் ஏனைய வளங்களும் எல்லாம் அடங்கும். பொன் என்பதில் காசு, பணம் முதலியன அடங்கும். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மணிவாசகப் பெருமான் வாக்கு.

தமிழ் நூல்களுல் முதன்மையானது – மிகப் பழமையானது – தொல்காப்பியம். அதனைத் தந்தவர் ஆசிரியர் தொல்காப்பியனார். அவர், மனிதன் மற்றும் விலங்கு, பறவை முதலிய அனைத்து உயிர்களுக்கும் இன்பம் உரியது என்பர். இந்நாளில் மனித உரிமைப் பிரகடனங்கள் வெளியிடப்படுவதை நாம் அறிவோம். மிகப்பழைய காலத்திலேயே இன்பம் பொது உரிமை என்று பிரகடனப்படுத்தியாயிற்று.

தமிழ்மாந்தர் அருள், அன்பு, அறம் எனும் மூன்றன் அடிப்படையிலேயே இன்பம் நுகரப்படவேண்டும் என்று கண்டனர். அருள்:- கருணை் அன்பு:- தொடர்புடையாரிடத்துச் செல்லும் கருணை் அன்பின் முதிர்ந்த நிலைதான் அருள். அதனாலேதான் வள்ளுவப் பெருந்தகை "அருள் என்னும் அன்பு ஈன்குழவி" என்று குறிப்பிட்டார். அறம், தருமம் அது "தக்கது இன்னது" என்று கண்டு அறிந்து ஒழுகுதல். பெரியோர் "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் அறம்" என்பர்.

செந்தமிழர், அறத்தினை மக்களிடையே பயிற்றுவிக்க இரு பயிற்சிக் கூடங்களை அமைத்தனர். இல்லறம், துறவறம் என்பன அவை. இல்லறத்தே அன்பு பயிற்றுவிக்கப்படுகின்றது தாய், சேய் முதலாக உறவுகள் விரிவடைகின்றன் அன்பும், அறனும் அங்கு பேணப்படுகின்றன. அவற்றால் பண்பும் பயனும் விளைகின்றன.

துறவறத்தே அருள் பயிற்றுவிக்கப்படுகின்றது. அதனால் அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை: என்றுமே இன்பம் என்னும் நிலை எட்டப்படுகின்றது.

அருளும் அன்பும் அறமும் இன்பத்தைத் தருகின்றன. சங்கப்புலவர், கடுவன் இள எயினார் –"யாஅம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருள் இணரக் கடம்பின் ஒலி தாரோயே" (பரிபாடல் – 5) – என்று வேண்டுகின்றார். பழந்தமிழ் நூல்களில் யாண்டும் அறத்தின் நிழல் விரிந்து கிடக்கின்றது. உலக வாழ்வில் துன்பவெயில் சுடும்போதெல்லாம் அங்கு நின்று ஆறி அமைதி காண்போம்.

### இன்பம் இனிக்கும் இடம் நான்கு

மனிதன் இன்பத்தைத் தேடி எங்கெங்கோ அலைகின்றான். அந்த இன்பம் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என்றெல்லாம் பகுத்துக் காட்டுகின்றார்கள். ஒருவனும் ஒருத்தியும் கூடி அறத்திறம் அகலாது வாழும் வாழ்க்கையைச் சிற்றின்பம் என்கிறார்கள். அவ்வாழ்க்கை அவர்களைப் பேரின்ப வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும் என்றும் கூறுகிறார்கள், சரி, சரி.

எங்கள் புலவர் விளம்பி நாகனார் நண்பர்கள் இடையே இருந்து – அதாவது, சிரிப்பதற்காகவன்றி, வேண்டாத செய்கை உளதாய வழி முற்பட்டு இடித்துரைக்கும் பொருட்டு நண்பு பூண்டார்களின், இடையில் இருந்து முகமலர்ந்து பேசி மகிழும் போது இன்பம் உண்டாகும் என்கிறார்.

எல்லோரும் முயன்று அரும்பொருளை ஈட்டுகின்றோமே – ஈட்டிய பொருளின் அளவைக் காண்கின்றோமே – அப்பொழுதெல்லாம் இன்பமில்லையாம். மற்றும் அதனை ஏழைகளுக்கு அளிக்கின்றோமே அப்போது உண்டாகும் இன்பந்தான் உண்மை இன்பமென்கிறார், பொய்யாமொழியார். ‘உலகோர் அறியார் கொல்’ என்று வினவுகின்றார். வறியார் உவப்பத்தானும் உவக்க வேண்டுமாம்.

மேலும் வகை உடைய பெண், அதாவது நினைவு, சொல், செயல் நல்லனவாக அமைந்த பெண் கணவனை, உண்டி முதலியன கொடுத்து அவன் கருத்தறிந்து அதன்வழி நிற்றல் இன்பம் பயக்கும் என்கிறார்.

மேலும், ஒரு பாடலைப் பொருளறிந்து பாடும்வழி இன்பம் உண்டாம் என்கின்றார். இனி பாடலைப் படிப்போம்.

**நகைஇனிது நட்டார் நடுவண் பொருளின்**

**தொகைஇனிது தொட்டுவழங்கின் ப வகையுடைப்**

**பெண்இனிது பேணிவழிபடின், பண்ணினிது**

**பாடல் உணர்வார் அகத்து.**

நல்ல நண்பருடன் பழகியும், இரப்போர்க் கிரந்தும், மாண்புடை மனைவியைப் பெற்றும் பொருளறிந்து பாடியும் இன்பம் காண்மின்.

### சிறந்தன நான்கு

இன்று எவற்றையும் மதிப்பீடு செய்கின்றோம். தரவுகளை வைத்துக்கொண்டு முடிவுக்கு வருகின்றோம். விளம்பி நாகனாருக்கும் அப்படி ஒரு விருப்புத் தோன்றியது போலும். உடலிலுள்ள உறுப்புக்கள் தொடர்பான மதிப்பீடு, இல்லத்தரசி குறித்து மதிப்பீடு, உயர் பொருள் பற்றிய மதிப்பீடு, கடவுள் பற்றிய மதிப்பீடு – இவற்றை எடுத்துக் கொள்கின்றார்.

உறுப்புக்களுள் கண்ணினைச் சிறந்ததென்று முடிக்கின்றார். பிற சான்றோரும் அங்ஙனமே ‘கண்ணிற் சிறந்த உறுப்பில்லை’ என்கிறார்கள். நீங்களும் கூட அந்த முடிவுக்கே வருவீர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. வள்ளுவப் பெருந்தகை சற்று மேலே சென்று ‘கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்’ – இரக்கமுடமை – என்கிறார்.

தொடர்ந்து, திருமணம் செய்துகொண்ட மங்கைக்கு மிகமிக நெருங்கிய உறவினர் யார் என்று வினவுகிறார். பெண்ணினுடைய தாயுமில்லை, தந்தையுமில்லை. பேறு கொண்டான் – அவள் மணந்து கொண்ட கணவனே – என்று முடிக்கின்றார்.

பெற்றோர் ஈட்டும் பொருள்களில் சிறந்தது எது என்ற வினா எழுகின்றது. காணி, நிலம், மாடு, மனை அல்லவாம். நன்மக்களாம். ஒண்மை – அறிவு – ஒளி மிக்க மக்களாம். உங்களுக்கு வள்ளுவத் தேவர் கூறுவது நினைவுக்கு வரலாம். ‘தம்பொருள் தத்தம் மக்களே’ என்றுதானே அவர் கூறுகின்றார்? மக்களுள்ளும் மூத்தோனை வருக என்னார் கற்றோனையே வருக என்பார்கள். தெரிந்தவிடயம் தான்.

கடவுளுக்கு வருவோம். சிலர் அரனே கடவுள் என்பர். சிலர் அரியே கடவுள் என்பர். மற்றும் சிலர் அல்லா என்பர். வேறும் சிலர் பரமண்டலத்தில் வாழும் பரன் என்பார்கள். சொல்லால் விளங்கா நிருவாணம்தான் கடவுள் என்பவர்களும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இப்படியிருக்க நாகனார், ஈன்றாளை நம்மைப் பெற்று வளர்த்த தாயைத்தான் கடவுள் என்கிறார். பத்து மாதமும் சுமந்து பெற்ற அந்தத் தாயை மறக்கமுடியுமா?

**கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்**

**துன்னிய கேளிர் பிறரில்லை ப மக்களின்**

**ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோடு**

**எண்கனக் கடவுளும் இல்**

கண்காத்துக் கணவனை ஓம்பி ஈன்றோர்க்கும் புகழைக் கொடுத்து அன்னையை அகத்தவிசில் இருத்தி யாவரும் வாழ்வார்களாக!

**நட்பினராதற்குரிய மூவர்!**

திரிகடுகம் என்பது பழந்தமிழ் பதினெண்கணக்கு நூல்களுல் ஒன்று. சுக்கு, திப்பிலி, மிளகு என்பன திரிகடுகு என்று கூறப்படும். இவற்றால் அமைந்த கசாயம் – குடிநீர், உடற்பிணியைப் போக்கும். உயர் வாழ்வளிக்கும் திரிகடுகம் நூலான் அமைந்த பொருள், உயிர்ப்பிணியாகிய அறியாமையைப் போக்கும். மனிதனை அறத்தின் வழியில் செலுத்தும்.

இந்நூலின் ஆசிரியர் பழந்தமிழ்ப் புலவருள் ஒருவர். நல்லாதனார் என்பது அவர் பெயர். சிறந்த சிந்தனையாளர். அண்ணளவாக ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவர் இயற்பெயர் ஆதனார் ஆதல் வேண்டும். சிறப்பு நோக்கி அடைமொழி புணர்த்தி நல்லாதனார் என அழைக்கப்பட்டார்.

நாம் சமுதாயத்தில் பலவிதமானவர்களைச் சந்திக்கின்றோம். எல்லோரும் நட்பினர் – கேளிர் – ஆதற்குரியரா? இல்லை! இல்லை!! ஒரு சிலர்தான் நட்பினராதற்குரியவர். இதனாலேதான் ஆங்கில மேதை ஒருவரும் நட்பினரைப் பெருக்கிக் கொள்ளாதீர்! என்று அறிவுரை புகன்றுள்ளார் போலும்.

நாம் சந்திப்போரில் சிலர் முயற்சியுடையவர்களாக இருக்கின்றார்கள் – தாளாண்மையுடையவர்களாக இருக்கின்றார்கள். சிலர் சோம்பேறிகளாகவும் இருக்கின்றார்கள். முயற்சி உடையவர்கள் மிக்க ஊக்கத்துடன் செயற்படுகின்றனர். ஊக்கம் என்பதற்குப் பழைய உரைகாரர், ‘வினை செய்தற்கண் உளதாகும் மனவெழுச்சி’ என்று உரை காண்பர். ஊக்கமுடன் உழைப்போரிடம் செல்வம் வழி தேடிச் செல்லும். ஊக்கம் அற்றவன் தோற்றத்தில் மனிதனாக இருப்பினும், அவன் வெறும் மரத்துக்குச் சமானனே!

‘முயற்சி திருவினையாக்கும்’, ‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்’ என்பனவெல்லாம் அனுபவ உரைகள் அன்றே! இனி சோம்பல் என்பது சுறுசுறுப்புடன் உழையாமையாகும். அது ‘மடி’ என்றும் கூறப்படும். நன்முயற்சி இன்றி சோம்பல் உற்ற மாந்தரின் குடும்பம் அழிந்து போகும், இகழ்வும்படும். சோம்பேறிகளுக்கு தாமதம், மறதி, தூக்கம் என்பவை கைகொடுத்துதவும். சோம்பல் மனிதனை அடிமையாக்கிவிடும். ‘சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்’.

முயற்சி உடையோன் செல்வம் வளர்ந்து கொண்டே இருக்கும். செல்வம் செழித்து வளரும். வாழ்க்கைச் சகடம் சீராக ஓடும். கடன் படாது வாழ்ந்து இன்பம் அடைவான்.

உபகாரியாம் தன்மை உள்ளவன் – கொடையாளன். அவனை உலகம் வேளாளன் என்று அழைக்கின்றது. அவன் நாளெல்லாம் தனக்கென வாழாது பிறருக்கு உதவி செய்கிறான். ‘உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே’ என்று வாழ்கிறான். விருந்தோம்பி வாழ்கின்றான். திருமகள் அவனிடம் விரும்பி வந்து உறைகின்றாள். செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கின்றான்.

மக்களுட் சிலர் சான்றோரோ, ஆசிரியரோ, நல்லோரோ கூறியவற்றை மறவாராய் மனத்தில் இருத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கின்றார்கள். பேணி நடக்கின்றார்கள். அவர்கள் இலக்கிய மொழியில் ‘கோளாளர்’ எனப்படுகின்றனர். கோள் – கொள்ளுதல். முன்னிலை திரிந்த தொழிற் பெயர் என்பர்.

எங்கள் புலவர், உரத்த தொனியில் நாம் நண்பு கொள்ளற்குரியர் – கேளிராகற்குரியர் – மூவர் என்கிறார். அவர்கள் தாளாளன், வேளாளன், கோளாளன் முதலிய மூவர் மட்டும்தானாம். பாடலைப் படித்துப் பாருங்கள்.

**தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்**

**வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்**

**கோளாளன் என்பான் மறவாதான் இம் மூவர்**

**கேளாக வாழ்தல் இனிது. (திரிகடுகம் –12)**

முயற்சி உடையாருடனும் கொடையுடையாருடனும் கேட்டவற்றை மனத்துள் வைத்து நடப்பாருடனும் கேண்மை பூண்டு – நண்பு கொண்டு – வாழ்வை வளம்படுத்தி வாழ்வோம்.

**சாவா உடம்பு எய்தினோர் மூவர்**

மக்கள் உலகில் வாழ்கின்றனர்: “அரிது அரிது மானிடர் ஆதல் அரிது” என்று பெரியோர் கூறுவார். மானிடப் பிறப்பிலும் குருடு, பிண்டம், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என்ற எண்வகைக் குற்றங்களும் அற்றவர்களாகப் பிறத்தல் வேண்டும். அக்குற்றங்கள் அற்றவனே நிறைவான மனிதன்.

அவன் கற்பன கற்று அறிவொழுக்கங்களில் சிறந்து நன்மகனாக வாழ்தல் வேண்டும். நல்வாழ்வுக்குப் பொருள்

இன்றியமையாதது. வறியார் நன்மை தீமை இரண்டையுமே அறியார். பொருளைத் தேட வேண்டும். தேடிய பொருள் கொண்டு புகழ்பட வாழ்தல் வேண்டும். செல்வத்தை இம்மைக்கண் புகழும் மறுமைக்கண் அறமும் கிட்டும் வழியில் செலவு செய்தல் வேண்டும். வள்ளுவப் பெருந்தகை ஈதலும் இசைபட வாழ்தலும் மக்களுக்கு ஊதியம் தரும் செயல் என்பர்.

பல வழிகளில் புகழை வளர்க்கலாம். சமயம், மொழி, சமூகம், அரசியல் எனப் பல நிலைகளில் தொண்டு புரியலாம். உழைப்பைப் பிறர்க்கு உதவி – தானம் செய்து – புகழை வளர்க்கலாம். எல்லோர் தமக்கும் இனிதே இயற்றிப் புகழை வளர்க்கலாம். ஒரு சிலர் குறுக்கு வழிகளில் புகழை வளர்ப்பதனையும் அறிவோம். அஃதவர்க்கு வசையினையே நல்கும். ஒவ்வொருவரும் உலகில் புகழை நிலைக்க செய்தல் வேண்டும்.

தமிழ் மாந்தர் இல்லறத்தையே மேலான தருமம் என்று கண்டவர். அடி நாளில் காதல் ஒழுக்கம் வலுப்பெற்றிருந்தது. பின்னர் செய்த ஒன்றனைச் செய்திலேன் என்று சொல்லில் பொய் கூறுதல் மட்டுமன்றி ஒழுக்கத்திலும் வழுவி நடக்கத் தலைப்பட்டனர். அந்நிலையில் மேலோர் வேள்விச் சடங்கை – திருமணச் சடங்கை ஏற்படுத்தினர். அது 'கரணம்' எனப்பட்டது. பெற்றோர், அந்தணர், அறிவர் முதலியோர் முன் 'இன்னவாறு ஒழுகுக' என்று கற்பிக்கப்பட்டது. காதல் மனையாளும் காதலனும் தீதின்றி வாழ்ந்தனர். மனையாள் மனைத்தக்க மாண்புடையாளாய் வாழ்ந்தாள். மாண்பு நற்குண நற்செய்கைகள். நற்குணத்தில் துறந்தார்ப் பேணுதல் விருந்தயர்தில் வறியார் மாட்டு அருளுடைமை முதலியன அடங்கும். நற்செயல்களில் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தல் சமையல் தொழில்வன்மை ஒப்புரவொழுகல் முதலியன இடம்பெற்றிருந்தன. சமூகம் மாசில் சீர்க்கற்புடையாளை மேலாக மதித்தது. இன்பம் கண்டது.

நீர்வளமும் வாழ்விற்கு இன்றியமையாததாய் இருந்தது. உண்ணுதல் மண்ணுதல் – கழுவுதல் மற்றும் தேவைகளுக்கெல்லாம் நீர் இன்றியமையாத பொருள் அல்லவோ? நீரை வானம் வழங்குகிறது. அது பெய்யாது பொய்த்து விடுவதும் உண்டு. அதனால் குடிமக்கள் அல்லற்பட்டு ஆற்றாது நிற்பரன்றோ! நாட்டிலே சிறியனவான கிணறுகளும் – கூவல்களும், பெரியனவான குளம் முதலிய நீர்நிலைகளும் பெருக வேண்டும்.

புறநானூற்றில் குடபுலவியனார் என்னும் புலவர் வருகிறார். அவர் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவு புகட்டும் போது நீர்நிலைகளை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார். "அரசே நீ துறக்க இன்பத்தை (சுவர்க்க போகத்தை) விரும்பினும் இப்பிறப்பில் பேரரசனாகப் புகழ் எய்த வேண்டினும் நீர்நிலை பெருக அமைப்பாயாக. அங்ஙனம் நீர்நிலை அமைத்தவரே இவ்வுலகில் தளைத்தவர். ஏனையோர் தளையாதவராவர் – அங்ஙனமாகவர்" என்கிறார்.

இனி நல்லாதனாரிடம் வருவோம். அவர் கூறுகிறார் பூமியின் மேலே பெரிய புகழை நிலைநிறுத்தியவரும், கற்புடைப் பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டவரும் நீர்க்கிணற்றைத் தோண்டிவித்தவரும் இறவாயாக்கையினர் என்கிறார்.

பாடலை நோக்குவோம்.

மண்ணின் மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீல்ப்

பெண்ணினும் கற்புடையாட் பெற்றானும் ப உண்ணுநீர்க்

கூவல் குறையின்றித் தொட்டானும் இம்மூவர்

சாவா உடம் பெய்தினார்.

புகழ் நிறுவி, மாட்சியைப்பட்ட வாழ்க்கைத் துணையுடன் இல்வாழ்க்கையை ஓம்பி நீர்நிலை பெருக்கி வாழ்வோம்.

### கேள்வி உடையார் செயல்

கேள்வி உடையார் என்பது, நூல் பலவற்றையும் கற்றுணர்ந்து கேட்டறிந்த பெரியோர் என்னும் பொருளை உடையது. திருஞான சம்பந்தப் பெருமான் 'கற்றல், கேட்டல் உடையார் பெரியார்' என்பர். பெரியார் தேவரை ஒப்பர். அவர் தஞ் செயல் என்றும் அறத்தொடு பட்டதாகவே அமையும்.

பெரியோர், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இனிதின் உணர்ந்தவல், யாராயினும் ஒருவருக்குக் கல்வி, செல்வம், புகழ் என்பன பெருகுவதாக வைத்துக் கொள்ளுவோம். அவற்றைக் கண்டு ஆற்றாத மற்றும் ஒருவர், பொறாமை கொண்டு புழுங்குகின்றார்! பிறரை நிந்திக்கத் தொடங்குகின்றார். சான்றோர் அத்தகையர் அல்ல. 'சீ என்று பேயென்று நாயென்று பிறர் தம்மைப் பழித்துரையார்.'

நாளும் நாளும் நாம் பலருடன் பழகுகின்றோம். சாதாரணமாக உலகோர் ஒருவர் தம்மினும் பார்க்க சற்றுக் கல்வி செல்வம் முதலியவற்றுள் உயர்ந்து விட்டால், அவர் யார்? அவருக்கு ஏது தெரியும்? எப்போ வந்தவர்? என்றெல்லாம் இழிந்துரைக்கின்றனர். குலத்தாழ்ச்சி , இகழ்ச்சி கூறுகின்றனர், மேன்மேக்கள் ஒருவரை பல்லோருள்

இழித்துரையார்.

‘உறக்கம் நமக்கு மிகமிக இன்றிமையாதது. நமது உடலில் உள்ள கருவி, கரணங்கள் எல்லாம் கேவலம் உதவி வேண்டாது நாள் முழுவதும் ஓயாது உழைக்கின்றன. உறக்கத்தின்போது அவை ஓய்வெடுக்கின்றன. உறங்குவதற்குக் கால எல்லை விதித்துள்ளார்கள். குழந்தை முதல் முதியோர் வரை அனைவருக்குமே காலஎல்லை உண்டு. சிலர் கால எல்லையை இகந்து நெடுந்துயில கொள்கின்றனர். கும்பகர்ணனை ஏவலாளர் ‘உறங்குகின்ற கும்பகர்ண! உங்கள் மாய வாழ்வெல்லாம் இறங்குகின்றது. எழுந்து காண்!’ என்று எழுப்பியதாகக் கதை உண்டு. ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற பாட்டினைக் கேட்டிருப்பீர்கள். தூங்கியவர்கள் தம்மைக் கெடுத்ததுடன் நாட்டையும் கெடுத்து விடுகிறார்களாம். சோம்பல் காரணமாகவும் சிலர் பகற்பொழுதில் துயில்கின்றனர்தானே! திருவள்ளுவ தேவர், சோம்பல், தாமதம், மறதி, தூக்கம் என்பன அழிந்து போகத் துடிப்போம் ஏறும் தோணி என்கிறார். முந்தை யோர் கருமம் இழந்து தூங்கினார் இல்லை.

எம்முட்சிலர், சிலசமயங்களில் செய்ய இயலாத ஒன்றைச் செய்து தருகிறோம் என்று கூறிவிடுகின்றனர். ஆனால் அதனைச் செய்துதராது மறைந்து விடுகின்றனர். வேறு சிலர் தம்மால் இயலக்கூடியதையும் இயலாது என்கிறார்கள். புறநானூறு எனும் பழைய தமிழ் நூலில் ஆவூர் மூலங்கிழார் மன்னன் நன்மாறனுக்குக் கூறிய பாடலில் இருந்து சில வரிகளை நினைவு கூறுவது நலம்.

‘‘ஒல்லா தொல்லும் என்றலும் ஒல்லுவது

இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே

இரப்போர் வாட்டல் அன்றியும் புரப்போர்

புகழ்குறை படூஉம் வாயில்..’’ என்பது அது.

(ஒல்லுவது - இயலும் பொருள். ஒல்லாதது - இயலாதது) சான்றோர் தமக்கு பொருந்தாத செயல்களைச் செய்கின்றோம் என்று கூறார். கூறியதைச் செய்யாது கரக்கவும் மாட்டார். (கரத்தல் - மறைத்தல்)

வறியராயினாரை ‘அந்தப் பிச்சைக்காரனைப் பார்’ என்று சிலர் இகழ்வதனைக் காண்கிறோம். வள்ளுவப் பெருந்தகை ஒரு வினாவினை எழுப்புகின்றார். விடையும் தருகின்றார். பலர் வறியோராய் இருக்கக் காரணம் என்ன? ஆம். தவம் செய்யாமையாம். தவம் செய்தோர் சிலராம். அவர் செல்வராம். பொருள் நிரம்பியவன் வறியாரது பசியினைத் தீர்க்கவேண்டும். அஃதவனது தலையாய கடனாம். சந்திரமதியார் தாம் இல்லோரைச் சிறியர் என்று இகழாத பான்மையினராம். அவ்வாறிருப்பவும் தமது அருமைப்புதல்வன் ஏன் பாம்பின் வாய்ப்பட்டு இறந்து பட வேண்டும்? என்று அலறித் துடிக்கின்றார். சான்றோர் எந்தநிலையிலும் இல்லோரை இகழார். இனி ஆசாரக் கோவை பாடலைப்பார்ப்போம்.

பழியார் இழியார் பலருள் உறங்கார்

இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி

இல்லாரை எள்ளி இகழ்ந்து உரையார் தள்ளியும்

தாங்கரும் கேள்வி யவர் . (ஆசாரக்கோவை - 50)

(தாங்க அரு - பிறரால் தாங்குவதற்கு அரிய: எள்ளித் தள்ளியும் என்று கூட்டுக.)

மேலே கண்ட அறங்களை எமக்காக்கி ஒழுகுவோம்.

**நிறைவு**

மயில்வாகனன் அயல்வாழ்ந்திட

செயல்வாகனச் சிரமேறினன்

புயல்மாரியிற் பொழிபாவினன்

இயல்பாகவே இனிதானவன்

க. சச்சிதானந்தன்

# நூற்றாண்டு விழாக்குழு



ஓய்வுநிலை அதிபர் கலாபூஷணம் வ.யோகானந்தசிவம் - யாழ்ப்பாணம்

**பிரான்ஸ்**



இடமிருந்து வலமாக நிற்பவர்கள்

**சிவப்பிரகாசம் குகானந்தன் தியாகராசா குணபாலன் ,உமாபதிசிவம் பாரதி ,மயில்வாகனனார் முருகானந்தன், மயில்வாகனனார் மகேசானந்தன், உமாபதிசிவம் தொல்காப்பியன்,சிவச்சந்திரன் துரைராசா மயில்வாகனனார் சிவானந்தன் , கனகரத்தினம் விக்கினராசா, சிவானந்தன் நிசாந்தன்**

இடமிருந்து வலமாகஇருப்பவர்கள்

**பாலசிங்கம் தேவரஞ்சன் ,மார்க்கண்டாபிள்ளைஞானேஸ்வரன் ,சின்னத்துரை சிறிதரன் ,தில்லையம்பலம் யோகேஸ்வரன் ,சின்னத்துரைசிறிரஞ்சன்.**







**1.வீரசிங்கம் சுப்பிரமணியம் 2.இலட்சுமணர் ஞானச்சந்திரன் 3.சர்வநடராசசிங்கம் தவலோகதயாபரன் 4.இராசரத்தினம் முத்துசிவராசா 5.சத்தியவான் தில்லைநடேசன்**

## இலண்டன்

1.சிவப்பிரகாசம் மணிவண்ணன் 2.சிவபிள்ளை சிவகுணாளன் 3.சற்குணசிங்கம் ஆனந்தகுமார்
4.பேரம்பலம் சிறிமுருகன் 5.இலட்சுமணர் நயனச்சந்திரன் 6.சதாசிவம் ஆனந்தகுமார்
7.வேலுச்சாமி சர்வேந்திரன் முருகுப்பிள்ளை சதானந்தா

## நோர்வே

1.சண்முகநாதன் சற்குருநாதன் 2.கனகரட்ணம் சிறிபாலன் 3.தாமோதரம்பிள்ளை அகிலன்

## கனடா

1.வேலுப்பிள்ளை குகநேசன் 2.சிவசுந்தரம்பிள்ளை சிவபாலன்

# ஒருங்கிணைப்பாளர்கள்

1.தியாகராசா மோகனபாலன் (அதிபர் யாழ் பொண்ணாலை வித்தியாலயம்)
2.பண்டிதர் வெற்றிவேல் வரதிதாசன் (வட்டுக்கோட்டை)
3.தியாகராசா உமைபாலன் (ஊடகவியலாளர் நோர்வே)

## அனுசரணை வழங்குவோர்




Sivan Video and photo
0631993316



S.Balu photos
0760228869



D.T.T catering service
0618297275/0627415081



முத்தமிழ் இசைக்குழு